Follow us:

வாரவெளியீடு

தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ் : 10 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(03.09.2023) ஹிஜ்ரி-1445, ஸபர் - 17, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130

நக்கல் நமசிவாயம்

அப்படியெண்டா இன்னொரு போராட்டம் நடந்தா விசா இருக்கிற ஆட்கள் தப்பி வெளிநாட்டுக்கு ஓடிப்போடுவாங்கள் போல..



பஸ் கட்டணங்கள் 4 வீதத்தால் உயர்வு

பஸ் கட்டணங்களை 4 வீதத்தால் அதிகரிப்பதற்கு பஸ் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. இதேவேளை, எரிபொருள் விலை அதிகரிப்புக்கு இணையாக பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து ...

02 ஆம் பக்கம்

'வெடி'மணியம்



குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி விகாரையின் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டதாய் முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவிச்சு இருக்கு!

இலங்கையின் நீதித்துறையை மதிக்காமல் அதன் கட்டளையை கருத்தில் எடுக்காமல் சிறிலங்காவின் தொல்பொருள் திணைக்களமும் அதன் அதிகாரிகளும் பௌத்த பேரினவாதத்தின் நடவடிக்கைக்கு முண்டு கொடுத்திருக்கிறார்கள்.

ஆக;

சிறிலங்காவின் நீதித்துறைக்கு இருக்கும் "அதிகாரத்தை" விட;

02 ஆம் பக்கம்

போராட்டத்தால் அதிர்ஷ்டம்!

கோட்டா கோ கம போராட்டத்தின் பின்னர் தங்கள் மீதான அச்சுறுத்தல் தொடர்வதாக தெரிவித்து, ஆளுங் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் மேற்குலக நாடுகளுக்கான விசாவை பெற்றுக்கொண்டுள்ளதாக நம்பகரமாக அறியமுடிகிறது.

இப்படி விசா பெற்றுக்கொண்ட ஆளுங் கட்சி அரசியல்வாதிகளின் உறவினர்கள் பலர் ஏற்கனவே வெளி நாடுகளுக்குச் சென்று புகலிடம் கோரியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

குறிப்பாக, கோட்டா கோ கம போராட்டத்தின் பின் னர் வீடுகள் தீ வைப்பு, சொத்துகள் மீதான தாக்குதல் என்பவற் றால் பாதிக்கப்பட்டதாகக் கூறும் அரசியல் பிரமுகர் கள் பலர் இந்த நடவடிக் கையை மேற் கொண்டுள்ளதாக அறியமுடிந்தது.

ஆளுங்கட்சி எம்.பிக்கள், அவர்களது குடும்பங்களுக்கு வெளிநாட்டு விசா

உள்ளே







அஸ்வெசும கொடுப்பனவு திங்கட்கிழமை முதல்

நாட்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 05 இலட்சம் அஸ்வெசும பயனாளிகளுக்கான கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை (4) முதல் வழங்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அவர்களின் வங்கிக்கணக்கு தரவுகள் சரியாகக் காணப்படுகின்றனவா என பரிசீலிக்கும் நடவடிக்கை இன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே 08 இலட்சம் பயனாளிகளுக்கான அஸ்வெசும முதற்கட்ட கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை பரிசீலிக்கும் நடவடிக்கையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, அஸ்வெசும திட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள மேலும் சில பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி, வங்கிகளுக்கு விடுவிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை மேலும் தெரிவித்துள்ளது.

எரிபொருட்களின் விலை அதிகரிப்பு



எரிபொருட்களின் விலைகள் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை 13 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது. அதன் புதிய விலை 361 ரூபா.

ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 42 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 417 ரூபா.

இதேவேளை, ஓட்டோ டீசல் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 341 ரூபா.

02 ஆம் பக்கம்

குறைந்த விலையில் சினோபெக் எரிபொருள்

சினோபெக் எரிபொருள் நிறுவனம் வெள்ளிக்கிழமை (01) முதல் அமுலாகும் வகையில் தமது புதிய எரிபொருட்களின் விலைகளை அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 358 ரூபா எனவும் ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 414 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் விலை 338 ரூபா எனவும் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 356 ரூபா எனவும் சினோபெக் லங்கா எரிபொருள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 231 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை: 8ஆம் திகதி வாக்கெடுப்பு!



சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் வெள்ளிக்கிழமை (01) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

02 ஆம் பக்கம்


யாழ். மாவட்ட செயலகம் முன்பாக கடற்றொழிலாளர்கள் போராட்டம்



இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை எதிர்த்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02 ஆம் பக்கம்



எரிபொருளுக்கான முறைமை நீக்கம்

எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகம் செய்யப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பின்பற்றப்பட்டு வந்த கியூஆர்முறைமை வெள்ளிக்கிழமை (01) முதல் நிறுத்தப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு அறிவித்தார்.

கடந்த காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை நிலவிய நிலையில் எரிபொருள் விநி யோக வசதிக்காக கியூஆர் முறைமை பயன்படுத்தப்பட்டு வந்தது.

நன்கொடை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்தியா அதிகரித்தது

இலங்கையின் பொருளாதார தோற்றப்பாடுகளில் காணப்படும் துரிதமான மாற்றங்களுக்கு முகங் கொடுக்கும் வகையில், நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நன்கொடை அடிப்படையிலான



அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

அதனடிப்படையில், இந்திய – இலங்கை உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தித் திட்டம்...

02 ஆம் பக்கம்

பெருந்தோட்டப் பிரச்சினைகளில் பொலிஸார் தலையிடாமல் இருக்க முடியாது - டிரான்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் முகாமைத்துவத்துக்கும் இடையில் ஏற்படும் பல்வேறு தொழிற்சங்க முரண்பாடுகளில் பொலிஸாரின் தலையீடு சிக்கலானது என அண்மையில் இடம்பெற்ற பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

02 ஆம் பக்கம்

பஸ் கட்டணங்கள்...

சேவைக் கட்டணங்களும் சனிக்கிழமை முதல் 5 வீதத்தால் அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை மாவட்ட பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் கே.ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின்....

சுப்பர் டீசல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 359 ரூபா.

மண்ணெண்ணெய் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, அதன் புதிய விலை 231 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் இதற்கேற்ப விலை அதிகரிப்பை செய்துள்ளது.

நம்பிக்கையில்லாப்....

பாராளுமன்றம் அடுத்த வாரம் 05ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், ஒவ்வொரு நாளும் மு.ப. 9.30 மணி முதல் மு.ப.10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர் தனிநபர் சட்டமூலங்களான ஸ்ரீபாலபிவூர்தி வர்தன சமித்திய (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன தொடர்பான இரண்டாவது மதிப்பீடு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின் போதான பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.

செப்டெம்பர் 06ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2338/40ஆம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341/38ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி என்பன விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து பி.ப. 5.30 மணி வரை சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கமைய விவாதம் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் 07ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 08ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இந்த விவாதத்தைத் தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன், 08ஆம் திகதி 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

பெருந்தோட்ட...

ஒரு தரப்பினரால் பொலிஸில் ஏதாவது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளபோது பொலிஸார் தலையிடாமல் இருக்க முடியாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இங்கு குறிப்பிட்டார்.


போதைப்பொருள் சோதனைகளை மேற்கொள்ளும் பொலிஸ் அதிகாரிகளைக் கௌரவிப்பது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு வினவியது. அவ்வாறு கௌரவிப்பதற்கு தற்பொழுது வேலைத்திட்டமொன்று காணப்படுவதாகவும், சோதனைகள் தொடர்பான விடயங்களைக் கருத்திற்கொண்டு அந்தந்த அதிகாரிகள் கௌரவிக்கப்படுவதாகவும் குழுவிற்கு வருகை தந்திருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இமதுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு ஒதுக்கப்பட்ட வீடு பயன்படுத்தப்படாமை தொடர்பில் இதன்போது வினவப்பட்டது. தற்பொழுது அந்த வீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், கிராம மட்டத்தில் போதைப்பொருள் பாவனை, பரவல் மற்றும் அடிமையானவர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் குழு வினவியபோது, போதைப்பொருள் தொடர்பான விசாரணை பொலிஸாருக்கு கிடைக்கும் பட்சத்தில் முன்பு போன்றில்லாமல், சட்டத்துக்கு முரணாக வைத்திருத்தல் மற்றும் பணம் தூய்தாக்கல் தொடர்பிலும் விசாரணை செய்யப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

போக்குவரத்துக் குற்றங்கள் தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாரால் வீடியோ ஒளிப்பதிவு செய்து ஊடகங்களுக்கு வழங்குவதன் நெறிமுறை பற்றி குழு கவனம் செலுத்தியது. எந்தவொரு குற்றவாளியினதும் தனிப்பட்ட விடயங்களுக்கு பொலிஸார் கௌரவமளிக்க வேண்டும் என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது. இது தொடர்பில் சிக்கல் நிலவுவதாக ஏற்றுக்கொண்ட பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, இது தொடர்பில் கண்டறிந்து அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஷாந்த பண்டார, விஜித பேருகொட, அரவிந்குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான அகில எல்லாவல, வீரசுமன வீரசிங்க, சஹன் பிரதீப் விதான, சார்ள்ஸ் நிர்மலநாதன், குலசிங்கம் திலீபன், மதுர விதானகே, வேலுகுமார், (கலாநிதி) வி.இராதாகிருஷ்ணன், உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, மஹிந்தானந்த அலுத்கமகே, யு.கே.சுமித் உடுகும்புர, சஞ்ஜீவ எதிரிமான்ன, ரஞ்சித் மத்துமபண்டார, ராஜிகா விக்ரமசிங்க மற்றும் அசங்க நவரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.



ராஜகுமாரி மரணம்:

கைதுசெய்யப்பட்டோருக்கு 11 வரை விளக்கமறியல்

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பிலிருந்த பணிப்பெண் ஆர்.ராஜகுமாரியின் மரணம் தொடர்பில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப் பட்டுள்ளதாக குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள் மூவரும் வெள்ளிக்கிழமை (01) கோட்டை, புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களை எதிர்வரும் 11ஆம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உள்ளிட்ட கான்ஸ்டபிள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உப பொலிஸ பரிசோதகர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதற்கமைய, இந்தச் சம்பவத்தில் இதுவரையில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட...

போராட்ட நிறைவில் கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு யாழ். மாவட்ட செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் 23154 கடற்றொழில் புரியும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் யாழ். மாவட்ட கடற்பகுதியில் தமது அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

இக்கடலை நம்பியே தமது குடும்ப வாழ்வை மேற்கொண்டுவருகின்றனர். இந்நிலையில், தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய வருகையால் சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த காலங்களில் இலங்கை - இந்திய மீனவர்கள் பல்வேறு கட்டப் பேச்சுவார்த்தைகளை பல்வேறு இடங்களில் மேற்கொண்டனர். இறுதியில், இவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

இது தொடர்பாக பல் வேறு போராட்டங்களும் நடைபெற்றன. இவை தொடர்பாக எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே, இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய அடாவடித்தனமான தொழில் முறையை உடனடியாக நிறுத்தி, எமது நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளங்களை அழித்தும், சூறையாடியும், எமது மீனவர்களின் தொழில் உபகரணங்களை அழித்து செல்வதையும் உடனடியாக தடுத்து நிறுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த இழுவை மடித் தொழிலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறும்பட்சத்தில் நாம் தொடர் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்பதையும் தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காத்தான்குடி நூதனசாலை திருத்த வேலைக்காக மூடப்படும்

(அம்பாறை மாவட்ட செய்தியாளர்)

மட்டக்களப்பு, காத்தான்குடி புராதன நூதனசாலையின் நிலைமை தற்போது உரிய பராமரிப்பின்றி குப்பைகள் தேங்கிக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது காத்தான்குடி நகர சபையின் பராமரிப்பிலுள்ள மேற்படி நூதனசாலையை சில தினங்களுக்கு மூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 04ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை 10 நாட்களுக்கு திருத்த வேலைக்காக நூதனசாலை மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாற்றைக் கூறும் வகையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வால் கலாசார மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள வழிகாட்டலில் பல மில்லியன் ரூபா செலவில் 04 மாடிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறித்த பூர்வீக நூதனசாலை, கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட இந்த பூர்வீக நூதனசாலைக்கு அன்றாடம் நாடுபூராகவும் தினமும் பெரும் எண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

இந்த பிரம்மாண்டமான நூதனசாலை 90% முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே அமைகின்றதுடன், குறித்த நூதனசாலையை பார்வையிடுவதற்கு நுழைவுச்சீட்டு வழங்கப்பட்ட பின்னர் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் இலங்கை முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட ஆன்மீக, அறிவியியல், வர்த்தக, வணக்க வழிபாடு, அரசியல் உட்பட பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் இந்நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பராக்கிரமபாகு மன்னரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம்களின் உருவங்களும் பதிவாக வைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், வியாபார முறைகள், புராதன பள்ளிவாசல்கள், முதலாவது வுளு செய்த இடம் உட்பட பல நூறு முஸ்லிம் கலாசாரம் தொடர்பான பூர்வீக அடையாளங்களும் இங்கு காணப்படுகின்றன.

நன்கொடை...

(HICDP) என்ற கட்டமைப்பின்கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களுக்குமான இறுதி ஒதுக்கீடானது 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து குறித்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது 3 பில்லியன் இலங்கை ரூபாவை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனைய பல்வேறு துறைகள் உட்பட கல்வி மற்றும் சுகாதாரம் முதல் விவசாயம் வரையிலான சகல துறைகளையும் உள்ளடக்கியவகையில் இந்தத் திட்டங்கள் காணப்படுகின்றன.

HICDP கட்டமைப்பின்கீழ் இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 60இற்கும் அதிகமான நன்கொடை அடிப்படையிலான திட்டங்கள் இந்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக ஏனைய 20 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன. HICDP கட்டமைப்புக்காக இரு நாடுகளும் 2005ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு 5 வருட காலப்பகுதியிலுமாக இதுவரை 3 தடவைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த திட்டங்களின் கீழான தனித் திட்டங்களுக்கான உச்சவரம்பும் ஒட்டுமொத்த நிதி மூலதனமும் 2023 ஜனவரியில் இந்திய அரசாங்கத்தால் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி பங்குடைமையானது 5 பில்லியன் அமெரிக்க டொலராக காணப்படும் நிலையில், இதில் 600 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடை அடிப்படையில் வழங்கப்பட்டதாகும். தேவைகள் மற்றும் முன்னுரிமை அடிப்படையிலும் மக்களை மையப்படுத்தியும் மேற்கொள்ளப் பட்டிருந்த திட்டங்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வீடமைப்பு, வாழ்வாதார உதவிகள் போன்ற பல்வேறு துறைகளிலும் நாட்டின் பல பாகங்களிலும் பரவி காணப்படுகின்றன.

1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவை, ரயில் பாதை புனரமைப்பு, ஒன்றிணைந்த நீர்நிலை திட்டங்கள், இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் யாழ்ப்பாணம் கலாசார நிலையம் ஆகியவை இந்திய அரசாங்கத்தால் இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள முக்கியத்துவமிக்க திட்டங்களில் உள்ளடங்குகின்றன.

வெடிமணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த பேரினவாதத்துக்கும் தொல்பொருள் திணைக்களத்துக்கும் மிகையான அதிகாரம் இருப்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது.

இன்னொரு பக்கத்தால சிறிலங்காவின் பேரினவாத மிகை சிந்தனை கொண்ட அரசியல்வாதிகள் ஒரு படி மேலே போய்...

குருந்தூர்மலை "பௌத்த பூமி" என்று அறிவித்திருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்கு முழுவதும் "பௌத்த பூமியாக" பிரகடனம் செய்து தமிழர் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் கபடத்தனமான நிகழ்ச்சி நிரலை மிக நுண்ணியமாக செய்துகொண்டிருக்கிறது சிங்களம்.

இதை தடுப்பதற்கு என்ன வழி என்று தெரியாமல் "முழி பிதுங்கி" நிற்கிறது தமிழினம்.

அண்மையில் கொழும்பிலே கஜேந்திரகுமார் அவர்களின் வீட்டுக்கு முன்னால் நின்று "பௌத்த பேரினவாத பிக்குகளும் அரசியல்வாதிகளும்" மிரட்டல் தொனியில் தமிழினத்துக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளின் "தலைகளை" கொய்து அதை களனி கங்கையில் வீசுவோம் என்ற அளவுக்கு அவர்களின் அடாவடித்தனம் அதிகரித்திருக்கிறது.

இதே ஒரு நாளில் போன வருடம் "கோமணத்தோடு" அடித்து விரட்டப்பட்டு வீடுகளில் முடங்கி கிடந்த இந்த பேரினவாத அரசியல்வாதிகளுக்கு;

இப்போது "எங்கிருந்து" இந்தளவு தைரியமும் ஊக்கமும் வந்தது என்ற கேள்வி எல்லோருக்கும் வரும்.

நாடு இன்னமும் ஒரு சீரான நிலைக்கு திரும்பாத தருணத்தில் மீண்டும் சீவிச்சிங்காரிச்சு பௌத்த பேரினவாத பேய்கள் தாண்டவம் ஆடுகின்றன.

கஜேந்திரகுமார் அவர்களின் வீட்டுக்கு முன்னால் நின்று "கொலைமிரட்டல்" விடும் பௌத்த பேரினவாதத்தை ஆளும் ரணில் அரசு அடக்குவது போல நாடகம் ஆடினாலும்;

உண்மையில் ரணில் அரசால் ஒருபோதும் பேரினவாத சீழ் பிடித்த பௌத்த பிக்குகளையும் அரசியல்வாதிகளையும் கட்டுப்படுத்த முடியாது என்பதுதான் யதார்த்தம்.

மீறி கட்டுப்படுத்த நினைத்தால் அது ரணிலுக்கு எதிராக திரும்பும் என்று ரணிலுக்கு வடிவாத் தெரியும்.

அதனால்தான் ரணில் "அங்கையும் பாடி இங்கையும் பாடுகிறார்"!

நொந்து நூடில்ஸாகி விழுந்து கிடந்த சிறிலங்காவை தூக்கி விட்ட மேற்குலகமும் சீனாவும் இந்தியாவும் அமெரிக்காவும் இந்தக் கணம் வரை வாயே திறக்காமல் இருக்கிறார்கள்.

சீனாவின் போர்க்கப்பல் ஏற்கனவே சிறிலங்காவை வந்தடைந்த அடுத்த கணம் இன்னொரு கப்பலையும் மிகத்தைரியமாக கொண்டுவந்து நிப்பாட்டப்போகிறார்கள்.

இதனால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால், இந்தியாவுக்கு நிச்சயம் அதிக பாதிப்பு ஏற்படும்.

இந்தியாவின் பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் இந்த சீனாவின் நடவடிக்கையை "கட்டுப்படுத்தாமல்" விட்டால்;

எதிர்காலத்தில் இந்தியா பல "பாதுகாப்பு சிக்கல்களை" எதிர்நோக்கும் அபாயம் உள்ளது.

இந்த விடயம் "அரிவரி" படிக்கும் பொடியனுக்கே தெரியும் எண்ட நிலையில்;

இந்தியாவின் "எதிர்வினை" என்னவாக இருக்கப்போகிறது என்பதுதான் இப்போதைக்கு நாங்கள் ஆவலாக காத்திருக்கும் சமாச்சாரம்.

சிறிலங்காவை தங்களின் "பிடிக்குள்" வைத்திருக்க தவறிய பாரத தேசம் இப்போது;

சீனாவின் மடிக்குள் கிடக்கும் சிறிலங்காவை எப்படி தம்வசம் கொண்டுவரலாம் எண்டு மண்டையை போட்டு பிக்கினம்.

ஆனால், ஏற்கனவே சிறிலங்கா சீனாவின் பிடிக்குள் முழுமையாக சென்றுவிட்டது என்பதுதான் கசப்பான உண்மை.

இது இந்தியாவுக்கு நல்ல வடிவாத் தெரியும். ஆனால் விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக "சீனாவின் கப்பல்கள் சிறிலங்காவுக்கு வருவதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏது இல்லை" எண்டு இந்தியா புலுடா விட்டுக்கொண்டு திரியுது.

சீனாவை வடக்கில் காலூண்ட விட்டுவிட்டு திருகோணமலையில் இந்தியா அவசரமாக காலூண்ட நினைக்கிறது. இதில அஞ்சு சதத்து பிரயோசனமும் இல்லை.

உண்மையில் இந்தியா வடக்கில் மிகப்பலமாக காலூண்டியிருக்கவேணும்.

அதற்கு தமிழ்மக்களின் ஆதரவை கேட்டிருந்தால் நிச்சயம் நாங்கள் அதற்கு உறுதுணையாக இருந்திருப்பம்.

ஆனால் 2009இல் சிறிலங்கா பேரினவாத அரசோடு ஒட்டுக்குழுக்களாய் நிண்டு தமிழ்மக்களை அழித்த இந்தியாவுக்கு தமிழ்மக்களின் ஆதரவு தேவைப்படவில்லை.

ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல!

வடக்கில் இந்தியா காலூண்ட தமிழ்மக்களின் ஆதரவு கண்டிப்பாக தேள்வை.

ஆக;

எந்த வகையிலாவது தமிழ்மக்களை தன்னுடைய கைகளுக்குள் போட்டுக்கொண்டு....

சிறிலங்காவில் இந்தியா மறுபடியும் காலூண்டி விடலாம் என்று முயல்கிறார்கள்.

இது ஒரு வகையில் எங்களைப் பொறுத்தவரை "சாதகமான" நிலைதான்.

இந்தியாவோடு ஒரு இணக்கப்பாட்டை எட்டுவதற்கு தமிழ் அரசியல் தலமைகள் மிகச்சாதுரியமாக காய்களை நகர்த்தவேணும்.

"நடந்தது நடந்துபோச்சு. இனிமேல் எங்களோடு கூட இருங்கள். நாங்கள் உங்களோடு நிற்கிறோம்" என்ற தெளிவான செய்தியை இந்தியாவுக்கு சொல்லவேணும்.

ஆனால் அதைச்சொல்லும்போது "சத்தமில்லாமல்" சொல்லவேணும்.

தற்சமயம் உப்பிடியான "செய்திகள்" தெற்கின் பேரினவாதிகளின் காதுகளுக்கு போனால்;

அதையே "ஊதிப்பெரிப்பிச்சு" சன்னதம் ஆடி மீண்டும் தெற்கில் வாக்குகளை அள்ளிவிடுவார்கள்.

விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷ குறுரப் மிகக்குறுகிய காலத்தில் மீள்எழுச்சி பெற்று தெற்கில் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இது சிங்கள மக்களின் "மறதிக்குணத்துக்கு" மிக நல்ல உதாரணம்.

நாளை மீண்டும் மொட்டுக்கட்சி ஆட்சிக்கு வரலாம். நாமல் ராஜபக்ஷ சனாதிபதியாகலாம். மகிந்த பிரதமர் ஆகலாம். இதுவெல்லாம் நடக்காது எண்டு யாராலும் மறுக்கமுடியாது.

ஏனெண்டால் இன்று வடக்கு, கிழக்கில் நிகழும் பௌத்த பேரினவாத அடக்குமுறைகள் அதைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

சீழ் பிடித்த சிறிலங்காவின் பேரினவாத புத்தியை இன்னும் ஒரு தசாப்தத்துக்கு என்ன மருந்து குடுத்தாலும் மாற்ற முடியாது.

அதுதான் யதார்த்தம்!

அரசியல் FOCUS

த.யுவராஜ்



★ கடந்த வாரம், கிழக்கில் திருகோண மலை சீலவன்ச பௌத்த பிக்கு வுடன் மோதாதே என அமைச்சர் விதுரர், ரணிலர் ஆகியோர் கவர்னர் செந்திலருக்கு சொன்னதன் பின்னணியை எழுதியிருந்தோம். அது இப்போது சரியாகியுள்ளது. கண்டி பௌத்த பீடங்களை தூண்டிவிட்டு, செயலாற்றியது மொட்டு கட்சியின் நுவரெலியா மாவட்ட பெரும்பான்மை இன எம்.பியாம் என Focusக்கு தகவல். இந்தத் தைரியத்தில்தான் பிக்கு, மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் நுழைந்து ரகளை செய்தாராம். மாகாண ஆளுநர், மாவட்ட அரசியல் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகிய அனைவரும் திகைத்து பார்த்துக்கொண்டிருக்க இந்த ரகளை நடந்தது. இவ்வளவு நடந்தும் திருகோணமலை தமிழ் எம்.பி. சம்பந்தர் குறட்டை. பேசாமல் சம்பந்தரின் திருமலை வீட்டையும் இடித்து விகாரை கட்டினாலும் பெரியவர் எழுந்து நிற்க மாட்டார் என தமிழ் அரசியல் தரப்புகள் சத்தியம் செய்து கூறுகின்றன.

★ Focusஇன் புகழ் எட்டுத் திக்கிலும் பரவுகிறது என்பதற்கு இதோ சாட்சி. மாகாண சபை, மாகாண சபை இடைக்கால குழு, 13+, 13-, என்று ரணிலரின் காலை சுற்றி திரிகிறாரே நீதியரசர், இவரை ஒரே ஒருமுறை மிகப்பெரும் மெஜாரிட்டியுடன் மக்கள் வாக்களித்து முதலமைச்சராக தெரிவுசெய்து அனுப்ப, அங்கே போய் இவர் என்ன செய்து கிழித்தார் என நாக்கை பிடுங்குகின்ற மாதிரி கேட்டு எழுத மாட்டீங்களா என ஈழ ஜனநாயகரின் கட்சிப் பிரமுகர் அழைத்துக் கேட்டார் என ஆசிரியர் சொன்னார். நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்பதே இந்த பத்தியின் கொள்கை. அதற்கென்ன யாராக இருந்தாலும் என்று இதோ எழுதுகிறோம். நீதியரசரின் நாக்கு பிடுங்கு படுகிறதோ என எமக்குத் தெரியாது. ஆனால், இப்போது பிடுங்கு படும் நீதியரசர் அங்கே வடமாகாண சபைக்கு போய் செய்தது என்னவோ, தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமே. அபிவிருத்திக்கு வந்த நிதியையும் திருப்பி அனுப்பிய புண்ணியவான். போதாததுக்கு முதலமைச்சர் நிதியம் அமைக்க வேண்டும் என்றும் பிடுங்கு பட்டார். நல்லவேளை, நிதியம் அமையவில்லை. அமைந்திருந்தால், அதுவும் அப்படியே விடப்பட்டு, இன்று கவர்னர் மூலம் மத்திய அரசின் கைகளுக்குப் போயிருக்கும். அரசியல் தீர்வை பாராளுமன்ற உறுப்பினருக்கு விட்டு விட்டு நீர் அபிவிருத்தியை மட்டும் பாரும் என எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் இந்த பிரேமானந்தா பக்தர் கேட்கவில்லை. நமக்கு சொன்ன ஈழ ஜனநாயகரின் கட்சித் தலைவர் ரணிலரையும் சந்தித்து இதை சொன்னாராம் என Focusக்குத் தகவல். அதற்கு ரணிலர் தந்த பதில் அற்புதம். ஆனால், அதுபற்றி அடுத்த வாரம் பார்ப்போம்.

★ இதே மாதிரி கதையை செல்வத்தாரும் அயலவர்களிடம் கூறியுள்ளார். ஆனால், ஆள் வேறு, விஷயம் வேறு என Focusக்குத் தகவல். மாகாண சபைத் தேர்தல் நடந்தால், அதில் ITAK வெற்றிபெற வேண்டும், தான் முதலமைச்சராக வேண்டும் என மாவையர் இப்போதே சூட் தைத்துக்கொண்டு நிற்கிறார். அப்படி ஒருக்கா நடந்துவிட்டால், அந்த ஆட்சி நீதியரசரின் ஆட்சியை விட கோமாளித்தனமாக இருக்கும் என செல்வத்தார் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆயுதம் உள்ள அல்லது இல்லாத ஏதோ ஒரு பொலிஸ் அதிகாரத்தையும் ரணிலர் தருகிறார் என பேச்சுக்கு வைத்துக்கொண்டாலும் கூட அத்தகைய ஒரு சூழலில் பொலிஸ் அதிகாரம் கொண்ட முதலமைச்சர் மாவையரை கற்பனை செய்து பார்க்க வேடிக்கையாக இருக்கிறது. சிங்கள – பௌத்த பேரினவாதத்துக்கு முன், வீட்டுக்கு போக வேண்டிய இந்த பென்சனியர்களிடமிருந்து தமிழினத்தை காத்திடப்பா நல்லூர் கந்தா என கதறி அழத் தோன்றுகிறது.


★ ரணிலரின் சொந்த வீடு அரகலையில் எரிக்கப்பட்டது. இது தொடர்பில் ரணிலர் ஒரு ஊடக நிறுவனத்தையும், இரண்டு சிறுபான்மை அரசியல் பிரமுகர்களையும் மன்னிக்கத் தயார் இல்லையாம். அரகலையை சும்மா ஊதிவிட்டு தனக்கு எதிராக தீயை பற்ற வைத்தது இந்த ஊடக நிறுவனம் என்று ரணில் நம்புகிறார். அடுத்தது, ரணிலுக்கு எதிராக செயற்பட, இந்த ஊடக நிறுவனத்துக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது முஸ்லிம் கட்சித் தலைவரும், தமிழ் கட்சிப் பேச்சாளரும் என ரணிலரின் கூட்டணியில் இணையத் தயாராக இருக்கும் இன்னொரு சிறுபான்மை காங்கிரஸ் தலைவர், தனது நெருங்கிய சகாக்களிடம் சொல்லி சிரித்து திரிகிறாராம். அவர் சிரிப்பில் அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால், இந்த சம்பவங்களை ரணிலர் மறந்தாலும் அவருக்கு அதுபற்றி அடிக்கடி ஞாபகப்படுத்துவதே இவர்தான் என Focusக்குத் தகவல்.

★ வடக்கில் திடீர் சமூக நீதி குட்டையை கிளப்பும் அருணரின் கருத்துக்கு கடும் எதிர்ப்பு தமிழ் தேசியவாதிகளிடம் இருந்து எழுந்தாலும், ஒருதரப்பு மக்கள் மத்தியில் இவரது சொல்வாக்குக்கு செல்வாக்கு ஏற்பட்டு வருகிறது என ரணிலரின் கைகளுக்குப் போயுள்ள இன்டர்லிஜன்ஸ் ரிப்போர்ட் கூறுகிறதென Focusக்குத் தகவல். ஆகவே, சொல்லவா வேண்டும். எல்லாவற்றையும் பிரித்து ஆளும் ரணிலர் இங்கேயும் தன் கைவரிசையை காட்டி இன்னமும் பிரித்து விளையாட தீர்மானித்துள்ளாராம்.

★ பாதுகாப்பு அமைச்சின் மூலம் ஷியான் உளவுக் கப்பலுக்கு இலங்கை வர ஒப்புதல் அளித்துவிட்டு, இப்போது அதன் வருகையை தாமதியுங்கள் என ரணிலர் கூறியுள்ளார். அப்படியானால், உங்கள் நாட்டில் இன்னொரு பாதுகாப்பு அமைச்சர் இருக்கிறாரோ என அயலகர், இலங்கை வெளிவிவகார செயலாளரிடம் கேட்டுள்ளார் என Focusக்குத் தகவல். எப்படியும், பைனல் மேட்ச் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கருக்கும், ரணிலருக்குமிடையில் நிகழத்தான் போகிறது. மோடி அரசு கடும் கோபத்தில் உள்ளது. ஏனைய நாடுகளை முந்திக்கொண்டு நீங்கள் கஷ்டப்படும்போது நான்கு பில்லியன் டொலர் தந்ததை கூட மறந்துவிட்டார்களே என டில்லி நினைக்கிறது. எதையும் கொடுத்து இலங்கையை வசப்படுத்த முடியாது என்ற கசப்பு உண்மையை இன்று விலைகொடுத்து டில்லி சரிவர புரிந்துகொண்டுள்ளது. எனவே, இலங்கை தொடர்பான டில்லியின் கொள்கையில் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டுமென பாரதத்தின் பாதுகாப்பு கொள்கை வகுப்பு நோக்கர்கள் மோடிக்கு எடுத்துக் கூறி வருகின்றனர். இந்தியா, தமிழர் சார்பான நாடு என்ற எண்ணம் இலங்கை சிங்கள மக்கள் மனங்களில் ஆழப்பதிந்துள்ளது. அது மாற்றப்பட வேண்டும் என்று மோடி அரசுக்கு ஆலோசனை சொல்லி வந்த பாரதத்தின் பாதுகாப்பு கொள்கை வகுப்பு நோக்கர்கள்தான் இவர்கள்.

★ பென்சன் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு போக மாட்டேன் என பிடிவாதம் பிடிக்கும், அடுத்த பென்சனியர் சம்பந்தர். இவரால் அடுத்த தீபாவளிக்கும் தீர்வை கொண்டுவர முடியாது. ஆனால், அடுத்த தேர்தலில் கட்டாயம் திருகோணமலை பறிபோகப் போகிறது.

போதாமைக்கு தமிழீழ தலைநகராம் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு இடைப்புள்ளியாம். திருகோணமலை முஸ்லிம் மக்களுக்காக பேச இரண்டு முஸ்லிம் எம்.பிக்கள் இருக்கினம். சிங்கள மக்களுக்கென ஒரு சிங்கள எம்.பி. உண்டு. ஆனால், திருமலையில் வாழும் தமிழினம் வாக்களித்தும் இன்று, அரசியல் அனாதைகளாக திண்டாடினம். பேசாமல் பதவியை இராஜினாமா செய்தால், லிஸ்ட்டில் அடுத்துள்ள குகதாசருக்கு பதவி கிடைக்கும். குகதாசர், என்ன இருந்தாலும் திருமலை மண்ணில் இருந்து நின்று பிடித்து வேலை செய்யக்கூடியவர். அரசாங்க விருந்தாளியாக கொழும்பில் பங்களா, வாகனம், செக்யூரிட்டி என வாழும் சம்பந்தருக்கு அவற்றை விட்டுப்போக மனமில்லை. அவரை விட கூட இருக்கும் சம்பந்தரது மகனுக்கு மனமில்லை என்பதுதான் உண்மை.



(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

முல்லைத்தீவு காட்டுக்குள் காணப்படும் ஆதிசிவன் ஆலயம்

ரஞ்சன் அருண் பிரசாத்

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆதிகாலம் முதல் சிவ வழிபாடுகள் காணப்பட்டமைக்கான பல ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும், அவை இன்றும் வெளிவராத நிலையே காணப்படுகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம், பல தமிழர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதாரங்களை வெளி உலகத்துக்கு மூடி மறைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற குன்றாக வனப் பகுதிகளிலேயே பெரும்பாலான சிவ வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.



இதன்படி, தற்போது சர்ச்சையை தோற்றுவித்திருக்கும் குருந்தூர்மலை விவகாரம் கூட, அண்மையிலேயே நாட்டிலுள்ள பெரும்பாலானோருக்கு தெரியவந்துள்ளது.

குருந்தூர்மலையில் சிவ வழிபாடு இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் இருந்ததாக தமிழர்கள் கூறுகின்றபோதிலும், அதில் பௌத்த அடையாளங்களே காணப்படுவதாக பௌத்த மக்கள் கூறி வருகின்றனர்.

இந்த விவகாரம் தற்போது நீதிமன்றம் வரை சென்று, இரண்டு தரப்புக்கும் வழிபாடுகளை நடத்துவதற்கான உரிமை உள்ளதாக நீதிமன்றம் கூறிய பின்னணியில், இந்துக்கள் அண்மையில் பொங்கல் பொங்கி வழிபாடுகளை நடத்தியிருந்தனர்.

இந்த இடத்துக்கு பௌத்த மக்களும் வருகைதந்து, சர்ச்சையைத் தோற்றுவிக்க முயற்சித்தனர்.

இவ்வாறான பின்னணியில் ஆதிகாலம் முதல் தமிழர்கள் சிவ வழிபாடுகளை நடத்திய மற்றுமொரு மலை தொடர்பான தகவல்களை நாம் அண்மையில் திரட்டியிருந்தோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான நகரமாக ஒட்டுசுட்டான் நகரம் காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் நகரமானது, சிவ வழிபாட்டுக்கு முன்னுரிமை பெற்ற நகரம் என்பதை யாவரும் அறிவோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தான்தோன்றீஸ்வரம் சிவ ஆலயம் ஒட்டுச்சுட்டானில் அமைந்துள்ளது.

இந்த ஆலயத்தின் உற்சவம் ஆரம்பிக்கப்படும் தருணத்தில், வனப் பகுதியிலுள்ள சிவன் ஆலயமொன்றில் அதே நேரம் பூஜை வழிபாடுகளை நடத்துவது வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் ஆலயத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வனப் பகுதியான வாவெட்டிமலை பகுதியிலேயே இந்த ஆலயம் அமைந்துள்ளது.

ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளம் வீதி வழியாக பயணிக்கும்போது, 14ஆம் மைல் பகுதியில் இடது பக்கமாக குண்டும் குழியுமான வீதியொன்று காணப்படுகின்றது.

இந்த வீதியூடாக பயணிக்கும்போதே இந்த சிவன் ஆலயத்துக்குச் செல்வதற்கான வழி அமைந்துள்ளது.

வாவெட்டிமலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் என இந்த ஆலயம் பெயர் பெற்றுள்ளது.

குண்டும் குழியுமான பிரதான வீதியிலிருந்து வனப் பகுதிக்குள் செல்லும்போது, பல தொல்பொருள் பெறுமதிமிக்க அடையாளங்களை எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

மிக நீண்ட நாட்களுக்கு முன்னர் மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்களை கூட எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

குறிப்பாக, புத்தக வடிவிலான கல்லொன்றை எம்மால் அங்கே காண முடிந்தது.

இந்தக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளை வெற்று கண்ணால் பார்வையிட முடியாதென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். மை தடவியே இந்த எழுத்துகளை வாசிக்க முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தொல்பொருள் சான்றுகளுடன் காணப்படும் ஆதி வரலாறு



(தொடர்ச்சி 6ஆம் பக்கம்...)

தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, செப்டெம்பர் 03, 2023

சீனாவின் யுக்திகளில் கவனமாக இருத்தல்!

இந்தியாவின் அண்டைநாடான சீனா வெளியிட்ட புதிய சீன தேச வரைபடத்தில் இந்தியாவுக்குச் சொந்தமான அருணாச்சல், வடக்கு லடாக் (அக்சாய் சின்) பகுதிகள் இடம்பெற்றிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் துறைமுக நகர் அமைத்த சீனா, இலங்கையின் தேச வரைபடத்தை மாற்றியமைத்தமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

ஏற்கனவே தென் ஆபிரிக்காவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் பிரிக்ஸ் மாநாட்டில் சந்தித்தபோது உத்தியோகபூர்வமற்ற முறையில் பேச்சு நடத்தினர். அப்போது, இரு நாடுகளிடையே அமைதி நிலவ வேண்டுமானால், எல்லை தாண்டும் போக்கை சீனா கைவிட வேண்டும் என்று மோடி வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், தனது எதேச்சதிகாரப் போக்கும், எல்லை விரிவாக்க யுக்தியும் சற்றும் மாறிவிடவில்லை என்பதை மீண்டும் உறுதிப் படுத்தியிருக்கிறது சீனா. இதுவரை நிகழ்ந்துள்ள சம்பவங் களைப் பட்டியலிட்டாலே சீனாவின் சாம்ராஜ்ய கனவு புலப்படும்.

சுதந்திரத்துக்கு முந்தைய (1914) திபெத் - பிரிட்டிஷ் அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின்படி திபெத் - பிரிட்டிஷ் - இந்தியா இடையே மெக்மேகன் எல்லைக்கோடு வரை யறுக்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பின் அந்த அடிப்படையில் வடக்கு லடாக் பகுதி ஜம்மு-காஷ்மீரின் அங்கமானது. அதை ஆரம்பத்திலிருந்தே சீனா ஏற்கவில்லை. அப்பகுதியை 1962இல் சீனா ஆக்கிரமித்து அக்சாய் சின் என்று பெயரிட்டுக்கொண்டது. அதன் பரப்பளவு 38,000 சதுர கி.மீ. அப்போது நடந்த இந்திய - சீனப் போரில், இந்தியா 3,000 வீரர்களை இழந்து தோல்வியடைந்தது.

பஞ்சசீலக் கொள்கையின் இரண்டாவது விதியே, எந்த நாடும் பிற நாட்டை ஆக்கிரமிக்கக் கூடாது என்பதுதான். இந்த ஒப்பந்தம், பீஜிங்கில் 1954இல் கையொப்பமானது. அடுத்த சில ஆண்டுகளில் தனது சுயரூபத்தைக் காட்டியது செஞ்சீனா. அதன்பிறகு மெய்யான கட்டுப்பாட்டுக் கோடு (எல்ஏசி) என்ற எல்லைக் கோடு நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனாலும், அவ்வப்போது எல்லை தாண்டும் குறும்புகளை சீனா கைவிடவில்லை.

இந்தியாவும் சீனாவும் சுமார் 4,057 கி.மீ. தொலைவுக்கு எல்லைகளைப் பகிர்ந்துகொள்கின்றன. இப்பகுதிகளில் அவ்வப்போது வம்பிழுப்பது சீனாவுக்கு வாடிக்கையாகிப் போனது.

வடக்கு, கிழக்கு மாநிலமான அருணாச்சலிலும் சீனா உரிமை கோருகிறது. திபெத்தை 1959இல் மோசமான முறையில் ஆக்கிரமித்த சீனா, அதை தனது நாட்டின் ஒரு பகுதியாக்கிக் கொண்டது. அதன்பிறகு அருணாச்சல பிரதேசத்தை தெற்கு திபெத் என்று கூறி சொந்தம் கொண்டாடி வருகிறது.

சுமார் 90,000 சதுர கி.மீ. பரப்புள்ள அருணாச்சலப் பகுதிக்கு ஜாங்னான் என்று பெயரிட்டுள்ளது சீனா. அது மட்டுமல்ல, அருணாச்சலில் உள்ள பல பகுதிகளுக்கும் சீனப் பெயரிட்டு வரைபடத்தை வெளியிடுகிறது சீனா. கடைசியாக 2017இல் இவ்வாறு 32 இடங்களுக்கு சீனப் பெயரிட்டு மகிழ்ந்தது ஜின்பிங் அரசு.

2020இல் லடாக் அருகிலுள்ள கல்வான் பகுதியில் ஊடுருவிய சீன வீரர்களால் நிகழ்ந்த மோதலில் 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர். சீனத் தரப்பிலும் 37 பேர் இறந்ததாக தகவல்கள் வெளியாகின. அந்த மோதல் நிகழ்ந்த பகுதியில் இன்றும் இரு நாடுகளின் படைகளும் நிலை கொண்டுள்ளன.

அதேபோல், இந்தியா, பூட்டான், சீனா ஆகிய மூன்று நாடுகளின் முச்சந்திப் பகுதியான டோகாலாம் பீடபூமியை 2017இல் ஆக்கிரமித்து மிரட்டியது சீனா. தற்போதைய இந்திய அரசின் நடவடிக்கையால் அங்கு நிலைமை சரியானது.

2022 டிசம்பரில் அருணாச்சலின் தவாங் பள்ளத்தாக்கிலுள்ள யாங்ட்ஸியில் சீன இராணுவம் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்தது. அவர்களை வெளியேற்ற இந்திய இராணுவம் முயன்றபோது பல வீரர்கள் காயமடைந்தனர். இந்தியத் தலைவர்கள் அருணாச்சல மாநிலத்திற்குச் செல்லும் போதெல்லாம் கடுமையாக விமர்சிப்பது சீனாவின் வழக்கம்.

இரும்புத்திரை நாடான சீனாவை ஆட்சிசெய்பவர்கள், தமது சர்வாதிகாரப் போக்கை நிலைநாட்டவும், தங்கள் நாட்டின் மக்கள் விடுதலை இராணுவத்துக்கு (பிஎல்ஏ) வேலை கொடுக்கவும் எல்லைப் பிரச்சினையை உருவாக்குகின்றனர்.

சீனாவின் முதல் ஜனாதிபதி மாவோவும், முதல் பிரதமர் சூ இன்லாயும் ஆரம்பத்திலிருந்தே எல்லையை விஸ்தரிக்கும் நாடாக சீனாவை வடிவமைத்தனர். கம்யூனிஸ சர்வாதிகார ஆட்சி, இராணுவ வலிமை ஆகியவற்றின் உதவியால், உலகின் முன்பு தனது அனைத்துத் தவறுகளையும் நியாயப்படுத்துவது சீனாவின் இயல்பு. அது ஜின்பிங் காலத்திலும் தொடர்கிறது.

சீனாவின் வல்லாதிக்கம் என்பது இந்தியாவை மட்டும் பாதிக்கவில்லை. இந்தியப் பகுதிகளை தனது வரைபடத்தில் காட்டியதுபோலவே, தாய்வான், தென்சீனக் கடல் ஆகிய பகுதிகளையும் சீனா தனது வரைபடத்தில் சேர்த்திருக்கிறது. இதன்மூலம் தென்கிழக்கு ஆசியாவில் தாய்வான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூணை ஆகிய நாடுகளுடனும் மோதலில் சீனா ஈடுபடுகிறது.

எதிர்வரும் 9, 10ஆம் திகதிகளில் இந்தியாவில் ஜி20 மாநாடு நடைபெறவுள்ளது. இந்தியாவின் தலைமையில் நடக்கவிருக்கும் ஜி20 மாநாட்டின்போது வரைபட பிரச்சினை முக்கியத்துவம் பெறலாம்.

ஏற்கனவே ஆய்வுக்கப்பல் விவகாரத்தால் இலங்கை யையும் இந்தியாவையும் கோர்த்துவிட்டிருக்கிறது சீனா. பிராந்தியத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்திவிட்டு அமைதியாக இருந்து அவதானமாக தனக்கேற்றபடி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் சீனா தொடர்பில் இலங்கை விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டுவைக்க விரும்புகிறோம்.



தமிழர் விவகாரத்தில் உண்மைகளை மறைப்பதில் சிங்களத் தலைமைகள் ஓரணியில் நிற்கின்றன



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான புதன் கிழமை (30 ஓகஸ்ட் 2023) வடக்குக் கிழக்கில் பேரெழுச்சியுடன் திரண்ட மக்கள் சர்வதேசத்துக்கு உறுதியான செய்தியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி பிரகடனப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

"எமது பிள்ளைகள் எங்கே? "

"எமது உறவுகள் எங்கே?"

இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்?

"வட்டுவாகலில் கையளிக்கப்பட்டவர்கள் எங்கே?"

"கொலையாளி ஜனாதிபதியாய் உள்ள நாட்டில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும்".

"ஐ.நா.வே! கைகளில் ஒப்படைத்தவர்களை தேட OMP அலுவலகம் தேவையா"?

"இராணுவத்திடம் ஒப்படைத்த எம் பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ்தான் பதில் என்றால் கொலை செய்தவன் யார்"?

"சர்வதேச நீதி கோரியே போராட்டம் ."

"சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்".

இவ்வாறான குரல்களினால் வடக்கு, கிழக்கு அதிர்ந்தது.

ஐ.நா. பிரகடனப்படுத்தியுள்ள தினங்களில் மாத்திரமே அந்தந்தத் தினங்களுக்குரிய கோரிக் கைகள் ஒலிப்பது வழமையாக இருந்தபோதும் இலங்கையைப் பொறுத்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஐ.நா. பிரகடனப் படுத்தியுள்ள தினத்துக்கும் அப்பால் நாளாந் தம் வடக்கு, கிழக்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.



2009 யுத்தத்தின் போது சர்வதேசத்தையும் அதன் சட்டவிதிகளையும் நம்பி கையளித்த உறவுகள் தம்மால் கையளித்த உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன ஆனது? என்ற பொறுப்புக்கூறலினை சர்வதேசத்திடம் கோரி இரவு, பகலாக வீதியோரத்தில் முன்னெடுத்து வரும் அறவழி சாத்வீகப் போராட்டமானது 12.08.2022ஆம் நாள் 2018 நாட்களைத் தொட்டுள்ள நிலையில், நீதிகோரி தொடர்ச்சியாக தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்குமுகமாக நீதிக்கான கவனயீர்ப்புப் போராட் டம் மற்றும் பேரணிகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன .

மொத்தத்தில் 2378 நாட்களுக்கு மேல் உறவுகளைத் தேடும் உறவினர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் இந்தப் போராட்டத்தில் இதுவரை 140 உறவுகள் தமது உறவுகளைக் காணாமலே உயிரிழந் துள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1996 ஐ.நா. அறிக்கையொன்றின்படி 1980-96 காலப்பகுதியில் இலங்கையில் 11,513 பேர் காணாமல் போயுள்ளனர். இது உலகில் ஈராக் குக்கு அடுத்தபடியான இரண்டாம் நிலை ஆகும்.

1999 ஆசிய மனிதவுரிமை ஆணையத்தின் அறிக்கையொன்றின்படி, அப்போது 16,742 எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத



வழக்குகள் இருந்தன. அதன் பிறகு நடத்தப் பட்ட ஆட்கடத்தல்களும் காணாமல் போதல் களும் இந்த எண்ணிக்கையை ஆயிரக்கணக் கில் அதிகரித்திருக்கும். இவ்வாறு கடத்தப்படுபவர்களின் பெரும்பான்மையானோர் இலங்கைத் தமிழர்கள் ஆவர்.

போர்க்காலத்தில் மாத்திரமல்ல, இதற்கும் அப்பால் போர் மௌனமாக்கப்பட்ட வேளை, தமது உறவுகளைப் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கும் இதுவரை என்ன நடந்தது என்பது குறித்து உறவுகளினால் தகவல்களைப் பெற முடியாதிருக்கின்றது.

இலங்கை வடக்கு, கிழக்கு தமிழர் வாழ் பகுதிகளில் யுத்த அனர்த்தங்களால் பொது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடு பட்டு வரும் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் அடிக்கடி கடத்தப்பட்டு காணாமல் போவதும் கொலை செய்யப் படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் மற்றும் மனிதவுரிமை பணியாளர்கள் 57 பேர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளோர் விபரத்தையும் ஆசிய மனிதவுரிமை ஆணை யம் வெளியிட்டுள்ளது. எனவே, இவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத் தக்கது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுக்கள்

முதலாவது ஆணைக்குழு 1992 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் நியமிக்கப்பட்டது. அவரின் ஆட்சியில் ஆயிரக்கணக்கான காணாமல் போனவர்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய அளவிலான ஆணைக்குழுவையும் அதே நோக்கத்திற்காக மூன்று வலய ஆணைக்குழுக்களையும் நியமித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 இல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) மற்றும் 2013 இல் காணாமல் போனோர் ஆணைக்குழு என அழைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவை நியமித்தார். பரணகம ஆணைக்குழுவிற்கு 19,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போது இயங்குகின்ற OMP வரை எந்த ஒரு ஆணைக்குழுவும் காணாமல் ஆக்கப் பட்டோரைத் தேடி அலையும் உறவுகளுக்கு பதில் கூறியதாக இல்லை. உண்மையில் இந்த ஆணைக்குழுக்கள் அனைத்துமே சர்வதேசத் தையும் ஐ.நாவையும் சமாளிப்பதற்கான நகர்வு களாகவே அமைந்துள்ளன. எனவேதான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வ தேச நீதிப் பொறிமுறையைக் கோரி நிற்கின்றனர்.

இலங்கையில் எந்த அரசாங்கமும் அல்லது எந்தவொரு சிங்கள அரசியல் தலைவரும் காணாமல்போனோர் விவகாரத்துக்குப் பதில் கூற முன்வரும் நிலையில் இல்லை.

சர்வதேச நீதிப் பொறிமுறையே வேண்டும்

1980 களிலிருந்து நாட்டின் அனைத்து தலைவர்களிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே 2020 ஜனவரி 17 அன்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங்கருடனான ஒரு சந்திப்பின்போது, காணாமல் போன அனைவரும் உண்மையில் இறந்துவிட்டார்கள் என்று கூறினார் என்பதை டெய்லிமிரர் பத்தி எழுத்தாளரான M.S.M.Ayub குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹன்னா சிங் 2020 ஆண்டு இலங்கை வந்தபோது அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவ்வேளையில் இந்த விடயம் வெளிப்படுத்தப் படவில்லை. காலம் பிந்தியே தெரிவித்தார் என்பதே உண்மையாகும்.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய எந்த ஒரு தலைவரோ அல்லது அரசாங்கமோ உண்மையான முயற் சியை மேற்கொள்வது அரசியல் ரீதியாக தற்கொலை செய்து கொள்ளும் செயலாகும். மறுபுறம் தமிழ்த் தலைவர்கள் இந்த யதார்த் தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தமது கோரிக்கைகளை மாற்றிக் கொள்வதும் தற் கொலைச் செயலாகும். எனவேதான் இந்த விடயம் முடிவின்றி தொடர்கிறது என்றும் M.S.M.Ayub குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் சிங்கள ஆளும் வர்க்கம் தத்தமது அரசியல் இருப்புக்காக எவ்வளவு காலத்திற்கு உண்மைகளை சாகடிக்க முடியும் என்பதே கேள்வியாகும்.

தமிழர் விவகாரத்தில் உண்மைகளை மறைப்பதில் கட்சி வேறுபாடின்றி அனைத்து சிங்களத் தலைமைகளும் ஓரணியில் நிற்கின்றன.

l h g i l h l

★ அரசியலில் மீள்பிரவேசம் செய்யும் கோட்டாபய

★ கோட்டா வருகையால் ராஜபக்ஷ குடும்பத்தில் களேபரம்

★ பெசில் மறந்தவற்றை நினைவூட்டிய லான்சா

★ கிழக்கு ஆளுநர் தொடர்பில் ரணிலிடம் அதிருப்தி வெளியிட்ட மகாநாயக்க தேரர்கள்

சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் யார் என்பதை அரசியல் கட்சிகள் சூசகமாக தெரிவித்து வருகின்றன.

எந்தவொரு கட்சியும் தேர்தல் காலத்தை நெருங்கும் போது வேட்பாளரை அறிவிப்பது வழமை. எனினும், அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப்போவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் அறிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுவை தாக்கல் செய்வார் என்ற சமூக ஊடக அறிக்கைகளால் தூண்டப்பட்ட ஊகங்கள் அதிகரித்து வந்ததையடுத்து திஸாநாயக்கவின் அறிவிப்பு வந்தது. திஸாநாயக்க தானே முன்வந்து ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து தனது திட்டத்தை அறிவித்தார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும அண்மைக்காலமாக நடத்திவரும் சந்திப்புகளை நோக்கும்போது கூட்டு எதிரணியின் பொது ஜனாதிபதி வேட்பாளராக அவர் போட்டியிடுவதற்கான திட்டம் இருப்பதாக ஊகங்களைத் தூண்டியது.

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் இதே பிரச்சினை எழுந்துள்ளது. ஏனெனில், அவருடன் ஜனாதிபதி பதவிக்கான அபிலாஷைகளை வைத்திருப்பவர்கள் உள்ளனர். சரத் பொன்சேகா போன்ற எம்.பிக்கள் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கான இரகசிய மற்றும் வெளிப்படையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தவிர, அடுத்த ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் உள்ளது. ஆனால், அரசியல் கட்சிகள் இப்போதே அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) அடுத்த ஆண்டு நிலுவையிலுள்ள பிரதான தேர்தல்களுக்கு முன்னதாக தனது கட்சியை வலுப்படுத்த உறுப்பினர் சேர்க்கையை ஆரம்பிக்கவுள்ளது.

கோட்டாவும் களத்தில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்று ஆராய்ந்துவரும் நிலையில் இப்போது புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணிலை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்க வேண்டுமெனவும் அதன்பின்னர் வரும் பொதுத் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக இடவேண்டுமெனவும் பௌத்த மதத்தலைவர்கள் பலர் அழுத்தங்களை வழங்க ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணிலை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கான அரசியல் கூட்டணியின் ஆரம்பகட்ட வேலைகள் நடந்துமுடிந்துள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த புதிய அரசியல் கூட்டணி அறிவிக்கப்படும். கடந்த வாரம் இந்தக் கூட்டணி தொடர்பான விசேட கூட்டமொன்று நடைபெற்றபோது கூட்டணியின் ஒருங்கிணைப்பு வேலைகளை செய்யும் பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மீண்டும் அரசியலுக்கு வர தீர்மானித்துள்ள கோட்டா கடந்த வாரம் இடம்பெற்ற மகாநாயக்க தேரர் ஒருவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டிருந்தார். அங்கு வந்திருந்த பௌத்த பீடங்களின் உயர்மட்ட தேரர்களை சந்தித்துப் பேசவும் கோட்டா தவறவில்லை. கோட்டாவை மீண்டும் அரசியலுக்குக் கொண்டுவருவது தொடர்பில் மஹிந்தானந்த அலுத்கமகே, நிமல் லான்சா ஆகியோர் கோட்டாவின் இல்லத்திற்கு சென்று அவருடன் நீண்ட பேச்சுகளை நடத்தியிருப்பதாகவும் அறியமுடிகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் மீள்பிரவேசம் ராஜபக்ஷ குடும்பத்தில் பெரும் அதிர்வுகளை உண்டாக்கியுள்ளது. ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் தனக்கெதிராக இடம்பெற்ற போராட்டங்களின் பின்னணியில் குடும்ப உறவினர்கள் இருப்பதாக நம்பும் கோட்டாபய, தனது மீள் அரசியல் பிரவேசம் குறித்து குடும்ப உறவினர்கள் எவருடனும் கலந்தாலோசிக்கவில்லை என்று கூறப்படுகிறது. எவ்வாறாயினும் கோட்டாவின் அரசியல் மீள்பிரவேசத்தை நிறுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அவருக்கு தகவல் அனுப்பியுள்ளது. அதனை செவிமடுக்காமல் அவர் அரசியலுக்கு மீண்டும் வருவாராயின் அவருக்கு எதிராக பகிரங்க விமர்சனங்களை முன்வைப்பதென்று பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக உள்ளக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நன்றி மறந்த பெசில் - விமர்சித்த லான்சா

ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுவரும் அரசியல் கூட்டணியின் ஏற்பாட்டாளரான நிமல் லான்சா கடந்த வாரம் கொழும்பில் முக்கிய சந்திப்பொன்றை நடத்தினார். அமைச்சர் நளின் பெர்னாண்டோ உட்பட அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் இந்தப் பேச்சில் கலந்துகொண்டனர்.

பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், புதிய அரசியல் கூட்டணியை விமர்சிப்பது குறித்து இங்கு பேச்சு எழுந்தது. ஐயோ அந்த பேச்சுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். அவர் எல்லாம் ஒரே ஆளா? என்று அதற்குப் பதிலளித்தார் அமைச்சர் நளின் பெர்னாண்டோ.

மஹிந்த தேர்தலில் தோற்ற பின்னர் வெளிநாட்டுக்கு ஓடிய பெசில் நாடு திரும்பும்போது அவரை வரவேற்க லான்சாவே ஆயிரம் பேரை திரட்டிக்கொண்டு விமான நிலையம் சென்றார் என்று அரசியல் பிரமுகர் ஒருவர் கூற அதற்குப் பதிலளித்தார் லான்சா.

வெளிநாட்டு மோசடிகளில் தொடர்புபட்டவர்தான் பெரமுன செயலராக இருக்கிறார். கட்சி அமைக்கும்போது அவர் எங்கிருந்தார் என்பது எனக்குத் தெரியும். ஒளிந்திருந்த அவரையெல்லாம் வெளியே கொண்டுவந்து செயலாளர் பதவி கொடுத்தார்கள். அதற்குரிய தகுதி இருக்கிறதா என்றும் பார்க்கவில்லை. பெசில் சிறையிலிருந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது 24 மணிநேரமும் அவருடன் இருந்தவன் நான். எந்த ஆதாயத்தையும் எதிர்பார்த்து நான் அவ்வாறு செய்யவில்லை. தேவையானால் சாகர காரியவசம் விவாதம் ஒன்றுக்கு வரட்டும். நான் சொல்ல இன்னும் பல விடயங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் அங்கே சொல்வேன் என்று விசனத்துடன் கூறினார் லான்சா .

மீண்டும் மலிக் டீல்

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் முக்கிய புள்ளியாக இருந்து ரணிலுடன் மனஸ்தாபப்பட்டு வெளியில் வந்த மலிக் சமரவிக்ரம இப்போது மீண்டும் ரணிலுடன் செட்டாகியுள்ளார்.

எதிர்க்கட்சி வரிசையிலுள்ள எம்.பிக்களை வளைத்துப்போட்டு ரணிலின் செல்வாக்கை அதிகரிக்க முயற்சிகளை எடுத்துவரும் மலிக், சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பில் சந்தித்து சுமார் 2 மணிநேரம் அரசியல் பேசியுள்ளார்.

வெகுவிரைவில் அரசியல் அரங்கில் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் சொல்கின்றன. ரணிலும் சஜித்தும் இணையவேண்டுமென ஏற்கனவே மாத்தளை எம்.பி. ரோகினி கவிரத்ன தெரிவித்திருந்தார்.

அதேபோல் முன்னாள் எம்.பி. ஹரிசன் பேசும்போது, ஐக்கிய சக்தியிலிருந்து மேலும் பலர் ரணிலுடன் இணையவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

ரணிலையும் சஜித்தையும் இணைக்க சிலர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களை உள்வாங்க இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஆளுநர் தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட தேரர்கள்

திருகோணமலை, நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்துக்கு முன்னால் பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கமளிக்கப்பட்டு அதற்கான அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில், பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களால் இக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் விகாரை அமைக்கப்படவிருந்த அரச காணியில் அத்துமீறி நுழைய முடியாது என பிரதேச செயலாளரால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கடிதம் வாபஸ் பெறப்பட்டு, பிக்குகள் அந்தக் காணிக்குள் நுழைவதில் எந்த ஆட்சேபனையும் இல்லையென பிரதேச செயலகத்தால் புதிய கடிதம் வழங்கப்பட்டது. ஆனால் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முடியாது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள்போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என தெரிவித்தார்.

மேலும் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்தவொரு கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார். பிக்குகள் அதிரடியாக உள்ளே நுழைந்த காரணத்தால் பாதுகாப்பு கேள்விக்குறியானதாக தெரிவித்து ஆளுநர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கிடையில் தலதா மாளிகை பெரஹெராவுக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு மகாநாயக்க தேரர்களுடன் நடத்திய சந்திப்பில் குருந்தூர்மலை விவகாரமும் திருகோணமலையின் மேற்படி விவகாரமும் பேசப்பட்டுள்ளன. கிழக்கு ஆளுநர் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்த தேரர்கள் அவரின் செயற்பாடுகளால் இனி பௌத்த தேரர்கள் வெகுண்டெழுந்தால் தங்களால் ஒன்றும் செய்யமுடியாதென்றும் ஜனாதிபதியிடம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.



கண்டி பெரஹெரா நிறைவு செய்த ஆவணம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கண்டி தலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெரா பண்டைய முறைமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேலவினால் வியாழன் (31) கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஊர்வலமாக கண்டி ஜனாதிபதி மாளிகைக்கு வருகைதந்த தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல உட்பட நிலமேமார்களை ஜனாதிபதி வரவேற்றார்.

அதனையடுத்து தியவடன நிலமே ஜனாதிபதியிடத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆவணத்தைக் கையளித்தார். பெரஹெராவில் கலந்துகொண்ட யானைகளை அடையாளப்படுத்தும் வகையில், சிந்து யானைக்குட்டிக்கு ஜனாதிபதியால் பழங்கள் வழங்கப்பட்டன. அதனையடுத்து பாரம்பரிய சம்பிரதாயங்களுக்கமைய ஜனாதிபதியுடன் நிலமேக்கள் புகைப்படம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பெரஹெராவில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு பரிசுகளை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. "எசல பெரஹெர பாரய" நிதி அன்பளிப்பு பிட்டிசர விகாரைக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய மாகாண கலாசார அமைச்சால் தயாரிக்கப்பட்ட "பூஜனிய தலதா சங்ஸ்குறுத்திய" (போற்றத்தக்க தலதா கலாசாரம்) என்று நூலும் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

பெரஹெராவை ஏற்பாடு செய்திருந்த தியவடன நிலமே உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத மற்றும் தேசிய நிகழ்வாக மாத்திரமன்றி இலங்கையின் கலாசாரத்தை உலகறியச் செய்யும் வண்ணமயமான கலாசார கலை நிகழ்வான வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெராவை பாதுகாத்து தொடர்ச்சியாக நடத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

யானைகளை பாதுகாக்கவேண்டிய அதேநேரம், எமது பாரம்பரிய சம்பிரதாயங்களைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவேண்டும். பெரஹெராவுக்கான யானைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

''யானைகளை பாதுகாக்க வேண்டும். 40 வருடங்களாக நான் அதைத்தான் கூறிவருகிறேன்..'' -

என்று ரணில் தனது பேச்சின்போது கூறியமை அங்கு சிரிப்பலையை ஏற்படுத்தியது.

அடுத்த வருடத்தில் சுற்றுலாத்துறையில் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான வேலைத்திட்டத்தில் கண்டி வரலாற்றுச் சிறப்புமிக்க எசல பெரஹெரா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, திலும் அமுனுகம, பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன மற்றும் அரசாங்க அதிகாரிகள், முப்படை பிரதானிகள், தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல, ஏனைய நிலமேமார்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



பா.அரியநேத்திரன்



வலிந்து காணாமலாக்கப்பட்டோரில்

வடக்கு, கிழக்கு தமிழர்களே அதிகம்!

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் உள்ளகப் பொறிமுறை படுதோல்வி கண்டுவிட்ட நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் அவசியமாகும்.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம் கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதியாகும். அன்றைய தினம் வழமைபோன்று இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பிலும், மன்னாரிலும் இடம்பெற்ற போராட்டங்களில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டு தமது காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.

ஈழத்தமிழர்களின் உரிமைக்கான அஹிம்சைப் போராட்டங்களும், ஆயுத ரீதியிலான போராட்டங்களும் இடம்பெற்ற கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை.

2017, பெப்ரவரி 19ஆம் திகதி வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் தமது காணாமலாக்கப்பட்டோரைத் தேடி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று 2023, செப்டெம்பர் 03ஆம் திகதிவரை 2,447 நாட்களாகத் தொடர்கிறது. ஆனால், இலங்கை அரசாலோ, சர்வதேச சமூகத்தாலோ இதுவரை எந்த நீதியும் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

அதற்காக தமது தொடர் போராட்டங்களைக் கைவிடாமல் பாதிக்கப்பட்ட உறவுகள் சர்வதேசத்தை நோக்கி தமது கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதியும் சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினத்தில் மட்டக்களப்பிலும், மன்னாரிலும் இடம்பெற்ற இரண்டு பெரியளவிலான போராட்டங்களிலும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள், சமயத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பட்டவர்கள் கலந்துகொண்டு குரல் கொடுத்ததைக் காணமுடிந்தது.

கண்துடைப்புக்காக கடந்த 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காணாமலாக்கப்பட்டோரது அலுவலகம் தனது பணியை செவ்வனே செய்து முடிக்கவில்லை. ஒவ்வொரு ஜெனீவா கூட்டத்தொடர் வருகின்ற காலப்பகுதியில் தாங்களும் வேலை செய்கின்றோம், அவர்களுடன் இணைந்து அவர்களது விவரங்களை திரட்டி அவர்களுக்கான பதிலை அளிக்கிறோமென காட்டுவதற்காக தாங்கள் மும்முரமாக செயற்படுவதாக காட்டிக்கொள்கின்றார்களே தவிர, அதனால் எந்த நீதியும் கிடைக்கவில்லை.

காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் கோரிக்கைகள்

மரண அத்தாட்சிப்பத்திரங்கள் வேண்டாம், கொடுப்பனவுகள் வேண்டாம், சலுகைகள் வேண்டாம், உள்நாட்டு விசாரணைகள் வேண்டாம், காணாமலாக்கப்பட்டோருக்கான எந்த அலுவலகங்களும் வேண்டாம், சர்வதேச விசாரணை மூலம் நீதி தேவை என்பதே அவர்களின் கோரிக்கைகளும் கோஷங்களுமாக மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் இடம்பெற்ற போராட்டங்களில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் முடிவுகளாக இருந்தன.



காணாமலாக்கப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டி அவர்களின் உறவினர்களை தொடர்புகொள்வதற்காக ஓ.எம்.பி. அலுவலகம் எனக் கூறும் நடவடிக்கையொன்றை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டபோதும் அந்த அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளை அழைத்து அதற்கான பரிகாரம் வழங்கவுள்ளதாக கூறப்பட்டாலும் அதனை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்கவில்லை. அவர்கள் அதனை பல இடங்களில், பல மாவட்டங்களில், பல காலங்களில் தொடர்ந்தும் இந்த ஓ.எம்.பி. அலுவலகத்தை எதிர்த்து வருகின்றனர்.

எதிர்ப்பதற்கான காரணம்

இவ்வாறான அலுவலகங்களில் தாம் முறையிட்டாலும் தமக்கு நீதி கிடையாது. காணாமலாக்கப்பட்டோர்களுக்கு மரணச்சான்றிதழ்களும், நிவாரணங்களும் மட்டுமே வழங்கும் செயல்பாடுகள் மட்டுமே அந்த அலுவலகங்கள் மூலம் செய்வதற்காகவே அது உள்ளது. எமக்குத் தேவை கொடுப்பனவுகளோ, நிவாரணங்களோ, மரணச்சான்றிதழ்களோ அல்ல. காணாமலாக்கப்பட்டதமது உறவுகளுக்கு என்ன நடந்தது, எங்கிருக்கிறார்கள். அவர்களை கண்டுபிடித்துத் தாருங்கள். அவர்கள் கொலை செய்யப்பட்டால் அவர்களை யார் கொலை செய்தார்கள், ஏன் கொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறு கொலை செய்யுமாறு உத்தரவிட்ட வர்கள் யார் என்பதை பகிரங்கமாகக் கூறி அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பதையே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளில் பெரும் பாலானவர்கள் விரும்புகின்றனர்.

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்)

முல்லைத்தீவு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)



அந்த இடத்தில் மிகவும் பழைமையான பாரிய கற்களை கூட எம்மால் காண முடிந்தது.

அந்த இடத்திலிருந்து காட்டு வழியாக உள்ளே சென்றால், இயற்கையாகவே அமைந்த பாரிய கருங்கற்களைக் காண முடியும்.

குகை வழிவில் அமைந்துள்ள இந்த கல்லுக்குக் கீழ், சிவலிங்கம் வடிவில் இந்த சிவம் அமையப் பெற்றுள்ளது.

இந்த சிவலிங்கத்துக்கு பூஜைகள் நடத்தப்பட்டதன் பின்னரே, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தின் உற்சவம் ஆரம்பிக்கப்படுமென பிரதேசத்திலுள்ள வர்த்தகரான சீலன், 'தமிழனு'க்குத் தெரிவித்தார்.

வாவெட்டிமலை பகுதியிலுள்ள சிவனுக்கு ஆதிகாலத்தில் பூஜை செய்த பூசகர் ஒருவர், வழமையாக ஒட்டுசுட்டான் பகுதிக்கு வருகைதந்து விவசாயத்தில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். ஒருநாள் குறித்த பூசகர் ஒட்டுசுட்டான் பகுதிக்கு வருகைதந்து விவசாயம் செய்வதற்காக மண்ணை வெட்டியபோது, மண்ணிலிருந்து இரத்தம் வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதையடுத்து ஆச்சரியமடைந்த பூசகர் அங்கிருந்து சென்றுள்ளார். இரவு நித்திரையில் சிவன் தோன்றி, தானே அந்த இடத்தில் இருப்பதாகக் கூறியதாக நம்பப்படுகின்றது. அதையடுத்து, குறித்த பூசகர் அந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோதே ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் தோன்றியிருந்ததாக அந்தப் பிரதேச மக்கள் நம்புகின்றனர். வாவெட்டிமலை பகுதியில் பூஜை செய்து வந்து, தான்தோன்றிஸ்வரர் ஆலயத்திலும் வழிபாடுகளை தொடர்ந்தும் அந்த பூசகர் நடத்தியுள்ள வரலாறு இன்றும் தொடர்கின்றது என அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட வாவெட்டிமலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம், தொல்பொருள் பெறுமதிமிக்க ஆதிகால ஆலயமாகக் கருதப்படுகின்றது.

இந்த இடத்தில் முழுமையாக சைவ வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் மாத்திரமே காணப்படுவதை பிரதேச மக்கள் ஒவ்வொன்றாக சுட்டிக்காட்டினார்கள்.

''இந்த இடத்தில் முழுமையாக சைவ வழிபாடுகள் நடத்தப்படுகின்றமைக்கான அடையாளங்களே இருக்கின்றன. வடக்கில் இவ்வாறு காணப்படுகின்ற பகுதிகளை பௌத்த பேரினவாதிகள் தமது சொத்துகள் என தற்போது கூறி வருகின்றனர்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை போன்ற பகுதிகள் இதற்கு சிறந்த உதாரணம். இந்த வரிசையில் வாவெட்டிமலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தையும் தமது அடையாளம் என பௌத்தர்கள் எதிர்காலத்தில் கூறலாம். ஆனால், நாம் தற்போது பார்க்கும்போது இந்த இடத்தில் சைவ அடையாளங்கள் மாத்திரமே காணப்படுகின்றன. அதனால், இந்த இடத்தை நாம் பாதுகாத்து, தமது அடையாளங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்'' என வர்த்தகரான சீலன் தெரிவிக்கின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவிலான தொல்பொருள் பெறுமதிமிக்க இடங்கள் காணப்படுகின்ற நிலையில், அவ்வாறான இடங்களை உரியவகையில் பாதுகாக்க வேண்டும் என்பதே பிரதேச மக்களின் கோரிக்கையாக காணப்படுகின்றது.

அரசியலில் ஓடி ஒளிய மாட்டோம்!

மீண்டும் நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்போம் - மைத்ரி சூளுரை



நாட்டின் ஜனாதிபதி பதவியை வகித்த அனுபவம் கொண்டவர் என்ற அடிப்படையிலும் சர்வதேச தொடர்புகளைப் பேணி வருபவர் என்ற அடிப்படையிலும் 2024ஆம் ஆண்டாகும்போது நாட்டின் தலைமைப் பதவியை ஏற்பதற்கான முழு தகுதியும் தனக்கு இருப்பதாக முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

தெரண தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவருடனான உரையாடலின் ஒரு பகுதி வருமாறு,

செப்டெம்பர் 03ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டு விழாவை அனுஷ்டிக்கத் தயாராகி வருகிறீர்கள். இந்நிலையில் கட்சிக்குள்ளும் வெளியிலும் முரண்பாட்டு நிலை உருவாகியுள்ளது. இது நெருக்கடி நிலை அல்லவா?

முரண்பாடு ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. ஒவ்வொரு பிரிவுகளிலும் முரண்பாட்டு நிலை நிலவுகிறது.

ஹெட்டிபொலவில் இந்த நிகழ்வை நடத்தவே ஆரம்பத்தில் ஏற்பாடு செய்திருந்தீர்கள். அவ்வாறிருக்கையில், திடீரென தலவத்துகொடவில் நிகழ்வை ஏற்பாடு செய்ய காரணம் என்ன?

அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஹெட்டிபொலவில் நிகழ்வை நடத்த தீர்மானித்ததன் பின்னர், இந்தப் பிரதேசம் குருநாகல் நகரில் இல்லாததால் பொருளாதார சிக்கல் ஏற்படும் என்றும் கொழும்பு பிரதேசத்தில் நடத்தினால் இந்த செலவைக் குறைத்துக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் நாடு முழுவதுமுள்ள தொகுதி அமைப்பாளர்கள் கோரியிருந்தனர். அதனைத் தொடர்ந்தே கொழும்பில் நடத்த திட்டமிட்டோம்.

கொழும்பில் நடத்தினாலும் அதே செலவல்லவா ஏற்படும்?

பொதுவாக பார்த்தால் வழமையாக மாநாடுகளில் பங்குபற்றுவதற்காக கொழும்புக்கு வந்தே மக்கள் பழக்கப் பட்டுள்ளார்கள். அதனால், கொழும்பில் நடத்துவது சிறந்தது என்பதே அநேகமான வர்களின் நிலைப்பாடாக இருந்தது.

ஹெட்டிபொல விளையாட்டு மைதானத்தில் நடத்தியிருந்தால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்குபற்றியிருப்பார்கள். அவ்வாறிருக்கையில், தலவத்துகொட மண்டபமொன்றில் நடத்தினால் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் அல்லவா கலந்துகொள்வார்கள். மைதானமொன்று நிரம்புமளவுக்கு சுதந்திரக் கட்சியால் மக்களை அணிதிரட்ட முடியாமல் போயுள்ளதா?

தெளிவாக மக்களை அணிதிரட்ட முடியும். காலிமுகத்திடலை நிரப்புமளவுக்கு கூட மக்களை அணிதிரட்ட முடியும். இருந்தபோதும், தற்போதுள்ள பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்தோம். சுதந்திரக் கட்சியால் மக்களை அணிதிரட்ட முடியாது என்ற கருத்தை முழுமையாக நிராகரிக்கிறேன். கடந்த ஓரிரு மாதங்களில் நாங்கள் சென்ற ஒவ்வொரு மக்கள் சந்திப்புகளிலும் பெருந்திரளான மக்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒரு வருடத்துக்கு முன்பு இடம்பெற்ற தொகுதிக் கூட்டங்களிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தேன். அந்த விஜயமும் எங்களுக்கு வெற்றியளித்திருந்தது. சுதந்திரக் கட்சியால் மக்களை திரட்ட முடியாமல் இல்லை. எங்களுக்கு இருக்கும் பொருளாதார பிரச்சினையின் காரணமாகவே இந்தத் தீர்மானத்துக்கு வந்தோம்.

குருநாகல் என்பது சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் ஊர் மற்றும் தேர்தல் தொகுதி என்பதால், அங்கு இந்த நிகழ்வை நடத்துவது தொடர்பில் மஹிந்த அமரவீர, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டதாகக் கூறப்படுகிறதே?

இந்தக் கருத்தை நிராகரிக்கிறேன். தவறான கருத்தாகும். இது உருவாக்கப் பட்ட கருத்து. நீங்கள் குறிப்பிட்ட அமைச்சர்கள் கூட ஹெட்டிபொல என்றாலும் வருகிறோம் என்றே கூறினார்கள். அமைப்பாளர்களின் நிலைப்பாட்டுகளை கருத்திற்கொண்டு நானே இந்தத் தீர்மானத்தை எடுத்தோம்.

இருந்தபோதும், தயாசிறி ஜயசேகர போன்றோர் உங்களை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து கொழும்புக் கூட்டத்தில் தங்களால் பங்குபற்ற முடியாது என்று கூறினார்கள் என்று குறிப்பிடப்படுகின்றதே?

அதுவும் தவறான விடயமாகும். கட்சி

குருந்தி விகாரை பிரச்சினையில் நிதானமான கலந்துரையாடல் அவசியமாகும். இல்லாவிட்டால் சிக்கல் நிலை உருவாகலாம்

ரீதியான செயற்பாடுகளுக்காக நாங்கள் சந்தித்துக்கொள்வோம். அதற்காக வரமுடியாது என்று யாரும் கூறவில்லை. கட்டாயம் கட்சி ஆண்டு நிறைவு விழாவில் சகலரும் கலந்துகொள்வார்கள். இந்த விடயத்தில் எங்கள் மத்தியில் எந்த முரண்பாடும் இல்லை.

மறுபுறம் நாட்டில் முரண்பாடு இல்லாமல் எந்தவொரு அரசியல் கட்சியும் இல்லை. சகல இடங்களிலும் முரண்பாடுகள் இருக்கின்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா?

கட்சி பொதுச் செயலாளர் பதவியில் எந்த மாற்றமும் ஏற்படாது. அவ்வாறு மாற்றவேண்டுமென்றால் நிறைவேற்றுக் குழுவுக்கு அழைப்பு விடுத்து தேர்தலொன்றை நடத்தவேண்டும்.

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண ஆகியோர் உங்களை சந்திக்க கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் ஏற்கனவே இருந்த பதவிகளை மீண்டும் அவர்களுக்கே வழங்க எதிர்பார்த்துள்ளீர்களா?

அது நீதிமன்றத்தின் தீர்ப்பாகும். நிமல் சிறிபால டி சில்வா கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலொன்று செய்திருந்தார். அந்த வழக்கில் அவர் தோல்வியை சந்தித்திருந்த நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். அதற்கு, அவரின் சகல பதிவுகளுடனும் மீண்டும் கட்சியில் கடமையாற்றுவதற்கு இடமளிக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதன் பின்னர், மற்றவர்களும் சட்டத் தரணிகளினூடாக எனக்கு கடிதமொன்றை அனுப்பி எங்களையும் மீண்டும் இணைத் துக்கொள்கிறீர்களா, இல்லாவிட்டால் வழக்கு தொடரப் போவதாகவும் அறிவித் திருந்தார்கள். தொடர்ந்து கட்சிமீது வழக்கு பதிவாவதை தவிர்த்துக்கொள்வதற்காக, அவர்களை மீண்டும் இணைத்துக்கொண்டு சகலருக்கும் பதவி உயர்வுகள் வழங்க நடவடிக்கை எடுத்திருந்தோம்.

ஆண்டு விழாவில் பங்கு கொள்ள சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதா? அவர் வருவாரா?

அவருக்கும் அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். அவரும் பங்குகொள்வார் என்று நான் நம்புகிறேன்.

பழைய கோபதாபங்கள் தற்போது உங்கள் மத்தியில் இல்லையா?

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை. எதிரிகளும் இல்லை. நான் ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். ஆனால், நான் 43 வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவே பேசியுள்ளேன். ஆனால்லும், ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைச்சரவையொன்றையும் நியமித்தோம். மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் ரணிலை ஜனாதிபதி யாக்குவார்கள் என்று எவரும் சிந்தித்தது இல்லை. இதுவே அரசியல் நிலைவரம். 1956ஆம் ஆண்டு இருந்த அரசாங்கத்தின் கொள்கையே இன்றும் அவசியமாக இருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் அடையாளம் முன்னர்போலவே பாதுகாக்கப்படுகின்றதா என்ற சந்தேகமொன்று பொதுவாகவே இருக்கிறது. சிறிமாவோ பண்டார நாயக்கவின் ஆட்சிக்காலத்திலேயே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்த திருத்தத்துக்கு அவர் நேரடி எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அதன்போது, அவருடன் இணைந்தே நீங்களும் அரசியலில் ஈடுபட்டிருந்தீர்கள். அவ்வாறிருக்கையில் அண்மையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஏனைய சகல கட்சிகளும் எதிர்ப்பை வெளியிடும்போது நீங்கள் இந்தத் திருத்தத்துக்கு ஆதரவளிப்பது போன்றல்லவா செயற்பட்டிருந்தீர்கள்?

இந்த விடயமும் முழுமையான தவறாகும். சர்வகட்சி மாநாட்டில் 13ஆவது அரசியலமைப்புக்கு ஆதரவளிப் பதா, இல்லையா என்ற விடயம் தொடர்பில் பேசப்படவில்லை. அந்தக் கலந்துரை யாடலின் பின்னர் சமன் ஏக்கநாயக்க சகலருக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதத்தில், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் கட்சி நிலைப்பாடுகளே கோரப்பட்டிருந்தன.

அதற்கு, முதலில் அரசாங்கத்தின் யோசனைகளை வெளிப்படுத்தவேண்டும்

சுதந்திரக் கட்சிக்கென தனியான மக்கள் கூட்டம் இருக்கிறார்கள். அதனை எங்களால் நிரூபிக்கவும் முடியும்

என்றும் அதில் விருப்பமானவற்றையும் விருப்பமில்லாதவற்றையும் நாங்கள் தெரிவுசெய்கிறோம் என்றும், எவற்றை திருத்தவேண்டும் என்பதை நாங்கள் கூறுகிறோம் என்றும் அதற்கு நான் பதில் கடிதம் அனுப்பி வைத்திருந்தேன்.

அதற்கு காரணம் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என்பது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றாகும். அதன் காரணமாகவே அரசாங்கத்தின் யோசனைகளை முதலில் முன்வைக்குமாறு கோரியுள்ளோம். அதன்போதே, எங்களின் யோசனைகளை முன்வைக்க முடியும்.

ஆனால், சர்வகட்சி மாநாட்டில் இந்தத் திருத்தத்தை பாதுகாக்கும் வகையில் அல்லவா செயற்பட்டீர்கள். காரணம் மற்றவர்கள் நேரடியாக அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்கள் அல்லவா?

சர்வகட்சி மாநாடு என்பது தனியான எனது வேலைத்திட்டமாகும். நானே இதுதொடர்பில் சுதந்திரக் கட்சிக்கும் யோசனை முன்வைத்தேன். இதுதொடர்பில் ஒருவருடத்துக்கு முன்பு, இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென்றால் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவோம் என்று பாராளுமன்றத்திலும் இதுதொடர்பில் பேசியிருந்தேன். நாடு பெரும் நெருக்கடி நிலைமையில் இருந்ததாலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்தேன்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான கோரிக்கையை முன்வைத்திருந்தோம். அதன்போது சுதந்திரக் கட்சிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதன்போது, முதலில் சர்வகட்சி மாநாடொன்றை நடத்துவோம் என்று யோசனை முன்வைத்திருந்தோம். அதன் பின்னர் அதற்கு சர்வகட்சி மாநாடொன்றுக்கும் அழைப்பு

ஜனாதிபதி ரணிலாலும் 13ஐ முழுமையாக அமுல்படுத்த முடியாது

விடுத்திருந்தார்.

அதன் பின்னர் சர்வகட்சி அரசாங்க மொன்றை அமைப்பதற்காக குழுவொன் றையும் கோட்டாபய ராஜபக்ஷ நியமித் திருந்தார். அந்தக் குழு நியமிக்கப்பட்ட தற்கு இடையிலேயே போராட்டங்கள் ஆரம்பமாகின. போராட்டங்களைத் தொடர்ந்து சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான யோசனை மறைந்துவிட்டது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று தர்க்கம் செய்பவர்கள் கூறும் பிரதான தர்க்கம் என்னவென்றால், முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பான விடயங்களை அதிலுள்ளது போன்றே நடைமுறைப்படுத்த விருப்பமில்லை என்பதாகவும். அந்த ஜனாதிபதிகளின் பட்டியலில் நீங்களும் ஒருவராக இருக்கிறீர்கள். அவ்வாறிருக்கையில் முன்னாள் ஜனாதிபதி என்றவகையில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பிலும் இந்த அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பிலும் உங்களின் நிலைப்பாடு என்ன?

இதனையே நாங்களும் கூறுகின்றோம். முதலில் அரசாங்கத்தின் யோசனைகளை எங்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். 13ஆவது திருத்தத்தில் எதனை நடை முறைப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள் ளது, எவற்றை நீக்க எதிர்பார்த்துள்ளது போன்ற விடயங்களை எங்களுக்கு எழுத்துபூர்வமாக அறிவியுங்கள். பின்னர் எங்களின் பதிலை நாங்கள் எழுதி அனுப்பி வைக்கிறோம் என்று கடிதம் அனுப்பி வைத்துள்ளோம். அதற்காக அதிலுள்ள சகல விடயங்களையும் அமுல்படுத்த வேண்டும் என்று நான் கூறவில்லை.

இருந்தபோதும், நாட்டிலுள்ள அரசியல், சமூக பிரச்சினைகளை எடுத்துக்கொண்டால் 13ஆவது அசியலமைப்பில் ஒருசில விடயங்கள் அமுல்படுத்தக் கூடியவையாகும். ஆனால், பொலிஸ் அதிகாரம் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்களும் இணங்கவில்லை. ஆனால், பொலிஸ் அதிகாரத்தை அவர்கள் கோருவதாக தெரிவிக்கிறார்கள்.

முன்னர் இருந்த ஏழு ஜனாதிபதிகளும் இந்தத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை என்று நீங்கள் கூறுவதுபோன்று, இம்முறையும் முழுமையாக அமுல்படுத்தப்படாது.

அதாவது, எட்டாவது ஜனாதிபதியும் இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த மாட்டார் என்று எதிர்வுகூறுகிறீர்களா?

பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் எங்களுக்கும் இணக்கப்பாடு இல்லை. 3ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் யோசனைகளை முதலில் எங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்

செய்யமாட்டர் என்பதே எனது நம்பிக்கையாகும்.

சுதந்திரக் கட்சி நிறுவப்பட்டமைக்கான நோக்கத்தையே இன்னும் கொள்கையாக பின்பற்றி வருவதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், நாட்டில் இடம்பெறும் ஒருசில விடயங்களில் சுதந்திரக் கட்சி அமைதிகாப்பது போன்றல்லவா இருக்கிறது. குறிப்பாக, இந்த குருந்தி விகாரை பிரச்சினையில் சுதந்திரக் கட்சி மௌனமாக இருக்க காரணம் என்ன?

குருந்தி விகாரை பிரச்சினை தொடர்பில் புத்தகமொன்று எழுதி வெளியிடப்பட்டது. அந்த நிகழ்வில் நானும் கலந்துகொண்டேன். எனக்கும் அந்தப் புத்தகம் கிடைத்தது. அதனை வாசித்தேன். ஆகவே, இந்த விடயத்தில் நாங்கள் அமைதியாக இல்லை.

இந்தப் பிரச்சினையில் தாக்கம் செலுத்தியுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி தீர்வொன்றுக்கு வரவேண்டியதே அவசியமாகவுள்ளது. தேவையில்லாமல் இதனை பாரதூரமான பிரச்சினையாக்கிக்கொள்ளக்கூடாது. அதற்கு காரணம் 30 வருடங்கள் தொடர்ச்சியான யுத்தத்தை சந்தித்திருக்கிறோம். அதன் காரணமாக பொருளாதார வீழ்ச்சியடைந்து பல்வேறு சிக்கல்களை சந்தித்துள்ளோம். மீண்டுமொரு யுத்தம் ஏற்படாத வகையில், நாட்டை நிர்வகிப்பவர்கள், ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட சகலருக்கும் இருக்கும் அனுபவத்தைப் பயன்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முன்வர வேண்டும்.

அந்தப் பிரதேசத்துக்கு பொறுப்பாக கடமையாற்றும் நீதவான், அங்குள்ள 200 ஏக்கருக்கு மேலான காணியிலுள்ள தொல்பொருள் ஆதார இடங்களில் இருக்கும் கற்களை அகற்றுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். எனவே, இந்த பிரச்சினைகள் மேலும் விரிவடைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், இறுதியில் இந்த பிரச்சினைகள் அரசியல் வாதிகளின் தலைக்கே வரும். எந்தப் பிரச்சினைகளிலும் நாங்கள் அமைதி யாக இருக்கவில்லை. சகல பிரச்சினை களின்போதும் குரல்கொடுத்துள்ளோம்.

இதுதொடர்பில், பாராளுமன்றத்தில் பேசினாலும், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தாலும் ஒரு பகுதி மாத்திரமே ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. அதன்போது எங்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடும் யாருக்கும் தெரியவராது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்ன?

இந்த நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்தல் அல்லது தனியார்மயப்படுத்தல் அல்லது நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யும் நிலை ஏன் உருவானது என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதியில் வெளியிடப்பட்ட அறிக்கைகளை அவதானித்தால எந்தவொரு அமைச்சுக்குமுரிய நிறுவனங்களின் நிலைமை தொடர்பில் அந்தந்த காலப்பகுதியிலிருந்த அமைச்சர்களே பொறுப்புக் கூறவேண்டும்.

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)



மீண்டும் இலங்கை அடிமைப்படும்

அக்னியான்

இலங்கையில் இந்திய எதிர்ப்புவாதம் என்பது ஒரு வரலாற்றோடு சம்பந்தப்பட்டது மாத்திரமல்ல, சில காலங்களில் அது அரசியல் மற்றும் கலாசாரத்தோடு சம்பந்தப்பட்டதாகவும் இருந்து வந்திருக்கிறது. இது பல்வழி உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டக்கூடிய விடயம். இது இன்றைய நிலையில் புதிய பரிணாமம் எடுத்துக்கொண்டு மதத்தினூடாகவும் பொருளாதார நடவடிக்கையினூடாகவும் வெளிப்பாயப்பார்க்கிறது என்பதற்கு நல்லதொரு உதாரணந்தான் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெரிவித்திருந்த கருத்து.

எமது நாட்டை துண்டங்களாகப் பிரித்து சர்வதேச சக்திகளுக்கு விற்பனையை மேற்கொண்டு அழிவின்பால் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இலங்கையை இந்தியாவுடன் இணைக்கும் தரைவழிப் பாதைக்காக பாலம் அமைக்கப்போவதாக தெரிவிக்கப்படுகிறது. இது நாட்டு மக்களின் விருப்பத்துடன் நடைமுறைப் படுத்தப்படும் விடயமல்ல. அவ்வாறு அமைக்க எடுக்கும் முயற்சிக்கு மக்களிடம் ஆணை பெறப்படவேண்டும். சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற ஆலோசனையை பேராயர் காரசாரமாக முன்வைத்துள்ளார். இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக மாற்றப்படலாம். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிராந்திய உறவுக்கு ஆப்பு வைக்கும் கருத்தாகவும் கருதப்படலாம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் தரைவழிப் பாதை தொடர்பாக மீண்டும் சூடு பிடித்துள்ளது நிலத்தொடர்பு பாதை விவகாரம், இது தொடர்பாக போர்க்கொடி தூக்கும் கடும் போக்காளர்கள், இந்திய முயற்சிக்கு எதிர்ப்புக் காட்டுகிறவர்கள் இதுவரை சீனாவை எதிர்க்காதது ஏன் என்று கேட்கப்படுகிறது.

பூகோள ரீதியாக இலங்கை, இந்தியாவுக்கு அருகில் இருக்கும் ஒரு தீவு என்பதைவிட வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டு இரு நாடுகளுக்குமான தொடர்புகள் அந்நியோன்யமாக இருந்தும் வந்துள் ளது. இலங்கை மீது இந்திய மன்னர்கள் படை யெடுத்து வந்திருக்கிறார்கள். இந்திய மன்னர்களுக்கு இலங்கை மன்னர்கள் படை அனுப்பி போருக்கு உதவியுள்ளார்கள். ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பௌத்த மதத்தின் தூதுவரான கௌதம புத்தர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பல தடவைகள் வந்து சென்றதாக மகாவம்சத்தின் செய்தி. பௌத்த போதனையை பரப்பும் நோக் கில் மஹிந்தன் தன் குழுவினருடன் இந்தியாவிலிருந்து இலங்கை வந்ததாக ஆன்மீக செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இலங்கை, இந்திய பிரதேசங்கள் ஒரே குடையின் கீழ் ஆளப்பட்டிருக்கின்றன. இங்கையின் பொருளா தார மேம்பாட்டுக்காக 200 வருடங்களுக்கு முன்னர் மலையகத் தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நட்புக்காக கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்து தத்துவத்தின் அடிப்படையிலேயே பஞ்சசீலக் கொள்கைகள் வியாபிக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையை ஆண்ட இராவணன் இந்தியா வின் பல பிரதேசங்களைக் கட்டியாண்டான் என இராமாயணம் பகர்கிறது. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர இந்தியா உதவியதாக முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் இடம்பெற்ற பொருளாதார கெடுபிடிகளின்போது இலங்கைக்கு உதவிய முதாவது நாடு இந்தியா என ஆட்சியாளர்களே புகழ்ந்து பாராட்டிள்ளனர்.

இவ்வாறானதொரு வரலாற்றுப் பின்னணி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்துவருகிறபோது ஒரு காலத்தில் எமக்கு பருப்பு கொண்டுவந்து போட்டார்கள், இராணுவத்தை கொண்டுவந்து அடக்கியாண்டார்கள். 13ஆவது திருத்தத்தைத் திணித்தார்கள். இவ்வாறான நிலையில் பாலமொன்றை அமைத்து நாட்டை அழிவுப்பாதைக்குக் கொண்டுசெல்லப் போகிறீர்களா? என பேராயர் தேசவாதம் பேசியிருக்கிறார். அவரின் கருத்துப்படி இந்த நாடு ஒரு சுதந்திர நாடு. எப்போதும் எந்த நாட்டுக்கும் அடிமைப்பட்ட நாடல்ல என்பது பேராயரின் வாதமாகும்.

தற்கால அரசியல் கோட்பாட்டின் அடிப்படையில் எல்லா நாடுகளும் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டும். அடிமையாக இருக்க முடியாது. தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக தனக்கான மக்கள் பிரதேசம் அரசியல் யாப்பு கொண்டதாக இருக்கவேண்டும் என்பது சகல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

கடந்த ஜூலை மாதம் இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து உரையாடியமை, சில ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமை அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகக் கருதப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் மேற்கொண்ட பயணங்களைவிட நாட்டின் தலைவராக இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம் உலகரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்திய விஜயத்தின்போது ஜனாதிபதி ஐந்து முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார் என்ற விடயமும் அதில் இந்தியாவை இலங்கையுடன் இணைக்கும் தரைவழி இணைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்திய விஜயத்தின்போது ஜனாதிபதி ஐந்து முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார் என்ற விடயமும் அதில் இந்தியாவை இலங்கையுடன் இணைக்கும் தரைவழி இணைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆனாலும் இதுதொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்

எரிபொருள் குழாய் இணைப்பு நிதி விவகாரம் மற்றும் தரைவழி இணைப்பு ஆகிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் தரைவழி இணைப்பு தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் முக்கியமானதாக பேசப்படும் நிலையிலேயே பேராயரின் விமர்சிப்பும் கண்டனமும் முக்கிய அரசியல் வாதமாக பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே கடும்போக்காளர்கள் என்றவகையில் இவ்வொப்பந்தம் தொடர்பாக வரிந்துகட்டிக்கொண்டு பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியரும் ஐக்கிய மக்கள் சக்தி புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தலைவருமான பேராசிரியர் ஆனந்த ஜெயவிக்கிரம, இலங்கையை இந்தியாவின் உப மாநிலமாக்கும் முயற்சியில்தான் பால நிர்மாணத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. இதனால் இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட முயற்சிக்கும். இலங்கையின் தேவைப்பாடுகள் நிறைவேறாது என கடுமையாக விமர்சித்துள்ளார்,

அதேபோல் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, நாட்டின் பாதுகாப்புக்கு தரைவழி இணைப்பு அச்சுறுத்தலாக அமையுமென போர்க்கொடி தூக்கியுள்ளார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)



அமைதியான தோற்றத்துக்குள் சூழன்றடிக்கும் புயல்

ஒரு செயலைச் செய்வது வெற்றியல்ல. அதை மகிழ்ச்சியாகச் செய்வதே வெற்றி. எதையுமே சிறு புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள் என்கிறார் அன்னை தெரேசா. பிரக்ஞானந்தவும் தன் தோல்வியை மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொண்டுள்ளார்.

இது தோல்வி என்று சொல்லிவிட முடியாது. உலகக் கிண்ண சதுரங்கப் போட்டியில் இறுதிவரையில் சென்றதே ஒருவகையில் வெற்றிதான். இதைவிட போட்டியாளர் மேக்னஸ் கார்ல்சனுடன் மோதியதும் மிகப்பெரிய வெற்றிதான்.

உலகக் கிண்ண சதுரங்கத் தொடர் அஜர்பைஜானிலுள்ள பாகு நகரில் அண்மையில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் முதல்நிலை வீரரான நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சனுடன் 18 வயதேயான இந்திய கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா கலந்துகொண்டு விளையாடினார்

சிறிதும் சோர்வின்றி பிரக்ஞானந்தா, மேக்னஸ் கார்ல்சனுடன் மிகத் திறமையாக காய்களை நகர்த்தி ஆட்டத்தின் தொடக்கம் முதல் சவால் கொடுத்து வந்துள்ளார்.

நேரக் கட்டுப்பாடு காரணமாக டைபிரேக்கர் மூலம் வெற்றியாளரை தீர்மானிக்கும் இரண்டு ஆட்டம் நடைபெற்றது. இதில் முதல் சுற்றிலேயே கார்ல்சன் வெற்றிபெற்றார். சவாலுடன் ஆட்டத்தில் தொடர்ந்து போராடிய பிரக்ஞானந்தா வெற்றிபெற முடியாமல் போய்விட்டது.

தோல்விகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டால் உண்மையில் நீங்கள் தோற்கவில்லை என்று ஜாக் ஜிக்லா என்ற அறிஞர் சொல்வதுபோல் பிரக்ஞானந்தா தோற்கவில்லை, நிறையக் கற்றுக்கொண்டுள்ளார்.

இன்னும் காலம் இருக்கிறது. நிறைய போட்டிகளும் இருக்கின்றன. நிச்சயம் ஒருநாள் உலகக் கிண்ண சதுரங்கப் போட்டியில் உச்சத்தைத் தொட்டு இந்தியாவுக்குப் பெருமை தேடித்தருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது.

வெற்றியின் எல்லைக்கோடு வரையில் வந்த பிரக்ஞானந்தாவின் பாதை கரடுமுரடாகவே இருந்துள்ளது. போலியோவால் பாதிக்கப்பட்ட தந்தை, பயிற்சிக்குச் செல்லமுடியாத பொருளாதார நெருக்கடி, பெரும் செல்வமோ, செல்வாக்குள்ள பின்னணியோ எதுவும் இல்லை. எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆனால், இவை எல்லாம் இல்லை என்று பிரக்ஞானந்தா துளிகூட கவலைப்படவில்லை. சோர்ந்து போகாமல் சதுரங்கத்தில் முயற்சிகளை மேற்கொள்ளார்.

எந்தச் சூழ்நிலையிலும் பதற்றப்படாமல் உள்ளூர் முதல் அகில இந்திய அளவில் சதுரங்கத்தில் பல சாதனைகளைச் செய்துள்ளார். எல்லா வெற்றி, தோல்விகளிலும் புன்னகையுடன் நெற்றியில் திருநீறு, பொட்டுடன் வெள்ளந்தியான அமைதியுடன்

இலக்கை நோக்கியே காய்களை நகர்த்தத் தயாராகி இருக்கிறார். இந்திய சதுரங்க வரலாற்றில் விஸ்வநாதன் ஆனந்தோடு முடிந்துவிடப் போவதில்லை என்பதை பிரக்ஞானந்தா நிரூபித்திருக்கிறார்.

இறுதிப்போட்டியில் அவர் சாதாரண வீரரிடம் ஒன்றும் வீழ்ந்துவிடவில்லை. பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சதுரங்கக் கட்டங்களை தன்னுள் அடக்கிவைத்து உலகின் முதல்நிலை வீரராக கோலோச்சும் மேக்னஸ் கார்ல்சனுடன்தான் மகுடத்தை இழந்துள்ளார். பிரக்ஞானந்தாவின் அற்புதமான செயல்திறனைப் பார்த்து உலகமே வியக்கிறது.

ஆட்டம் முடிந்து பிரக்ஞானந்தா வெளியே வந்தபோது வெள்ளைக்காரக் குழந்தைகள் அவரைச் சூழ்ந்துகொண்டு ஓட்டோகிராப் கேட்பதும் சுய படம் எடுத்துப்பதுமாக வரிசையில் நின்றதைப் பார்த்தபோது நம்மை வரிசையில் நிற்கவைத்து அடிமைப்படுத்திய வெள்ளையரையே ஒரு தமிழன் வரிசையில் நிற்கவைத்து விட்டான் என்று பெருமைப்பட வைத்தது அந்தக் காட்சி.என் மகன் கடுமையாகப் போராடி



யுள்ளார். கார்ல்சன் தனது அனுபவத்தை விளையாட்டில் வெளிப்படுத்தினார். இந்தப் போட்டியில் பிரக்ஞானந்தாவுக்கு நல்ல அனுபவம் கிடைத்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் ஆனந்தப்படுகிறார் பிரக்ஞானந்தாவின் தந்தை ரமேஷ்பாபு

இத ஒவ்வொரு பெற்றோரும் அவதானிக்கவேண்டிய விடயம். உங்கள் குழந்தைகளும் அவர்களின் பாதையில் வெற்றிபெறுவார்கள் என்று நம்பவேண்டும். சின்னச் சின்ன தோல்விகளுக்காக துவண்டுபோய் அவர்களுக்கும் பயத்தை உண்டாக்காதீர்கள். எத்தனை தோல்விகள் வந்தாலும் உன்னால் முடியும் முயற்சி செய் என்று உற்சாகப்படுத்துங்கள். அவர்களும் ஒருநாள் வெற்றிபெறுவார்கள்.

தோல்வியை பற்றி அற்புதமான விடயம் என்னவென்றால், அது தற்காலிகமானது மட்டுமே. அதை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு பிரகாசியுங்கள் என்கிறார் ஜோயல் பிரவுன் என்ற அறிஞர்.

இந்தியா சந்திராயன்-3 விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்ததுபோல், பிரக்ஞானந்தாவாலும் இந்தியாவுக்கு இன்னொரு பெருமிதம் நிகழும் என்று எதிர்பார்த்த நேரத்தில் கொஞ்சம் அந்த வாய்ப்பு கை நழுவிப் போயுள்ளது. அதனால் என்ன இன்னொரு ஒருமுறை முயற்சி செய்வோம் என இயல்பாக அடுத்த ஆட்டத்தில் களமிறங்கிவிட்டார் பிரக்ஞானந்தா.


ஏழு வயதாக இருக்கும்போதே பிரக்ஞானந்தா சதுரங்கத்தில் சம்பியன்ஷிப்பை வென்றுள்ளார். இந்த வெற்றி இவருக்கு (FIDE) மாஸ்டர் என்ற பட்டத்தையும் பெற்றுத் தந்துள்ளது. 2016இல் 10 ஆண்டுகளில் 10 மாதங்கள் மற்றும் 19 நாட்களில் இளைய சர்வதேச மாஸ்டர் என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார்.

2017இல் உலக ஜூனியர் சதுரங்க சம்பியன்ஷிப்பில் முதல் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தோற்றத்தில் அமைதி என்றாலும் செயலில் புயலாக தன் திறமையை வெளிப்படுத்தும் பிரக்ஞானந்தா இன்றைய இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார்.

இளந்தலைமுறையினர் ஏதாவது ஒரு துறையில் உங்கள் கவனத்தைக் குவித்து முயற்சி செய்தால் பிரக்ஞானந்தாவைப்போல் நிச்சயம் உங்களையும் உலகம் திரும்பிப் பார்க்கும்.

தமிழ்நாட்டிலிருந்து நந்தவனம் சந்திரசேகரன்





மனித - யானை மோதலை குறைக்க என்ன வழி?

றிப்தி அலி

இலங்கை, பல்லுயிர் பெருக்கத்தின் முக்கிய இடம் என சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், பல ஆண்டுகளாக இந்த சொர்க்கத் தீவு பாரியளவிலான காடழிப்புக்கு இரையாகி வருகின்றது.

எமது நாட்டின் பரப்பளவில் சுமார் 30 சதவீதம் அதாவது, 19 இலட்சத்து 93 ஆயிரம் ஹெக்டேயர் காடுகள் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பாதுகாக்கப்பட்ட பகுதிகள் வனச் சட்டம், தேசிய மரபுரிமை மற்றும் காட்டு (வன) நிலச் சட்டம், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களின் ஊடாக இக்காடுகள் நிர்வகிக்கப்படுகின்றன.

இந்தச் சட்டங்கள் கடந்த பல தசாப்தங்களாக அமுலிலுள்ள போதிலும், 1990ஆம் ஆண்டுக்கும் 2000ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 26 ஆயிரத்து 800 ஹெக்டேயர் காடுகளை இலங்கை இழந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

முறையற்ற அபிவிருத்தித் திட்டங்கள், வர்த்தக செயற்றிட்டங்கள், சட்டவிரோத நில அபகரிப்பு மற்றும் பயிர்ச்செய்கை ஆகியனவே காடழிப்புக்கான முதன்மையான காரணங்களாக உள்ளன.

இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதனால் அங்குள்ள விலங்குகளுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியான சூழல் விலங்குகளின் உணவுத் தேவையை மேலும் அதிகரித்துள்ளது.

இதனால், காடுகளில் வாழும் விலங்குகள் உணவுத் தேடி மனிதர்கள் வாழும் இடங்களை நோக்கி நகர்கின்றன. இவ்வாறு இடம்பெயர்கின்ற விலங்குகளில் பிரதானமானதாக யானை காணப்படுகின்றது.

இதன் காரணமாகவே மனித – யானை மோதல் ஏற்படுகின்றது. இந்தப் பிரச்சினை சனத்தொகையில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் இதுவொரு நீண்டகாலப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

எனினும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இதுவொரு புதிய விடயமாகக் காணப்படுகின்றது.

இந்த மாவட்டங்களில் மக்கள் செறிந்து வாழ்கின்ற சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, செங்கலடி, வெல்லாவெளி, புல்லுமலை, தாந்தாமலை, போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, ஏறாவூர்ப்பற்று, வாகரை, கிரான் போன்ற பல கிராமங்களை நோக்கி தற்போது யானைகள் படையெடுக்கின்றன.

“நெல் அறுவடையை அடுத்தே மேற்படி பிரதேசங்களை நோக்கி யானைகள் அவற்றின் உணவுகளைத் தேடி நகர்கின்றன. குறிப்பாக, புத்தங்கல காட்டுப் பகுதியிலுள்ள யானைகள் வளத்தாப்பிட்டியின் ஊடாகவே அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களை நோக்கிச் செல்கின்றன” என சூழலியல் ஆய்வாளர் சுபுன் லஹிரு பிரகாஷ் தெரிவித்தார்.

இதுபோன்றே மட்டு. மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியிலிருந்தும் யானைகள் மக்கள் வாழும் பிரதேசங்களை நோக்கி நகர்கின்றன. இந்த நுழைவாயில்களை மூடி யானைகளின் வருகையைத் தடுத்தால், குறித்த யானைகள் உணவின்றி காட்டுக்குள் உயிரிழக்க நேரிடும்” என ஆய்வாளர் சுபுன் கூறுகின்றார்.

நாட்டில் குப்பைகள் கொட்டப்படும் பிரதான 54 இடங்களில் 300இற்கும் அதிகமான யானைகள் நடமாடுவது கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், யானைகள் குப்பைகளை உணவாக உட்கொள்வதன் காரணமாக பல்வேறு நோய்களால் உயிரிழக்கும் அபாயத்தை எட்டியுள்ளமை மரண பரிசோதனை அறிக்கைகளின் ஊடாகத் தெரியவருகிறது.

கடந்த சில வருடங்களாகவே இப்பிரதேசங்களை நோக்கி வரும் யானைகள், பொதுமக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கின்றன. இதனால் பாரியளவில் நட்டங்கள் ஏற்படுகின்றன.

எனினும், மிகச் சிறிய தொகையான நட்டஈடே இந்த அழிவுகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு மனித – யானை மோதல் புதிய பிரச்சினையாகத் தோன்றியுள்ளது.

இம்மோதலை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மின்சார வேலி அமைக்கும் நடவடிக்கையின் கீழ் 2016ஆம் ஆண்டு வரை 4,211 கிலோ மீற்றர் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும், இத்திட்டம் நாடளவிய ரீதியில் இன்னும் முற்றுப் பெறவில்லை. குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைக்கு 82.5 கிலோ மீற்றர் மின்சார வேலிகளே அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் 103 கிலோ மீறறருக்கு மின்சார வேலிகள் அமைக்க வேண்டியுள்ளதாக மாவட்ட வனஜீவராசிகள் அலுவலகம் தெரிவிக்கின்றது.

பல கோடி ரூபா செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட இந்த மின்சார வேலிகளை உடைத்துக்கொண்டு மக்கள் வாழும் பிரதேசங்களில் குப்பைகள் கொட்டப்படும் இடங்களை நோக்கி யானைகள் நகர்கின்றன.

நாடளாவிய ரீதியில் குப்பைகள் கொட்டப்படும் 54 இடங்களில் 300இற்கும் அதிகமான யானைகள் நடமாடுவது கண்டறியப்பட்டுள்ளது. யானைகள் குப்பைகளை உணவாக உட்கொள்வதன் காரணமாக பல்வேறு நோய்களுக்கு இலக்காகி உயிரிழக்கின்ற விடயம் அவற்றின் மரண பரிசோதனை அறிக்கைகளின் ஊடாகத் தெரியவருகிறது.

இதற்கு சிறந்த உதாரணமாக ஒலுவில், அஷ்ரப் நகரிலுள்ள குப்பைமேட்டை குறிப்பிட முடியும். சூழலுக்கு முற்றிலும் தீங்கு விளைவிக்கப்படும் வகையில் இங்கு கொட்டப்படும் குப்பைகளை நூற்றுக்கணக்கான யானைகள் உண்ண வருகின்றன.

கடந்த வருடம் இக்குப்பைமேட்டில் பிளாஸ்ரிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுபோன்று, கடந்த எட்டு வருடங்களில் இந்த குப்பைமேட்டில் குப்பைகளை உட்கொண்ட சுமார் 20 யானைகள் உயிரிழந்துள்ள விடயம் தற்போது தெரியவந்துள்ளது.

எனினும், அஷ்ரப் நகரிலுள்ள குப்பைமேட்டுக்கு வருகின்ற யானைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக குறித்த குப்பைமேட்டைச் சுற்றி பாரிய அகழிகள் தோண்டப்பட்டன. இந்த செயற்றிட்டமும் வெற்றியளிக்காமையால் குறித்த அகழிகளை உடைத்துக்கொண்டு யானைகள் குப்பைமேட்டினுள் நுழைந்துள்ளன.

இதேவேளை, இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரை மாத்திரம் 266 யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் அதிகமான 56 யானைகள் அநுராதபுர வனவிலங்கு பிராந்தியத்திலும்,

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

வலிந்து காணாமலாக்கப்பட்டோரில்

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை விட தமது பிள்ளைகளை, கணவர்களை, உறவினர்களை இலங்கைப் படையினரிடம் நேரடியாக ஒப்படைத்தவர்கள் பலர் நேரடியாக சர்வதேச அரங்கிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்திலும் சாட்சியங்களைக் கூறியும் அதற்கான பதிலை இலங்கை அரசாங்கத்தால் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, கடந்த 2021, செப்டெம்பர் 15ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்சேலெட்டுக்கு கடிதமொன்றை அனுப்பி இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது அமர்வு சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவா நகரில் கடந்த 2021, செப்டெம்பர்13ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்ற நிலையில், இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், அன்றைய தினம் வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்திருந்ததுடன், அதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் அடுத்தநாள் 2021, செப்டெம்பர் 14ஆம் திகதி பதிலளித்திருந்தார்.

இலங்கை அரசின் செயற்பாடுகள் கவலையளிக்கும் விதத்தில் உள்ளதாக மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கருத்துரைத்தபோதிலும், அதனை இலங்கை வெளிவிவகார அமைச்சர் நிராகரித்திருந்தார்.





இந்த நிலையிலேயே, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

2000ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையான 20 வருட காலப்பகுதியில் சுமார் ஆறாயிரம் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவரக்கோவையை வெளியிடவுள்ளதாக அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார் என அந்த அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி கடிதத்தில் தெரிவித்திருந்தார். இது மிகக் குறைந்த எண்ணிக்கை என அவர் குறிப்பிட்டார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவரக் கோவையை 4000 அல்லது அதற்குக் குறைவாக காண்பிக்க முயற்சிக்கும் கண்துடைப்பு நாடகமே ஆரம்பிக்கப்பட்டுள்ளதை மனித உரிமைகள் ஆணையாளர் எவ்வாறு ஆமோதிக்க முடியுமென அவர் இந்தக் கடிதத்தின் ஊடாக கேள்வி எழுப்பியும் இருந்தார்.

இலங்கை அரசு திட்டமிட்ட இன அழிப்பை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுத்திருந்ததாக அந்த அமைப்பு கூறுகின்றது.

இதன் ஓர் அங்கமாக சுமார் 15,000 தமிழர்கள் அரச படைகளினாலும், அவர்களால் இயக்கப்படுவோரினாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர்கள் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிகள் என்பது மட்டுமல்லாது, 95 வீதமானோர் 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது ஒரு திட்டமிட்ட இன அழிப்புச் செயல் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு தெரிவிக்கிறது.

இந்தத் தொகையைக் குறைத்துவிட இலங்கை அரசு முயற்சிக்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கும் அப்பால் உள்ளகப் பொறிமுறை படுதோல்வி கண்டுவிட்டதுடன், ஐ.நா. உறுப்புரிமை நாடுகள் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் ஊடாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், இதுவரை 2023ஆம் ஆண்டில் காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம் தொடர்ச்சியாக 2,447 நாட்கள் கடந்தும் அதற்கான நீதி சர்வதேசத்தாலும் கிடைக்கவில்லை என்பதே உண்மை.

இலங்கையில் மூன்று இனங்கள் வாழும் நாட்டில் தமிழர்கள் மட்டுமே காணாமலாக்கப்பட்ட இனமாக வடக்கு, கிழக்கில் வாழும் பரிதாப நிலையை கடந்த ஓகஸ்ட் 30இல் இடம்பெற்ற சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்ட தினத்தில் மட்டக்களப்பு, மன்னார் போராட்டங்கள் மீண்டும் ஒருமுறை நிருபித்துள்ளன.

தமிழர் உரிமைகளுக்காக போராடுபவர்களை புதிய முறையில் அடக்கும் முயற்சி



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

குருந்தூர்மலை யாருக்கு சொந்தமானது என்ற விடயம் தொடர்பாக சிங்களத் தரப்பினர் மத்தியிலும் தமிழர் மத்தியிலும் கடுமையான கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் குருந்தூர்மலை தமிழர்களின் பாரம்பரிய இடம் என்றும் அங்கு வழிபாடு நடத்தச் சென்ற தமிழர்களுக்காக குரல் எழுப்பிய காரணத்தை அடிப்படையாக வைத்து பத்தரமுல்ல சீலரத்ன தேரரும் உதய கம்மன்பிலவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பில் அமைந்துள்ள வீட்டை முற்றுகையிட்டு அவரது வீட்டின் முன்னால் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். இந்தச் சம்பவங்கள் கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதியும் 26ஆம் திகதியும் இடம்பெற்றன. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அந்த இடத்திற்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இது பாராளுமன்ற உறுப்பினர் மீது விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும்.

இந்தச் சம்பவமானது இப்படியாக இன, மத உரிமைகளுக்காக குரல் எழுப்புபவர்கள் மீது புதிய முறையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்று புதிய ஒரு வழிகாட்டலை செய்வதாக அமைகின்றது. இந்த நாட்டில் எதிர்காலத்தில் தமிழ் அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, முஸ்லிம் அரசியல்வாதிகள் அல்லது தலைவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சார்ந்த இனங்களின் மத, அரசியல் மற்றும் கலாசார உரிமைகளுக்காகவும் ஆட்சியாளர்களாலும் அதிகாரிகளாலும் இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கும் எதிராக குரல் எழுப்பினால் அத்தகையவர்களது வீடுகளை முற்றுகையிட்டு சிங்கள பேரினவாத அடக்குமுறையை வெளிப்படுத்தி குரல்களை நசுக்கிவிடலாம் என்ற அச்சத்தையும் ஏற்படுத்துவதாக அமைகின்றது.

எனினும், கண்டி எசல பெரஹரவுக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023.08.30 ஆம் திகதி அஸ்கிரிய மல்வத்தை பீடாதிபதிகளை சந்தித்தபோது இந்த குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக விளக்கமளித்தார். அங்கு அவர் தெரிவிக்கையில், இந்த மலைப் பிரதேசத்துக்கு அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அல்லாத வெளியார் சென்றதாலேயே பிரச்சினைகள் ஏற்பட்டன. இனிமேல் அப்பிரதேசத்துக்கு வெளியார் போவதை தொல்பொருள் அகழ்வாராய்ச்சி சட்டத்தின் அடிப்படையில் அனுமதிப்பதில்லை என்று கூறினார். அத்துடன் இதுபோன்ற மத ரீதியான நெருக்கடிகள், பிரச்சினைகள் உள்ள பிரதேசங்களில் அதியுயர் அந்தஸ்தில் இருக்கின்ற மதகுருமார்கள், மத தலைவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் பிரச்சினைகள் வரும்போது அவர்கள் தலையிட்டு தீர்வுகளைக் காண முடியும் என்றும் தெரிவித்தார்.

சிங்களவர்கள் குருந்திமலை என்றழைக்கும் குருந்தூர்மலையில் ஐயனார் கோவிலில் தமிழர்கள் பொங்கல் வைப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டதை தடுப்பதற்காக கொழும்பிலிருந்து சிங்களவர்கள் திரண்டு சென்றதால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவம் 2023.08.18ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இருந்தே இந்த குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக சர்ச்சை நீடித்து வருகின்ற நிலையில், இந்தக் கொண்டாட்டம் இடம்பெற்றிருக்கின்றது.

தமிழர்களின் ஒன்றுகூடலை தடுப்பதற்காக தீவிவரவாத சிங்களக் கும்பல் அங்கத்தவர்கள் தெற்கிலிருந்து குருந்தூர்மலைக்கு 05 பஸ்களில் சென்று பௌத்த வழிபாடுகளை நடத்த திட்டமிட்டு அங்கு சென்றிருந்தனர். குருந்தூர்மலை தமிழர்களின் பாரம்பரிய இடம் அல்ல. அந்த இடம் பௌத்தர்களுக்கு சொந்தமானது என்ற பௌத்த தீவிரவாத தரப்பு கூறி வருவதால் இந்த தமிழ் - சிங்கள முரண்பாடு உருவாகும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் ஏற்பட்டு வருகின்றன.

சிங்கள ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக கடந்த 18ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதேசவாசிகளும் அங்கு சென்று பொங்கல் வைத்து வழிபாடு நடத்தி குறிப்பிட்ட நிகழ்வைக் கொண்டாடினர்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினரான



கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை முற்றுகையிட்டு எதிர்ப்பை தெரிவிப்போம் என்றும் அதற்காக தெற்கிலுள்ள சிங்கள மக்கள் அணிதிரள வேண்டும் என்றும் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அறைகூவல் விடுத்திருந்தார். அவர் 2023.08.20ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அணிதிரளுமாறு கோரியிருந்தார். குருந்தூர்மலை பற்றி அவர் சிங்கள பௌத்தர்களை தூண்டும் விதமாக சில கருத்துகளையும் வெளியிட்டிருந்தார்.

குருந்தூர்மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கோ அங்கு கோயில் இருந்தது என்பதற்கோ எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. குருந்தூர்மலையில் அமைந்துள்ள விகாரையில் அமைந்துள்ள தூண்களில் ஒன்றில் வட்ட வடிவம் தென்படுகின்றது. இந்தத் தூண் சிவலிங்கம் என்று தமிழர்கள் வாதிடுகின்றனர். அதனால் குருந்தூர்மலை தமிழர்களின் பாரம்பரிய இடம் என்றும் அங்கு இருப்பது இந்துக்களின் கோயில் என்றும் கூறி சிங்கள பௌத்தர்களுக்கு அங்கு சென்று வழிபட தமிழர்கள் தடை விதித்து வருகின்றனர். அதற்கு இடமளிக்க முடியாது. மகாவம்சம் உட்பட பல வரலாற்று மூலாதாரங்களில் 2000 வருடங்களுக்கும் மேலாக குருந்தூர்மலை பௌத்தர்களுக்கு சொந்தமானது என்றும் அங்கு இருப்பது பௌத்த பாரம்பரிய விகாரை என்றும் உதய கம்மன்பில கூறுகின்றார்.

தெற்கிலுள்ள தமிழர்களும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதை போன்று வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிங்களவர்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ இடமளிக்கப்பட வேண்டும். தொல்பொருள் சான்றுகள் உள்ள பௌத்தர்களுக்கு சொந்தமான இடங்களை பாதுகாக்கவும் பௌத்தர்களது விகாரைகள் உள்ள இடங்களில் வழிபாடுகளை செய்யவும் அனுமதிக்க வேண்டும்.

கடந்த 18ஆம் திகதி குருந்தூர்மலையில் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முல்லைத்தீவு நீதிமனற் உத்தரவைப் பெற்று நடத்திய நாடகத்தை நாம் பார்த்தோம். ஆனால், அது நீதிமன்ற உத்தரவு என்பதால் இடையூறு ஏற்படுத்தவில்லை. பௌத்த பாரம்பரிய தொல்பொருட்களை அழிப்பதற்கு இடமளிக்க முடியாது. அதனால் கொழும்பிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகளை முற்றுகையிடுவோம் என்றும் அவர் சிங்களவர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அதன்படியே பத்தரமுல்ல சீலரத்ன தேரரும் உதய கம்மன்பிலவும் இருவேறு தினங்களில் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டின் முன்னால் கோஷம் எழுப்பி எதிர்ப்பைத் தெரிவிக்க அணி திரண்டனர்.

இந்த குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபடுவதை தடுப்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஏற்கனவே தெரிவித்திருந்த கருத்தின் அடிப்படையில், "நாம் என்ன பாடுபட்டாவது குருந்தூர்மலையிலுள்ள கோவிலில் தமிழர்கள் வழிபடுவதை மீண்டும் உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்போம்" என்று உறுதியளித்துள்ளார்.

தமிழர்களது பாரம்பரிய பூமியான தண்ணிமுறிப்பு பிரதேசத்தில் அமைந்திருந்த இந்துக்களுக்குச் சொந்தமான இந்த கோவில் காலத்துக்குக் காலம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் தாக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் இந்த குருந்தூர்மலையில் அமைந்துள்ள ஆதி ஐயனார் ஆலயம் தொடர்பாக முல்லைத்தீவு மஜிஸ்ரேட் ஒரு தீர்ப்பையும் வழங்கி இருக்கின்றது.

ஆனாலும் அந்தத் தீர்ப்பையும் மீறும் வகையில் கடந்த பெப்ரவரி மாதம் அப்போதைய அமைச்சராக இருந்த விதுர விக்கிரமநாயக்க இந்து ஆலயத்தை அப்புறப்படுத்திவிட்டு பதிலாக பௌத்த விகாரை ஒன்றை நிர்மாணித்துள்ளார். அதில் இருந்து தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முரண்பாடு வலுவடைந்து வருகின்றது.

அந்தவகையில் கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி ஆதி ஐயனார் ஆலயத்தில் பொங்கல் வைப்பதற்கு இந்துக்கள் போனபோது அங்கு பௌத்தர்கள் அதற்கு தடைவிதித்துள்ளனர். முல்லைத்தீவில் வெலிஓயா என்ற சிங்கள கிராமத்தில் தமிழர்களிடமிருந்து குருந்தூர்மலை விகாரையை பாதுகாப்பதற்காக சிங்களவர்கள் அங்கு அணிதிரள வேண்டும் என்று போஸ்டர்களும் ஒட்டப்பட்டு தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களை தூண்டும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

கல்கமுவ சாந்தபோதி தேரரின் வழிநடத்தலில் 05 பஸ்களில் சிங்களவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இந்துக்களின் வழிபாட்டுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டதாயினும் தமிழர்கள் முல்லைத்தீவு மஜிஸ்ரேட்டால் வழங்கப்பட்டிருந்த உத்தரவுக்கமைவாக பொங்கல் வைத்து வழிபட்டனர். இந்த விடயம் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி கண்டியில் மகாசங்கத்தினர் முன்னிலையில் குருந்தூர்மலைக்கு வெளியார் சென்றதால் பிரச்சினை ஏற்பட்டது என்றும் இனிமேல் வெளியார் போக அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். ஆனாலும் இங்கு புதைந்துள்ள ஒரு வரலாற்று உண்மை இந்த இடம் தமிழர்களது பாரம்பரிய பிரதேசத்தில் அமைந்திருப்பதால் இங்கு பௌத்த மரபுரிமை இருக்கின்றதா அல்லது தமிழர்களுக்கு சொந்தமான உரிமை இருக்கின்றதா என்பதை சரியான முறையில் அடையாளம் கண்டு பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

இன்றேல் பிரச்சினை தொடர்ந்துகொண்டே இருக்க இடமிருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தலையிட்டு உறுதியான தீர்வை வழங்கத் தவறும்பட்சத்தில் உதய கம்மன்பில போன்ற சிங்கள தீவிவரவாத செயற்பாடுகளை ஊக்குவிக்கும் இளைஞர்களை தவறாக வழிநடத்தி அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளை தொடரும்போது ஒற்றுமையாக வாழும் இரு இனங்கள் மோதிக்கொள்ளும் நிலைமைகள் உருவாக இடமிருக்கின்றது.

2010ஆம் ஆண்டிலிருந்து இந்த நாட்டில் நடைபெற்றுள்ள நிலைமைகளை அவதானிக்கையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்ற பெயரிலும் பௌத்த மரபுரிமை என்ற பெயரிலும் பல இடங்களில் தமிழர்கள், முஸ்லிம்கள் வாழ்ந்துவரும் இடங்கள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு மக்களது வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது. மாவனல்லை தெவனகலை பிரதேசத்திலும் இதேபோன்ற பிரச்சினை நீண்ட காலம் நீடித்து வந்ததை மறந்துவிட முடியாது.

அந்த பிரச்சினையை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி குறிப்பிட்டதுபோன்று வெளியிடங்களிலிருந்து கும்பல்களை அழைத்துச்சென்று அடாவடித்தனம் புரிந்து அங்கு அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் நிம்மதியை சீர்குலைத்த சந்தர்ப்பங்கள் பல உள்ளன. அலுத்கமை வன்முறைகள், திகன வன்முறைகள், நிக்கவெரட்டிய மோதல், மினுவங்கொடை வன்முறை என்று நாட்டில் கடந்த காலப்பகுதியில் நடைபெற்ற பல வன்முறைகளின் பின்னால் வெளியார் சென்று மேற்கொண்ட அடாவடித்தனங்கள் ஏராளம் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் காவி உடை தரித்த பிக்குமாரை முன்னிலைப்படுத்தி குண்டர்கள் அணிதிரளும்போது பொலிஸார் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

அதனால் குருந்தூர்மலை போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை அரசாங்கம் சரியான முறையில் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த பிரச்சினையாக இருந்தாலும் அவை பௌத்த பேரினவாத அரசியல் நோக்குக்காக பயன்படுத்தும்போது அதனால் பாரிய இனமுறுகல் நிலைமைகள் ஏற்படுகின்றன. கடந்த காலப்பகுதியில் அதற்கென்று சில இனவாத குழுக்களை அப்போதைய கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் வைத்திருந்தமையை அவர் நாட்டை விட்டு ஓடிய பின்னரே அறிந்துகொள்ள முடிந்தது.

அத்தகைய குழுக்களின் பிரதான பணியாக இருந்தது நாட்டில் அரசியல் தேவையின் நிமித்தம் சிங்களவாதத்தையும் தேசப்பற்றையும் தூண்டி சட்டம், ஒழுங்கை மீறுவதும் வன்முறைகளை ஊக்குவிப்பதுமாக இருந்து வந்திருக்கின்றது. அதனால் பாரிய பொருளாதார நெருக்கடியொன்றில் சிக்கியுள்ள நாட்டில் மீண்டும் இன முறுகல்கள் ஏற்பட்டு அழிவுகளுக்கு வழிவிடக் கூடாது. அரசாங்கம் தாமதமின்றி நெருக்கடிகளை தீர்க்க பொறுப்புடன் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன், 2010ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகும் வரையில் இந்நாட்டில் இனவாத குழப்பங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை புலனாய்வுத்துறையினர் நன்கு அறிவார்கள். அதனால் மீண்டும் உதய கம்மன்பில போன்ற சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தேசப்பற்றையும் மதப்பற்றையும் தூண்டி அரசியல் நாடகம் நடத்தக்கூடியவர்களின் செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அரசியலில்... (07ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நட்டமடையும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதில் எந்த சிக்கலும் இல்லை என்பதே எங்களின் நிலைப்பாடாகும். இலாபமடையும் நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதை எதிர்க்கிறோம்.

பொதுஜன பெரமுன தொடர்பில் உங்களின் நிலைப்பாடு?

பொதுஜன பெரமுனவுக்கு என்ன நடந்தது என்பது சகலரும் அறிவார்கள். கிராமங்களுக்கு சென்றதும் மக்களின் கருத்துகளை வைத்து அந்தக் கட்சியின் நிலைமையை அறிந்துகொள்ளலாம். பொதுஜன பெரமுன என்ன விளையாடினாலும் அடுத்த தேர்தலில் தனிக்கட்சியாக அதிகாரத்துக்கு வர முடியாது. அதனை உறுதியாக குறிப்பிடுகிறோம்.

அது அரசியல் கட்சியும் இல்லை. அந்தக் கட்சிக்கு பணியாளர்களோ, கட்சி அமைப்போ எதுவும் இல்லை. பிரதான அரச தலைவர்கள் இருவரும் பொதுஜன பெரமுனவை சார்ந்தவர்கள் என்று கூறிக்கொள்வதற்கப்பால், அந்தக் கட்சியினரால் நாட்டுக்கு எந்த முன்னுதாரணங்களும் கிடைக்கவில்லை. ஆனால், நாங்கள் அவ்வாறு இல்லை. சுதந்திரக் கட்சிக்கு என்று தனித்துவம் இருக்கிறது.

சுதந்திரக் கட்சி தனித்துவிட்டதா?

ஒருபோதும் சுதந்திரக் கட்சி தனித்துவிடுவதில்லை. நாங்கள் சகலருடனும் கலந்துரையாடிக்கொண்டே இருக்கிறோம்.

சுதந்திரக் கட்சியின் 74ஆவது ஆண்டு விழாவின்போதும், உங்களை முன்னாள் ஜனாதிபதி என்று அழைக்க வேண்டி ஏற்படுமா அல்லது ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன என்று அழைக்க நேரிடுமா?

அந்த காலத்திலிருக்கும் நிலைப்பாட்டுக்கமைய தீர்மானிக்கப்படும். எனக்கு ஜனாதிபதியாக இருந்த அனுபவம் இருப்பதால், மீண்டும் நாட்டின் ஜனாதிபதியாகுவதில் எந்த சிக்கலும் இல்லை. சர்வதேச மட்டத்திலும் நான் முக்கிய பதவிகளை வகித்துள்ளேன். கடந்த நான்கு வருடங்களில் எனது சர்வதேச தொடர்புகள் மேலும் வலுவடைந்துள்ளன. சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றியே வருகிறேன்.

நாட்டின் முன்னேற்றம் தொடர்பில் எங்களிடம் தெளிவான கொள்கை இருக்கிறது. அந்த கொள்கைகளுக்கமைய இலாபமடையும் நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு இணங்கவில்லை. ஆனால், 30 – 40 வருடங்களாக நட்டமடைந்துவரும் நிறுவனங்களே இருந்து வருகின்றன.

தொகுப்பு – நா.தினுஷா

பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசு இறக்குமதியை ஊக்குவிக்கின்றமை

உள்நோக்கம் சார்ந்ததா ?



சின்னத்தம்பி குருபரன்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டிலுள்ள வளங்களிலும், உற்பத்தித் திறனிலும் தங்கி இருக்கிறது. சில நாடுகள் சில வளங்கள் இல்லாத போதிலும் அபிவிருத்தி நோக்கிய திட்டமிடலின் காரணமாக வளர்ச்சி அடைந்திருக்கின்றன. இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனக் கருதப்படும் இலங்கையில் பல வளங்கள் செறிந்து காணப்படுகின்றன. அப்படி இருந்தும் பிற்போக்கான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவும் ஊழல், மோசடிகள் காரணமாகவும் இனவாத அரசியல் காரணமாகவும் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு இருக்கின்றன. 75 வருட காலமாக நாட்டை ஆட்சி செய்ய இனவாத ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த உறுதியற்ற திறந்த பொருளாதாரக் கொள்கையின் காரணமாக உள்நாட்டு உற்பத்தி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு வளங்களை மையப்படுத்திய உற்பத்திகளை ஊக்குவிப்பதை விடுத்து அரசு பெரும்பாலும் இறக்குமதிகளையே ஊக்குவித்து வருகின்றது. இதனால் உள்நாட்டின் பல வளங்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டிய நமது வளங்களில் பெரும்பகுதி வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர்களுக்கும் பல ஆண்டுக் குத்தகைக்கு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்கப் பிக்குகள் மற்றும் இனவாதிகளைக் கொண்டு தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள காணிகளைப் பலாத்காரமாகப் பறிப்பதும், புதிது புதிதாக பௌத்த விகாரைகளைக் கட்டுவதும், வரலாற்றுச் சின்னங்களைச் சிதைப்பதுமான பேரினவாதச் செயற்பாடுகளை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றனர். தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள நிலங்களைக் கூறுபோட்டு அவர்களைச் சிறுபான்மையினர் ஆக்குவதற்குரிய சிங்கள, பௌத்த இனவாத இராஜதந்திரம் மிகச் சாதுரியமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிறுபான்மையினருக்குரிய உரிமைகள், ஒதுக்கீடுகள், பங்கீடுகள் யாவையும் திட்டமிட்டுக் குறைத்து வருகின்றனர். பௌத்த பிக்குகளும் இனவாதிகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தினமும் ஏதோவொரு உருவத்தில் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இனவாத அரசும், பல அரசியல்வாதிகளும் கண்டும் காணாதது போல் ஊக்குவித்துக் கொண்டிருக்கிக்கின்றனர்.

அரச வம்சத்தில் பிறந்த சித்தார்த்தர் அரசு, பதவி, ஆசைகள் எல்லாவற்றையும் துறந்து பஞ்ச சீலக் கொள்கையைக் கடைப்பிடித்து துறவு முழு வாழ்க்கைக்கு வந்தவர். அவர் உருவாக்கிய பௌத்த மதத்தையும் போதனைகளையும் கற்றுத் தெளிந்து துறவு வாழ்க்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளால் ஆசை, மோகத்தினைத் துறக்க முடியவில்லை. அதனால் பௌத்த ஒழுக்க சீலம் பாதிக்கப்படுகிறது என்பதனைப் பௌத்த பிக்குகளில் பலர் உணர்வதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசு இனவாத, பௌத்த அமுலாக்கக் குழுக்களினதும், இனவாதத்தைத் தூண்டித் தூபமிடும் கடும்போக்குவாத அரசியல் கட்சிகளினதும் பிடிக்குள் சிக்குண்டு இனவாத சிந்தனைக்குள் நின்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றது. அதனால் நாடு மோசமான நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்களும் கடும்போக்கு இனவாத பௌத்த பிக்குகளும் அரசியல்வாதிகளின் தாளத்துக்கு ஆடும் தீவிரப் போக்குடைய இனவாதிகளும் நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைவரம் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட்டு, பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனம் செய்து எதைக்கொண்டு நாட்டை நடத்தப் போகின்றார்கள். நாளுக்கு நாள் துறைமுகங்கள், கரையோரம், கடல்வளம், பிரதான மையங்கள் எல்லாவற்றையும் வெளிநாடுகளுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விற்பனை செய்து கொண்டிருந்தால் சிங்கள, பௌத்த நாட்டை நிலை நிறுத்துவதற்கு எது மிஞ்சப் போகின்றது. இப்போது நாட்டின் பெருமளவான வளங்கள் பல நாடுகளுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சியாளர்களிடம் இருந்து வளங்களைப் பாதுகாப்பதை விடுத்து தமிழர் தாயகப் பிரதேச நிலங்களை அபகரித்து வருகின்றனர்.



இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக இருப்பதனால் கரையிலிருந்து 12 கடல் மைல் ஆட்புல எல்லையையும் மேலும் பல கடல் மைல் கொண்ட பிரத்தியேக பொருளாதார மையத்தையும் கொண்டுள்ளது. நாம் பயன்படுத்த வேண்டிய கடல் வளத்தை வேறு யாரோ அபகரித்துச் செல்கின்றனர். இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதார கடல் எல்லைக்குள் மீன்கள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய முருகைக் கற்பாறைகளும் வோஜ், பேதுறு கடற்பள மேடைகளும், கடல் நீரில் கலந்திருக்கும் மிதமான உப்பும், வெப்பமும் அதிகளவான இனப்பெருக்கத்துக்குச் சாதகமாக அமைகின்றன. அதனால் இலங்கையின் கடல்வள எல்லைக்குள் அதிகளவான மீன்கள் உற்பத்தியாகின்றன. இந்த மீன் வளத்தைப் பெருப்பிப்பதற்குரிய வகையில் நவீன முறையில் மீனவக் கைத்தொழிலை விருத்தி செய்வதை விடுத்து பெருமளவு டொலரைச் செலவு செய்து வெளிநாடுகளில் இருந்து மீன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கின்றனர்.

இலங்கையைச் சுற்றிவரக் கடலலைச் சக்தியும், கரையோரங்களில் காற்றலைச் சக்தியும், கரையோர உள்ளகச் சமவெளிப் பிரதேசங்களில் சூரிய சக்தியும் வருடத்தில் ஒன்பது மாதங்களுக்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியும் அதனால் இயற்கையான நீர்வீழ்ச்சிகளும் நீர்த்தேக்கங்களும் காணப்படுவதனால் வருடம் பூராகவும் மின்சக்தியைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் நிறைந்துள்ளன. அதனை விடுத்து அனல் மின் உற்பத்தி நிலையங்களையும், நிலக்கரி மின் உற்பத்தியையும் அமைத்தது மாத்திரமன்றி தனியார் மின் உற்பத்தியாளர்களிடம் இருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதையும் அரசு ஊக்குவித்து வருகின்றது. இதனால் அலகுக்கான மின்கட்டணம் அதிகரித்துச் செல்கின்றது.

இலங்கையில் கரும்பு உற்பத்தியை அதிகரித்து இங்குரான, கந்தளாய், பெலவத்த உட்பட நான்கு சீனித் தொழிற்சாலைகளையும் வினைத்திறனுடன் இயங்க வைத்திருந்தால் நாட்டின் சீனி உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருக்கலாம். வெளிநாடுகளில் இருந்து சீனியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையும் இருந்திருக்காது. உள்நாட்டுச் சீனி உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தி இருந்திருந்தால் பெருமளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்தி இருக்கலாம். டொலர் நெருக்கடியையும் தவிர்த்திருக்கலாம். இறக்குமதி மூலமான பல மில்லியன் ரூபா ஊழல் மோசடிகளும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை வழங்கி, பசுக்களுக்குச் செயற்கை முறை இனப்பெருக்கம் செய்து பண்ணை உற்பத்தியை அதிகரித்திருந்தால் பால் உற்பத்தி அதிகரித்திருக்கும். அதனால் நாட்டுக்குத் தேவையான பால்மா, பால் உற்பத்தி அதனுடன் சேர்ந்த உற்பத்திகளையும் அதிகரித்திருக்கலாம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கால்நடைகளுக்கென வழங்கப்பட்டிருந்த மேய்ச்சல் தரைகளில் பெரும்பாலானவை சிங்கள, பௌத்த பேரினவாதிகளால் திட்டமிட்டுப் பலாத்காரமாக கபளீகரம் செய்யப்படுகின்றன. அதனால் பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதோடு நாட்டுக்குத் தேவையான பால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டு வெளிநாட்டில் இருந்து பால்மா, பால் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சிங்களப் பேரினவாதம் உணர மறுப்பது வேடிக்கையானது.

இலங்கையில் வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களில் காகித ஆலைகள் பாரியளவில் அமைக் கப்பட்டிருக் கின்றன. 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டுக்குத் தேவையான 75 வீதத்துக்கும் மேற்பட்ட காகித உற்பத்திகள் இத்தொழிற்சாலைகளில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு நாடு பூராகவும் வழங்கப்பட்டன. அதற்கான மூலப்பொருட்களான வைக்கோல், கழிவுக் கடதாசிகள், மரத் தூள்கள் ஆகியன உள்நாட்டில் இருந்து பெறப்பட்டன. உள்நாட்டு யுத்தத்தைக் காரணங்காட்டி கடதாசி இறக்குமதி செய்வதற்காகத் திட்டமிட்டு உற்பத்திகள் குறைக்கப்பட்டன. அதனால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு 70 வீதத்துக்கு மேற்பட்ட கடதாசிகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுப் பெருமளவு செலாவணி வெளியேறிக் கொண்டிருக்கிறது. இதிலும் பல உள்நோக்கங்கள் கலந்திருக்கின்றன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத்துறை பாரிய பங்களிப்புச் செய்கிறது. நெல் விவசாயம், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை, விலங்கு வேளாண்மை, சேனைப் பயிர்ச் செய்கை, தோட்டப் பயிர்ச் செய்கை ஆகியன விவசாய உற்பத்திக்குள் அடங்குகின்றன. அண்மைக்காலமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. விவசாய உற்பத்திகளை நியாய விலைக்குச் சந்தைப்படுத்த முடியாமை, விவசாய உற்பத்திக்கான உள்ளீடுகள் பற்றாக்குறை, பதிலீட்டு இறக்குமதிகள் ஊக்குவிக்கப்பட்டமை, வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கள் பெறுவதிலுள்ள சிரமம் ஆகிய பல காரணங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உற்பத்திகள் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றன. விவசாயத் துறையை ஊக்குவித்து உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் பாதுகாப்பதை விடுத்து அரசு பல பொருட்கள் இறக்குமதி செய்வதை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றது.

பாரிய கைத்தொழில்கள், சிறிய, நடுத்தர கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் ஆகியனவும் அண்மைக் காலமாக மோசமாகப் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகளின் பல உள்ளீட்டு மூலப்பொருட்களின் இறக்குமதிகள் பாதிக்கப்பட்டதாலும் விலை அதிகரிப்புக் காரணமாகவும் பலர் உற்பத்தியைக் குறைத்துள்ளனர். சந்தைப்படுத்தல் பிரச்சினை, மூலப்பொருள் தட்டுப்பாடு போன்றவற்றால் பல சிறுகைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் பாதிக்கப்பட்டுப் பலர் தொழில் தலங்களை மூடிவிட்டனர். இன்னும் சிலர் உற்பத்தியைக் குறைத்துள்ளனர். அதனால் பலர் தொழில்வாய்ப்பை இழந்திருக்கின்றனர். அவர்களைப் பாதுகாத்து, உற்பத்தியை ஊக்குவித்துச் சந்தைப்படுத்தல் வசதிகளையும் செய்து கொடுப்பதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து பதிலீட்டு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். அதனால் பல மில்லியன் கணக்கான வெளிநாட்டுச் செலாவணியைச் சேமித்திருக்கலாம். பல உற்பத்தியாளர்களை ஊக்குவித்து பலருக்குத் தொழில் வாய்ப்பையும் வழங்கி இருக்கலாம். தொழிலின்மை வீதமும் குறைந்திருக்கும். உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புக் காரணமாகச் சந்தை நிரம்பல் அதிகரித்து பொருட்களின் விலை குறைந்திருக்கும். பணவீக்கம் குறைந்து வாழ்க்கைச் செலவும் குறைந்திருக்கும். உணவுக்கான பணவீக்கமும் அதிகரித்திருக்கமாட்டாது. மக்களும் இயல்பான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதை விடுத்து இறக்குமதியை ஊக்குவிப்பதற்குப் பொருளாதார நிபுணர்களும், பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்களும் ஆலோசனை வழங்கினார்களா? அல்லது துறைசார்ந்த அமைச்சர்களும் ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளும் தீர்மானம் எடுத்தார்களா? அல்லது எழுந்தமானமாகத் தீர்மானம் எடுக்கப்பட்டதா? என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம். இலங்கையில் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளைச் செவிமடுக்கத் தவறியமையே இன்றைய அரசியல், பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமாக அமைந்தது. பொருளாதார நிபுணர்களும், உற்பத்தியாளர்களும் நாட்டின் எதிர்காலம் பற்றிக் கூறிய ஆலோசனைகள் எதனையும் பதவியும், அதிகாரமும் தலைக்கேறிய நாட்டின் தலைவராலும் அமைச்சர்களாலும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அவ்வாறு கவனத்தில் எடுத்திருந்தால் கடந்த காலங்களில் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்க மாட்டாது. பொருட்களின் விலைகளிலும் ஓரளவு உறுதித் தன்மை பேணப்பட்டிருக்கும். மக்களும் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். எல்லாவற்றையும் தாங்களாகவே செய்துவிட்டு எதிர்கால அரசியல் வாழ்வுக்காகவும் வாக்கு வங்கியைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதனால் செய்த தவறுகள் மறக்கப்பட்டுவிடுமா? அல்லது மக்கள்தான் மன்னித்து விடுவார்களா?

நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து அவற்றுக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டுமேயொழிய இறக்குமதியை அதிகரிப்பது தீர்வாக அமையாது. ஆளுந்தரப்பு எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளின் சிறப்புரிமைகள், முன்னுரிமைகள், ஒதுக்கீடுகள், சலுகைகள், வாய்ப்புக்கள், வரப்பிரசாதங்கள் எதுவும் குறைக்கப்படாத நிலையில் அவர்கள் விட்ட தவறுகளினால் ஏற்பட்ட நெருக்கடிகளை மக்கள் சுமந்து, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை மக்கள் மீண்டும் மீண்டும் சுமக்க வேண்டிய விதியாகிவிட்டது. இறக்குமதியை ஊக்குவிப்பதனால் பலருக்குப் பல கோடி ரூபாக்கள் கைமாற்றப்படுவதாக பல எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் விமர்சித்து வருகின்றனர். அத்தோடு இறக்குமதி அனுமதிப் பத்திரங்களில் பல செல்வாக்குமிக்க ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளின் உறவினர்கள், பினாமிகள், வசதியும் செல்வாக்குமுள்ள கட்சி உறுப்பினர்களுக்கே வழங்கப்படுகின்றன. அவர்களுள் பலர் பல ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களாக இருப்பார்கள். அவர்களை எந்தச் சட்டத்தினாலும் எதுவும் செய்ய முடியாத பண பலம், ஆட்பலம், செல்வாக்கு மிக்கவர்களாக இருப்பார்கள். அவர்கள் செய்த குற்றத்தை நிரூபிக்காமல் இருப்பதற்காகப் பல இலட்சங்கள், கோடிகள் பரிமாறப்படும். மக்களும் அவர்களின் ஆட்டத்தைச் சகிக்க முடியாமல் இவர்களுக்கெல்லாம் நீதி கிடைக்காதா எனக் கூறிப் புலம்புவார்கள்.

இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்களில் பலர் பலருக்குக் கையூட்டுக்கள் கொடுத்துத் தரம் குறைந்த பொருட்களையும் காலாவதித் திகதி அண்மித்துள்ள பொருட்களையும் அரசியல் செல்வாக்குடன் இறக்குமதி செய்கின்றனர். தேங்காய் எண்ணெய், சீனி, மசகு எண்ணெய், பருப்பு, கொத்தமல்லி, மருந்து வகைகள் எனப் பல்வேறு வகைப்பட்ட தரம் குறைந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகப் பல வாதப் பிரதி வாதங்களும், பாராளுமன்றத்தில் பல காரசாரமான கண்டனங்களும் விவாதங்களும் நடந்தன. எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பொது மக்களும் பல கண்டனங்களை வெளியிட்டனர். தரம் குறைந்த எரிவாயுவினால் பல எரிவாயு அடுப்புகள் வெடித்தன. தரங்குறைந்த மருந்துகளால் பலர் இறந்திருக்கின்றனர். வைத்தியசாலைகள் யாவற்றிலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. மருந்து இறக்குமதி செய்வதை விடுத்து அத்தியாவசியமற்ற ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போதைய நெருக்கடியான சூழலில் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளைச் சிறிது காலம் நிறுத்தி வைத்து தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்து வைத்தியசாலைகளுக்கு வழங்கலாம்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலீடான பொருட்கள் பல இறக்குமதி செய்யப்படுகின்றன. உள்நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் இறக்குமதிப் பொருட்களுக்கும் சம விலை தீர்மானிக்கப்படுகின்றன. உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கும் கண்டபடி விலையை அதிகரித்து இருக்கின்றனர். இதிலும் பல உள்நோக்கங்கள் இருக்கின்றன. உள்நாட்டு உற்பத்தியைக் கூட்டுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும்விட இறக்குமதி செய்வதன் மூலம் பல கோடிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற உள்நோக்கம் காரணமாக இறக்குமதிகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றனர். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்காமல் இறக்குமதியை ஊக்குவிக்கின்ற நாடுகள் அபிவிருத்திப் பாதையில் தடம்பதிக்க முடியாது என்பதையும் ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பாதக சென்மதி சிலுவையை கட்டுப்படுத்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். அதனால் பெருமளவு அந்நியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் போதையொழிப்புப் பிரசாரம்!

உமர் அலி உஸ்மான்



பிறந்தவொரு தாய்க்கும் முன்னால் அவளின் மகனோ அல்லது மகளோ பெரும்பாலும் போதைப்பொருளை பாவிப்பதில்லை. அதனை அவர்கள் சிறந்த ஒரு செயலக ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள். ஆனால், தாம் செய்து கொண்டிருப்பது பிழை என்று அதை பாவிக்கும் அவர்களுக்குத் தெரியும். உலகில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை பல்வேறு வகையிலும் வளர்ந்துவரும் மாணவர்கள் இன்று சந்திக்கின்றனர். இதில் குறிப்பாக, படிக்கும் பருவத்திலுள்ள மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் பிரச்சினை பலராலும் பரவலாக பேசப்படுகின்றது. பிரபலமான பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று பல்கலைக்கழகம் முடித்து பட்டதாரிகளாக வருவதற்கு முன்னராகவே போதைக்கு அடிமையாகிய இளம் சந்ததி உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியுள்ளது.

மாணவர்கள் தங்களது இளமைப் பருவத்தில் நடத்தும் அட்டகாசங்களைப் பற்றி சிந்திக்கிறார்களே தவிர, அதனால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே போதைக்கு ஆளாகின்றார்கள். திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு போதை மற்றும் தீய நடத்தைகள் தடையாக இருக்கின்றன என்பதை உணராமல் இருக்கிறார்கள்.

எந்தவொன்றையும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சிலநேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றது. நண்பர்களுடன் பழகும்போது சிகரெட் புகைத்தல், பியர் குடித்தல் என்ற பழக்கத்துடன் ஆரம்பித்து இறுதியில் அனைத்துவிதமான போதைக்கும் அடிமைகளாகி விடுகின்றார்கள். தற்போது சிறுபிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளையும் போதைக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் நாட்டினதும், நாளைய நமது இளம் சந்ததியினதும் எதிர்காலம் பயப்படும் விதமாக அமைந்து விடுகிறது.

போதையை பயன்படுத்தும் மாணவர்கள் தமது அறிவை இழக்கின்றனர். மயங்கு கின்றனர். உடல் பலவீனமடைகிறது. உளம் கெட்டு விடுகின்றது. தம்மால் உறுதியாக நிற்க முடியாமல் ஆடி அசைந்து விழுகின்றனர். அதன் பின் அவர்களுக்கு ஏற்படும் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் அறியாமல் இருக்கின்றனர். இப்படியான மாணவர்களை அணுகி போதைக்குள் அகப்பட்டமைக்கான காரணத்தைக் கேட்டால் அவர்களிடமிருந்து வரும் பதிலில் வீட்டுச் சூழல், சமூகச் சூழல், குடும்பப் பிரச்சினை, போட்டி சூழலுக்கு முகங்கொடுக்க முடியாமை, ஊடக ஆதிக்கம், திரைப்படங்களினதும், நடிகர்களினதும் செல்வாக்கே முதன்மை பெறுகிறது.

வீட்டுச் சூழலிலிருந்து பல பிள்ளைகள் போதை பாவனைக்கு ஆளாகுகின்றார்கள். தந்தை சிகரெட் புகைப்பவராக இருந்தால், பிள்ளையிடம் பணம் கொடுத்து அந்த சிகரெட்டை வாங்கிக்கொள்கிறார். அந்தப் பிள்ளை தந்தையின் புகைத்தல் 'ஸ்ரைலை' பார்த்து நாளடைவில் அதனை திருட்டுத்தனமாக புகைக்க ஆரம்பிக்கின்றது. இறுதியில் அந்தப் பிள்ளை கட்டுக் கடங்காதவனாக போதைக்குள் சிக்கிக்கொள்கிறான். பணக்கார வீடுகளில் நடைபெறும் விருந்துபசாரத்தின்போது பியர் மற்றும் மது பாவிக்கப்படும்போது பிள்ளை அவற்றை சக நண்பர்களுடன் சேர்ந்து பயன்படுத்த ஆரம்பிக்கின்றது. இவை நல்லவை பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை என்ற நிலை காணப்படுவதால் பிள்ளைகள் விளைவுகளைப் பற்றி அஞ்சாமல் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கின்றார்கள் என்கின்றன சில ஆய்வுகளின் முடிவுகள்.

வீட்டுச் சூழலில் பயன்படுத்திய போதைப்பொருட்களை பிள்ளைகள் நாளடைவில் சமூக சூழலில் சக தோழர்களுடன் பழகிக்கொள்ள முனைகின்றது. சிலவேளை வீட்டுச் சூழலில் சிகரெட் புகைத்தல், மது அருந்துதல் போன்றவை இல்லாவிட்டாலும் சமூக சூழலில் அவை விற்பனைக்கு இருக்குமாயின், அவற்றை பயன்படுத்தக்கூடிய பிள்ளைகள் இருப்பார்களாயின் அப்பிள்ளைகளுடன் பழகக்கூடியவர்களும் போதைக்கு ஆளாகிவிடுவார்கள்.

போதை வீட்டையும், நாட்டையும் கெடுக்கும் என்று விளம்பரம் செய்து கொண்டே போதைப்பொருட்களை பகிரங்கமாக விற்க அரசாங்கமே அனுமதி கொடுக்கும் நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதை என்னவென்று சொல்வது. கஞ்சாவை பற்றி, விபச்சாரத்தை பற்றி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரே பாராளுமன்றில் விளம்பரம் செய்யுமளவுக்கு இருக்கிறது இன்றைய நிலை. போதைப்பொருள் நாட்டில் தலைதூக்க பொலிஸார் உட்பட பாதுகாப்புத் தரப்பினரின் ஆசீர்வாதம் இல்லாமலா இருக்கும் என்ற இலங்கை பற்றாளர்களின் கேள்விக்குள் ஆயிரம் இரகசியங்கள் ஒளிந்துகொண்டிருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள் போதைக்கு ஆளான பல சம்பவங்களில் ஒன்றுதான் Big Match (பிக் மெச்) என்ற விளையாட்டுப் போட்டியின்போது நடைபெறுகின்றது. இதன்போது மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டு பொலிஸ் வரை சென்ற சம்பவங்களும் உள்ளன. இதுபோல் சில ஆசிரியர்களே போதைப்பொருள் வியாபாரிகளாக மாறிய சம்பவங்களும் ஆங்காங்கே நடக்கமலுமில்லை. இந்தப் போதைப்பொருள் பாவனையில் பிரதான பங்கு வகிப்பது குடும்ப பாசத்தின் குறைவே என்பது யதார்த்த உண்மை. குடும்பத்தில் எல்லா பிள்ளைகளிடமும் பெற்றோர் சரிசமமான அன்பு, பாசம் காட்டி அரவணைக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மை வளர விடாமல் காத்துக்கொள்ள வேண்டும். இதுவே பிள்ளைகளை தீய பக்கங்களுக்கு செல்லாமல் காத்துக்கொள்ளும். பெற்றோரிடம் உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்பட்ட கவலையைப் போக்க போதையைப் பயன்படுத்தி தீர்வு காண முனைகின்றனர் என்ற உண்மை பல வருடங்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

அதுபோல் தாய் - தந்தையிடையே தகராறு ஏற்படுமாயின் அல்லது பெற்றோர் பிரிந்து வாழ்வார்களாயின் அதனால் பாதிப்படைப்பவர்கள் பிள்ளைகளே. அப்பிள்ளை விரக்தி காரணமாக போதைக்கு அடிமையாகுவதாகவும், தாய்க்கும் தந்தைக்கும் பிரச்சினை தோன்றும்போது தந்தை சிகரெட் புகைத்தல், மது அருந்துதல் போன்ற காட்சியை பிள்ளை கண்டால் தனக்கு ஏற்படும் பிரச்சினைக்கு இதுதான் தீர்வு என பிள்ளையும் பாவனைக்கு ஆளாகுவதும் பற்றி அரசாங்கம் மக்கள் வரிப்பணத்தை செலவழித்து செய்த அத்தனை நடவடிக்கைகளும் தோல்வியையே சந்தித்துள்ளன. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் அரச இயந்திரம் இந்த விடயத்தில் தோல்வியையே தொடர்ந்தும் சந்தித்துள்ளது.

போதையைப் பாவிக்கும் மாணவர்களிடம் இது தொடர்பில் கேட்டபோது, பாடசாலை வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் ஏற்படும் சவால்களுக்கும் போட்டிகளுக்கும் முகங்கொடுக்க முடியாமல் தோல்வி மனப்பான்மைக்கு ஆளாகும்போது போதையை நாடுவதாகவும் பரீட்சையில் தோல்வி, பொதுவான போட்டி நிகழ்ச்சிகளில் தோல்வி, படிக்க முடியாத பிரச்சினை எனும்போது போதையைப் பயன்படுத்துவதாகவும் கருத்துகள் வெளியிடுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் பிரதான வழிகாட்டியாக இருப்பதே எமது ஊடகங்களும், தென்னிந்திய திரை நட்சத்திரங்களுமே. எந்தவொரு பிரச்சினையின்போதும் அதற்கு முகம்கொடுக்க முடியாதபோது போதையை பயன்படுத்துவதையே அவர்கள் தீர்வாகக் காட்டுவதாகவும் அதையே தாம் பின்பற்றுவதாகவும் அவர்களின் வார்த்தைகள் சொல்கின்றன. அதுமட்டுமன்றி காதல் தோல்வி, குடும்பத் தகராறு, வாழ்வில் தோல்வி, வேலையின்மை, விரக்தி, நண்பர்களுக்கிடையிலான உறவில் விரிசல் போன்ற காட்சிகளில் கதாநாயகன் நாடக்கூடிய முதல் தீர்வு சிகரெட் புகைப்பது, மது அருந்துவது என்பதைத்தான் இந்த சினிமா மற்றும் நாடகங்களில் காட்டப்படுகின்றது. அதுபோல் கதாநாயகன் பல்வேறு ஸ்டைல்களில் புகைத்துக் காட்டுவதும் இதற்கான மற்றொரு காரணமாகும் என்கின்றனர் இதில் மூழ்கியுள்ள இளம் சந்ததியினர்.

எமது பிள்ளைகள், மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் போதைக்கு அடிமையாகும்போது குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. குடும்பத்துக்குள் ஒற்றுமை குலைந்து விடுகின்றது. அவநம்பிக்கை ஏற்படுகின்றது. முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. வீணான செலவுகளால் வறுமை ஏற்படுகிறது. குடும்பத்துக்கென்று இருந்த மானம், மரியாதை, கௌரவம் இழக்கப்படுகின்றன. இதனால் மனச்சோர்வு ஏற்பட்டு விரக்திக்கு செல்கின்றனர். பிள்ளைகளின் எதிர்கால கனவுகள், இலட்சியங்கள் நாசமாகின்றன. இலக்கில்லாமல் வாழ்வு அழிந்து விடுகின்றது. புத்தகங்களை சுமந்து செல்லவேண்டியவர்கள் பல்வேறுபட்ட நோய்களை சுமந்தவர்களாக நடமாட ஆரம்பிக்கின்றனர். பதினாறு மற்றும் பதினெட்டு வயதை அடையும்போதே வாழ்க்கையை தொலைத்து விடுகின்றனர். இதிலிருந்து இவர்களை மீட்க பிள்ளைகள் பழகக்கூடிய புதிய, பழைய நண்பர்களை அடையாளம் காண வேண்டும்.

ஆரம்பத்தில் பிள்ளை பழகிய நண்பர்கள் யார்? புதிதாக பழகிய நண்பர்கள் யார்? அவர்களுடன் மேற்கொள்ளும் நட்பு எத்தகையது? ஏற்பட்டு வரும் மாற்றம் எத்தகையது? என்பதை பெற்றோர் அறிய வேண்டும். அவர்களது செல்போன் பாவனை எத்தகையது? அதிகமாக பேசுபவர்கள் யார்? என்பதையும் அறிய வேண்டும். சிலவேளை பிள்ளை அல்லது மாணவன் பழைய நண்பர்களின் நட்பு மோசமானது எனக் கருதி புதிய நண்பர்களை தேடிக்கொள்ளலாம். அல்லது பழைய நண்பர்களின் தொடர்பை விட புதிய நண்பர்களின் தொடர்பால் திசை மாறியும் போகலாம். இதில் பெற்றோர் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்கின்றனர் துறைசார் வல்லுநர்கள்.

எமது நாளைய நம்பிக்கைக்குரிய மாணவ சமூகம் பாடசாலைக்குச் செல்லும் நேரம் மேலதிக வகுப்புக்குச் செல்லும் நேரம், இதில் ஏற்படும் மாற்றங்கள், பொழுது போக்குகளில் ஈடுபட்டவர்கள் ஒதுங்கிக் கொள்வது, நல்ல பழக்க வழக்கங்களை குறைத்துக்கொள்வது, விருப்பமான நல்ல விடயங்களில் ஆர்வம் குறைந்து வருவது, விளையாட்டில் நாட்டமில்லாமல் இருப்பது, அணியும் ஆடைகளில் கவனமில்லாமல், சுத்தம் பேணாமல் இருப்பது, வாயில் துர்வாடை வீசுவது போன்ற விடயங்கள் காணப்படுமாயின், பெற்றோர் உடனே கவனம் செலுத்த வேண்டும். அதுபோல் வீட்டில் சின்னச் சின்னப் பொருட்கள் காணாமல்போவது அல்லது பணம் காணாமல்போவது, படிப்பில் ஆர்வம் குறைவது, அடிக்கடி மறதி ஏற்படுவது, பதற்றமாகவும் ஆக்ரோஷமாகவும் நடந்துகொள்வதும் காணப்படுமானால் பெற்றோர் கண்டிப்பாக பிள்ளைகள் விடயத்தில் மிக அவதானம் செலுத்த வேண்டும். பிள்ளையின் மீது அதிக அன்பு காட்டி ஏமாந்து போகாமலும் அதிக கோபத்தையும் வெறுப்பையும் காட்டி ஒதுக்கி விடாமலும் நடுநிலைமையுடன் நடந்து, பிள்ளையின் வாழ்வை சீர்செய்ய முனைய வேண்டும். எல்லா பிரச்சினைக்கும் தீர்வு உண்டு. அதனை சரியாக தேடிக் கொள்ளவே வழி காணவேண்டும்.

மக்கள் சமுதாயத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் எதிராக உலகளாகிய அளவில் எழுந்திருக்கும் பிரச்சினைதான் இந்தப் போதைப்பொருட்கள். ஆரோக்கியம் என்பது இறைவன் நமக்குக் கொடுத்த மிகப்பெரும் அருட்கொடை. நம் உடல் ஆரோக்கியத்திற்கு நாமே தீங்கிழைத்துக் கொள்ளக்கூடாது. போதைப்பொருட் களால் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. 1000இற்கு 1 என்ற அடிப்படையில் மாணவர்கள் புகைத்தல் பாவனைக்கு பழக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் மூலம் அறியமுடிகின்றது. இலங்கையில் 13-15 வயதுக்கு உட்பட்ட அதிகமான பாடசாலை மாணவர்கள் புகைத்தல் பழக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக உறுதியான தகவல்கள் இருக்கின்றன. ஒருவருடத்தில் இலங்கையில் போதைப்பொருட்கள் சம்பந்தமான குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 82,482. இது அதற்கு முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீத அதிகரிப்பாகும். இவர்களில் 32 சதவீதமானோர் ஹெரோயினை வைத்திருந்ததற்காகவும் 63 சதவீதமானோர் கஞ்சா தொடர்பான குற்றச்செயல்களுக் காகவும் கைதுசெய்யப்பட்டனர். மேலும் பெரும்பான்மைக் குற்றச்செயல்கள் மேல் மாகாணத்தில் 60 சதவீதம் பதிவாகியது. அதைத்தொடர்ந்து தென் மாகாணத்தில் 10 சதவீதம், மத்திய மாகாணத்தில் 8 சதவீதம் என்ற வீதங்களில் காணப்பட்டன.

மாவட்ட அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் 43 சதவீதம், கம்பஹா மாவட்டத்தில் 14 சதவீதம் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் 4 சதவீதம் என்ற வீதங்களில் காணப்பட்டன. 2015ஆம் ஆண்டில் போதைவஸ்துகள் தொடர்பான குற்றச்செயல்களுக்கு கைதானவர்களின் வீதம் மொத்த சனத்தொகையில் ஒப்பிடுகையில், ஒரு இலட்சம் பேருக்கு 397 என்ற அளவில் காணப்பட்டது. ஆனால், இன்று அந்த நிலை எங்கிருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும், குழப்பத்தையும் தன்னைத்தானே மனிதன் ஏற்படுத்திக்கொள்கின்றான். இன்று போதை அரக்கன் வடக்கு- கிழக்கிலும் கடுமையாக தனது வேலையை காட்டுகிறான் என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியுள்ளது.


போதை வஸ்துகளை நுகரும் பழக்கம் தற்போது இலங்கையில் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, நட்பு, உறவினர்கள் மற்றும் தொடர்புகள் என எல்லாவற்றிலும் விரிசல் ஏற்பட்டுவிடுகிறது. போதைக்கு அடிமையாகி இளமையிலேயே இறந்துவிடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடுகின்றது.

எல்லோருக்கும் எளிமையாகவும், பரவலாகவும் கிடைத்துவிடும் போதைப்பொருள்தான் சாராயம் மற்றும் அதைச்சார்ந்த மது வகைகள். இந்தப் பழக்கத்தை தற்போது பள்ளிப் பருவத்திலேயே பழகிக் கொண்டிருப்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் அரசே ஆங்காங்கே அமைத்திருக்கும் மது கடைகளும், இதற்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரமும், திரைப்படங்கள் வழங்கும் சந்தைப்படுத்தலும். மகிழ்ச்சி மற்றும் துக்க வேளைகளில் மது தேவை என்ற மனோநிலைக்குக் மாணவர்கள் செல்கிறார்கள்.

அதுமட்டுமின்றி மது பரிமாறல்கள் மேலைநாட்டுக் கலாசாரம் என உயர்வாகக் கருதுவதும் இப்பழக்கத்திற்கு ஒரு காரணமாகும். பிரச்சினைகள் மற்றும் குறைகளை போதைப்பழக்கத்தால் மறந்து நிம்மதியாக இருக்கலாம் என்று தவறாகக் கருதுவதும் இது போன்ற தீய பழக்கங்களுக்கு மக்களை ஆட்படுத்திவிடுகின்றது. தன்னைச் சுற்றியுள்ளவர்கள் போதைப் பழக்கத்துக்கு அடிமையாக இருந்தால் அவரைத் திருத்த முயற்சிக்காமல் அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக தாங்களும் கற்றுக்கொள்கின்ற பலரும் இருக்கிறார்கள்.

இளம் வயதில் பழகிக்கொள்ளும் இத்தகைய போதைப் பழக்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை போதைக்கு அடிமையாக்கி விடுகிறது. போதைப் பழக்கத்தால் முதலில் பாதிப்படைவது மனிதனின் நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செய்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல்சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவலநிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப் பொருட்களால் உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்படும் பாதிப்புகள், சமுதாயம் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் பாதிப்புகள் என பலவகையான தீமைகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம். இதனால் நாடு நாசமாகிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு சாராயக் கடைகளை இலங்கை அரசாங்கம் எப்போது மூடப்போகிறது ?

இதுவே எமது கேள்வியாக அமைந்துள்ளது.







தமிழக அரசியலில் அநாதையான பன்னீர்செல்வம்

ரமணி

ஜெயலலிதா உயிரோடு இருந்தவரை அசைக்க முடியாதவராக வலம் வந்தவர் ஓ.பன்னீர்செல்வம். ஜெயலலிதா சிறைக்குச் சென்றபோது முதலமைச்சர் பதவியைப் பொறுப்புடன் ஏற்று திருப்பிக் கொடுத்தவர். எடப்பாடி பழனிச்சாமி இதற்கு நேர்மாறானவர். முதல்வர் பதவியைக் கொடுத்த சசிகலாவை தூக்கியெறிந்தவர்.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் சசிகலா அரசியலுக்குள் நுழைந்தபோது அவரை அகற்றுவதற்கு பன்னீரை பாரதீய ஜனதா பகடையாகப் பயன்படுத்தியது. சசிகலா சிறைக்குச் சென்றதும் பாரதீய ஜனதா நிம்மதியடைந்தது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சின்னம் பன்னீரின் வசம் இருந்தது. பாரதீய ஜனதாவின் ஆலோசனையால் அதனை எடப்பாடிக்குத் தாரை வார்த்தார் பன்னீர். கட்சிக்குள் இருந்து பன்னீரைக் கொஞ்சம் கொஞ்சமாக ஓரங்கட்டினார் எடப்பாடி. பாரதீய ஜனதா தன்னைக் கைவிடாது என்ற குருட்டு நம்பிக்கையில் கண்ணை மூடிக்கொண்டிருந்தார் பன்னீர்.

பாரதீய ஜனதா போட்ட தாளம் அனைத்துக்கும் ஆடிய அன்றைய முதலமைச்சர் எடப்பாடி, கட்சிக்குள் தன்னை வலுப்படுத்தினார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எடப்பாடி வசமானது. பன்னீர் நடத்திய சட்டம், போராட்டம் அனைத்தும் முடிவுக்கு வந்தன. தேர்தல் ஆணையமும், நீதிமன்றமும் எடப்பாடிக்கு அங்கீகாரம் வழங்கின.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி தமிழகத்தில் பலமாக இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், பாரதீய ஜனதாவும் ஒரே கூட்டணியில்தான் இருக்கின்றன. ஆனால், தமிழக பாரதீய ஜனதா தலைவருக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கும் இடையில் சுமுகமான உறவு இல்லை. வாசன் மட்டும்தான் இந்தக் கூட்டணிக்கு விசுவாசமாக இருக்கிறார். ராமதாஸும், விஜயகாந்தும் வெளியில் நிற்கிறார்கள்.

பாரதீய ஜனதாவும் மெதுமெதுவாக எடப்பாடியின் பக்கம் சாயத் தொடங்கியது. பன்னீர் இப்பொழுதுதான் கண்ணைத் திறந்துள்ளார். தினகரனுடன் கைகோர்த்துள்ள பன்னீர், புதிய அரசியல் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டார். பன்னீர் புதிய கட்சி ஆரம்பிக்கப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. டிசம்பர் வரை பொறுத்திருக்குமாறு அமித் ஷா வேண்டுகோள் விடுத்துள்ளார். பாரதீய ஜனதாவை இனியும் நம்புவதற்கு பன்னீர்செல்வம் தயாராக இல்லை. தனது பலத்தைக் காட்டுவதற்காக தனிக் கட்சி ஆரம்பிக்கும் முடிவை அவர் நெருங்கிவிட்டார்.

பன்னீர்செல்வம், தினகரன், சசிகலா ஆகிய மூவரையும் கடைசிவரை கட்சியில் சேர்க்க மாட்டேன் என்பதில் எடப்பாடி உறுதியாக இருக்கிறார். அவரை சரிக்கட்ட முடியாமல் பாரதீய ஜனதா தவிக்கிறது. நிலைமை கை மீறியதால் தனிக் கட்சி என்ற முடிவை பன்னீர் கையிலெடுத்துள்ளார்.



பன்னீருக்கு ஆதரவாக நிற்கும் மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், "நாங்கள் தனித்து நிற்போம்" என்றும், "பாஜகவுடன் ஓபிஎஸ் இல்லை" என்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருந்தார்.

தனிக்கட்சி

அதுமட்டுமல்ல, தங்கள் பலத்தைக் காட்டுவதற்காக தனிக்கட்சி தொடங்குவதற்கு ஓபிஎஸ்ஸிடம் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். ஆதரவாளர்களின் இந்த எண்ண ஓட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில்தான், ஓபிஎஸ்ஸும் விரைவில் தனிக்கட்சியை தொடங்கவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதை மூத்த தலைவரான பண்ருட்டி ராமச்சந்திரன் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் டில்லியில் நடைபெற்றபோது பன்னீருக்கு அழைப்பு விடப்படவில்லை. பாரதீய ஜனதாவின் தயவை எதிர்பார்க்கும் தினகரனும், சசிகலாவும் புறக்கணிக்கப்பட்டனர். இதனால் பன்னீர் பெரிதும் பாதிக்கப்பட்டார்.

பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்காக பல களஆய்வுகளை பாரதீய ஜனதா செய்துள்ளது. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கூட்டணி பலமாக இருக்கிறது என்பதை பாரதீய ஜனதா புரிந்துகொண்டுள்ளது. அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகள், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகளை பிரசாரம் செய்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என பாரதீய ஜனதா நம்புகிறது.

தமிழகத்தில் 10 தொகுதிகளை பாரதீய ஜனதா குறிவைத்துள்ளது. எடப்பாடி, பன்னீர், தினகரன், சசிகலா ஆகிய நால்வரும் இணைந்தால் வெற்றிபெறலாம் என பாரதீய ஜனதா கருதுகிறது. அதற்கு எடப்பாடி முட்டுக்கட்டையாக இருக்கிறார்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோல்விக்கு தினகரன் பிரித்த வாக்குகளே காரணம்.

"தென் மாவட்டங்களில் 15 தொகுதிகள் மட்டுமல்ல, தமிழகத்தின் பெரும்பாலான தொகுதிகளில் நாங்கள் இருவரும் இல்லாமல் அதிமுகவால் வெல்ல முடியாது" என தினகரன் எச்சரித்துள்ளார். டெல்டா மாவட்டங்கள் மற்றும் மத்திய, தென் மாவட்டங்களில் தினகரனுக்கு ஓரளவுக்கு செல்வாக்கு உள்ளது. இந்த மாவட்டங்களில்தான் ஓபிஎஸ்ஸுக்கும் ஆதரவு வட்டம் இருக்கிறது.

இதையெல்லாம் கணக்குப் போட்டே இருவரும் இணைந்து, மூன்றாவது அணியை அமைப்போம். சசிகலாவோடு சேர்த்து இன்னும் சில கட்சிகளையும், அமைப்புகளையும் உள்ளடக்கி அதிமுகவை தோற்கடிக்கும் ஒரே கொள்கையுடன் தேர்தலைச் சந்திப்போம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருப்பதாக சொல்லப்படுகிறது. இவர்கள் மூன்றாவது அணி அமைத்துப் போட்டியிட்டால் அது அதிமுக அணிக்குத்தான் பின்னடைவை ஏற்படும் என்பது உண்மை.

திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி, மயிலாடுதுறை, சிவகங்கை, திருச்சி உட்பட பாரதீய ஜனதா போட்டியிட நினைக்கும் பல தொகுதிகளில் ஓபிஎஸ்ஸுக்கும், தினகரனுக்கும் நல்ல செல்வாக்கு உள்ளது.



எனவே, இவர்கள் மூன்றாவது அணி அமைத்தால் அது தங்களையே பாதிக்கும் என்று பதறுகிறது பாரதீய ஜனதா.

தமிழகத்தில் இது வரை பலமுறை மூன்றாவது அணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அனைத்துமே யார் வெல்லவேண்டும் என்பதைவிட, யார் தோற்கவேண்டும் என்பதையே தீர்மானித்துள்ளன. இப்போது பன்னீர், தினகரன் அமைக்கத் திட்டமிடும் மூன்றாவது அணிக்கும் எடப்பாடியை வீழ்த்தும் முயற்சியே பிரதானமாக இருக்கும். தலைவர்கள் ஒன்றுபட்டாலும் தொண்டர்கள் ஒன்றுசேர்வார்களா என்ற சந்தேகமும் உள்ளது.

அரசியல் Focus
03ஆம் பக்கத் தொடர்ச்சி...


சிங்கள அரசாங்கங்களை குறை கூறும் முன் இவற்றை கழுவி சுத்தம் செய்ய வேண்டும் என ITAKயின் திருமலை கிளைகாரர்கள் கூறுகின்றனராம் என Focusக்குத் தகவல். எனவே, சிங்கள – பௌத்த பேரினவாதத்துக்கு முன், இங்கேயும் வீட்டுக்குப் போகவேண்டிய இந்த பென்சனியர்களிட மிருந்து, தமிழி னத்தைக் காத்திடப்பா கோணமலையானே என்று கதறி அழத் தோன்று கிறது.



★ லக்ஸ்மன் கதிர்காமர் பற்றி பிரபல பத்தி எழுத்தாளர் டீ.பி.எஸ்.ஜெயராஜ் மீண்டும் எழுதியுள்ளார். கதிர்காமரின் மகள் அஜிதா தனது தந்தை பற்றி தான் எழுதியதை, அவரது தந்தை பற்றிய அவரது Cake That Was Baked At Home என்ற நூலில் புகழ்ந்துள்ளதாக எழுத்தாளர் டீபிஎஸ் ஜெயராஜ், பிரபல ஆங்கிலப் பத்திரிகையில் தான் எழுதும் பத்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில், புலிகளுடன் கதிர்காமர் தொடர்பில் தமக்கு ஏற்பட்ட பிணக்கு பற்றி, கதிர்காமர் தன்னுடன் பேசியது பற்றி, புலிகளுக்கு எதிராக தனக்கு பாதுகாப்பு வழங்கும்படி தான் வாழும் நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு லக்ஷ்மன் கதிர்காமர் கடிதம் எழுதியது பற்றியும் டீ.பி.எஸ். எழுதுகிறார். தான் ஒரு காலத்தில் புலிகளின் ஆதரவாளராக இருந்ததாகவும் அதனால் லக்ஷ்மன் கதிர்காமரிடம் புலிகள் தொடர்பில் தான் அன்று கொண்டிருந்த கொள்கை அடிப்படையில் பேசியதாகவும், லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கையின் மிகச் சிறந்த வெளிநாட்டு அமைச்சர் என சிங்கள மக்கள் உட்பட நாடு கருதியதாகவும், அவரை புலிகள் 2005 ஓகஸ்ட் பன்னிரெண்டாம் திகதி கொலை செய்ததாகவும் விலாவாரியாக எழுதும் டீ.பி.எஸ்.ஜெயராஜ், இத்தகைய புகழ் பெற்ற சிங்கள மக்களின் நம்பிக்கையை பெற்ற லக்ஷ்மன் கதிர்காமரை இலங்கையின் பிரதமராக்க வேண்டும் என்று எழுந்த கோரிக்கை பற்றியும், அது எழுந்த வேகத்திலேயே அடித்து விழுத்தப்பட்டதையும், அதைக்கூட செய்ய சிங்கள தேசம் இணங்கவில்லை என்பதையும் சேர்த்து எழுதி இருந்தால், இன்று நாட்டில் நிலவும் நடப்புகளுக்கு பொருத்தமான பேசுபொருள் சிந்தனையை ஏற்படுத்தி இருக்கும் என பிரபல தமிழ் வரலாற்று அறிஞர் குறைபட்டுக்கொண்டார் என Focusக்குத் தகவல்.

★ திகாம்பரின் மகன் பட்டம் பெற்றுவிட்ட படத்தை போட்டு அவரது கட்சிக்காரர்கள் சமூக ஊடகத்தில் முழங்குகிறார்கள். என்ன பட்டம், என்ன கல்வி, எங்கே கற்றார் என்ற விபரங்கள் தெரியாவிட்டாலும் அவரை வாழ்த்துவோம். சீவனின் சகோதரி குலமும் அரசியலில் களமிறங்கத் தயாராகி வருவது பழைய செய்தி. இதென்ன, சீவனுக்கு போட்டியாக திகாம்பரின் மகன் களத்தில் இறங்கும் அறிவிப்பா என மலைநாட்டு அரசியல் தொழில் சங்க வட்டாரங்களில் கேள்வி உலா வருவதாக Focusக்குத் தகவல். அப்படியானால், பழையவர்கள் ஒதுங்கி வழிவிட இளையோர் துள்ளி விளையாடும் தடகள விளையாட்டுகளை மலைநாட்டில் விரைவில் எதிர்பார்க்கலாம்.

★ நுவரெலியா திசாநாயக்கர் அமைச்சுப் பதவியை எதிர்பார்த்து காத்திருந்தது போதுமடா சாமி என இரண்டாம் நம்பர் குணவர்தனரை அணுகி குமுறி கொட்டி விட்டாராம். குமுறலின்போது ஒன்றாம் நம்பர் ரணிலருக்கு மறைமுக எச்சரிக்கையும் விடுத்தாராம். இரண்டாம் நம்பர், ஒன்றாம் நம்பருக்கு இதை எடுத்துக் கூற ரணிலர் அதை காதில் வாங்கிக்கொள்ளவே இல்லையாம். முதலில் அவரை அடுத்த தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் வர முடியுமா என பார்க்க சொல்லுங்கள் என்றாராம் ரணிலர் என Focusக்குத் தகவல். அதிகபட்சமாக இவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் போய் இப்போது உட்காரட்டும். அப்போதுதான் எஸ்ஜேபிகாரர்களுக்கு இங்கே வர வழி பிறக்கும். எனக்கு அதுதான் வேண்டும் என்றாராம் ரணிலர்.



★ மொட்டின் ஜனாதிபதி வேட்புமனு சண்டையில் தான் இல்லை. தனக்கு 2025 முதல் 2030 வரை எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டும். அது கிடைத்தால் போதும். அதை நோக்கித்தான் தான் காய் நகர்த்துகிறேன் என திட்டவட்டமாக நாமலர் கூறிவிட்டார் என Focusக்குத் தகவல். அதை மஹிந்தரும் அனுமதித்து விட்டார். நாமலருடன் எதிர்க்கட்சி வரிசைக்கு போய் 2030 வரை காத்திருக்க விரும்புகின்றவர்கள் வரிசையாக வாங்கோ எனவும் கூறிவிட்டாராம். அப்படி ஒரு குரூப் இருக்கிறது. அடுத்த குரூப் லான்சர் தலைமையில் ரணிலரை ஜனாதிபதியாக்க கூட்டணி சேர்க்கிறது. ஆகவே இனி மொட்டு, பெசிலர் பாடு, அவர் பாடுதான்.

★ வடக்கில் நீதியரசர் எப்படி குறுக்கு நெடுக்காக ஓடி திரிகிறாரோ, அதேபோல் தெற்கில் மைத்ரி குறுக்கு நெடுக்காக ஓடி திரிகிறார். பெரியவர்கள் சீரியசாக ஒரு காரியம் செய்யும்போது, அதை கவனிக்காமல் சிறு பிள்ளைகள் குறுக்கு நெடுக்காக ஓடித் திரிவதை போன்ற காரியம்தான் இது. நீதியரசர் முதலமைச்சராகப் போகிறாராம். மைத்ரி ஜனாதிபதியாகப் போகிறாராம். ஆகவே, இவர்களை ஓரமாக போய் விளையாடச் சொல்லுங்கள் என்ற அரசியல் நையாண்டி வடக்கிலும், தெற்கிலும் ஒலிக்கிறது என Focusக்குத் தகவல்.

தற்போது விற்பனையில்!

ஜூனியர் தமிழன் வழங்கும்

2023ஆம் ஆண்டுக்கான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை

'வெற்றிக்கு வழிவகுக்கும்'

விசேட மாதிரி வினாத்தாள் பொதி



பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777983308 / 0741684643



நாட்டில் தேர்தலொன்று வரப்போவதை கட்டியம் கூறும்

இனவாதச் செயற்பாடுகள்

சிரேஷ்ட அரசியல்வாதி எம்.ரி.ஹஸனலி கருத்து

அனார்கலி

“நாட்டில் தேர்தலொன்று வரப்போவதற்கு கட்டியம் கூறும் வகையில், இன்று நாட்டில் இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.”

இவ்வாறு, ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிரேஷ்ட அரசியல்வாதி அல்-ஹாஜ் எம்.ரி.ஹஸனலி கூறினார்.

‘தமிழன்’ வார இதழுக்கு வழங்கிய சிறப்பு செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சமகால அரசியல் மற்றும் முஸ்லிம்கள் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இந்த செவ்வியின்போது கருத்து வெளியிடுகையில் அவர் பின்வருமாறு கூறினார்.

13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை அமுல் நடத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்க் கட்சிகளுடன் இது தொடர்பாக பேசியுள்ள அவர், முஸ்லிம் கட்சிகளையும் இது விடயமாக அழைத்துப் பேசவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆனால், தமிழ் சக்திகள் இந்த விடயத்தில் ஒத்த முடிவுடன்தான் இருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேறுபாடான கருத்தை வெளியிட்டாலும், அவர்கள் எல்லோரும் ஒரே இலக்கை நோக்கியே விடயங்களை முன்வைக்கின்றனர்.

முஸ்லிம் தரப்பில் இது தொடர்பான விடயங்கள் மூடிமறைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. என்ன செய்யப்போகின்றனரென்பது எமக்கே புரியாத புதிராகவுள்ளது. இது துரதிர்ஷ்டமான ஒருநிலையாகும்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எவ்வாறு அமையவேண்டுமென்று தலைவர் மர்ஹூம் அஷ்ரப் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ள போதிலும் அவரது பாசறையில் வளர்ந்தவர்களெனக் கூறிக்கொள்பவர்களே அதைப்பற்றிக் கூறத் தயங்குகின்றனர்.

ஏனெனில், இத்தகையவர்களது உச்சக்கட்ட எதிர்பார்ப்பு ஏதாவதொரு அமைச்சுப் பதவியை எடுத்துக்கொண்டு சமூகத்தை மறந்திருப்பதாகும். அதற்குத்தான் முன்னுரிமை கொடுத்தும் செயற்படுகின்றனர்.

இப்படியான சூழ்நிலையில் முஸ்லிம் தரப்பினருடனும் பேச வேண்டுமெனக் கேட்டுள்ளபோது ஜனாதிபதியின் பதில் திருப்திகரமாக இல்லை, மழுப்பல் மாதிரியாகவே உள்ளது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் பற்றி மட்டுமல்ல, வடக்கு, கிழக்கிற்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் பற்றியும் பேசவேண்டுமென ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஆனால், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறானவை, வடக்கு, கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களின் பிரச்சினை எனும்போது, ஒரு சிறிய மெல்லிய கோடு போடத்தான் வேண்டும். ஏனெனில் எமது வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினை என்பது முழுக்க, முழுக்க நிலம் சார்ந்தது.

அதிலும் முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரே ஒரு மாவட்டம் - கல்முனை மாவட்டம் எனச் சொல்லப்பட்டிருக்க வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக சிங்களப் பிரதேசங்களை இணைத்து அம்பாறை மாவட்டம் எனவும், பின்னர் தொகுதிவாரி மாவட்டம் பிரிக்கும்போது திகாமடுள்ள மாவட்டம் எனவும் இரு பெயர்களை வைத்துள்ளனர்.

இது எதை இலக்காகக்கொண்டதென்றால் முஸ்லிம்களை சிறுபான்மையாக்கி, எம்மை இல்லாமலாக்கவும் சனத்தொகை, நிலப்பரப்பை ஐதாக்கும் சூழ்ச்சியேயாகும்.

இன்றும் அம்பாறை மாவட்டத்தில் தமிழில் எந்த அரச நிர்வாக விடயமும் நடப்பதில்லை. முழுக்க முழுக்க சிங்களமே ஆட்கொண்டுள்ளது.

இத்தகைய பிரச்சினைகள் வடக்கு, கிழக்குக்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்கு இல்லை அதனால் அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்கக்கூடாது என்றில்லை. அவர்களையும் கவனிக்க வேண்டும்.

பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்தான் அவர்களுக்கு அதிகமாக உள்ளன. எத்தனையோ கடைகள் உடைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு நாசமாக்கப் பட்டுள்ளன.

இதையும் சமனாகக் கவனிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆனால், வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறுபட்ட தென்பதை ஏற்கவேண்டும்.

முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும்போது, அவர்களது தலைநகர் கிழக்கிலேயே இருக்க வேண்டும்.

முஸ்லிம்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்தே செல்கின்றனர். அதேபோல் மாகாண சபை உறுப்பினர்கள் இங்கிருந்தே செல்கின்றனர், முஸ்லிம்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளும் கிழக்கிலேயே உள்ளன.

எனவே, கிழக்குக்கு ஒரு கௌரவம் வழங்கப்பட வேண்டும் இந்த கௌரவத்தைக் கேட்பதற்கு போராடுபவர்களை, கேட்பவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களைப் பழிவாங்கும் செயற்பாடுகள்தான் கிழக்கு அரசியல் செய்யும் பெரியவர்களிடம் உள்ளது.

அவர்களின் அரசியல் சுகபோகங்களுக்கு, கிழக்கு முஸ்லிம்களின் சக்தி மேலோங்குவது, தனித்துவம் மேலெழுவது இத்தகையவர்களுக்கு விருப்பமானதல்ல.

இதற்கு ஏதுவாக ஒரு வியாபாரப் பொருளாக இலாபமடையக்கூடியதாக அரசியல் தெரியாத சிலரை மடக்கிவைத்துக்கொண்டு அவர்கள் என்னமோ செய்துகொண்டு செல்கின்றனர்.

இதை கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் தொடர்ந்து அனுமதிக்கமாட்டோம்.

இந்நிலையில்தான் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச சமூகம் அதன் பார்வையைத் திருப்பியுள்ளது.

எனவே, எமது விடயங்களையும் தெளிவாகச் சொல்லவேண்டிய காலகட்டம் வந்துள்ளது. இக்கட்டத்தில் கிழக்கு முஸ்லிம்கள், மாமூல் அரசியலைத் தூக்கி வீசிவிட்டு, எமது நிலம் சார்ந்த அரசியலை, முன்கொண்டு செல்ல வேண்டும்.

இதை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அரசியல் செய்யும் இன்றைய அரசியல்வாதிகளை மட்டும் நம்பிவிட்டு விடாமல், கிழக்கு புத்திஜீவிகளை முக்கியமாக இணைத்து செயற்பட வேண்டும்.

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை விழித்துப் பார்க்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் எமது உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

காணி, பொலிஸ் அதிகாரம்

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பொறுத்தவரை காணி, பொலிஸ் அதிகாரங்கள் எமக்குத் தரப்படவே வேண்டும்.

பொலிஸ் அதிகாரம் என்றால் கிழக்கில் தனியான பொலிஸ் படை ஒன்றை அமைக்கக் கோரவில்லை. அது ஒன்பது மாகாணங்களிலும் இருக்கத்தான் போகின்றது.

அந்தந்த மாகாணத்தில் உள்ளவர்களுக்குத்தான் அந்த மாகாண பாதுகாப்புப் பிரச்சினைகள் தெரியும். ஆக்கிரமிப்பு சக்தியாகப் பார்க்க முடியாது. இத்தகைய சமூக பொலிஸ் படை சேவைகள் உலக நாடுகளில் உள்ளன. இதில் என்ன தவறு உண்டு?

காணி அதிகாரத்தைப் பொறுத்தவரையும் கட்டாயமாக அது எமக்கு வேண்டும். எமக்குத்தான் எமது காணிகளைப் பற்றித் தெரியும். இன்று என்ன நடக்கிறது? சிலர் கொழும்பிலுள்ள நிர்வாகத்திடம் சென்று கடிதம் பெற்றுவந்து இங்கு காணிபிடிக்கிறார்கள்.

கட்சிகளின் ஆலோசனைகள்

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அமுல் நடத்தல் தொடர்பில் இன்று கட்சிகளிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. எம்மிடம் அப்படி கோரவில்லை.

இது சமூகம் சார்ந்த விடயம். முஸ்லிம் கட்சிகள் ஜனாதிபதியிடம் தனித்தனியாகப் போய் ஆலோசனைகளை, ஒப்பந்தங்களை வழங்குவது பிழையான விடயமாகும்.

முஸ்லிம் கட்சிகள் வழங்கும் ஆலோசனைகள், ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் அவற்றைப் பற்றி அறிந்து அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவர்.

வெறுமனே பாராளுமன்றத்திலுள்ள கட்சிகளது ஆலோசனைகள் மட்டும் முஸ்லிம்களதோ, தமிழர்களதோ அபிப்பிராயமாகக்கொள்ள முடியாது.

தேர்தல்கள் வருமா?

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலை நடத்துமாறு பாராளுமன்றத்தில் கோரியபோது அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக்கொண்டுவந்து வெற்றிபெறுமாறு ஜனாதிபதி இறுமாப்புடன் பதில் கூறியுள்ளார்.

எனினும், யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே என்பதுபோல் தேர்தலொன்றை நோக்கிய வேண்டத்தகாத செயற்பாடுகள் தற்சமயம் நாட்டில் தலைதூக்கி வருகின்றன.

சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகள், இனப்பிரச்சினை போன்றவை தற்சமயம் ஊதிப்பெரிதாக்கப்படுகின்றன.

சஹ்ரானின் பிரச்சினை கூட ஐ.எஸ். தீவிரவாதிகளால்தான் நடத்தப்பட்டதென ருவான் குணரட்ன புத்தகமொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அதில் முஸ்லிம் பேரினவாதமே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமென நிரூபிக்கிறார். இந்தக் காலகட்டத்தில் இப்புத்தகம் வெளியாகியுள்ளமை சந்தேகிக்கக் கூடியது.

அதேபோல் பாராளுமன்றத்தினுள்ளே இருக்கும் பெருந்தேசியவாதிகள், அரசியல் தலைவர்கள் அச்சுறுத்தல்களை விடுக்கவும் தலைப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஒருவர் பௌத்த விகாரைகளில் கைவைத்தால் தலையை வெட்டிக்கொண்டு வருவேன் என்றுகூட கர்ஜித்திருக்கிறார்.

சிறுபான்மை சமூகங்களைப் படுமோசமாகத் தாக்கியும் துசித்தும் சிலர் அறிக்கைவிட்டுக்கொண்டும் இருக்கின்றனர். இவையெல்லாம் தேர்தல் வருவதற்குரிய அறிகுறிகள்தான். இந்த நாட்டில் சஹ்ரானின் விடயத்தை வைத்தே ஆகப்பெரிய தேர்தல் நடந்து முடிந்து 69 இலட்சம் வாக்கெடுத்தவர்களே நின்று பிடிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

இந்த நாட்டின் அரசியலமைப்பிலுள்ள பெரும் ஓட்டைகள்தான் இதற்குக் காரணமாகும்.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தல்தான் வருமென எல்லோரும் ஊகிக்கின்றனர். அப்படி தேர்தல் நடந்தாலும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் ஐம்பது வீதத்துக்குமேல் வாக்குகள் பெற முடியாது. அப்படியான நிலைதான் உள்ளது. தேர்தலுக்குப் பிறகும் நிச்சயமற்ற நிலைமை எப்பொழுதும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இப்பொழுதுள்ள நாட்டின் நிலைமையைப் பார்த்தால் முழுக்க முழுக்க உள்ளகப் பொறிமுறையில் தோல்வியடைந்த நாடாகவேயுள்ளது. குழப்பமான நிலையில் நாடு போய்க்கொண்டிருக்கின்றது

இது தொடர்ந்தால் ஒருபோதும் நாடு உருப்படப்போவதில்லை. யுத்த பூமியாகவே இருக்கும்.

இதில் வெளிநாட்டுச் சக்திகளே நன்மை அடையும். இலகுவாக இந்த வெளிநாட்டுச் சக்திகள் புகுந்து உரிமை கொண்டாடும் நிலைமையும் ஏற்படும்.

எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு, சகல சமூகத்துக்கும் உரிமையும், கௌரவமும் கிடைக்கும் வகையில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

உச்சக்கட்ட எதிர்பார்ப்பு

தற்பொழுதுள்ள அம்பாறை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். முஸ்லிம்கள் செறிந்து வாழும் கரையோர மாவட்டம் இதன்மூலம் எமக்குக்கிடைக்க வேண்டும். எமக்கு முன்பிருந்த முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம்களுக்கான இந்த மாவட்டத்தைப் பெறுவதில் தவற விட்டுள்ளனர்.

அம்பாறை தொகுதி ஒரு மாவட்டமாகவும் ஏனைய மூன்று தொகுதிகளையும் இணைத்த கரையோர மாவட்டமே எமது இலக்காகும்.

இந்த உரிமையில் எவரும் கைவைக்க முடியாது. கிழக்கு முஸ்லிம்கள் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். போராட்டக் குணம் படைத்த இளைஞர்களையும் ஒன்றுதிரட்டி கரையோர மாவட்டத்தைப் பெறும் முயற்சியை முன்னெடுக்கத் தயங்கமாட்டோம்.

மறைந்த தலைவர் அஷ்ரப் தொடங்கிவைத்த இக்கோரிக்கைக்கான போராட்டம், முஸ்லிம்களின் தேசிய இன அடையாளப் புள்ளியாகும். ஆனால், இக்கோரிக்கையை நடத்தவிடமாட்டோம் எனும் திடமான போக்கிலுள்ள தலைவர்கள் கையில் அவரது உயர்ந்த எதிர்பார்ப்பு மாட்டிக்கொண்டுள்ளது. இதைக்கழட்டி எடுப்பதும் கஷ்டமாகவே உள்ளது. எனவே, கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் வேறுதிசையில் திருப்பப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒருபோதும் எமக்கு உய்வில்லை.

குறிப்பாக, கரையோர மாவட்ட விடயத்தில் தமிழ் மக்களும் பூரண ஆதரவைத் தரவேண்டுமென வினயமாகக் கோருகின்றேன். மேலும் இதற்கு இணங்காத முஸ்லிம் அரசியல் தலைமைகள் எமது பிரதேசங்களை விட்டும் வெளியே நகர்ந்து கொள்ள வேண்டும்.

தேர்தல்களில்

இதேவேளை, எதிர்வரும் தேர்தல்களில் பெருந்தேசியவாதக் கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் வாக்களிக்கக் கூடாது. அவ்வாறு வாக்களிப்போமானால் நாம் பெருந்தேசியக் கட்சிகளையே சார்ந்துள்ளோமெனக் கொண்டு முஸ்லிம்களின் உண்மையான நிலைப்பாடு, கருத்துகளை மழுங்கடிப்பதாகவே அமையும்.

எனவே, அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் கட்சிகளின் சின்னங்களுக்கே முஸ்லிம்கள் வாக்களிக்க வேண்டும்.

மனித - யானை மோதலை...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

52 யானைகள் கிழக்கு மாகாணத்திலும், 51 யானைகள் பொலனறுவை பிராந்தியத்திலும் உயிரிழந்துள்ளன.

மனித – யானை மோதல் பிரதானமாக எட்டு மாகாணங்களின் 58 பிரதேச செயலகப் பிரிவுகளில் பரந்து காணப்படுகின்றது. இவற்றுள் அதிக மோதல் காணப்படும் பிரதேசமாக வெல்லவாய, லுணுகம்வெஹர, அம்பாறை, போரதீவுப்பற்று, கோரளைப்பற்று தெற்கு, மஹியங்கனை, தெஹியத்தக்கண்டி, வில்கமுவ, திம்புலாகல, வெலிகந்த, கெக்கிராவை, கல்கமுவை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்படும் மனித – யானை மோதலை குறைப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்காக புகழ்பெற்ற யானை நிபுணர் கலாநிதி பிரித்திவிராஜ் பொன்னாண்டோ தலைமையில் நிபுணர்கள் குழுவொன்று கடந்த 2020 ஓகஸ்ட் மாதம் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் உட்பட அரச மற்றும் தனியார் துறையினரை உள்ளடக்கிய இந்த நிபுணர் குழுவின் அறிக்கை கடந்த 2020 டிசம்பரில் கையளிக்கப்பட்டபோதிலும், அதிலுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்த எந்த நடவடிக்கையும் அரசாங்கத்தால் இதுவரை எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், குறித்த சிபாரிகளை அமுல்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், மேற்பார்வை செய்யவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விசேட ஜனாதிபதி செயலணியொன்று கடந்த ஒக்டோபரில் நியமிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த தேசிய வேலைத்திட்டத்தின் சிபாரிசுகளை அமுல்படுத்தும் நடவடிக்கை மிக மந்தகதியிலேயே இடம்பெறுவதாக சூழலியல் ஆய்வாளர் சுபுன் லகிரு குற்றஞ்சாட்டினார்.



“இந்த சிபாரிசுகளை முழுமையாக அமுல்படுத்தினால் மனித – யானை முரண்பாட்டை குறிப்பிடத்தக்களவு குறைக்க முடியும். குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இந்த சிபாரிசுகளின் ஊடாக மனித – யானை முரண்பாட்டை சகவாழ்வாக மாற்ற முடியும்” என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் எமது நாட்டில் இடம்பெறும் மனித – யானை மோதலுக்கு தனியொரு நிறுவனமே பொறுப்புக் கூறவேண்டியுள்ளது. எனினும், குறித்த நிறுவனத்திடமுள்ள வளம் மற்றும் ஆளணிப் பற்றாக்குறையால் இதனை மேற்கொள்ள முடியாதுள்ளது எனவும் சுபுன் குறிப்பிட்டார்.

“இந்த விடயம் தொடர்பிலான கடமைகளும், பொறுப்புகளும் பரவலாக்கப்பட வேண்டும். அத்துடன், யானைகளுக்கான நிலைய வதிவிடங்கள் உருவாக்கப்பட வேண்டும்” என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாட்டிலுள்ள யானைகளையும் மனிதர்களையும் பாதுகாக்க கடுமையாக முயற்சிப்பதாகவும் இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும் எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

யானைகளின் வழித்தடங்களிலுள்ள பகுதிகளை கையகப்படுத்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது 16 வழித்தடங்களில் மனித குடியேற்றங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவற்றுக்கு நஷ்டஈடு வழங்கி குறித்த இடங்களை கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மனித – யானை மோதலை தடுப்பதற்காக நியமிக்கப்பட்ட தேசிய வேலைத்திட்டத்தின் சிபாரிசுகளை உடனடியாக அமுல்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும். இதனூடாக மனித – யானை மோதலை குறைக்கலாம் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.



ஆயித்தியமலை சதாசகாய அன்னை ஆலய 67ஆவது வருடாந்த திருவிழா இன்று

ஆயித்தியமலை என்னும் கிராமம் மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு நகரத்திலிருந்து உன்னிச்சை என்னும் இடத்துக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள ஓர் அழகிய இடம்.

உன்னிச்சைக் குளத்திலிருந்து வளைந்து நெளிந்து வரும் நீர்ப்பாசனக் கால்வாய் இருமருங்கிலும் பச்சைப் பசேலெனக் காட்சி தரும் வயல்வெளிகளால் சூழப்பட்டு அழகு தரும் அழகில் மயங்கித்தானோ என்னவோ சதாசகாய அன்னையும் அங்கு குடிகொள்ள விரும்பினாள்.

இலங்கையில் புகழ்பெற்ற கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை திருநாள் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டில் கொண்டாடப்படும் திருவிழா 67ஆவது ஆண்டு வருடாந்த திருவிழாவாகும்.

ஆயித்தியமலை, கத்தோலிக்க மக்கள் நிரம்பி வாழும் இடமல்ல. கருத்தொருமித்து கூடி வாழும் உள்ளங்களைக்கொண்ட மக்கள் நிரம்பி வாழும் இடமாகும்.

ஆயித்தியமலை விவசாயத் தொழிலை மையமாகக்கொண்ட ஒரு குடியேற்றப் பகுதியாகும். அங்கு வாழும் கத்தோலிக்க மக்களுக்கு தங்கள் சமயக் கடமைகளைச் செய்வதற்கு ஓர் ஆலயம் அன்று இருந்த தில்லை. ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பு தாண்டவன்வெளிப் பங்கின குருவானவர் மாதம் ஒரு முறை அங்கு வந்து ஒரு வீட்டில் திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுப்பது வழக்கமாகும்.

ஆலயம் உருவான வரலாறு

காலப்போக்கில் அங்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட வேண்டுமென கத் தோலிக்க மக்கள் விரும்பினர். 1956ஆம் ஆண்டில் அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகளார் ஆலயம் அமைக்கும் ஆரம்ப வேலைகளை முன்னெடுத்துச் சென்றார். ஆலயம் அமைப்பதற்குரிய காணியை அரசிடமிருந்து பெற்று 1956ஆம் ஆண்டில் தென்னம் ஓலையால் ஒரு சிறு ஆலயம் அமைக்கப்பட்டது.

அவ்வேளை அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகளார் இடம் மாறிச் செல்ல நேர்ந்தது. தாண்டவன்வெளி பங்குத் தந்தையாக அருட்பணி ஜீ.ஈ.எல்.வம்பேக் அடிகளார் நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் இவ்வாலயம் புதிய தோற்றம் பெற ஆரம்பித்தது. 1958ஆம் ஆண்டு காலத்தில் இவ்வாலயம் நிரந்தரக் கட்டடமாக மாற்றியமைக்கப்பட்டது.

1956, 1958ஆம் ஆண்டு காலத்தில் இவ்வாலயத்தைக் கட்டுவதற்கு பங்களிப்புச் செய்தோர் அநேகம் பேர். அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகளார், அருட்பணி ஜீ.ஈ.எல்.வம்பேக் அடிகளார், ஆயித்தியமலையில் அக்காலப்பகுதியில் கடமையாற்றிய அரசாங்க அலுவலர்கள் இரண்டு பேரில் ஒருவர் P.W.D.இன் மேற்பார்வையாளர் அலோசியஸ், மற்றவர் நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியராக கடமையாற்றிய விக்டர் பல்தஸார். இன்னும் பலர். இவர்கள் அனைவரும் காலமாகிவிட்டனர்.

இவ்வாலயத்தில் நடைபெற்ற அற்புதம் ஒன்றை நேரடியாகக் கண்டவன் நான் என்ற வகையில் பதிவிடுகின்றேன். அப் போது எனக்கு வயது 10. பாடசாலை மாணவன்.

இவ்வாலயத்தின் இரண்டு சதாசகாய அன்னையின் படங்கள் காணப்படுகின்றன. முதல் படம் - 1956ஆம் ஆண்டில் ஓலையால் கட்டப்பட்ட ஆலயத்தில் வைக்கப்பட் டிருந்தது. இரண்டாவது படம் - 1958இல் நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்ட பின் கொண்டுவரப்பட்டது. இந்த இரண்டு படங்களில் 1956இல் கொண்டுவரப்பட்ட தாண்டவன்வெளி பங்குக்கு எடுத்துச் செல்ல அருட்பணி வம்பேக் அடிகளார் ஆயத்தம் செய்தார்.

வாகனத்தில் படம் ஏற்றப்பட்டது. எதிர்பாராத வகையில் பலத்த மழை, மின்னல், இடி முழக்கம், பலத்த காற்றும் வீச ஆரம்பித்தது. ஆலயத்தில் நின்ற அனைவரும் ஏதோ நடக்கப்போகிற தெனப் பயந்தனர். உடனடியாக படத்தைக் கொண்டுசெல்லும் திட்டத்தைக் கைவிட்டார் அருட்பணி வம்பேக் அடிகளார். அவரது வேண்டுகோளின்படி வாகனத்திலிருந்து படம் இறக்கப்பட்டு ஆலயத்துக்குள் கொண்டுவந்தனர் சிலர்.

திடீரென வீசிய காற்று நின்றது. இடி முழக்கம், மழை, மின்னல் அனைத்தும் ஓய்ந்தன. அப்போது அங்கு நின்ற அனைவரும் வியந்துபோய் நின்றனர். இந்த புதுமைப் படம் இன்னும் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1956, 1658ஆம் ஆண்டுக் காலங் களில் இவ்வாலயம் உருவாக்கப்பட்டது. இன்று 67 வருடங்கள் நிறைந்துள்ள இவ்வேளையில் காலத்துக்குக் காலம் கடமையாற்றிய பங்குத் தந்தையர்கள் தங்களுக்கு முடிந்த அபிவிருத்திப் பணிகளை இவ்வாலயத்தில் செய்துள் ளனர் என்பதைக் காணும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

அருட்பணி சாமிநாதன் அடிகளார் பங் குத் தந்தையாக இருந்தபோது ஆலய வளவினுள் கல்வாரி ஒன்றை அமைத் தமை குறிப்பிடத்தக்கது. 2006ஆம் ஆண்டில் சதாசகாய அன்னை ஆலயம் 50 வருடங்களில் பொன்விழாவைக் கொண்டாடியது. அப்போது அருட்பணி ஆர்.திருச்செல்வம் அடிகளார் பங்குத் தந்தையாக பணிபுரிந்தார்.

இந்த ஆண்டு பெருவிழா அருட்பணி ஜெமில்டன் அடிகளாரின் உற்சாகமான நெறியாள்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிக அண்மைக்காலங் களில் இன்னும் சில அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டதையும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாலயத்தின் சிறப்பான நடைமுறை களுக்கு அங்கு வாழும் மக்களின் ஒத்துழைப்பு அவசியம். ஆலய முன்னேற்றத்துக்கு அயராது உழைத்து வரும் அருட்தந்தையர் உட்பட ஆயித்தியமலையில் வாழும் அனைத்து மக்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

சகாய அன்னையின் அருள்வேண்டி நாமும் அவளைப் போற்றுவோம்.

75ஆவது ஆண்டு பவள விழாவை நோக்கி வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் சகாய அன்னைக்கு நன்றி கலந்த வேண்டுதல் செய்வோம்.

ஜோ. நோமன் பல்தஸார்

மீண்டும் இலங்கை... (8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையை இந்தியாவுடன் பாம்பன் பாலத்தினூடாக இணைக்கும் திட்டம் சுமார் 400 வருடங்களுக்கு முன் பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட இருந்தபோதும் அது முன்னெடுக்கப்படாத நிலையில் கடந்த 2001ஆம் ஆண்டும் அதன் பின்னும் இது தொடர்பாக பேச்சவார்த்தைகள் நடத்தப்பட்டபோதும் இருநாடுகளுக்குமிடையில் உடன்பாடு காணப்படவில்லை. இதற்கு இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் இடந்தரவில்லை. ஆட்சியாளர்களுக்கு இடையில் உடன்பாடு காணப்பட முடியாமையால் திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை.

இராமர் பாலமென்பது தமிழ்நாடு இராமேஸ்வரத்துக்கும் இலங்கையில் மன்னாருக்கும் இடையிலுள்ள சுண்ணாம்புக்கற்களாலான ஆழமற்ற மேடுகளாகும். 30 கிலோமீற்றர் கொண்டதாக இது கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த அணையானது மன்னார் வளைகுடாவை யும், பாக்குநீரிணையையும் பிரிக்கும் ஒரு பூகோள மாற்றமாகும். இப்பாலம் அமைந்திருக்கும் கடலின் ஆழமானது சுமார் 3 அடி தொடக்கம் 30 அடி வரையிலானது.

2005 ஆம் ஆண்டு சேது சமுத்திரத் திட்டத்தின்கீழ் இப்பாலத்தை தனுஷ்கோடிக்கு அருகில் ஆழப்படுத்தி கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக மாற்றும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 400 கிலோமீற்றர் தூரமும் 30 மணிநேர கடல்பயணமும் மிச்சப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

காலம், காலமாக பாலம் அமைக்கும் யோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதும் இரு நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டுக்கொண்ட அரசியல் மாற்றங்கள், அரசாங்கங்களின் ஸ்திரமின்மை காரணமாக தடைகள் ஏற்பட்டன. இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்த காலமான 2001 - 2004 காலப்பகுதியில் மீண்டும் இத்திட்டத்தை செயற்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா கடுமையாக தனது எதிர்ப்பை முன்வைத்தார். புலிகளின் ஊடுருவல் அதிகமாகலாம், அது தமிழ்நாட்டுக்கு குந்தகமாக அமையுமென்று காரணங்காட்டி ஜெயலலிதா தன் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் இலங்கையில் உருவாகிய காலத்தில் இந்தியாவின் வீதி போக்குரத்து அமைச்சராக இருந்த நிதின் கட்கரி 305 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 23 கிலோமீற்றர் நீளமான பாலததைக் கட்டுவதற்கான முன்மொழிவுகளை இந்திய பாராளுமன்றில் கொண்டு வந்தார். இதையறிந்த ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு எதிரான எதிர்க்கட்சியினரும் இந்திய எதிர்ப்புவாத குழுவினரும் தங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திய நிலையில், 2016ஆம் ஆண்டு வாசுதேவ நாணயக்கார இது பற்றி கருத்து தெரிவிக்கையில், இலங்கை - இந்திய தரைவழிப் பாலம் நிர்மாணிக்கப்பட்டால் தமிழ்நாட்டில் வாழும் மில்லியன் கணக்கான தமிழர்கள் இலங்கைக்குள் புகுந்து இலங்கையை சதுப்புநிலமாக்கிவிடுவார்கள் என்றும் ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, பாலத்தை இடித்து அழித்துவிடுவேன் என்றும் கர்ஜித்தார்கள்..

தற்போது நிர்மாணிக்க திட்டமிடப் பட்டிருக்கும் நிர்மாண, வடிவமைப்பை நோக்குவோம். இதுபற்றி இவ்வாறு விளக்கப்படுகிறது.

இந்திய தனுஷ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரையிலான கடல்வழி முறையில் சுமார் 48 கிலோமீற்றர் தரைவழிப் பாதையை உருவாக்குவது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இதை இணைப்பதற்கான உத்தேச செலவீனமாக சுமார் 32,000 ஆயிரம் கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் திட்டத்தை வரைந்த பொறியியலாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்துக்கான பூர்வாங்க வரலாற்றை சுருக்கமாக பார்ப்போமானால், இராமர் மனைவியான சீதையை இலங்கைவேந்தன் இராவணன் இலங்கைக்குக் கடத்திக்கொண்டு போனதன் காரணமாக இராம இராவண யுத்தம் ஏற்பட்டது. இராவணன் புஷ்பக விமானத்தில் சீதையை கடத்திவந்து இலங்கையில் சிறை வைத்த நிலையில், சீதையை மீட்க இலங்கை வந்த இராமன் ஆழியை கடக்கவேண்டிய அவசியத்தை தெரிந்துகொள்கிறான். இராமரும் அவரது படைகளும் மண்மேடுகளை ஆதாரமாகக்கொண்டு ஐந்து நாட்களுக்குள் இந்த அணையை நிர்மாணிக்கிறார்கள். அந்த அணையே இராமர் அணை என அழைக்கப்பட்டது. இந்த அணைபற்றி பாடிய மகாகவி பாரதி தீர்க்க தரிசனத்துடன்

சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்

சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

என்று பாடியுள்ளார்.

இந்த இராமர் அணை நிறுவப்பட துணையாக இருந்தது 13 மண்திடல்கள் என்றும், இதில் 6 திடல்கள் இந்தியாவுக்கு சொந்தமானது என்றும் 7 திடல்கள் இலங்கைக்குச் சொந்தமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த திடலை ஆதாரமாகக்கொண்டே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அணை அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், இராமர் அணையை நிர்மூலமாக்குவது தொன்மத்தை அழிக்கும் செயலென்று இந்தியாவின் எதிர்ப்பு இயக்கமான இராம கர்ம பூமி இயக்கம் தனது எதிர்ப்பை தெரிவித்ததோடு, இந்தியாவின் மூத்த அரசியல்வாதியான சுப்பிரமணிய சுவாமி உச்ச நீதிமன்றில் வழக்கொன்றையும் தாக்கல் செய்திருந்தார்.

இத்தரைவழிப் பாதையை உருவாக்கு வதற்குப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் இந்தியா, என்னவகை இலாபத்தை அடைய விரும்புகிறது என்பது கவனத்துக்குரிய தேடலாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தரைவழிப்பாதை தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியா அடைய விரும்பும் இலாபம் என்ன என்பதை தெரிந்துகொள்வோமாயின் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக வாணிபத் தொடர்பை பெருக்க முடியும், போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்த முடியும், மின் வலைப்பின்னலை விரிவாக்கவதன் மூலம் இலங்கையின் மின்வலு சக்தியை மேம்படுத்த முடியுமென பொருளாதார அறிஞர்கள் காரணம் கற்பிக்கிறார்கள்.

இக்காரணங்கள் ஒரு பொருளாதார முறைக் காரணங்களாக கற்பிக்கப் பட்டாலும் இதை மீறிய அரசியல் காரணங்களும் இருக்கிறதென்பதற்கு பல உதாரணங்கள் சான்றாக சாட்சி பகர்கிறதெனவும் கூறப்படுகிறது. குறிப்பாக, இந்தியாவின் பிராந்திய நலன் வல்லரசு கனவு என்பனவும் இன்னும் பல எதிர்பார்ப்புகளும், சூழ்ந்து நிற்கும் காரணங்களாக காட்டப்படுகிறன்றன.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின் சீனாவின் ஊடுருவல் இலங்கையில் அதிகரித்துக் கொண்டிருக்கிறதென்பதற்கு போதிய சான்றுகள் கூறப்படுகின்றன. திருமதி சிறிமா அம்மையார் பிரதமராக இருந்த காலத்தில் சீனாவின் இலங்கைக்கான உதவி பெரும் பங்கு வகித்தபோதும் அவை பொருளாதார சமூக பார்வை கொண்டதாகவே இருந்திருக்கிறது எனக் கூறப்படுகிறது.

உதாரணமாக சீனாவின் உதவியில் நிர்மாணிக்கப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் என்ற உதவிகள் அனைத்தும் இலங்கையின் சர்வதேச பார்வை அந்தஸ்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட உதவிகளாகவே இருந்திருக்கின்றன. ஆனால், கடந்த இரு தசாப்தத்துக்கும் மேலாக சீனாவின் இலங்கை மீதான கரிசனை வெறும் பொருளாதார காரணங்களை மட்டும் கொண்டதாகக் கருதிவிட முடியாது.

சீனா இலங்கைக்கு யுத்த தளபாட உதவிகள், கடன் உதவிகள் இராணுவ பயிற்சிகள், நில அபிவிருத்தி உதவிகள் என்ற வகையில் பல்வேறு உதவிகளை நல்கியவண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது இந்தியாவால் அவதானித்து வரப்படுகிற விடயம்.

உதாரணமாக, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு தாரைவார்த்துக் கொடுத்தமை, துறைமுக நகரமென்ற அபிவிருத்திப் போர்வையில் காலிமுக கடல்பிரதேசம் ஹோட்டல் நிர்மாணம், யாழ்ப்பாணத்தில் பல்வேறு பண்ணை விஸ்தரிப்புகள், தீவுகளின் அபிவிருத்திகள் என்ற கோதாவில் சீனாவை இலங்கையில் ஆழ பதியவிடும் நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்கும் இந்தியா இதற்கான மாற்றுவழியாகவே தரைவழிப்பாதை தொடர்பை தேர்ந்தெடுத்திருக்கிறதென்பது சில அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில இந்தியாவை தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு சீனாவை வாரி அணைத்தமை காரணமாகவே மேற்படி திட்டங்களுக்கும் திருகோணமலை சீனக்குடா விமானத் தளத்தை சீனாவுக்கு கையளிக்கும் கைங்கரியமும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் இனனொரு நெருக்கடி சீனாவின் ஷி யான் 6 கப்பல் வருகையை மீள்பரிசீலனை செய்யுங்கள் என சீனாவை மன்றாடி கேட்கும் அளவுக்கு நிலைமை காணப்படுகிறது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் உத்தியோகபூர்வ விஜயமொன்ற மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில், சீனக்கப்பல் வருகை குறித்து மீள்பரிசீலனை செய்யும்படி சீனாவிடம் இலங்கை கோரும் நிலைக்கு நிலைமைகள் விரிவடைந்துகொண்டு போகின்றன.

இனி, இலங்கை பக்கமாக வந்து இலங்கை - இந்திய தரைவழி இணைப்புக்கு கடும்போக்காளர்கள் அல்லது இந்திய எதிர்ப்புவாதிகள் காட்டும் நியாயங்களை நோக்குவோம்.

தரைவழிப்பாதை இணைப்பு உருவாக்கப்படும் பட்சத்தில் இலங்கை தனது இறையாண்மையை இழக்க நேரிடும் என்பது கடும்போக்காளர்களின் வாதமாகும். அதுமட்டுமன்றி மிக சிறிய நாடான இலங்கை, பொருளாதார சுதந்திரத்தை இந்தியாவிடம் அடைவு வைக்கும் நிலை ஏற்படும், இந்தியா உள்நுழைய சந்தர்ப்பம் வழங்கப்படுமாக இருந்தால் யூரோ நாணயத்தின் செல்வாக்குபோன்று இந்திய ரூபாவின் புழக்கம் விரிவு பெறும், ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் பலவீன நிலையொன்று இலங்கைக்கு ஏற்படும், நாம் மேலே குறிப்பிட்டதுபோல் பௌத்தம் தனது செல்வாக்கை இழக்க நேரிடும் என்பதுடன், இலங்கையின் உள்விவகாரங்களிலும் இந்தியா தலையிடும் நிலையொன்று உருவாகும். இந்தியாவின் அதிகார செல்வாக்கு அதிகரித்து நிலைமைகள் மோசமாகுமென்பதுடன், இலங்கையின் முடிவெடுக்கும் சுய ஆட்சி தனது அதிகாரத்தை இழந்து மீண்டும் அந்நிய ஆட்சிக்குள் அடிமைப்படும் அவலம் ஏற்படுமென தமது எதிர்ப்பை வெளிகாட்டி வருகிறார்கள் கடும்போக்காளர்கள்.

காரைக்கவி



சீத்துவக்கேது 253



அப்பு உப்பிடிச் சொல்லவும் உடனை ஆச்சி, ஏன் மலைபடு காடாமிலையும் ஒரு பாட்டிலை உந்த மாடு பிடிக்கிற விளையாட்டு வருகுதெல்லே எண்டு அந்தப் பாட்டைச் சொன்னா.

"இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தின் ஊறுபடத்தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉம் கல்லென் கம்பலை"
(மலை.330-335)

குறிஞ்சி நிலத்திலை இருக்கிற சனங்களும் முல்லை நிலத்திலை இருக்கிற சனங்களும் தங்கடை தங்கடை நிலங்களில உள்ள நல்ல பலமான எருதுகளை ஒண்டோடை ஒண்டு சண்டை பிடிக்க விட்டு சத்தம் போட்டு ஆரவாரம் செய்வினைமாம். பேந்து அவங்களும் அதுகளோடை போய் நிண்டு சண்டை பிடிப்பாங்களாம். அந்த எருதுகளின்ரை வெற்றியைத் தங்கடை வெற்றியாக் கொண்டாடு வாங்களாம் எண்டது உந்தப் பாட்டின்ரை பொருள் எண்டா.

அது மட்டுமே, காளையை அடக்கி ஏறியவருக்கே முல்லை மலரை அணிந்துள்ள மென்மையான கூந்தலையுடையவள் உரிமையானவள் எண்டு என ஆய்ச்சியர்கள் ஆடிப்பாடுறதை இளங்கோவடிகள்,

'மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள். இ முல்லையம் பூங்குழல் தான்' (சிலம்பு, ஆய்ச்சி. கொளு.8) எண்டு சொல்லுறார் எண்டா.

பேந்து உனக்கு ஒரு பகிடி தெரியுமே எங்கட கிருஷ்ணரும் தன்ரை மாமன் மகள் நப்பின்னையை ஏறு தழுவித்தானாம் கலியாணம் கட்டினவர். அவற்றை மாமன் மிதிலையின் அரசனான கும்பகன் தன்ரை மோளைக் கட்டுறவன் ஆரெண்டான்னை தன்னட்டை நிக்கிற ஏழு காளையளையும் அடக்கினால்தான் கட்டலாம் எண்டு நிபந்தனை போட்டவனாம். உடன கிருஷ்ணர் போய் அந்தக் காளைகளை அடக்கி கட்டின செய்தியை மென் தோளி காரணமா வெங்கோட்டேறு ஏழுடனே" எண்டு திருமொழியில் நம்மாழ்வார் சொல்லுறார் எண்டா ஆச்சி.

உதே செய்தியை திருமங்கையாழ்வார் "அம்பொனார் உலகம் ஏழும் அறிய ஆய்ப்பாடி தன்னுள் கொம்பனார் பின்னை கோலம் கூடுதற்கு ஏறு கொன்றான் நெம்பொனார் மதிள்கள் சூழ்ந்த தென் திருப் பேருள் மேவும் எம்பிரான் நாமம் நாளும் ஏத்தி நான் உய்ந்த வாறே" எண்டிறார் எண்டா ஆச்சி.

உந்த ஏறுதழுவல் எண்டது சிந்துவெளி காலத்திலை இருந்தே இருந்திருக்குது எண்டு படிச்ச ஆக்கள் சொல்லுகினம். அங்கை எடுத்த தொல்பொருள் சின்னங்களிலை உந்த ஏறுதழுவுகிற சின்னமும் இருக்காம் எண்ட ஆச்சி, உவள் சட்டம்பி மினாசியின்ரை சீமையால வந்த மோள் சொல்லுறது மாதிரி உது ஒண்டும் மாடுகளை கஷ்டப்படுத்திற வேலை
கிடையாது எண்டுவா.

அந்தக் காலத்திலை எங்கடை ஆக்கள் உந்த விளையாட்டு விழாவை "ஏறுகோள் பாணி" "ஏறுகோள் சாறு" எண்டெல்லாம் சொன்னவையாம் எண்ட அப்பு உப்பிடி ஏறு தழுவுகிற ஆயர்குல வீரனைப் பொதுவன் எண்டவையாம். உவங்கள் கொம்பைப் பிடித்து அழுத்தல், கழுத்தைப் பிடித்துக்கொண்டு காளையில் மார்பில் தொங்கல், கழுத்தைத் திருகல், இமிழ் என்னும் கொட்டேறியைத் தழுவல், தோளில் ஏறல், நெருக்கிப் பிடித்தல் எண்டு விதம் விதமானா உத்திகளைப் பாவிச்சு மாடுகளை அடக்கினவங்களாம் எண்டார்.

.(இன்னும் ஆடுவம்)



விந்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

இவ்வார இராசி பலன்கள்

மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

பணவரவு திருப்தி தரும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். அவசியம் ஏற்பட்டால் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்வது நல்லது. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள்.

வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகள் ஆதரவாக இருப்பார்கள்.

ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தேவையான அளவுக்கு பணம் இருப்பதால் குடும்ப நிர்வாகத்தில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப் பிடித்துச் செல்வது நல்லது. தந்தையுடன் சிறுசிறு மனவருத்தங்கள் ஏற்பட்டு நீங்கும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகி முடியும்.

வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு மாற்றல் கிடைக்கும்.

வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் உற்சாகம் தரும்.

மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

உடல் ஆரோக்கியம் மேம்படும். பண வரவு மகிழ்ச்சி தரும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். சிலருக்கு வீட்டில் தெய்வ வழிபாடுகளை நடத்தும் வாய்ப்பு ஏற்படும். சகோதரர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் சுபச் செலவாக இருப்பது மகிழ்ச்சி தரும்.

அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். நிர்வாகத்தினரின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக பாடுபடுவீர்கள். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

கடக ராசி அன்பர்களே!

கடகம்

பணவரவு எதிர்பார்த்தபடியே இருக்கும். செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஆனால், கடன்கள் விடயத்தில் சற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியம். வெளியூர்ப் பயணங்களின்போது கொண்டுசெல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்பு பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்கக்கூடும். பணியிடத்தில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள். சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும் என்பதால் கவனமாக இருக்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும்

சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். பிள்ளைகள் மூலம் எதிர்பாராத பண வரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதரர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி உறவு சுமுகமாகும்.

அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலை களில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்க முடியாது.

வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும்.

கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்களின் முயற்சியால் தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் கூடி வரும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் அலைச்சலும் சோர்வும் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகளை வாரப் பிற்பகுதி யில் தொடங்கவும்.

அலுவலகத்தில் உங்களின் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். அதன் காரணமாக சில சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களிடையே உங்கள் கௌரவம் உயரும்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், சரக்குகளைக் கொள்முதல் செய்யவும் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

துலா ராசி அன்பர்களே!

துலாம்

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தடைப்பட்ட சுப காரியங்கள் நல்லபடி முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பெண் அல்லது பிள்ளை தொடர்பான முக்கிய முடிவு எடுக்கும்போது வாழ்க்கைத்துணையின் ஆலோசனையைக் கேட்பது அவசியம். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு ஏற்படும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும்.

அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒருசிலருக்கு இருக்கும் இடத்திலிருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதிகாரிகள் சில நேரங்களில் கண்டிப்பாகப் பேசினாலும் அனுசரணையாகவும் இருப்பார்கள்.

புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்கள் இந்த வாரம் தொடங்கலாம். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். அரசாங்க அதிகாரிகளை அணுகும்போது பொறுமை அவசியம்.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்கள் விற்பனையை அதிகரிப்பதில் ஊக்கத்துடன் செயல்படுவார்கள்.

தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சகோதரர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும்.

வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர் களால் அனுகூலம் உண்டாகும். பணியாளர்களும் விற்ப னையை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

மகர ராசி அன்பர்களே!

மகரம்

தேவையான அளவுக்குப் பணவரவு இருப்பதாலும், வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது என்பதாலும் மகிழ்ச்சியான வாரமாகவே இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையிலிருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சிசெய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்களால் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். வாடிக்கையாளர்களுடன் கனிவான அணுகுமுறை அவசியம்.

குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சற்று சிரமம் ஏற்படும்.

கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிரமமான நேரங்களில் நண்பர்கள் உதவி செய்வார்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த காரியம் கடின முயற்சியின்பேரில் சாதகமாக முடியும்.

அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். உங்களுடைய சமயோசிதமான ஆலோசனை பெரிதும் பாராட்டப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண் டாகும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்ததைவிடவும் கூடுதலாக இருப்பது உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம்.

மீன ராசி அன்பர்களே!

மீனம்

குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும் வாரம். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சற்று அலைச்சல் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். உங்கள் கோரிக்கை நிர்வாகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படும். சக ஊழியர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள்.

வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பற்றுவரவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சக வியாபாரிகள் உதவிக்கரமாக இருப்பார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் பொறுமையாக இருக்க வேண்டிய வாரம்.

மறதி

நிறைவான எண்ணங்களை
நிறைய நினைத்து
சமூகத்திடம்
கொண்டுசெல்லும்
நேரங்களில் எல்லாமே
வெளிவர மறுக்கிறது

எண்ணியவை எல்லாம்
நீண்ட நேரத்து
உயிர் வாழ்வைத்
தக்கவைப்பதில்லை
புரியாத காரணங்களும்
தெரியாத வழிகளுமான
தவிப்பில் மனது
மறக்க வேண்டியது

மறக்காமையும்
நினைக்க வேண்டியது
நினைவில் இல்லாமையும்
புதிய வகை நோயின்
புரிதலோ அது

கனவுகள் சுமந்திருக்கும்
எண்ணங்களை
காற்று வந்து
கரைத்து எடுத்துச் செல்கிறது
ஆனாலும் தடை போட
முடிவதில்லை

சாத்தியம் அற்றுப் போன
கிரகித்தலும்
மாற்றம் கொள்ளாத
மறதியுமான அவலங்களை
மாற்ற நினைக்கையில்
அதுவும் மறந்து
போகும் மறதி

அ. ஜெகன்
சுவிஸ்

அநீதி அழியும்

மோடிசம்
மோடிசத்தையும் மேயும்

இருப்பிடத்தை
இடித்தவனே!

இறை இல்லத்தை.....
விசேட தேவை உடையோர்
உள்ளத்தை.... அங்கத்தை....
கல்வி கடலில் விஷத்தை...
நீதித் துறையில் நெருப்பை...
பொருளாதாரத்தில்
மண்ணை....
துவம்சத்தை
நாசமாக்கியவனே!

கொடும் பாவியே...
வேட்டை பல்லவியே...
மோடியே....

உன் வயதுக்கு நீயே
பெறுமதியற்றவன்.

உன் வார்த்தை பச்சை நிறத்து
நெருப்பு மலரடா...

முஸ்லிம் நாடுகளை
குண்டு மழையில்
குளிப்பாட்டிய
அமெரிக்க அதிபர்களின்
பட்டியலில் நீயும்தான்....

கறுப்பாக சிவப்பாக
சித்திரவதை செய்கிறவனே!

நீ இரும்பனா? நெருப்பனே!
நிச்சயம்
பெரியோன் பிடிப்பான்.

- மூதூர் றிஸ்வின்.-

தயங்கினேன் நான்

நினைத்ததும் நடந்ததில்லை
நடப்பதும் நினைத்ததில்லை
நினைவில் இருந்து
விலத்தி செல்கையில்
விரதம் இருந்தும்
பயனே இல்லை

வெக்கமென நீ
நினைத்து
பக்கம் வந்த போது
பதற்றத்தின் பரவசமாய்
பாவை உனைப் பற்றிட

உன் மெய்யழகில்
மயங்கி பொய்தனை
உரைத்தேனே

தேவந்தி (சயூரன்)
காரைதீவு



தூறல்கள்

காதல் வாய்ப்பாடு

கௌரவ பார்வை
நல்ல காதலுக்கு
பூச்செண்டாகும்.

மாண்புமிகு மரியாதை
காதலை வளர்க்கும்
சுவாசமாகும்.

நன்னீரும் உவர்நீரும்
சேராத இடமானால்
காதல் கடல்
தொடர் கதையாகும்.

அறிவும்
உறவும்
சக்தியானால்
காதலர்கள்
நாணயத்தின்
இரு பக்கங்களாவர்.

- மூதூர் றிஸ்வின் -

அவளும் ஒரு பெண்தான்

விருப்பினைக் கேளாத
விதியின் விளையாட்டில்
திருப்பங்கள்
வேண்டி நிற்கும்
தீபமற்ற உருக்கோலம்

வெள்ளாடை
உடுத்திருக்க
வேறாடை தடையிருக்க
வேதங்கள்
பிரிக்கவில்லை
விதவையென
கழிக்கவில்லை

வசமிழந்த வனப்புகளில்
வாழ்வெழில் மறந்து
நிசமிழந்து நிற்கிறது
நினைவழுத்தும்
ஏகாந்தம்
சாத்திரங்கள் கோடிடும்

சாஸ்வதங்கள்
திரையிடும்
பாத்திரங்கள்
மாறியிங்கு
பரிதவித்து நிற்கையில்
மலர்கூடா இவளை
மானிடப் பிறப்பென்று
அலைசிந்தை மனதேந்தி
ஆறுதலடைந்திடுவோம்

வலியுள்ள
வார்த்தைகளை
வழங்கிடாமல்
காத்திடுவோம்
உணர்வுள்ள மனமென்று
உவகையினால்
பார்த்திடுவோம்

- ஏரூர் றமீஸ் -
ஏறாவூர்

கனவில் கொன்றவள்

விடிகாலை நிலவாக
அடி வைத்து நின்றாய்
வெகு வேகமாக என்
உளம் ஈர்த்துச்
சென்றாய்
இமை மூடும்
நிமிடத்துள்
ஈபோல மொய்த்தாய்

இன்பத் தேன்
கடலுக்குள் எனை
மூழ்க வைத்தாய்
கனியான மொழியாலே
கதைப் புள்ளி
வைத்தாய் காதலை
மொழியாமல்

அதைத் தள்ளி
வைத்தாய்
தனிமைக்கு
விழியாலே
நீ தீயை வைத்தாய்
தணியாத தாகத்தால்
எனை வேக வைத்தாய்

மனதோரம் மழைபோல
ஈரமாய் நின்றாய்
மகிழ்கின்ற நிலைமாற
நேரத்தை தின்றாய்
கன நேரம் உறவாடி
கதி நீதான் என்றாய்
கனவென்று கதை
கூறி விடைபெற்றுச்

சென்றாய்
அநியாய
விதியொன்றை
அரங்கேற்றி முடித்தாய்
அறியாத
புதிரொன்றால்
மனம் துண்டாய்
உடைத்தாய்
அகமென்று புறமென்று
அழகாக கதைத்தாய்
அடையாளம்
தெரியாமல்
எனைக் கொன்று
புதைத்தாய்!

- ரோஷான் ஏ.ஜிப்ரி -

வட்ஸ்அப் நன்மை!



ஏண்டி உன் கணவர் எந்நேரமும் வட்ஸ்இப்பில இருக்காரே, அதை என்னான்னு கேட்கமாட்டியா..?

அந்த வேலையாவது அது ஒழுங்கா செய்யுதேனு விட்டுட்டேன்டி.

அது வட்ஸ்அப் பாக்கறது நமக்கும் வசதியாத்தான் இருக்குடி.

அப்படி என்ன வசதிடி.

அது வட்ஸ்அப் நோண்டும்போது

1) நம்ம கிட்ட ரி.வி. ரிமோட்ட பிடுங்கறது இல்ல.

2) சட்னியில உப்பு இல்லனாகூட கம்முனு சாப்பிட்டு போயிடும்.

3) துவைக்காத சட்டையக்கூட கண்டுக்காம எடுத்து போட்டுக்கும்.

4) எத சொன்னாலும் வட்ஸ்அப் பாத்துகிட்டே தலையாட்டிக்கும்.

5) கோப்பிக்கு பதிலா கழனித் தண்ணிய கொடுத்தாலும் குடிச்சிடும்.

6) மாமியாரப்பத்தி என்ன திட்டினாலும் அது காதுல விழாது.

7) துணிக்கடைக்கு கூட்டிட்டு போய் உட்கார வச்சா குனிஞ்ச தலை நிமிராம வட்ஸ்அப் பார்க்கும்.

கடைசியா பில் போடும்போது கூப்பிட்டுகிட்டா போதும். இங்க எப்ப வந்தோம் என்று கேட்கும்....

இப்ப புரியுதாடி. நம்மோட முக்கியமான பொறுப்பு போன்ல சார்ஜ் குறையாம பாத்துக்கறது தான்...!

பேஸ்புக்கில் நான்





உண்மையிலே நான்

வாட்ஸாப்பில் நான்






அடையாள அட்டையில் நான்

தமிழன் ரர்பார்



இது எங்க ஏரியா


மரணத்தை வென்றவர்கள்!



சாக்ரடீஸுக்கு விஷத்தைக் கொடுத்து குடிக்கச் சொன்னாங்க. குடிச்சுட்டு கொஞ்ச நேரம் அப்படியும், இப்படியும் நடந்தாரு. அப்புறம் அவரே படுத்துட்டு பெட்ஷீட்டை எடுத்து உடம்பை மூடிட்டாரு. திடீர்ன்னு முகத்திலிருந்து பெட்ஷீட்டை விலக்கி, அழுதுட்டிருந்த தன்னோட சீடனைக் கூப்புட்டு, "அங்களெபியஸ்ங்கற ஆளுக்கு நான் ஒரு சேவல் தரணும். மறக்காம அந்த கடனை அடைச்சிடு"ன்னுட்டு போர்வையை மூடிட்டு இறந்தாரு. ஆக, கடைசி நேரத்துல கூட கடனை அடைக்கிற கவலைதான் அவருக்கு இருந்ததே தவிர, மரண பயம் இல்லை.

பாரதியார் நைட் 1.30க்கு உயிர் போறதுக்கு முன்னால, "ஆப்கான் மன்னன் அமானுல்லா பற்றி ஒரு கட்டுரை எழுதிட்டு, சுதேசமித்திரன் ஆபீஸுக்கு போகணும்"ன்னாரு.

ஆக, இவங்கள்லாம் மரணத்தை வென்றவங்க இல்லையா?



அதான் அம்மா!

அம்மா வந்து ஒரு வாரம் ஆகிறது. அப்பா இறந்த பிறகு அம்மா என் வீட்டில் ஆறு மாதமும் தம்பி வீட்டில் ஆறு மாதமும் இருப்பதாக முடிவெடுத்து இரண்டு மாதங்களுக்கு முன்புதான் தம்பி வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்திருந்தேன்.

போன வாரம் வீட்டிற்கு வந்திருந்தான்.

"ஒண்ணுமில்லணா... அம்மாவுக்கும் என் மனைவிக்கும் சரியா ஒத்துப்போக மாட்டேங்குது. டெய்லி ஏதாவது ஒரு பிரச்சினை வந்துடுது. அதனால் அம்மாவுக்கு சிரமமா இருக்கு. எனக்கும் கஷ்டமா இருக்கு. அதனால நான் என்ன சொல்ல வரேன்னா..."

எனக்குப் புரிந்தது. அம்மாவை அழைத்து வந்துவிட்டேன்.

இன்று தம்பியிடம் இருந்து அழைப்பு. அம்மா அருகில்தான் அமர்ந்திருந்தார்.

"சொல்லு அசோக்..."

"அது வந்துணா.. நேத்து மைதிலி ஒஃபீஸ்ல இருந்து வரும்போது வண்டியில இருந்து கீழே விழுந்து கால்ல ஹேர்லைன் கிராக். மாவு கட்டு போட்டு வீட்ல கொண்டு வந்து வச்சிருக்கேன். பாத்துக்க யாரும் இல்லை. சாப்பாடும் கஷ்டமா இருக்கு. பாப்பாவ ஸ்கூல்ல கொண்டுபோய் விடுவதற்கும் சிரமமா இருக்கு. அதனால..."

வாய்வரை வந்த வார்த்தையை விழுங்கி விட்டு "அம்மாட்ட பேசிட்டு சொல்றேன்" என்று போனை கட் செய்தேன்.

"என்னவாம்பா?"

"அவன் மனைவி நேத்து வண்டியில் இருந்து கீழே விழுந்துருச்சாம்!"

"ஐயய்யோ!"

"இல்ல! பெருசா ஒண்ணும் இல்ல. கால்ல சின்னதா அடியாம். மாவுகட்டு போட்டு வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வந்துட்டானாம்..."

"அடடா! அங்க, கூட இருந்து பாத்துக்க யாரும் இல்லையே. சாப்பாட்டுக்கு வேற என்ன செய்றானோ. பிள்ளையை வேற பள்ளிக்கூடம் கூட்டிட்டு போவணுமே? சரவணா.. என்னைய கொஞ்சம் தம்பி வீட்டுல விட்டுடறியா?" என்று அவசரமாக எழுந்து கிளம்ப ஆரம்பித்தார்.

- ஜெயச்சந்துரு -

பழசை மறக்காதுவர் எம்.ஜி.ஆர்.

தேங்காய் சீனிவாசனின் பேட்டியிலிருந்து ஒரு பகுதி.

தேங்காய் சீனிவாசன் சொந்தமாக படம் எடுக்க ஆசைப்பட்டு எம்.ஜி.ஆரிடம் ஆலோசித்தார்.

''சொந்தப் படம் எடுப்பது சாதாரண விஷயம் அல்ல. உனக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது. வேண்டாம்'' என்று எம்.ஜி.ஆர். தடுத்தார்.

ஆனால், அதையும் மீறி படத் தயாரிப்பில் தேங்காய் சீனிவாசன் ஈடுபட்டார். அவர் கையில் இருந்த பணம் படப்பிடிப்பு செலவுகளுக்காக கரைந்துவிட்டது.

பணமும் புரட்ட முடியவில்லை. மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல், ராமாவரம் தோட்டம் சென்று எம்.ஜி.ஆரை சந்தித்து நிலைமையைச் சொன்னார்.

''நான்தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே, கேட்டியா? பட்டால்தான் புத்தி வரும். போ போ'' என்று எம்.ஜி.ஆர். கோபமாகப் பேசி அவரை அனுப்பிவிட்டார்.

இருந்த கடைசி நம்பிக்கையும் தகர்ந்துபோன நிலையில், ஏமாற்றமும் சோகமுமாய் நெடுநேரம் கழித்து இரவில் வீடு திரும்பினார்.

அங்கே தேங்காய் சீனிவாசனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. தனது உதவியாளர்கள் மூலம் பெருந்தொகையை அவர் வீட்டுக்கு எம்.ஜி.ஆர். கொடுத்து அனுப்பியிருந்தார்.

விஷயம் அறிந்து, எம்.ஜி.ஆரிடம் மன்னிப்பு கோரியதுடன், உதவிக்காக கண்களில் நீர்மல்க நன்றியும் தெரிவித்தார் தேங்காய் சீனிவாசன்.

'நினைத்ததை முடிப்பவன்' படத்தில், கிராமத்திலிருந்து வரும் எம்.ஜி.ஆர்.,



தன்னைப் போலவே உருவ ஒற்றுமை உள்ள மற்றவரைப்போலவு நடிக்க வேண்டிய நிலை.

அடுக்கு மாடி ஒன்றில் இருந்து கீழே பார்க்கும் எம்.ஜி.ஆர்., அங்கு சுக்கு காப்பி விற்றுக்கொண்டிருக்கும் தேங்காய் சீனிவாசனை மேலே அழைப்பார்.

படத்தில் இருவருக்கும் ஏற்கனவே அறிமுகம்.

தனக்கு ஆரம்பத்தில் காசே வாங்காமல் சுக்கு காப்பி கொடுத்த தேங்காய் சீனிவாசனுக்கு 500 ரூபாவுக்கு காசோலை கொடுக்குமாறு நடிகை லதாவிடம் சொல்வார் எம்.ஜி.ஆர். அப்போது அது பெரிய தொகை.

பணம் கிடைத்த மகிழ்ச்சியில் வியாபாரம் செய்யும் சுக்கு காபி வைத்திருக்கும் தூக்கை மறந்துவிட்டு செல்லும் தேங்காய் சீனிவாசனிடம், ''பணம் வந்ததும் பழசை மறந்துட்ட பாத்தியா?'' என்று எம்.ஜி.ஆர். கேட்பார்.

தனது தவறை ஒப்புக்கொள்ளும் தேங்காய் சீனிவாசன், எம்.ஜி.ஆரிடம், ''நீ கில்லாடி துரை. அடுக்குமாடிக்கு வந்தாலும் பழசை மறக்காம ஸ்டெடியா இருக்கே. இப்படியே இரு துரை'' என்று வாழ்த்துவார்.

நிஜ வாழ்க்கையிலும் இறுதிவரை அப்படியேதான் இருந்தார் எம்.ஜி.ஆர்.!

– நன்றி: தி இந்து இதழ்

அம்மாவை சந்தோசப்படுத்த
பணம், நகை வேணு'மான்னு
கேட்க தேவையில்லை..




சாப்பிடும் போது இன்னும்
கொஞ்சம் சோறு போடும்'மா
என்று கேட்டாலே போதும்.

தமிழன் தொடர்கதை

சூரன் போர்

அத்தியாயம்



பாலா சங்குப்பிள்ளை

அதிகாலை நான்கு மணி. குளிர் ஊசியாக உடலைக் குத்தியது. ஆனாலும் எந்தப் பதற்றமோ - பரபரப்போ - மனதில் எந்தச் சலிப்போ இல்லாமல் படுக்கையை விட்டு எழுந்தாள் ஒளியரசி. கட்டில் விரிப்புகளை வழமைபோல் நேர்த்தியாக மடித்து வைத்துவிட்டு சமையலறைக்குச் சென்றாள். கேஸ் சிலிண்டர் இன்னும் ஒரு வாரத்துக்குத்தான் போதும். சம்பளம் வந்தவுடன் முதல் வேலையாக அதை வாங்கிவிட வேண்டும். அவள் பரபரவென இயங்கினாள். துப்புரவாக சமையலறையைப் பெருக்கி சுத்தம் செய்து முடித்து தேநீர் தயாரிக்க தண்ணீர் சூட வைத்துவிட்டு குளியலறைக்குள் சென்றாள். குளியலறையை சுற்றி மறைத்து அடிக்கப்பட்டிருந்த தகரங்கள் இத்துப்போய் ஓட்டைகள் விழுந்திருந்தன. அதை மறைக்க பழைய சேலையை போட்டு மறைத்திருந்தாள்.

ஒளியரசி மறுபடியும் சமையலறைக்குள் நுழைந்தவள் தேநீர் தயாரித்து அதை எடுத்துக்கொண்டு இன்னொரு அறைக்குள் நுழைந்தாள். அங்கே அவளின் தந்தை மாறன் குப்புறப் படுத்துக் கிடந்தார். அவள் தேநீர் கோப்பையை படுக்கைக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு 'ரீ' என சத்தமிட்டுவிட்டு வெளியே வந்தாள். அவள் கடந்த ஐந்து வருடங்களாக அதாவது, அவள் தாய் சாந்தி இறந்ததிலிருந்து தந்தையுடன் பேசுவதில்லை, அவரின் முகத்தைக்கூடப் பார்க்கமாட்டாள். நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருந்த தாயை தன் தந்தை சரியாகக் கவனிக்கவில்லை, ஒழுங்காக வைத்தியசாலைக்கும் கூட்டிப் போகவில்லை. அதனால்தான் தாய் குறுகிய காலத்தில் இறந்துபோனாள் என்ற எண்ணம் அவளின் அடிமனதில் பதிந்திருந்தது. எனவே, தந்தையை முற்றாக வெறுத்தாள். அவருடன் பேசுவதில்லை; எதிரே வருவதில்லை; ஆனால், அவருக்கான சாப்பாட்டைச் சமைத்துக் கொடுப்பாள். சுகமில்லாத சமயத்தில் கசாயம் வைத்துக் கொடுப்பாள். அவ்வளவுதான். வேறு எதுவுமே செய்யமாட்டாள்.

ஒளியரசி எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு தந்தைக்கு சாப்பாட்டை மூடிவைத்துவிட்டு பை, குடையுடன் வீட்டைவிட்டு வெளியே இறங்கும்போது அதே ஆறரை மணிதான். தனக்கும் சாப்பாடு கட்டிக்கொண்டு பை, குடையுடன் வீட்டைவிட்டு வெளியே இறங்கும்போதோ அதே ஆறரை மணிதான்.

அவள் சற்றுத் தூரத்திலிருக்கும் பத்தாம் வகுப்பு வரையுள்ள பாடசாலையில் தமிழ் மற்றும் கணித ஆசிரியை. அந்தத் தோட்டத்திலேயே ஐந்தாம் ஆண்டுவரை படித்து பின்னர் டவுண் பாடசாலையில் உயர்தரம் கற்று இன்று பயிற்றப்பட்ட ஆசிரியையாக இருக்கிறாள். மிகத் திறமையான ஆசிரியர் என்று பேரெடுத்த அவள், யாருடனும் அதிகம் பேசுவதுமில்லை; பழகுவதுமில்லை. பாடசாலை முடிய இலவசமாக பாடசாலையிலேயே டியூஷன் செய்வாள். சக ஆசிரியர்களுடன் தேவையேற்பட்டா லொழிய பேசமாட்டாள்.

ஒளியரசிக்கு ஓர் அபூர்வ சக்தி இருந்தது. அதாவது, பின்னால் நடப்பது முன்கூட்டியே சில அறிகுறிகள் மூலமாக அவளுக்குத் தெரிந்துவிடும். அவள் தூங்கும்போது அத்தகைய அறிகுறிகள் கனவில் தோன்றும். அவள் தாய் இறக்கும்போதும் அப்படித்தான் அறிகுறிகள் கனவில் தோன்றின. அதேபோல் நடந்தபோது அவள் திக்குமுக்காடிப்போனாள். இரவில் படுத்தாலே உடனடியாக தூங்கிவிடமாட்டாள். ஆனாலும் குறிப்பிட்ட சில நாட்களில் அதுவும் பௌர்ணமி இரவுகளில் நிச்சயமாக ஏதாவது நடப்பது வழமையாகவே இருந்தது. இந்த விடயத்தை அவள் யாரிடமும் சொல்வதில்லை.

ஒளியரசிக்கு ஒரு தோழி இருந்தாள். பெயர் சிலம்பரசி. தனியார் மருத்துவமனையில் பயிற்றப்பட்ட தாதியாக இருந்தாள். வாரத்தில் ஒருமுறையாவது சிலம்பரசியை ஒளியரசி சந்திப்பது வழக்கம். அப்போது இந்த விடயத்தை ஒருமுறை அவளிடம் சொன்னாள். முதலில் சிலம்பரசி இதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால், ஒளியரசி அவளிடம் உன்னைத் தேடி பொலிஸ் உன் வீட்டுக்கு வருமென்று சொன்னாள். அதை அவள் சொல்லி மூன்றாவது நாளே பொலிஸ் வீடு தேடி வர சிலம்பரசி கதிகலங்கிப் போனாள். உடனடியாகத் தனக்குத் தெரிந்தவர்களிடம் பேசி ஒரு மனோதத்துவ வைத்தியரிடம் ஒளியரசியை அழைத்துச் சென்றாள்.

வைத்தியர் அவளை பல கோணங்களில் பரிசோதனை செய்தார். நிறையக் கேள்விகளைத் தொடுத்தார். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

"இது ஓர் அபூர்வமான - விசித்திரமான நோய். மனதில் தோன்றி மறையும் எண்ணங்கள் சிதைவடைந்து பிரியும்போது அதில் பிறக்கும் சில மின்னல்வேக நினைவுகள் ஆழ்மனதில் பதிகின்றன. அந்தச் சிதறல்களில் சில, உண்மையில் நடக்கும்போது அதை நம் மனம் கண்டு அஞ்சுகிறது. அதாவது, கனவில் நடந்தது மறுபடியும் உண்மையில் நடக்கும்போது அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் பயப்படுகின்றோம். ஒருவகையில் இப்படியானவர்கள் மறுபிறவிகளாக இருக்கக்கூடிய சாத்தியமும் இல்லாமலில்லை. எவ்வாறாயினும், நாளை நடப்பதை பரம்பொருளால் மட்டுமே அறியமுடியும். அதைச் சில மனிதர்கள் கூறுவார்களாக இருந்தால் இயற்கைக்கு முரணாக நடக்கும் இச்சம்பவங்களால் இந்த உலகம் ஏதோவொரு அபாயத்தில் சிக்கப்போகிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அந்த வைத்தியர் என்ன அர்த்தத்தில் இப்படிச் சொன்னாரென்று தெரியவில்லை. ஆனால், வெகு விரைவில் நாம் எல்லோரும் பிரச்சினையில் சிக்கப்போவது உண்மை. பாவம், யாருக்கும் தெரிய நியாயமில்லை.

(தொடரும்)

மலையகத்தின் சொல்ல மறந்த கதை கோப்பிக்காட்டில்

முன்னமாதி இப்ப இல்ல
கோப்பி வெளைச்சலது
வீழ்ச்சி கண்டு
வீழ்ச்சி கண்டு
தொழிலாளர் மவுசதும்
கொறைஞ்சித்தான்
போயிருச்சி...

மூக்காயி முக்காடு
போட்டுருக்கா
முதுகு பக்கம்
கோப்பி பழம் சேகரி க்க
சாக்கு பையி
மாட்டிருக்கா...

சின்னப்பொண்ணும்
வீட்டோட இருந்து விட்ட
காலமெல்லாம்
மாறி போச்சி
பேருக்கு பள்ளிக்கூடம்

ஆளுக்கொஞ்சம்
வளர்ந்துவிட்டா
கோப்பிமல வந்து இங்கு
வேல செய்ய
சொல்லிவிடும்

பதினாறு வயசாச்சி
சின்னப்பொண்ணு
வயசுக்கும் வந்தாச்சு
மூக்காய சுத்தி வந்த
பொருக்கித் தின்ன
கூட்டமெல்லாம்

சின்ன பொண்ண
தேனியப்போல்
மொச்சித்தின்ன
பாக்குதிப்ப
கேடுகெட்ட இந்த
காட்டினிலே
எத்தன துன்பமடா...

வள்ளியம்மே
கெழவியவ உசுரோட
இருந்த மட்டும்
வீட்டுக்கு வேலியாக
பாதுகாப்பா அவளிருந்தா..

சீக்குவந்து செத்தொடன
இங்க உசுரோட இருந்த
எங்க மூக்காயும்
அவ பொண்ணும்

தனி மரமா ஆனாய்ங்க...

என்னத்த சொல்லி அழ
அதே பசிக்கொடும
அதே அடிம தனம்
துறையோட மல்லுக்கட்டும்
கொடுமைகளும்
தீரவில்ல...

கொலரானு ஒரு பக்கம்
மக்களும் செத்துவிட
வெமிலியா நோயதிலே
கோப்பிக்கூட செத்துவே...

இது போல ஒருநாளு
உச்சி வெய்யில்
பிச்சடிக்கும்
பேய் காத்து சேந்தடிக்கும்
பட்டப்பகல் நேரத்துல

தூரத்துல கங்காணி
நிக்காம வேல செய்யி
மூக்குத்தி போட்டவளே
நடுவாக்கு எடுத்தவளே
என்றெல்லம் நச்சரிக்க...

மாடசாமி. கோயிலுக்கு
சூடமொன்னு
கொளுத்திப்புட்டு...
சூடத்த அள்ளி கொஞ்சம்
நெத்தியில பூசிக்கிட்டா

வேகத்தோட
கோப்பி பறிச்சா
முத்தான
வேர்வையெல்லா
மூக்காயி மூக்கால
உரிஞ்சி கிட்டா.....

ஐய்யய்யோ
அலறல் சத்தம்
வான பிளக்குது
காக்கா குருவியெல்லா
ஓடி ஒழியுது...


என்னாச்சி மூக்காயிக்கு...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

அப்பாவின் வேண்டுகோள்



பசறை சீரா

வீட்டின் வெளிப்பக்க சுவற்று மூலையில் ஏற்பட்டிருந்த சிறு வெடிப்பின் வழியாக மாடியிலிருந்து மழைநீர் இறங்கி, சுவர் முழுவதும் பச்சைபாசி படிந்திருந்தது. மூலையில் பின்னப்பட்டிருந்த சிலந்திவலைக்கு சுவற்றில் ஊரும் நீரால் கட்டிட (வலை) கலை கால் கொடுக்கவில்லை. ஏனெனில் கை கொடுத்திருக்க வாய்ப்பில்லை. மூட்டை முடிச்சுகளை கட்டிக்கொண்டு இன்னொரு மூலையை தேடிச் சென்றுவிட்டது.

மூக்குக் கண்ணாடியை தட்டுத்தடுமாறி தடவி மாட்டிக்கொண்டு நித்திரையுடன் போராட்ட விளிம்புகளில் சண்டைப் போட்டுக்கொண்டிருந்த விழிகளை திறந்த இமைகளுக்கு ஒரு நிமிடம் வட்ட கணிப்பு சாஸ்திரம் அப்படியே வளைந்து கொடுக்காமல் உற்றுநோக்கிக்கொண்டிருந்ததை புரியவைத்துவிட்டது. அப்படியே செந்தாமரைக் குளத்தில் தாமரை இலையின் மேல் வீற்றிருக்கும் தவளையைப்போல் அந்த ஒரு நிமிடத்தைக் கூட அதனால் எப்படி விட்டுக் கொடுத்திருக்க முடியும் அந்த வட்டவடிவ சுவர் கடிகாரத்துக்கு ஒரு அளவும் அசைய முடியாது. ஓடாத முள்ளுக்கு கூட ஒரு நிமிட நேரக் கணக்கை மனக் கடிகாரத்துக்கு மட்டும்தான் கணிக்க இயலும்.

நிசப்தமான வட்டவடிவ கடிகாரத்துக்குப் பின்னால் இருந்துவரும் பல்லி குடும்பங்களின் இரைச்சல் இவ்வளவு நேரமும் மனம் எண்ணிக்கொண்டிருப்பதை ஆமோதிப்பதாக சொல்லிக்கொண்டிருந்தது. பிரதான வாசல் கதவுக்கு முன்னால் இரண்டு செந்நிறவால் குருவிகளும் சிலிர்ப்பிக்கொண்டு சிறகுகளை பரபரப்பாக அடித்துக்கொண்டு அலைமோதிக்கொண்டிருந்தது. அதற்கு தேவையானது கிட்டாததால் நெடுநேரமாக ஒரே இடத்தில் பறந்து திரிந்து கொண்டிருந்தது.

அந்த வாசற்கதவின் நிலைக்கும் கதவின் அடித்தளத்திலும் இருந்த அந்த சிறிய இடைவெளி வெளிர் செந்நிற ஓணான் குட்டிக்கு தஞ்சம் புகுவதற்கு இடத்தைக் கொடுத்துள்ளது. நீண்ட வாலை சுருட்டிக்கொண்டு மூலையில் சுருண்டுக் கிடந்தது. ஆரவார பதைப்பதைப்பு நின்றதும் வேலிக்குள் ஓடி மறைந்துவிட்டது அந்த ஓணான் குட்டி.

இவ்வளவு நேரத்தில் புதருக்குள் புரியாத புதிராக புதைந்திருக்கும். இந்த முறையும் கதவு இடுக்கில் நடந்த கலவரத்தையெல்லாம் கடிகாரம் கவனிக்கவில்லை. காரணம், நேரப் போராட்டத்திலிருந்து சற்று ஓய்வெடுத்திருந்தது முன்புபோல். நில்லாமல் ஓடும் மனவோட்டம் சமையலறையிலுள்ள கேத்தலின் அடிப்பாகத்தையொத்த கருங்காப்பியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

புகைக்கூண்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் வெண்புகை மண்டலத்துள் கேத்தல் அதன் விசில் ஒலியை எழுப்ப ஆரம்பித்துவிட்டது. அதே கருங்காப்பியின் சாயலில் புகைக்கூண்டின் உட்பக்கச் சுவரில் படிந்திருந்த கார்பன் வாயுவின் கருமையையும் சில நீர்த்துளிகள் சுவரோடு ஒன்றிப்போய் முத்துகளாக இருந்த காட்சியையும் மனம் புகைக்கூண்டின் அழுகையாகவே உருவகம் செய்துகொண்டது. அந்தக் கடிகாரத்தின் செயல் வடிவத்திற்கும் ஓட்டத்திற்கும் ஆதாரமான மின்கலத்தை தேடிக்கொண்டிருந்தது சிந்தனை. ஒளிவு மறைவு போராட்டத்துக்குள் தன்னை ஒளித்துக்கொண்டிருந்த அந்த மின்கலத்தை சிந்தனை மின்குமிழ் ஒளிர்ந்து கண்டுபிடித்துவிட்டது. அந்த இராக்கையின் கீழ்த்தளத்திலுள்ள மரப்பெட்டியில் இருந்த மின்கலத்தை எடுத்துக்கொண்டு திரும்பும்போது அந்த ராக்கையின் நேர் எதிரே உள்ள கதவுக்குப் பின்னால் ஒரு தலை எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது.

அறையில் வேறுயாரும் உலாவிக்கொண்டிருந்ததாக தெரியவில்லை. அந்த எட்டிப்பார்த்த முகச்சாடை அந்நிய சாயலை தழுவிக்கொண்டிருந்தது. எப்போதோ பதிவுசெய்யப்பட்ட காட்சியை பிரதி படங்களாக காட்சியமைப்பதும் சுவற்றில் தொங்கிக்கொண்டிருக்கும் உருவப்படங்களைப்போல், அகம் முகத்தின் மாற்றங்களை வெளிக்கொணராமல் இருந்திருக்கும் இந்த முகத்திரையைப் பிரதிபலிக்கும் ஆடிப்பாவை இல்லாமலிருந்திருந்தால். அந்நிய முகத்தக்கும் அகத்தின் முகத்துகு்குமான பந்தத்தை விம்பமாக பிரதிபலித்துவிட்டது கண்ணாடி. அந்த சுவர்க் கடிகாரத்தை சுவற்றிலிருந்து எடுத்தபோது பல்லிகள் மிச்சங்களாக விட்டுச் சென்றிருந்தன அதன் எச்சங்களை சுவர் முழுவதும். நிறுத்தி வைக்கப்பட்ட முள்ளிலிருந்தே மீண்டும் கடிகார ஓட்டம் ஆரம்பமானது. மணிக்கூட்டு கடிகாரத்தின் ஒத்தாசையுடன் சரி வர நேரம் கணிக்கப்பட்டது. அத்தருணம் இனிய அகவை தின சாயலில் இருந்தது. கண்ணாடியின் எதிரொலியில் தெரிந்த உடலியல் ரீதியான மாற்றங்கள் சுவரக்கத்தியையும் சிகை அலங்காரத்தையும் நோக்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்ததைப்போல் கண்ணில் எதிர்ப்பட்ட மனை இயல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் ஓர் எதிர்பார்ப்பை நோக்கிக் கொண்டிருந்தது. பழைமையன மரபுகளைப் பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணி க்கப்பட்ட இந்த உறையுள் அவ்வழக்காறுகளைப் பின்பற்றும் பெயின்டரை வரவழைத்தது.

பத்து வருடங்கள் கழித்தும் சற்றும் மாறாத பெயின்டர். நல்ல நிபுணத்துவமும், தொழில் சுத்தமும், மரியாதையான மனங் கொண்ட வருமாவார். இந்தமுறை மனம் தீட்டி வைத்திருந்த சாயல் வீண்போகவில்லை. வெண்மை நிற மீசையில் ஒட்டிக் கொண்டி ருக்கும் கருமையான உரோமங்களைத் தவிர, அங்க அடையாளங்களை சரிவரக் காட்டிவிட்டது. ஒரு முறை வீட்டை நன்றாக சுற்றும்முற்றும் கவனித்துவிட்டு பெயின்டிங் வேலைகளுக்குத் தேவையான உபகரணங்களும் பெயின்ட் ரின்களும் கலவைகளும் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. தனியார் நிறுவனமொன்றில் தொடர்ச்சியாக வேலை செய்தமையால் அந்நிறுவனத்தால் வழங்கப்படட் விடுமுறை தினங்களில் பெயின்ட் வேலை ஆரம்பமானது. கடும்பச்சை நிறத்திலான சேர்ட்டும் மங்கிய காற்சட்டையும் முழுவதுமாக பல வர்ணசாயல்களில் பெயின்ட் அலங்கரித்து ஆக்கிரமித்திருந்தது. வேலைக்கு மத்தியில் இடம்பெறும் உரையாடல்கள் அதிலும் தோட்டத்து வாழிவியல் களின் தன்மை அவ்வப்போது புன்முறுவலை இலேசாக வெளிக்காட்டிச் செல்லும். அப்படி கதை போனபோக்கில் தன்மகனின் கல்வியின் கையறு நிலையும் பேசுபொருளானது. மகனை கல்வியிலிருந்து இடைவிலக்கும் தீர்மானமிருப்பதாக வெகுளியான பேச்சு வந்தது. வெளிமாவட்ட பாடசாலையொன்றில் தரம் பத்தில் கல்வி பயிலும் மகன் நீண்டகாலம் சுகயீனமுற்றிருந்ததை, உரிய மருத்துவ அறிக்கை மற்றும் ஆவனம் சமர்ப்பிக்கப்படாததை மேற்கோள்காட்டி அவரை பதினொராம் வகுப்புக்கும் சாதாரணதரப் பரீட்சைக்கும் அமர்த்துவது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தின் சிக்கலான தன்மையுமே இந்த இடைவிலகலுக்கு தீர்மானத்திற்கு காரணமானது.

இந்த இடைவிலகும் செயலை, தீர்மானத்தை முற்றாக இடைவிலக்கி வழிகாட்டிய அறிவுரைகளுடன் நான்கு நாட்களில் மீண்டும் தனது சொந்த தோட்டத்தின் பாடசாலையில் மீண்டும் பத்தாம் வகுப்பிலிருந்து கல்வியை தொடருவதற்கு கூறிய கருத்துக்கு மதிப்பளித்து மீண்டும் அவர் பாடசாலைக்கு சேர்க்கப்பட்டார். சாதாரண தரப் பரீட்சைக்கு அமர்ந்த பின் எடுக்கும் தீர்மானம் மகனின் விருப்பத்தில் என்றும் ஒரு அப்பாவின் அறவழி கடமையாக கல்வியை மகன் தொடருவதற்கு ஆழமாக ஒப்புக்கொண்டிருந்தார்.

பெயின்ட் வேலைகள் மிக நேர்த்தியாக முடிக்கப்பட்டிருந்தன. அற்புதமான வாழ்த்துகள், இடையிடையே மேற்கொண்ட உரையாடலில் சிகிச்சையின் பொருட்டு நீண்ட நாள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டிய விடயமும் கலந்துரையடப்பட்டது. ஒருநாள், வைத்தியசாலையில் சிகிச்சை நிமித்தம் செல்வதாகவும் மீள வீடு திரும்பும் நாளை அறியாதவரின் ஆழ்மனதிலும் இருந்த ஓர் ஆசையும் ஏக்கமும் தன் மகனின் கல்வி நடவடிக்கைகளை பற்றி ஆராய்ந்து அறிவுரைகள் கூறவும் ஆழ்மனதிலிருந்து ஒரு அப்பாவாக வேண்டுகோள் விடுத்தார்.

திருமண வாழ்த்துகள்



INTHU @ GANESH

VIVAHA விவாஹ விவாஹா

ஆடி மாதத்தில் ஏன் திருமணம் செய்யக்கூடாதென்று தெரியுமா?



ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த மாதம்

ஆடி மாதம் வந்துவிட்டாலே அடுத்தடுத்து பண்டிகைக் காலம் தொடங்கிவிடும். ஆடி மாதத்தை கர்க்கடக மாதம் என்று சொல்வார்கள். அதாவது சூரிய குரு புனர்பூசம் 4ஆம் பாதத்தில் நுழையும்போது கடகராசியில் சூரியன் செல்வதே ஆடி மாத ஆரம்பம் என்று கூறுவார்கள்.

ஆனால், ஆடி மாதமும், மார்கழி மாதமும் சுபகாரியங்கள் நடத்த ஏற்ற மாதங்கள் அல்ல.

இந்த மாதங்களை பீடை மாதங்கள் என்று சொல்வது தவறான விடயம். இந்த மாதம்தான் இறைவழியில் நம்மை அழைத்துச் செல்லும் மாதம்.

ஆடி மாதத்தில் திருமணம் செய்தால், 10ஆம் மாதம் சித்திரை மாதமாகும். அந்த மாதம் வெப்பம் அதிகமாக இருக்கும். அந்த மாதத்தில் குழந்தை பிறந்தால் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தி குறையும். அதனால்தான் ஆடி மாதத்தில் திருமணம் செய்வதை முன்னோர்கள் தவிர்த்தனர்.

அதேபோல், ஆடி மாதத்தில் பூமி நகரும். பூமி நகரும்போது நில அதிர்வுகளும், கடல் சீற்றமும் அதிகமாக இருக்கும். காற்றும் அதிகமாக வீசும். பலத்த மழை பெய்யும். ஆடி மாதம் என்றால் அம்மனுக்கு உகந்த மாதமாகும்.

ஆடி மாதத்தில் அம்மன் கோயில்களிலும், வீடுகளும், தெருக்களிலும் விழா களைக்கட்டும். மேலும், ஆடி மாதத்தில் கோவில்களில் சிறப்புப் பூஜைகள், தீ மிதித்தல், கூழ் ஊற்றுதல் என்று அந்த மாதம் முழுவதும் வழிபாடு மாதமாக காணப்படும்.

திருமணம் நிறைவேற எளிய மந்திரம் !

திருமணம் தடைப்படுபவர்கள் இந்த ஸ்லோகத்தை தினமும் சொல்லி வந்தால் திருமணத் தடைகள் விரைவில் அகலும்.

திருமணம் நிறைவேற எளிய மந்திரம்

திங்கட்பகவின்மணம் நாறும்
சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்திய வாஎண்
ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து
மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல் துயில்
கூரும் விழுப்பொருளே.

பாற்கடலின் அலைகளுக்கிடையே கொடிய கண்களையுடைய பாம்பணையின் மேல் வைஷ்ணவி என்னும் பெயருடன் அறிதுயிலில் ஆழ்ந்திருக்கும் அன்னை அபிராமியே! பிறைநிலவின் மணம் வீசும் சிறந்த நின் திருவடிகளை எங்கள் சிரத்தின் மேல் கொள்ள எங்களுக்கு வாய்க்கப் பெற்ற பாக்கியம் வேறு தேவர்களுக்கும் வாய்க்குமோ.

திருமண வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பது எப்படி?



திருமண வாழ்வில் ஏற்படும் அதிக பிரச்சினைகளையும் அந்தப் பிரச்சினைகளை எந்த முறையில் தீர்வு கண்டு குடும்பத்தில் சந்தோஷத்தைக் கொண்டுவரலாம் என்றும் பார்க்கலாம்.

உங்களின் துணைவர் உங்களிடம் சின்ன விடயத்துக்கெல்லாம் கோபித்துக்கொள்கிறார் என்றால், அது உங்கள்மீதான கோபமல்ல. நிதானமாக இருந்து அந்தச் சூழ்நிலையை சகஜநிலைக்கு மாற்றுங்கள். என்ன செய்தால் உங்களின் துணைவர் சகஜமாக மாறுவார் என்பதைத் தெரிந்துகொள்ள, கொஞ்சம் வீட்டுவேலைகளை செய்யவேண்டியிருக்கும். மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வீட்டுவேலைகளைச் செய்யலாமே.

தற்போது பெண்களும் அலுவலகம் செல்கின்றனர். எனவே, வீட்டுவேலைகளை சமமாகப் பிரித்து செய்வது அவசியம். பொதுவாக ஆண்கள், வீட்டுவேலைகள் செய்யத் தெரியாமலோ அல்லது செய்யப் பிடிக்காமலோ இல்லை. வீட்டுவேலைகள் செய்வதிலிருக்கும் கடுமையைப் புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் மிக முக்கியமான காரணம். ஒருமுறை தன் மனைவியோடு நின்று அனைத்து வேலைகளையும் சமமாகப் பங்கிட்டு செய்தால் மட்டுமே, இந்தப் பிரச்சினை தீரும். அன்பை அளவில்லாமல் பரிமாறிக்கொள்வதுபோல், வீட்டுச்சுமையையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.


உங்கள் துணைவரின் சிரிப்பு, அழுகை, கோபம் போன்ற உண்மைத்தன்மையை விட, உங்கள் போனில் வரும் உண்மையற்ற தன்மையை சரிபார்க்கத்தான் நேரம் சரியாக இருக்கிறது. குறைந்தபட்சம், வார இறுதிநாளில் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களுக்கு விடுதலை கொடுத்துவிட்டு உங்கள் துணைவரோடு நேரத்தை முழுமையாகச் செலவிடுங்கள். மனம்விட்டு பேசும்போது எந்தக் கவனச்சிதறலும் இல்லாமல் இருப்பது சிறந்தது.

வங்கிக்கணக்கில் பணம் இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, பண விடயத்தில் கணவன் - மனைவிக்கிடையே சண்டைவருவது இயல்பு. கணவன்-மனைவியாய் இருந்தாலும், ஒவ்வொருவருடைய தேவை என்பது வேறு. எண்கள் நிறைந்த தாள் என்பதையும் தாண்டி அது உணர்வுகளின் வெளிப்பாடு. ஆசை இருக்கும் வரையில் காசு வாழும். எது அத்தியாவசியம், எது வீண் செலவு என்பதை கணவன் - மனைவி இருவரும் ஆலோசித்து முடிவெடுப்பது அவசியம்.

தேவைக்கு மீறி செலவு செய்வதில் இருக்கும் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து, பிறகு அடி எடுத்து வைப்பது நல்லது. உங்கள் அன்பை முறிக்கும் எந்த விடயத்தையும் இருவருக்குமிடையில் அனுமதிக்காதீர்கள்.

சந்தோஷமான வாழ்க்கைக்காக சிறிது நேரம் உங்கள் துணைவருக்குச் செலவிடுங்கள். அன்பைவிட வேறென்ன பெரிதாக இருக்கப்போகிறது.

காதல் ஜோதிடத்தில் யார் யாருக்கு என்ன பலன்...



காதல் என்பது ஒரு பழக்கமான வார்த்தை தான் நமக்கு. காதலை ஏற்றுக் கொண்டாடினாலும் அதனால் வரும் பிரிவை மாத்திரம் யாரும் ஏற்க மறுக்கிறார்கள்.

ஆனால், காதலர்களின் ஜோதிடத்தில் யார் யாருக்கு எல்லாம் காதல் வரும், இந்தக் காதல் கிரகணம் உங்கள் வாழ்க்கையை எப்படி மாற்றும் என்பதைப் பற்றி விரிவாக பார்க்கலாம்.

காதலும் கிரகமும்

அதன்படி செவ்வாய் அதிக வீரியத்துக்கு உரியவர். இவர் ஆண்,பெண் உறவில் அதிக வீரியம் கொண்டவர்.

சுக்கிரன், செவ்வாய் சேர்க்கையில் இருக்கும் ஜாதகக்காரர்களுக்கு காதல் வேட்கை அதிகமாக இருக்கும். இந்த சேர்க்கையால் இவர்கள் காதல் விடயத்தில் எந்த எல்லைக்கும் போவார்கள். சுக்கிரன் விருச்சிக ராசியில் இருந்தால் காதல் விடயத்தில் வெறியாகவே இருப்பார்கள், அதேபோல் செவ்வாய் விருச்சிக ராசியில் இருந்தால் காதல் வேட்கை அதிகமாக இருக்கும்.

காதல் ஜோதிடத்தில் உங்கள் பலன்

புதன் மனிதர்களின் நரம்பு மண்டலத்தை ஆள்பவர். இவர் ஆணும், பெண்ணும் இல்லாத ஒரு தன்மையைக்கொண்டவர். சந்திர கிரகமானது தான் காதலிக்கத் தூண்டும் தன்மை உள்ளது.

சந்திரனுக்கும் காதலுக்கும் அதிக தொடர்பு உள்ளது. இந்தச் சந்திரன்தான் சஞ்சல புத்தியையும், சபல எண்ணங்களையும், கற்பனை உலகத்தை உருவாக்கவும் காரணமானவர்.

சனி கிரகமானது காதலில் சிக்கலை உண்டுபண்ணுபவர். இவரால் காதலர்கள் நிறைய அவமானங்களையும் காதல் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டும்.

ராகு மற்றும் கேது கிரகம் திருமணத் தடையையும் காதல் தடையையும் ஏற்படுத்துவது. மேலும் ஒருதலைக் காதல், சட்டரீதியாக திருமணம் செய்தல், பதிவுத் திருமணம் செய்தல் போன்ற விடயங்களுக்கு கேது கறாரானவர்.

பரிகாரம்

உங்கள் ஜாதகத்தில் சுக்கிரன் பாதமாக அமைந்தால் வெள்ளிக்கிழமைகளில் சுக்கிரப் பரிகாரத் தலங்களுக்குச் சென்று தரிசிப்பது நல்லது.

கருத்து வேறுபாட்டால் பிரிந்து சென்ற தம்பதிகளோ, காதலிகளோ வெள்ளிக்கிழமை சுக்கிரனை வழிபடுதல் நன்மையைத் தரும்.

மேலும், சிவ ஆலயங்களுக்குச் சென்று நவக்கிரக சுக்கிர பகவானுக்கு வெள்ளிக்கிழமைகளில் நெய் தீபம் ஏற்றி வந்தால் சுக்கிர தோஷம் நீங்கிவிடும்.

நவராத்திரி பண்டிகை நாட்களில் திருமணம் செய்யாததற்கான காரணம்...



நவராத்திரி பண்டிகை நாட்கள் முப்பெரும் தேவியரை வழிபடுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. வீடுகளில் பத்து நாட்கள் பிரம்மோற்சவம் கொண்டாடுவார்கள். கொலு வைத்து பாடல்கள் பாடி வீட்டுக்கு வரும் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுப்பார்கள்.

நவராத்திரி பண்டிகைக் காலத்தில் நாம் மனதையும் உடலையும் தூய்மையானதாக வைத்திருக்க வேண்டும். விரதம் இருக்கும் இந்தக் காலத்தில் நாம் சில உணவுகளை சாப்பிடக்கூடாது. கண்டிப்பாக அசைவம் சாப்பிடாமல் தவிர்த்து விடுவோம். தெய்வீக வழிபாட்டுக்கு உரிய இந்த மாதத்தில் இந்துக்கள் திருமணம் செய்ய மாட்டார்கள்.

புதிதாக திருமணமான தம்பதியர் தாம்பத்ய உறவில் ஈடுபடக்கூடாது என்பதற்காகவே திருமணத்தை தவிர்த்து விட்டனர்.

நவராத்திரி காலத்தில் அம்மனை வணங்க, சக்தியை வணங்க நமக்கு சக்தி வேண்டும்.

நாம் விரதம் இருக்கும் இந்தக் காலத்தில் தாம்பத்ய உறவில் ஈடுபட்டால் அது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பிரச்சினையை ஏற்படுத்தும். எனவேதான் திருமணம் உள்ளிட்ட சுபகாரியங்களையும் தவிர்த்து விட்டனர்.

நவராத்திரி பண்டிகைக் காலங்களில் மந்திரங்களை உச்சரிப்பது, பூஜை செய்வது என தெய்வீக வழிபாட்டுக்கு மட்டுமே நேரத்தை செலவிட வேண்டும். சைவ உணவுகளை மட்டுமே சாப்பிட வேண்டும். உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சுத்தமாக இருக்க வேண்டும்.


உலக தடகள சம்பியன் ஷிப் தங்கம் வென்றவர்கள்




1500 மீ, 5000 மீ. ஓட்டங்களில் தங்கம் வென்ற முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கென்யாவின் ஃபெயித் கிபிகோன்.



கனடாவின் பியர்ஸ் லெபேஜ் தனது முதல் உலக டெகாத்லான் தங்கப் பதக்கத்தை வென்றார்.



கனடாவின் மார்கோ 800 மீற்றரில் தங்கத்தை வென்றார்.



சுவீடனின் உலக சாதனையாளரான அர்மண்ட் டுப்லாண்டிஸ் போல் வோல்டில் தங்கம் வென்றார்.



இங்கிலாந்தைச் சேர்ந்த கத்தரினா ஜோன்சன் - தோம்சன் உலக கெப்டத்லானில் இரண்டாவது தங்கம் வென்றார்.



பிரிட்டனின் ஜோஷ் கெர், கோ, 1500 மீற்றரில் தங்கம் வென்றார்.



இங்கிலாந்தைச் சேர்ந்த கத்தரினா ஜோன்சன், அவுஸ்திரேலியாவின் தோம்சன் ஆகியோர் கெப்டத்லானில் தங்கத்தைப் பகிர்ந்து கொண்டனர்.



உகண்டாவின் விக்டர் கிப்லாங்காட் ஆண்கள் மரதன் உலக சம்பியனானார். கிப்லாங்காட் 2 மணி 8 நிமிடம் 53 விநாடிகளில் இலக்கை கடந்தார்.



ஆடவருக்கான ஈட்டி எறிதல் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா 88.17 மீ. தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.



பாபர் அசாமின் மூன்று இமாலய சாதனைகள்

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் நேபாள் அணிக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி கெப்டன் பாபர் அசாம் 151 ஓட்டங்கள் அடித்து சாதனை படைத்திருக்கிறார்.

ஆசிய கிண்ணத் தொடரில் 150 ஓட்டங்கள் அடித்த முதல் கெப்டன் என்ற பெருமையை பாபர் அசாம் படைத்திருக்கிறார்.

102 இன்னிங்ஸில் பாபர் அசாம் தன் னுடைய 19ஆவது சதத்தை பூர்த்திசெய்து இருக்கிறார். இதன் மூலம் அதிவேகமாக 19 சதம் அடித்த வீரர் என்ற பெருமையை பாபர் அசாம் பெற்றிருக்கிறார். ஹசீம் அம்லா 102 இன்னிங்ஸில் 18 சதங்களும், மேற்கு இந்திய வீரர் சாய் ஹோப் 14 சதங்களும், அவுஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் 14 சதங்களும் அடித்துள்ளனர்.

கெப்டனாக முதல் 30 இன்னிங்ஸில் அதிக சதம் அடித்த வீரர் என்ற பெருமையை பாபர் அசாம் பெற்றிருக்கிறார்.

பாபர் அசாம் எட்டு சதங்கள் அடித்துள்ளார். விராட் கோஹ்லி 6 சதங்களும், கங்குலி 5 சதங்களும் அடித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் அணி 300 ஓட்டங்களுக்கு மேல் அடித்தபோது அதிக சராசரி வைத்திருக் கும் வீரர்கள் பட்டியலில் பாபர் அசாம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார் . சச்சின் 86.8 சராசரியுடன் முதலிடத்திலும், ரோகித் சர்மா 85 சராசரியுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

ஒரு நாள் கிரிக்கெட்டில் தொடக்க வீரர் கள் இல்லாமல் அதிக முறை 150 ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் பாபர் அசாம் தற்போது மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். பாபர் அசாம் இரண்டு முறை 150 ஓட்டங்கள் அடித்துள்ளார். விராட் கோஹ்லி ஐந்து முறையும் விவியன் ரிச்சர்ட்ஸ் மூன்று முறையும் அடித்திருக்கிறார்கள்.

லியோனல் மெஸ்ஸியின் மெய்ப்பாதுகாவலர்

நட்சத்திர உதைபந்தாட்ட வீரர்களைப் பாதுகாப்பது மிகவும் சிரமமான காரியம். மைதான பாதுகாவலரும், பொலிஸாரும் கடுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தினாலும், ஒருசிலர் அத்துமீறி மைதானத்துக்குள் நுழைந்து விடுவார்கள். மைதானத்தில் இருக்கும் கெமராக்கள் அவர்களை நோக்கித் திரும்பிவிடும்.

மெஸ்ஸி விளையாடும்போது மைதானத்துக்கு வெளியே ஆஜானுபாகுவான கோட் போட்டு, ரை கட்டிய மொட்டை மனிதர் மெஸ்ஸிக்கு சமாந்தரமாக ஓடுவார். மைதானத்தின் கெமராக்கள் பிரத்தியேகமானவரின் நடமாட்டத்தையும் படம் பிடிக்கும். யாசின் சூகோ என்று அழைக்கப்படும் அவர் லியோனல் மெஸ்ஸியின் மெய்க்காப்பாளராகக் கடமையாற்றுகிறார். அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் சிப்பாயான அவர், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் கடற்படை முத்திரையாக பணியாற்றியுள்ளார்.

லியோனல் மெஸ்ஸியின் மெய்க்காப்பாளர் (வலது) அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் சிப்பாய் என்றும், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் கடற்படை அதிகாரியாகப் பணியாற்றியவர் என்றும் கூறப்படுகிறது. இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் கெப்டனும், இன்டர் மியாமியின் இணை உரிமையாளருமான டேவிட் பெக்காம் அவரை பரிந்துரைத்ததாக நேஷன் உட்பட பல உள்ளூர் ஊடக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இருப்பினும், மெஸ்ஸியை பாதுகாப்பாக வைத்திருக்கும் பொறுப்பு அவருக்கு மட்டும் அல்ல. மெஸ்ஸி மற்றும் பாரிஸ் செயின்ட்-ஜெர்மைனில் அவரது முன்னாள் அணி வீரர் செர்ஜியோ ராமோஸ் உட்பட யாலின் சூகோவை ஒரு இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பின்தொடர்கின்றனர்.





நீரஜ் சோப்ராவின் பரிசுத்தொகை 70 ஆயிரம் அமெரிக்க டொலர்

உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டிகள் ஹங்கேரியின் தலைநகர் புடபெஸ்ட்டில் நடைபெற்றன. ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில், இந்தியா சார்பில் ஒலிம்பிக் தங்க மகன் நீரஜ் ஜோப்ரா மற்றும் டி.பி.மானு, கிஷோர் சேனா ஆகியோர் களம் கண்டனர். நீரஜ், தனது இரண்டாவது முயற்சிலேயே 88 புள்ளி 17 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்தார்.

இறுதிப் போட்டியில் ஒவ்வொரு வீரரும் தங்களது அனைத்து முயற்சிகளிலும், நீரஜின் இலக்கை எட்டிப் பிடிக்க முயன்றும் அது பலனளிக்கவில்லை. இதனால், முதலிடம் பிடித்த நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார். ஈட்டியை வீசிய நொடியே தன்னுடைய வெற்றியை நீரஜ் கொண்டாடினார். பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம் வெள்ளியும், செக் குடியரசு வீரர் ஜேக்கப் வட்லெஜ் வெண்கலப் பதக்கத்தையும் வசப்படுத்தினர்.

இந்தப் போட்டியில் நீரஜ் சோப்ராவுக்கு பரிசாக 70 ஆயிரம் அமெரிக்க டொலர் அளிக்கப்பட்டுள்ளது. இது இந்திய மதிப்பில் சுமார் ரூ. 58 இலட்சமாகும். வெள்ளி வென்ற பாகிஸ்தானின் அர்ஷத் நதீமுக்கு இந்திய மதிப்பில் ரூ. 29 இலட்சம் பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

சச்சின் - கோஹ்லிக்கு இடையேயான விநோத ஒற்றுமை

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவானான சச்சின் டெண்டுல்கர், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் எண்ணற்ற சாதனைகளை படைத்து கிரிக்கெட்டின் கடவுளாக ரசிகர்கள் மத்தியில் போற்றப்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்து இந்திய அணியின் பேட்டிங் தூணாக பார்க்கப்பட்டு வருபவர் விராட் கோஹ்லி என்றால் அது மிகையல்ல. இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட்டில் சச்சின் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோருக்கிடையே எதிர்பாராமல் நடந்த நான்கு ஒற்றுமையான விடயங்களை இந்தப் பதிவில் காணலாம்.



அறிமுக போட்டி ஒரே திகதியில் அமைந்தது:

சச்சின், ஒருநாள் கிரிக்கெட்டில் கடந்த 1989ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி பாகிஸ்தான் அணிக்கு எதிராக அறிமுகமாகினார். அதேபோன்று விராட் கோஹ்லி கடந்த 2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18ஆம் திகதி இலங்கை அணிக்கு எதிராக அறிமுகமானார். மாதங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அறிமுகமான திகதி ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் டெஸ்ட் சதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக:

சச்சின் டெண்டுல்கர் கடந்த 1992ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் தனது முதலாவது டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். அதேபோன்று விராட் கோஹ்லியும் கடந்த 2012ஆம் ஆண்டு அடிலெய்டு நகரில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் தனது முதல் டெஸ்ட் சதத்தை பதிவு செய்திருந்தார். இருவருமே அவுஸ்திரேலியா மண்ணில் தங்களது முதல் சதத்தை பதிவுசெய்தனர்.

ஐ.பி.எல். தொடரில் கெப்டனாக ஒரேஞ்சு தொப்பி:

சச்சின் டெண்டுல்கர் கடந்த 2010ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியின் கெப்டனாக அதிக ஓட்டங்களைக் குவித்து ஒரேஞ்ச் தொப்பியை கைப்பற்றி இருந்தார். அதேபோன்று விராட் கோஹ்லி கடந்த 2016ஆம் ஆண்டு ஆர்.சி.பி. அணியின் கெப்டனாக அதிக ஓட்டங்களைக் குவித்து ஒரேஞ்ச் தொப்பியை கைப்பற்றினார்.

கெப்டனாக ஒரே அணிக்கு எதிராக அறிமுகமானது :

சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் கிரிக்கெட்டில் இலங்கை அணிக்கு எதிராக கெப்டனாக அறிமுகமாகினார். அதேபோன்று விராட் கோஹ்லியும் இலங்கை அணிக்கு எதிராகவே ஒருநாள் கெப்டனாக அறிமுகமாகினார். சச்சின் 1996ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் கெப்டனாக அறிமுகமாகினார். 2014ஆம் ஆண்டு விராட் கோஹ்லியும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக டெஸ்ட் கெப்டனாக அறிமுகமாகியுள்ளார்.

தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் வழிகாட்டி



நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

விலை ரூ.60 மட்டுமே

தொடர்புகளுக்கு: 0741684643

ஆசிய கிண்ணத்தில் பாகிஸ்தானின் சாதனைகள்

ஆசிய கிண்ண முதல் போட்டியில் நேபாளமும், பாகிஸ்தானும் முல்தானில் மோதின இந்தப் போட்டியில் பல பெரிய சாதனைகள் படைக்கப்பட்டன.

ஐந்தாவது விக்கெட்டில் இணைந்த பாபர் அசாம் - இப்திகார் அகமது ஜோடி 214 ஓட்டங்கள் சேர்த்தது. இது மூன்றாவது பெரிய இணைப்பாட்டமாகும். 2012ஆம் ஆண்டு ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிராக முகமது ஹபீஸ் - நசீர் ஜாம்ஷெட் ஜோடி அடித்த 224 ஓட்டங்கள் முதலிடத்தில் உள்ளன.

நேபாளத்துக்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் கெப்டன் பாபர் அசாம் 151 ஓட்டங்கள் அடித்தார். ஆசிய கிண்ணத்தில் பாகிஸ்தான் கெப்டன் எடுத்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இதுதவிர இப்திகார் அகமது அதிவேகமாக 67 பந்துகளில் சதம் கடந்தார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

ஹெல்த் ஹெல்த்

மலர் :1 இதழ் : 5 - 03.09.2023

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏன் பக்கவாதம் ஏற்படுகிறது?

மாம்பழத்துடன் சேர்த்து சாப்பிடக் கூடாதவை

இரவு உணவுக்குப் பின் நடப்பது உடல் நலத்துக்கு நல்லதா?

சர்க்கரை அளவு சீராக இருக்கவேண்டுமா? வாழைப்பூவை உணவுடன் சேர்த்துக்கொள்ளுங்கள்



வாழை மரத்திலுள்ள வாழைப்பூ, வாழைக்காய், வாழைத்தண்டு, வாழைப்பழம் என அனைத்துமே நல்லது என்ற நிலையில் வாழைப்பூ சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் என்பதை பார்ப்போம்.

மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் கோளாறுகளையும் இரத்தத்தில் தேவையில்லாத கொழுப்புச் சத்துகள் இருந்தால் அதனையும் வாழைப்பூ சரிசெய்யும்.

இரத்த ஓட்டம் சீராகவும் உதவி செய்யும்.

வயிற்று வலி பிரச்சினை உள்ளவர்கள், உடல் வெப்பநிலையை குறைக்க நினைப்பவர்கள், மலட்டுத்தன்மை பிரச்சினை உள்ளவர்கள், இரத்த அழுத்தம், இரத்தச்சோகை உள்ளவர்கள் வாழைப்பூவை சாப்பிடலாம்.

குறிப்பாக, சர்க்கரை நோயாளிகளுக்கு சிறந்த மருந்து வாழைப்பூ என்று சொல்லலாம், வாழைப்பூ அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவு சீராகும்.

வாழைப்பூவிலுள்ள நரம்பை நீக்கிவிட்டு உப்பு போட்டு நன்றாக அவித்தோ அல்லது பொறியல் செய்தோ சாப்பிடலாம். வாழைப்பூவை வேகவைத்த சாறையும் அருந்தலாம்.

மலக்குடல் கழிவை வெளியேற்ற உதவும் முள்ளங்கி

அன்றாடம் உண்ணும் காய்கறிகளில் பலவித்மான சத்துகளைக் கொண்டவற்றில் முள்ளங்கியும் ஒன்று. முள்ளங்கி சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து அறிந்துகொள்வோம்.



முள்ளங்கியில் விற்றமின் பி, சி, கே, பொட்டாசியம், நார்ச்சத்து உள்ளிட்ட பல சத்துகள் உள்ளன. இதயத்தைப் பலப்படுத்துவதற்குத் தேவையான அந்தோசியனின் முள்ளங்கியில் நிறைந்துள்ளது.

முள்ளங்கி இன்சுலின் செயல்பாட்டை அதிகரித்து இரத்த சர்க்கரையைக் கட்டுப்படுத்துகிறது.

உடலுக்குத் தேவையான நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்கும் விற்றமின் சி முள்ளங்கியில் உள்ளது. இதை சாப்பிடுவதால் பசி அதிகரிக்கும்.

முள்ளங்கி சாப்பிடுவதால் செரிமான மண்டலம் வலுவடைந்து உணவு நன்றாக ஜீரணமாகும். மலக்குடலிலுள்ள கழிவை வெளியேற்றி, குடலைச் சுத்தம் செய்யும்.

முள்ளங்கி சாப்பிடுவதால் கல்லீரலிலுள்ள கழிவுகள் வெளியாகி உடல் சுத்தமாகிறது. முள்ளங்கியை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீரகம் மற்றும் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.

நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் செர்ரி பழங்கள்...

செர்ரி பழங்களை சாப்பிட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். அதனால் அவ்வப்போது செர்ரி பழங்களை சாப்பிட வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

அனைவருக்கும் பிடித்த செர்ரி பழம் புளிப்பு மற்றும் இனிப்பு சுவை கலந்திருக்கும் என்பதாலும் சிவப்பு நிறத்தை கொண்டதாலும் குழந்தைகள் இதனை விரும்பி சாப்பிடுவார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

அதேபோல் பொட்டாசியம், மெக்னீசியம், கல்சியம் ஆகியவையும் உள்ளதால் இந்த பழங்கள் சாப்பிட்டால் நல்ல ஊட்டச்சத்து கிடைக்கும். அதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும் என்பதுடன், ஆரோக்கியத்துக்கும் உதவுகிறது.



செர்ரி பழங்கள் உடலிலுள்ள நரம்புகளில் ஏற்பட்டி ருக்கும் இறுக்கத்தைத் தளர்த்தி ஆழ்ந்த தூக்கத்தை தரும் வல்லமை உடையது. மன அழுத்தங்கள் குறையும்.

ஊட்டச்சத்து நிறைந்த சக்கரவள்ளிக் கிழங்கு



சர்க்கரைவள்ளிக் கிழங்கு உடல் ஆரோக்கியத்துக்கு அவசியமான ஊட்டச் சத்துகளைக்கொண்ட ஒரு கிழங்கு வகையாகும்.

புற்றுநோய் தடுப்பு

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. ஊதா நிற சர்க்கரைவள்ளிக்கிழங்கில் அந்தோசயினின்கள் அதிகளவில் உள்ளன. இது புற்றுநோய் உயிரணுக் களின் அப்போப் டொசிஸை அல்லது திட்டமிடப்பட்ட செல் இறப்பை ஊக்குவிக்கிறது.

பார்வையைப் பாதுகாக்கிறது

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் கண் ஆரோக்கியத்துக்குத் தேவையான பீட்டா கரோட்டின் கணிசமான அளவு உள்ளது. ஒரு கப் சர்க்கரைவள்ளிக் கிழங்கில் 11.3 மில்லிகிராம் பீட்டா கரோட்டின் உள்ளது. 15 மில்லிகிராம் பீட்டா கரோட்டின் சப்ளிமெண்ட்டை எடுத்துக்கொள்வது வயது தொடர்பான மாகுலர் டிஜென ரேஷனிலிருந்து பாதுகாக்கின்றது.

இதய நோய்

சர்க்கரைவள்ளிக் கிழங்கிலுள்ள அந்தோசயினின்கள் இதய நோய் அபாயத்தைக் குறைப்பதுடன், அலர்ச்சிக்கு எதிரான பண்புகளையும் கொண்டுள்ளன.

கொழுப்பைக் குறைக்க உதவுகிறது

பொதுவாக காய்கறிகளிலுள்ள நார்ச்சத்து கொழுப்பைக் குறைக்கிறது. அதேசமயம் இந்த வகை கிழங்கிலுள்ள அதிக பொட்டாசியம் அளவுகள் இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றன.

நோய் எதிர்ப்புச் சக்தி

விற்றமின் ஏ செல்லுலார் தொடர்பு, வளர்ச்சி சிதை மாற்றம் உள்ளிட்ட பிற உடல் செயல்பாடுகளுக்கும் உதவுகிறது. மேலும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இரத்த அழுத்தம்

சர்க்கரை வள்ளிக்கிழங்கிலுள்ள பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் இரத்த அழுத்ததை சீராக்குவதில் நன்மை பயக்கின்றன. பொட்டாசியம் நிறைந்த உணவுகள், இரத்த அழுத்தத்தைக் குறைப்பதன் மூலமும், பக்கவாதத்துக்கு எதிராக பாதுகாப்பதன் மூலமும் இதய ஆரோக்கியத்தை ஆதரிக்க உதவும் என்ற ஆராய்ச்சிகளில் தெரியவந்துள்ளது.

வளர்ச்சிதை மாற்றம்

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் ஏராள மான முக்கிய ஊட்டச்சத்துகள் காணப்படு கின்றன அதன் முக்கிய ஊட்டசத்துகளில் ஒன்றான மாங்கனீயம், வளர்ச்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. உடலிலுள்ள இரத்த சர்க்கரை அளவை சமன் செய்கிறது.

மாம்பழத்துடன் சேர்த்து சாப்பிடக் கூடாதவை



மாம்பழத்துடன் சிலவற்றை சேர்த்து சாப்பிடுவது உடல்நல பாதிப்பை ஏற்படுத்தலாம். அது குறித்து காண்போம்.

மாம்பழமும் பாகற்காயும் எதிரெதிர் சுவை கொண்டவை என்பதால் ஒரேசமயத்தில் இரண்டையும் சாப்பிடக் கூடாது.

மாம்பழம் சாப்பிட்டு உடனே தண்ணீர் குடிக்கக் கூடாது. 15 நிமிடங்கள் கழித்து குடிப்பது நல்லது

மாம்பழம் சூடானது, தயிர் குளிர்ச்சியானது. எனவே, இரண்டையும் ஒன்றாக சாப்பிடக் கூடாது.

மாம்பழம் சாப்பிட்ட பிறகு கார்பனேற்ற குளிர்பானங்களை குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

காரமான உணவுகளுடன் இனிப்பான மாம்பழத்தை சேர்த்து சாப்பிடுவதால் செரிமான பிரச்சினை ஏற்படக்கூடும்.

சாலட் தயாரிக்கும்போது மாம்பழம், தர்ப்பூசணியை ஒன்றாக சேர்த்து சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

நாம் அன்றாடம் பின்பற்றும் சில பழக்கவழக்கங்கள் இதய நோய்களுக்கு வழிவகுக்கும்...

நாம் அன்றாடம் பின்பற்றும் சில பழக்கவழக்கங்கள் இதய நோய்களுக்கு வழிவகுக்கின்றன. பார்ப்பதற்கு சாதாரணமாக தெரிந்தாலும் அவை இதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அத்தகைய பழக்கவழக்கங்கள் குறித்து பார்ப்போம்.

★ தூக்கத்துக்கும் இதய ஆரோக்கியத்துக்கும் நேரடி தொடர்புள்ளது. தினமும் சிலமணி நேரமாவது தடையற்ற ஆழ்ந்த தூக்கம் அவசியமானது. தூக்கமின்மை மன அழுத்தத்துக்கு வழிவகுக்கும். இதயத்தின் செயல்பாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

★ குறட்டை விடும் பழக்கமும் இதயத்துக்கு கேடு தரும். குறட்டை விடும்போது தொண்டை தசைகள் காற்று செல்லும் பாதைக்கு இடையூறு ஏற்படுத்தும். அதனால் சுவாசத்தில் கலந்து செல்லும் ஒக்சிஜனின் அளவு குறையும். குறட்டை பிரச்சினை நீண்டகாலமாக பின்தொடர்ந்துகொண்டிருந்தால் உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற கடுமையான உடல்நலக் கோளாறுகளை எதிர்கொள்ள நேரிடும்.

★ தினமும் ஒரே இடத்தில் உட்கார்ந்து அதிக நேரம் தொலைக்காட்சியைப் பார்ப்பது புகைபிடிக்கும் பழக்கத்தைக் காட்டிலும் மோசமானது என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அரை மணி நேரத்திற்கு ஒருமுறை எழுந்து நடமாடுவது அவசியம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஏனெனில், தினமும் எவ்வளவு நேரம் உடற்பயிற்சி செய்தாலும் ஒரே இடத்தில் நீண்டநேரம் உட்கார்ந்திருப்பது இதயத்துக்கு நல்லதல்ல.

★ மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதும் முக்கியமானது. நீண்டகால மன அழுத்தம் இதயத் துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்கு வழிவகுத்துவிடும். அதனால் தமனி சுவர்கள் சேதமடையும். மன அழுத்தத்தைப் போக்கும் வழிமுறைகளைக் கற்றுக்கொள்வது உடலுக்கும், மனதுக்கும் பலனளிக்கும். தினமும் குறிப்பிட்ட நேரம் ஆழ்ந்த சுவாசப் பயிற்சியும் மேற்கொள்ள வேண்டும்.

★ சமையலில் உப்பு அதிகம் சேர்க்கக் கூடாது. அதிலிருக்கும் சோடியம் தண்ணீரிலும், இரத்தத்திலும் அதிகம் கலக்கும்போது இரத்தத்தின் செயல்பாட்டில் பாதிப்பு நேரும். இதயத்துக்கும் அழுத்தம் கொடுக்கும். அதனால் இதய செயலிழப்பு ஏற்பட வழிவகுக்கும். உடலின் தேவைக்கேற்ப போதுமான இரத்தத்தை இதயம் பம்ப் செய்ய முடியாதபோது இதய செயலிழப்பு உண்டாகும்.

★ இதயத்தின் ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் உணவு முக்கிய பங்கு வகிக்கிறது. பழங்கள் மற்றும் காய்கறிகள், முழு தானியங்கள், குறைந்த கொழுப்புள்ள பால் பொருட்கள், கோழி, மீன் மற்றும் பருப்பு வகைகள் போன்றவற்றை சாப்பிட வேண்டும்.

★ இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு ஈறுகளின் ஆரோக்கியத்தைப் பேணுவது இன்றியமையாதது. வாய் வழியாக பல நோய்கள் உருவாகின்றன. முதலில் பற்களில் தொற்றுகள் பரவி இதயத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடும்.

★ தினமும் தவறாமல் ஒரு கப் காப்பி பருகுவது இதய நோய் அபாயத்தைக் குறைக்க உதவும் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. காப்பியை தவறாமல் உட்கொள்ளும்போது இதய தமனிகளில் கல்சியம் சீராக இருக்கும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

★ கைகளை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் அதில் பாக்டீரியாக்கள் படிந்துவிடும். சாப்பிடும்போது உடலுக்குள் புகுந்து உடல் ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு, இதயத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சிறுநீரகம் பாதிப்புக்கான அறிகுறிகள்...

நமது உடலில் சிறுநீரகங்கள் மிகவும் முக்கியமானவை. சிறுநீரகங்கள் இரத்தத்தை வடிகட்டுகின்றன. சரிமான அமைப்பிலிருந்து வெளியேறும் கழிவுகள் அதிகப்படியான திரவங்களை வெளியேற்றுகின்றன. ஆனால், இதய நோய்கள், சர்க்கரை நோய், புற்றுநோய் போல் சிறுநீரகப் பிரச்சினைகளும் பயங்கரமானவை.



இந்தப் பிரச்சினைகள் எப்படி ஏற்படுகின்றன என்பதை தெரிந்துகொள்வோம்.

சிறுநீரின் நிறம் மாறினால் அல்லது சிறுநீர் அசாதாரணமாக இருந்தால், அது சிறுநீரகப் பிரச்சினையாக இருக்க வாய்ப்புள்ளது.

சிறுநீரகங்கள் சரியாக செயல்படவில்லை என்றால், கழிவுகளை சுத்தம் செய்யும் செயல்முறை பிரச்சினைக்கு உள்ளாகும்.

இதனால், அந்தக் கழிவுகள் இரத்தத்தில் கலந்து, வாயில் துர்நாற்றம் வீசுகிறது.

சிறுநீரகங்கள் முற்றிலும் சேதமடைந்தால், சுவை மற்றும் பசியின்மை திறன் வெகுவாகக் குறையும்.

இரத்தத்திலுள்ள கழிவுகளின் விளைவாக அடிக்கடி குமட்டல் மற்றும் வாந்தி ஏற்படும்.

சிறுநீரக செயல்பாடு குறைவது இரத்த சிவப்பணு உற்பத்தியை பாதித்து சோர்வு மற்றும் மூளை தொடர்பான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

சிறுநீரகம் அமைந்துள்ள பின்பகுதியில் வலி அதிகமாக இருக்கும், இது சிறுநீரக செயலிழப்புக்கான பொதுவான அறிகுறியாகும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏன் பக்கவாதம் ஏற்படுகிறது?

மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படுவதால் பக்கவாதம் ஏற்படுகிறது.



பக்கவாதம் வராமல் தடுக்க நீரிழிவு நோயாளிகள் இவற்றை பின்பற்ற வேண்டும்.

அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் கூட இரண்டு நிமிடத்திற்கு ஒருவர் பக்கவாத நோயால் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றார்.

நீரிழிவு நோயாளிகளுக்கு பக்கவாதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாவது கீழ்க்கண்ட காரணங்களால் என கண்டறியப்பட்டுள்ளது.

1) நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இல்லாதபோது உடலிலுள்ள இரத்த நாளங்களில் அழற்சி (இன்பளமேஷன்) ஏற்பட்டு, இரத்த நாளங்கள் பாதிப்படைகின்றன. மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படுவதால் பக்கவாதம் ஏற்படுகிறது.

2) பாதிப்படைந்த இரத்த நாளங்களில், தமனிக்குழாய் தடிப்பு (அதிரோஸ்கிலோரி டக் பிளேக்) ஏற்பட்டு இரத்த நாளங்களில் அடைப்பு உருவாகிறது. இது மூளைக்கு செல்லும் ஒக்சிஜன் அளவை குறைத்து பக்கவாதத்தை ஏற்படுத்துகின்றது.

3) பெரும்பாலும் நீரிழிவு நோயாளிகளுக்கு கூடுதலாக இருதய நோய், அதிக கொலஸ்ட்ரால், சிறுநீரக பாதிப்பு, இரத்தக் கொதிப்பு, உடல் பருமன் போன்றவையும் இருப்பதால் பக்கவாதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாகிறது.

பக்கவாதம் வராமல் தடுக்க நீரிழிவு நோயாளிகள் இவற்றை பின்பற்ற வேண்டும்:

இரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்தல், இரத்தத்தில் கொலஸ்ட்ரால் மற்றும் இரத்தக் கொதிப்பை கட்டுக்குள் வைத்தல், புகை பிடித்தல் மற்றும் மது பழக்கத்தை விட்டொழிதல், உடல் எடை குறைத்தல், தினமும் உடற்பயிற்சி செய்தல், நார்ச்சத்து நிறைந்த உணவுகள், கீரைகள், காய்கறிகள், பழங்கள், புரதம் நிறைந்த பால், மீன் அல்லது கோழி இறைச்சி, முட்டையின் வெள்ளை போன்ற ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுதல்.

காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாத உணவுகள்...

காலையில் எழுந்ததும் பலரும் பலவகையான உணவுகளைக் கட்டுப்பாடின்றி சாப்பிடுவார்கள். ஆனால், சில உணவுகளைக் காலையில் சாப்பிட்டால் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். நீங்கள் சில உணவுகளைக் காலையில் சாப்பிட்டால் அன்றைய நாள் தொடங்கி பல விளைவைச் சந்திக்க வைக்கும்.



காப்பி, தேநீர்

பலர் காலையில் சூடான காப்பி மற்றும் தேநீருடன் தொடங்குகிறார்கள். குடிக்கும்போது நல்ல புத்துணர்ச்சியைத் தருகிறது. ஆனால், அதன் பிறகு பல பிரச்சினைகளை உண்டாக்குகிறது. வெறும் வயிற்றில் தேநீர் மற்றும் காப்பி குடிப்பதால் அமிலத்தன்மை ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி நீரழிவு பிரச்சினையும் ஏற்படுகிறது. இவற்றுக்குப் பதிலாக தண்ணீர் குடிப்பது நல்லது. இரவு முழுவதும் ஊறவைத்த பாதாம் மற்றும் திராட்சையை காலையில் எடுத்துக்கொள்ளவும். அதன்பின் தேநீர், காபி குடித்தால் பிரச்சினைகள் வராது.

குளிர் பானங்கள்

குளிர் பானங்களை வெறும் வயிற்றில் சாப்பிடாமல் இருப்பது நல்லது. இவற்றை உட்கொள்வதால் குமட்டல், வாயு போன்ற பிரச்சினைகள் ஏற்படும். எனவே, இவற்றிடமிருந்து தள்ளியிருப்பது மிக நல்லது. பொதுவாகவே குளிர் பானங்களை காலையில் யாரும் எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது.

ஐஸ் தேநீர், கோல்ட் காப்பி

பலர் காலை எழுந்ததும் ஐஸ் தேநீர் மற்றும் கோல்ட் காப்பியை குடிப்பார்கள். காலை எழுந்ததும் ரி லாக்சேஷன் என நினைத்து ஐஸ் தேநீர், கோல்ட் காப்பியை குடிப்பார்கள். வெறும் வயிற்றில் இதை உட்கொண்டால் வயிற்றிலுள்ள சளி சவ்வை சேதப்படுத்துகிறது. மேலும் சரிமானத்தை மெதுவாக்குகிறது.

பச்சை காய்கறிகள்

பலர் பச்சை காய்கறிகளுடன் சாலட் சாப்பிடுகிறார்கள். இதனால் எடை குறையும். ஆனால், வெறும் வயிற்றில் சாப்பிட்டால், சரிமான அமைப்பில் குழப்பம் ஏற்பட்டு, வயிற்றுவலி வரும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுபோன்ற பச்சை காய்கறிகள் சாப்பிடுபவர்கள் சாப்பிடும் காய்கறிகள் சரி மானமாவதற்கு அந்தளவுக்கு உடற்பயிற்சி செய்வார்கள்,

காரமான உணவு

சிலர் காலையில் காரமான உணவுகளை சாப்பிடுவார்கள். இது நல்லதல்ல. பொதுவாக இது சாதாரண நேரங்களில் நன்றாக இருக்காது. இதனை வெறும் வயிற்றில் சாப்பிட்டால், வயிற்றில் பிரச்சினை ஏற்பட்டு அமிலத்தன்மையை உண்டாக்கும்.

இடுப்பிலுள்ள கொழுப்பைக் குறைக்க இந்தப் பயிற்சிகளை செய்யுங்கள்!

பின்வரும் பயிற்சியை செய்துவந்தால் இடுப்புப் பகுதியிலுள்ள கொழுப்பு குறைவதோடு மட்டுமன்றி ஏராளமான ஆரோக்கிய நன்மைகளையும் பெறலாம்.

சைட் லெக் பயிற்சி (Side Leg Exercise)

சைட் லெக் பயிற்சியை செய்வதற்கு முதலில் யோகா செய்யும் பாயை விரித்து நேராக படுத்துக்கொள்ளவும்.

பின் ஒரு புறமாகத் திரும்பி கால்களை ஒன்றின் மீது ஒன்றாக வைத்துக்கொள்ளவும். உங்களின் ஒரு கையால் தலையை பிடித்துக்கொள்ளலாம்.

இப்போது கால்களை மேலும், கீழும் மற்றும் இடது, வலது புறத்திலும் அசைக்க வேண்டும்.

உங்களால் முடிந்தவரை பலமுறை இந்தப் பயிற்சியை செய்யுங்கள்.



டம்பெல் சைடு லேட்டரல் ரைஸ் பயிற்சி (Dumbbell Side Lateral Raise Exercise)

இந்தப் பயிற்சியானது கொழுப்பைக் குறைக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் தொப்பை குறைவதுடன், நல்ல உடல் வடிவத்தையும் பெறலாம். இந்தப் பயிற்சியை செய்வதற்கு டம்பெலுக்குப் பதிலாக இரண்டு கடினமான பொருட்களையும் பயன்படுத்தலாம்.

slim waist exercise dumbells செய்வது எப்படி?

நேராக நின்று, உங்கள் இரு கைகளிலும் டம்பெல்ஸை பிடித்துக் கொள்ளவும்.



இப்போது உங்களுடைய கைகளை மெதுவாக மேலே உயர்த்தவும், இரு கைகளும் ஒரே நேர் கோட்டில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பின்னர் மெதுவாக டம்பெல்ஸை கீழே இறக்கவும்.

இந்த உடற்பயிற்சியை 20 முறை வரை செய்யலாம்.

இடுப்பு கொழுப்பை குறைக்க குதிகால் தொடுதல் பயிற்சி(Heel touch exercise)

உங்களுடைய இடுப்பு பகுதியில் அதிகமாக கொழுப்பு சேர்ந்திருந்தால் இந்த குதிகால் தொடுதல் பயிற்சியை தவறாமல் செய்யுங்கள். இது உங்கள் இடுப்புக்கு நல்ல வடிவத்தை கொடுப்பதுடன் உடலுக்கு நல்ல நெகிழ்வு தன்மையையும் கொண்டு வருகிறது. இந்த பயிற்சியின் எளிமையான செய்முறையை தெரி ந்து கொள்ளுங்கள்.

slim waist exercise heel touch செய்வது எப்படி ?

முதலில் நேராக படுத்துக்கொள்ளவும்.

பின்னர் உங்கள் முழங்கால்களை வளைத்து, பாதங்களை தரையில் ஊன்றிய படி வைத்து கொள்ளவும்.


இப்போது கழுத்தை சற்று உயர்த்தி உங்கள் இரு கைகளாலும் கணுக்கால்களை தொட முயற்சி செய்யவும்.

இந்த பயிற்சியை 20 முறை பொறுமையாக செய்யவும். தொடர்ந்து செய்து வந்தால் கண்டிப்பாக சில நாட்களிலேயே சிறந்த பலன்களை பெறலாம்.



பின்னோக்கி ஓடும் உடற்பயிற்சி

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஜப்பானியர்கள் கடைப்பிடித்ததுதான் Backward running என சில வரலாற்றுக் குறிப்புகள் இருக்கின்றன. இதுபற்றி நவீன ஆராய்ச்சிகளும் நிறைய நடத்தியிருக்கிறார்கள். 26 பெண்களை வாரத்தில் 3 நாட்களுக்கு இதுபோல் Backward running முறையில் பின்னோக்கி ஓடவைத்து ஆராய்ச்சி செய்தார்கள்.



15 முதல் 45 நிமிடங்கள் வரை தொடர்ந்த இந்தப் பயிற்சி 6 வாரங்களாக மேற்கொள்ளப்பட்டது. இதில் பலருக்கு அதிகமான உடல் எடை குறைந்ததாக ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். மேலும், இதுபோல் பின்னோக்கி ஓடும்போது முழங்காலுக்குக் குறைவான அழுத்தம் கிடைப்பதால், முழங்காலில் ஏற்படும் காயங்களும் கணிசமான அளவில் குறைவதாகவும் கூறுகின்றனர்.

சாதாரணமாக ஓடுவதைவிட, பின்னோக்கி ஓடும்போது ஒவ்வொரு அடியின்போதும் பின்புறம் மற்றும் பின்னங்கால்களின் தசைகளை அதிகமாக உபயோகிக்கிறோம். இதனால் அதிகப்படியான ஆற்றலும், முழு கவனமும் தேவைப்படுகிறது. கவனம் ஒருமுகப்படுவதால் ஒருவிதத்தில் நம்முடைய மன அழுத்தத்தை குறைக்க முடிகிறது.

சிலர் நிமிர்ந்த நிலையில் நேராக நடக்காமல் கூன் விழுந்ததுபோல் நடப்பார்கள். இதனால் சரியான தோற்றம் (Straight posture) இல்லாமல் இருக்கும். பின்னோக்கி ஓடுவதால், பின்புறம் மற்றும் பின்னங்காலின் தசைகளும், நரம்புகளும் வலுவடைவதால் நிமிர்ந்த நேரான தோற்றத்தையும் பெற முடியும்.

சாதாரணமான ஓட்டப்பயிற்சியின்போது எடை குறைப்பதற்காக நீண்ட தொலைவு ஓட வேண்டியிருக்கும். இதனால் விரைவிலேயே களைப்படைவதோடு ஆர்வமும் குறைய ஆரம்பிக்கும். இதுவே பின்னோக்கிய நடைப்பயிற்சியோ, ஓட்டப்பயிற்சியோ எதுவாக இருந்தாலும் ஒருவித ஆர்வத்தோடு செய்வோம்.

மற்ற உடற்பயிற்சிகள் செய்வதால் தசைவலி, உடல்வலி ஏற்படும்போது சற்றே தொய்வடைந்து இடையில் நிறுத்திவிடுவோம். அதுபோன்ற நேரங்களில் இந்தப் பின்னோக்கிய ஓட்டப்பயிற்சியைத் தொடரலாம்.

இதைச் செய்வதால் தசைகளுக்கு எந்த வலியும் ஏற்படாது. இடுப்பு, பின்புறம், பின்னங்கால்கள் மற்றும் தோள்கள் நல்ல திண்மை பெற்று பார்ப்பதற்கு அழகான தோற்றத்தைக் கொடுக்கிறது.

இதற்காக மைதானத்துக்கோ வெளியிடங்களுக்கோ செல்லவேண்டிய அவசியம் இல்லை. வீட்டிலேயே தோட்டம், மொட்டை மாடி போன்ற இடங்களிலும் செய்வதற்கு எளிதானது. ட்ரெட்மில்லில் இதுபோன்ற பயிற்சிகள் செய்யும்போது கவனமுடன் செய்வது அவசியம்.

இரவு உணவுக்குப் பின் நடப்பது உடல் நலத்துக்கு நல்லதா?

நாம் உணவு உண்ணும்போது, வயிற்றில் ஜீரண சாறுகள் சுரந்து, உணவை ஜீரணிக்க உதவுகிறது. சாப்பிட்ட பிறகு சுறுசுறுப்பாக இருக்கும்போது நடந்தால், அது வயிற்றில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தும். இதனால், உணவு செரிமான மண்டலத்துக்கு எளிதாக நகர்ந்து விரைவாக செரிமானமாகிறது. மேலும், உணவு உண்டவுடன் வாயுத் தொல்லை, அசிடிட்டி போன்ற பிரச்சினைகள் இருக்காது. இது சாப்பிட்டவுடன் ஏற்படும் வயிற்று உப்புசத்தையும் நீக்குகிறது.



இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவும்

இரவு உணவுக்குப் பிறகு நடைப்பயிற்சி மேற்கொள்வது இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது. அதனால்தான் நிபுணர்களின் கூற்றுப்படி, உணவுக்குப் பிறகு நடப்பது மிகவும் முக்கியமாகிறது. டைப் 1 மற்றும் டைப் 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இரவு உணவுக்குப் பிறகு நடைப்பயிற்சி செய்வதால் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதை எளிதாக்குகிறது. எனவே, சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த, இரவு உணவுக்குப் பிறகு சுமார் 30 நிமிடங்கள் நடக்கவும்.

எடை இழப்புக்கு உதவும்

இரவு உணவுக்குப் பிறகு நடைப்பயிற்சி செய்தால், உடல் எடை குறையும். இருப்பினும், இதனுடன் கலோரி எண்ணிக்கை மற்றும் உடற்பயிற்சியிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உடல் எடையைக் குறைக்க ஜிம்முக்கு செல்வது மட்டுமே போதுமானதென பலர் நினைக்கின்றனர். ஆனால் உணவுக்குப் பிறகு வழக்கமான நடைப்பயிற்சி செய்வதும் எடை குறைப்புக்கு அவசியம் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

இதய ஆரோக்கியத்துக்கு உதவும்

உணவுக்குப் பின் நடப்பதும் இதய ஆரோக்கியத்துக்கு சிறந்தது. இருப்பினும், பல சந்தர்ப்பங்களில், இரவு உணவுக்குப் பிறகு வேகமாக நடப்பது அசௌகரியம் அல்லது வலியை ஏற்படுத்தும். எனவே, இதுபோன்ற பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொண்டால், சாப்பிடுவதற்கும் நடைப்பயிற்சி செய்வதற்கும் இடையே சிறிதுநேரம் இடைவெளி எடுத்துக்கொள்ளுங்கள்.

சாப்பிட்டவுடன் மிக வேகமாக நடக்கக் கூடாது

இரவு உணவுக்குப் பிறகு நடக்கும்போது, உங்கள் திறனுக்கேற்ப நடக்க வேண்டும் என்பதை மனதிற்கொள்ள வேண்டும். நீங்கள் உங்களின் சக்திக்கு மீறி நடந்தால், நரம்புகள் நீட்சி, தசைப்பிடிப்பு, மிகவும் சோர்வாக இருப்பது போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம். மேலும், சாப்பிட்ட உடனேயே நடக்க முடியாமல் பலர் சிரமப்படுவார்கள். அத்தகைய சூழ்நிலையில், சாப்பிட்ட பிறகு, சிறிதுநேரம் இடைவெளி எடுத்துக்கொண்டு நடக்க வேண்டும். இன்னும் ஒரு விடயத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும், சாப்பிட்டவுடன் மிக வேகமாக நடக்காமல் மெதுவாக நடக்க வேண்டும்.

செம்பருத்திப் பூவின் அற்புத மருத்துவப் பயன்கள்...



செம்பருத்திப் பூவின் சாற்றுடன் சம அளவு தேங்காயெண்ணெய் சேர்த்து வாணலியில் இட்டு காய்ச்சி, வடி கட்டி, கண்ணாடி போத்தல்களில் பத்திரப்படுத்த வேண்டும். இந்த எண்ணெயை தினமும் தடவி வர தலைமுடி கறுப்பாகி அடர்த்தியாக வளரும்.

மாதவிடாய் காலத்தில் அதிகமாக உண்டாகும் குருதிப் பெருக்குக்கு பத்து செம்பருத்திப் பூக்களின் இதழ்களை நெய்யில் வதக்கி சாப்பிட வேண்டும். செம்பருத்திப் பூ இதழின் வடிசாறு சிறுநீர் கழிக்கும்போது உண்டாகும் எரிச்சலை நீக்கும். நீர் சுருக்கைப் போக்கி சிறுநீரை பெருக்கி நஞ்சுகளை வெளியேற்றும். இனப்பெருக்க உறுப்பு நோய்களுக்கும் இது மருந்தாகின்றது.

செம்பருத்திப் பூ இதய நோய் அணுகாமல் தடுக்கும் அற்புதமான டொனிக். செம்பருத்திப் பூவை பசுமையாகவோ, காய வைத்து பொடி செய்தோ வைத்துக்கொண்டு, பாலில் கலந்து காலை, மாலை வேளைகளில் குடித்து வர இதய பலவீனம் தீரும்.

உடல் சூடு காரணமாக பலருக்கு வாய்ப்புண், வயிற்றுப்புண் உண்டாகும். அவர்கள் தினம் 10 பூவின் இதழ்களை மென்று சாப்பிட்டால் புண்கள் ஆறும். ஒரு மாதகாலம் தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்.

செம்பருத்திப் பூ குளிர்ச்சி பொருந்தியது. சருமத்திற்கு இதமும், சுகமும் அளித்து இரத்தத்தை சுத்தம் செய்து உடலை பளபளப்பாக்கும்.

செம்பருத்திப் பூக்களை அரைத்து தலையில் தடவி ஊற வைத்துக் குளிக்க தலையிலுள்ள பேன்கள் குறையும். 10 செம்பருத்திப் பூ இதழ்களை நீரில் இட்டு காய்ச்சி குடித்து வர சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சல் குணமாகும்.

செம்பருத்திப் பூ, உடல் வெப்பத்தை அகற்றி குளிர்ச்சியை உண்டாக்கும். கர்ப்பப்பை நோய்கள், இதய நோய்கள், இரத்த அழுத்தம் போன்றவைகளுக்கு சிறந்த நிவாரணியாகும். செம்பருத்திப் பூவின் இதழ்களை 200 மி.லீ. நீரில் கொதிக்க வைத்து, காலை நேரத்தில் அருந்தி வந்தால், இரத்த அழுத்தம் சீராகும்.

செம்பருத்திப் பூ தூளுடன் சம எடை அளவு மருதம்பட்டைத் தூள் கலந்து ஒரு தேக்கரண்டி அளவு காலை, மாலை சாப்பிட, இரத்தத்தில் இரும்புச்சத்து அதிகரித்து இரத்தச்சோகை நோய் குறையும்.

வயிற்றுப்போக்கை குணப்படுத்த இயற்கை மருத்துவம்



அதிக காரமுள்ள உணவுப் பொருட்களை சாப்பிடுவதால் ஏற்படும் அல்சர் மற்றும் மன உளைச்சல் காரணமாக வயிற்றுப்போக்கு ஏற்படும்.

உணவு ஒவ்வாமை, உணவு விஷமாதல், பக்டீரியா அல்லது வைரஸ் தொற்று, வயிற்றில் ஒட்டுண்ணிகள் பரவுதல் ஆகியவை காரணமாகவும் வயிற்றுப்போக்கு உண்டாகின்றது.

உணவு விஷமாவது, அதிகளவில் ஏற்படும் பாதிப்பு. விஷமாகிப் போன உணவைச் சாப்பிட்ட இரண்டு முதல் 34 மணி நேரத்திற்குள், கடுமையான பாதிப்பு ஆரம்பித்துவிடும். வயிற்றுப்போக்கால் இரு முக்கிய பிரச்சினைகள் ஏற்படும். ஒன்று நீர்ச்சத்துக் குறைபாடு, மற்றொன்று ஊட்டச்சத்துகளை இழப்பது. சாப்பிட்ட உணவு செரிக்காமல் போவதால், உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைக்காது. இதை ஈடுகட்ட ஏற்கனவே உடலில் இருக்கும் சத்துகள் அனைத்தும் பயன்படுத்தப்படும். இதனால் உடலிலுள்ள சத்துகள் தீர்ந்துபோய், ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும்.

மாதுளை:

மாதுளையின் துவர்ப்புச் சக்தி வயிற்றுப்போக்கை நிறுத்த அதிகளவில் உதவும். மாதுளையின் ஜூஸ் மட்டுமல்ல, அதன் விதை கூட வயிற்றுப்போக்குக்கு நல்லதுதான். வயிற்றுப்போக்கு ஏற்படும்போது மாதுளம் பழம் ஜூஸ் குடித்தால் நல்லது. ஒரு நாளைக்கு 3 அல்லது 4 டம்ளர் மாதுளை ஜூஸ் குடிக்கலாம். ஜூஸாக குடிக்காமல் பழமாக சாப்பிட்டால் 2 பழம் போதுமானது.

தேன்:

தேன் ஒரு சிறந்த இயற்கை மருந்தாகும். இது பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் பாதுகாப்பான உணவாகும். தேன் மற்றும் ஏலக்காய் பொடியை வெந்நீரில் கலந்து நாளொன்றுக்கு இரண்டு முறை குடித்தால் வயிற்றுப்போக்கு சரியாகும்.

இஞ்சி:

அஜீரணத்திற்கு இஞ்சி ஒரு மிகச் சிறந்த மருந்தாகும். இதில் இருக்கும் ஆன்டிபாக்டீரியல் குணம் வயிற்றுப்போக்கை நிறுத்தும். அரை ரீஸ்பூன் சுக்குப் பொடியை மோரில் கலந்து நாளொன்றுக்கு 3 அல்லது 4 முறை குடித்தால் வயிற்றுப்போக்கு குணமாகும்.

மோர்:

மோரிலுள்ள அமிலத்தன்மை செரிமான இயக்கத்திற்கு உதவுகிறது. ஒரு டம்ளர் மோரில் உப்பு, சிறிது ஜீரகப் பொடி, ஒரு சிட்டிகை மஞ்சள்தூள் மற்றும் மிளகுத்தூள் சேர்த்து, நாளொன்றுக்கு 2 அல்லது 3 முறை குடித்தால் வயிற்றுப்போக்கிற்கு நல்லது. இது உடலில் நீர்ச்சத்து குறைபாட்டை சரிசெய்ய உதவுகிறது.

தேயிலை:

தேயிலையால் பிளாக் ரீ தயாரித்து அதில் எலுமிச்சை சாற்றைக் கலந்து குடித்தால் விரைவாக வயிற்றுப்போக்கு குணமடையும்.

குழந்தைகளுக்கு உணவு மற்றும் பானம் வழங்க வெள்ளிப்பாத்திரம் பயன்படுத்தலாமா?



இன்று பலவிதமான பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருந்தாலும், வெள்ளிப் பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்க சில மருத்துவக் காரணங்கள் உள்ளன. அவற்றை நீங்கள் தெரிந்துகொண்டால், நிச்சயம் இதைத் தவிர்க்க மாட்டீர்கள். மற்ற உலோகங்களுடன் ஒப்பிடும்போது வெள்ளிப் பாத்திரங்கள் சற்று விலை அதிகமானவை என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. எனினும், நீங்கள் செலவு செய்யும் பணத்துக்கு உறுதியாக இந்த வெள்ளிப் பாத்திரங்கள் பலன் தரும் என்பது உண்மை.

வெள்ளிப் பாத்திரங்களைக் குழந்தைகளுக்கு உணவு தரப் பயன்படுத்தலாம் என்பதற்கு இங்கே சில முக்கிய காரணங்களையும் நன்மைகளையும் காணலாம்.

பக்டீரியாக்களை அகற்றிவிடும்

நம் பெரியோர்களின் அறிவுரைப்படி, குழந்தைகளுக்கு வெள்ளிப் பாத்திரத்தில் உணவு தரும்போது அதிலுள்ள நுண்ணுயிர்கள் முற்றிலுமாக அகற்றப்படும். இதனால், நீங்கள் அதிக சிரமப்பட்டு பாத்திரத்தைச் சுத்தப்படுத்தத் தேவையில்லை. சாதாரணமாகத் தண்ணீரில் கழுவினாலே, வெள்ளிப் பாத்திரம் சுத்தமாகிவிடும். இதனால் குழந்தையின் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகின்றது.

நோய் எதிர்ப்புச் சக்தி

குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் வெள்ளிக் கிண்ணத்தில் உணவு அளிப்பதால் அவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது. சூடாக உணவை வைத்து தரும்போது, வெள்ளியின் எதிர்ப்பு பக்டீரியல் பண்புகள் அதிகமாகி உணவில் கலக்கின்றன. இதனால் குழந்தைகளுக்கு உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகின்றது.

நச்சுத்தன்மையும் இருக்காது

வெள்ளிபங பாத்திரங்களில் உணவைச் சூடாக வைக்கும்போது எந்தவிதமான நச்சுத்தன்மையும், இரசாயன செயல்பாடும் நடக்காது. வெள்ளியை பல விதிமுறைகளுக்குப் பின்னரே சுத்திகரித்து பின் தேவைப்படும் பாத்திரமாக வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டுக்குத் தருகின்றார்கள். இதனால், இதில் எந்த நச்சுத் தன்மையும் இருக்காது.

கெட்டுப் போகாது

வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்படும் உணவு அதிக நேரத்துக்கு தன் தன்மையை இழக்காமல் புதிதாக இருக்கும். விரைவில் கெட்டுப் போகாது. இதனாலேயே பழங்காலங்களில் மக்கள் வெள்ளி குடங்களில் தண்ணீர் சேமித்து வைப்பார்கள். மேலும் உணவுப் பொருட்களை வெள்ளிப் பாத்திரங்களில் வைப்பார்கள். ஆக இந்த வெள்ளிப் பயன்பாடு நம் முன்னோர்கள் காலத்திலிருந்தே வழக்கத்தில் இருந்துள்ளது.

உடல் சூடு சீராகும்

வெள்ளியின் மற்றுமொரு முக்கியமான பண்பு என்னவென்றால், இதில் உணவை உண்ணும்போது உடல் சூட்டைச் சீராக வைத்துக் கொள்ள உதவும். இதனாலேயே வெள்ளியை நகை/ஆபரணங்கள் செய்ய அதிகம் பயன்படுத்து கின்றனர்.

கருஞ்சீரக எண்ணெயின் மரத்துவப் பயன்கள்



கருஞ்சீரகம் எண்ணற்ற மருத்துவ பலன்களைக் கொண்டுள்ளது.

கருஞ்சீரகத்தைப் போலவே கருஞ்சீரக எண்ணெயும் (Black Cumin Oil) சாதாரண தலைவலி முதல் சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் போன்ற ஆபத்தான நோய்களுக்கும் தீர்வு தருகின்றது.

சர்க்கரைநோய்க்கு ஒரு ரீஸ்பூன் கருஞ்சீரக எண்ணையை காலை மாலை தேநீர் கலவையில் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வர சர்க்கரை வியாதி குறைந்து உடலில் நல்ல முன்னேற்றம் காணலாம்.

கருஞ்சீரக எண்ணெய் 10 துளிகளும் ஒரு ரீ ஸ்பூன் தேனும் வெந்நீரில் கலந்து காலை, இரவு இருவேளைகள் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மூச்சுத்திணறல், ஆஸ்துமா போன்றவற்றுக்கு குறிப்பிடத்தக்க நல்ல மாற்றம் ஏற்படும்.

தீக்காயத்துக்கு கருஞ்சீரக எண்ணெயுடன் ஒலிவ் எண்ணெய் சேர்த்து தீக்காயத்தின் மீது தடவ சீக்கிரம் ஆறும்.

நெஞ்செரிச்சல் மற்றும் வயிற்றுப் பிரச்சினைகளுக்கு அரை ஸ்பூன் கருஞ்சீரக எண்ணையை சூடான பாலில் கலந்து சாப்பிட நல்ல நிவாரணம் கிடைக்கும்.

இருமல் மற்றும் தொண்டை பிரச்சினைகளுக்கு அரை ஸ்பூன் கருஞ்சீரக எண்ணெயுடன் சிறிது நல்லெண்ணெயும் உப்பு கொஞ்சமும் சேர்த்து நன்றாக கலந்து தொண்டையில் தடவ நல்ல நிவாரணம் கிடைக்கும்.

சிறிது கருஞ்சீரக எண்ணெயுடன் விளக்கெண்ணெய் சிறிது சேர்த்து இளம் சூடான பாலில் கலந்து சாப்பிட மலச்சிக்கல் தீரும்.

அன்றாட தொல்லைகளுக்கு கருஞ்சீரக எண்ணெய் தீர்வு

பல் வலியிலிருந்து விடுபட, வெந்நீரில் சிறிது கருஞ்சீரக எண்ணெயை கலந்து வாய் கொப்பளித்து வர, பல்வலி தீரும். வலியுள்ள பற்களில் கருஞ்சீரக எண்ணெயை பஞ்சில் நனைத்து கடித்து வரலாம்.

கருஞ்சீரக எண்ணையை காதருகே மசாஜ் செய்துவர தலைவலி தீரும்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எலுமிச்சை பழ ரசத்தில் கால் ரீஸ்பூன் கருஞ்சீரக எண்ணெய் சேர்த்து பருகி வர காய்ச்சல் குறையும்.

மூலநோய் உடையோர் சூடான மற்றும் விரைவு உணவுகளைத் தவிர்த்து இரவு தேநீர் டிக்காஷனுடன் கருஞ்சீரக எண்ணெய் கலந்து குடித்து வர மூல நோய் கட்டுப்படும்.

இரவு தூக்கமின்றி தவிப்போர் தேனுடன் அரை ரீஸ்பூன் எண்ணையை இரவு சாப்பிட்ட பின் சாப்பிட்டு வர நல்ல அமைதியான தூக்கம் வரும்.

மூட்டுவலி வீக்கம் எலும்பு இணைப்புகளில் வலி போன்றவற்றிற்கு ஒரு ஸ்பூன் வினிகருடன் இரண்டு ஸ்பூன் தேன் கலந்து அரை ரீஸ்பூன் கருஞ்சீரக எண்ணெய் சேர்த்து குடித்து வர நல்ல நிவாரணம் கிடைக்கும்.

ஞாபக சக்தி அதிகரிக்க ஒரு கப் புதினா கொதிக்க வைத்த நீருடன் கருஞ்சீரக எண்ணெய் கலந்து தினமும் 2 வேளை குடித்து வர ஞாபக சக்தி அதிகரிக்கும்.

குளிர்பானங்களால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுமா?



வெயில் அதிகமாக உள்ள நிலையில் மக்கள் பலரும் கார்பனேற்ற போத்தல் குளிர்பானங்களை வாங்கி அருந்துகிறார்கள். ஆனால், கார்பனேற்ற பானங்களை அதிகம் குடிப்பது ஆபத்து என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

குளிர்பானங்களிலுள்ள கார்போனிக் அசிட் நாவில் ஏற்படும் சென்சேஷன் தொடர்ந்து அந்த பானங்களுக்கு அடிமையாக்கும்.

கார்பனேற்ற பானங்களை அருந்துவது சிறுநீரகத்தில் கல் ஏற்படுவதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது.

கார்பனேற்ற பானங்களிலுள்ள சோடா நுகர்வு உடல் எடையை அதிகரிக்கச் செய்கிறது.

குளிர்பானங்களிலுள்ள சர்க்கரையேற்ற பொருட்கள் டைப் 2 நீரிழிவு நோய் அபாயத்தை அதிகரிக்கிறது.

டயட் குளிர்பானங்களும் ஒரு நாளைக்கு இரண்டு கப் மேல் குடிப்பது ஆபத்து என்கிறார்கள் நிபுணர்கள்

குளிர்பானங்கள் அந்த சமயத்திற்கு தாகத்தை தணிப்பதுபோல் தோன்றினாலும் தாகத்தை அதிகரிக்கிறது.

இசையின் மருத்துவத் தன்மை



இசையை கேட்போரின் மனதில் நல்ல உணர்வுகள் மேம்படும். மனப் பிரச்சினைகள் விலகும்.

அமைதியான சூழல் உருவாகும். இசையைக் கேட்பதால் மனம் அமைதி பெற முடியும்.

உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். இதயத்தின் செயல்பாட்டை மேம்படுத்தும்.

குழந்தைகளின் நடத்தையில் முன்னேற்றம், படைப்பாற்றல் திறன், கவன திறன், நேர்மறை சிந்தனைகள் போன்றவை அதிகரிக்கத் தொடங்கும்.

ஆட்டிஸம் குழந்தைகளின் நடத்தையில் கூட முன்னேற்றத்தைக் காண முடியும்.

கர்ப்பக் கால சுமைகள் இல்லாத மகிழ்ச்சியான சூழல் கிடைக்கும். சுகப் பிரசவம் நடக்க வாய்ப்புகள் அதிகம். பிரசவ வலி கூட குறையலாம்.

தூக்கமின்மை போன்ற பிரச்சினைகளை நீக்கி ஆழ்ந்த தூக்கம் வர உதவும்.

ஒற்றை தலைவலிக்கு இயற்கை வைத்தியம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை பொடியாக்கி அதனை மூன்று விரல்களால் எடுத்து, தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். அதன் பின் மல்லிப்பொடி ஒரு தேக்கரண்டி, பனை வெல்லம், சுக்குப்பொடி மூன்றையும் கலந்து நீர்விட்டு காய்ச்சிக் குடித்துவரலாம்.

இது, பெண்களுக்கு உண்டாகும் கர்ப்பப்பை கோளாறுகளையும் சரிப்படுத்தும்.

இரவு படுக்கச் செல்லும் முன், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் (திரிபலா சூரணம்) பொடியை தேன் அல்லது பாலில் கலந்து சாப்பிடலாம்.

இதனால் இரத்தம் சுத்தமாகி இரத்த ஓட்டம் சீராகும். இதனால், ஒற்றைத்தலைவலி மட்டுமல்ல, வேறெந்த நோயும் நெருங்காது.

20 மி.லீ. தயிரில் அரை லீற்றர் நீர் சேர்த்து, அதில் சிறிதளவு இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி, புதினா, பெருங்காயம், முடிந்தால் சிறிதளவு நெல்லிக்காய் சேர்த்துக் கரைத்து, மோராகப் பருகலாம்.

இதனால், செரிமானம் சீராகும்; பித்தம் குறையும். கோடை காலத்தில் இதை எடுத்துக்கொள்வது நல்லது.

சளி, காய்ச்சல், உடல் வெப்பம் அதிகரித்தல், மூளையில் ஏற்படும் கட்டி போன்ற பிரச்சினைகளால் கூட தலைவலி ஏற்படும்.

யாருக்கு எவ்வளவு தூக்கம் தேவை



ஒருவரின் உடல் எப்போதும் ஆரோக்கியமாக திடமாக இருக்க உறக்கம் மிகவும் அவசியம். தினமும் உறங்கினால் மட்டுமே சகல உறுப்புகளும், மனமும், அதை சார்ந்த மூளை நரம்பும் அமைதியாக இருக்கும். தூக்கத்துக்கு ஏற்ற காலம் இரவுப் பொழுதாகும். பகலில் உழைப்பதால் ஏற்படும் உடல் வெப்பம் இரவில் உறங்குவதால் தணிந்து குளிர்ச்சியடையும். இரவு 8 மணிக்குள் சாப்பிட்டுவிட்டு 9 முதல் 10 மணிக்குள் உறங்குதல் மிகவும் சிறந்தது.

தூக்கமின்மையால் ஏற்படும் நோய்கள்

இரவு நேரத்தில்தான் உடல் முழுவதும் இருக்கும் கழிவுகளை உடைத்து வெளியேற்றும் வேலையை கல்லீரல் 'செய்கிறது. எனவே, இரவு தூங்காவிட்டால் கழிவுகள் முழுமையாக வெளியேறாது. தலைச்சுற்றல், தலைபாரம், சோம்பல், செரியாமை, மன அழுத்தம், கண்களில் ஒருவித பாரம், கொட்டாவி, வாதம் சம்பந்தமான பிணிகள் ஏற்படும்.

குறைவாக தூங்கினால் புத்தி தெளிவின்மை, உடல் இளைத்தல், மயக்கம், உடலில் வெப்பம் அதிகரித்தல் போன்றவை ஏற்படும். அதேபோன்று இரவு உறங்காமல்பகலில் உறங்கினால் வாதம் சம்பந்தப்பட்ட பிணிகள் ஏற்படும். அதிகமாக உறங்கினால் சோபை, தலைவலி, பித்தம், இரத்த நாளங்களில் அடைப்பு, அக்கினி மந்தம் ஏற்படும்.

தூக்கமின்மை உள்ளவர்கள் தவிர்க்க வேண்டியவை

கொழுப்புப் பொருட்கள், காரப் பொருட்கள், ஒல்கஹால், காபி, தேநீர், புகைபிடித்தல் போன்றவை தூக்கத்தைக் கெடுக்கும் காரணிகளாகும். மேலும், படுக்கையில் செல்போன் பயன்படுத்துவதை முடிந்தவரை தவிர்த்தாலே பலருக்கு தூக்கமின்மை சரியாகும்.

பிறந்த குழந்தை முதல் – 5 வயது வரை	*– 12 மணி நேரம்*
6 முதல் 13 வயது வரை	*– 9 – 12 மணி நேரம்*
14 முதல் 17 வயது வரை	*– 8 – 10 மணி நேரம்*
18 முதல் 50 வயது வரை	*– 7 – 9 மணி நேரம்*
50 வயதுக்கு மேல்	*8 மணி நேரம் உறங்கினால் சிறந்தது.*

இந்த வார பாட்டி வைத்தியம்

பசி எடுக்க

புதினா சாறு 1 பங்கு, எலுமிச்சம் பழச்சாறு 3 பங்குடன் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக்கொள்ளவும்.

நெஞ்சு சளி கரைய

தேங்காயெண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சூடாக்கி ஆற வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

தலைவலி நீங்க

ஐந்தாறு துளசி இலைகள், ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம் சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

வயிற்று வலி குணமாக

வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் கலந்து குடிக்க வயிற்று வலி நீங்கும்.

அஜீரண பேதிக்கு

மிளகை வறுத்துப் பொடி செய்து திரிகடி பிரமாணம் தேனில் கலந்து சாப்பிட அஜீரண பேதி குணமாகும்

சீதபேதி சரியாக

மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிட சீதபேதி குணமாகும்.

வண்டுகடிக்கு

வெட்பாலை இலை, கொடி, வேர் முதலிய சமூலம் அரைத்த விழுது எலுமிச்சங்காய் அளவு எடுத்து படி பசுவின் பாலில் கலந்து சாப்பிடவும். 3 நாள் காலையில் சாப்பிடக் கரப்பான், வண்டுக்கடி இவை நீங்கும்.

பித்தம் குறைய

4 அல்லது 5 வெங்காயத்தை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டு வர பித்தம் குறையும்.

விரைவில் மாதவிடாய் வர வைப்பது, தாமதப்படுத்துவது எப்படி?

ஒரு பெண்ணுக்கான மாதவிடாய் சுழற்சி 21 முதல் 35 நாட்கள் வரை கருதப்படுகிறது. இது பெண்களின் உடல் ஆரோக்கியம் மற்றும் காலநிலைக்கு ஏற்றறாற்போல் நாட்கள் மாறுபடும்.

பெண்கள் தனது மாதவிடாயை சில நாட்களுக்கு முன்பாகவே வர நினைப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. திருமணம், கோவிலுக்குச் செல்லுதல், வெளியூர் செல்லுதல் மற்றும் சுற்றுலா செல்லுதல் போன்ற சில காரணங்களுக்காக தனது மாதவிடாயை முன்கூட்டியே முடித்துகொள்ள விரும்புகின்றனர்.

மாதவிடாய் சீக்கிரம் வருவதற்கு என்ன செய்வது?

★ ***பப்பாளி:*** இது உடலில் அதிக வெப்பத்தை உருவாக்கி மாதவிடாயை விரைவில் வரவழைக்க மிகவும் பயனுள்ள எளிய முறையாகும். அதுமட்டுமன்றி பப்பாளியில் அதிகளவில் சத்துகள் உள்ளன. இதனால் மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஆரோக்கியத்தை தரும்.

★ ***ஓம விதைகள்:*** ஓம விதைகளை தண்ணீரில் ஊறவைத்து மூன்று நாட்களுக்கு ஒரு டம்ளர் குடிப்பது உங்கள் மாதவிடாயை சில நாட்கள் முன்னால் வரவழைக்க உதவும்.

★ ***எள்:*** எள் விதையை வெல்லத்துடன் சேர்த்து, மாதவிடாய் திகதிக்கு 15 நாடகளுக்கு முன் சாப்பிட்டால் விரைவில் மாதவிடாய் வரவழைக்க உதவும்.

★ ***அன்னாசி:*** இது உடலில் அதிகளவு உஷ்ணத்தை தூண்டக்கூடிய ஒரு சிறந்த உணவுகளில் ஒன்றாகும். அது விரைவில் மாதவிடாய் வரவழைக்க உதவும்.

மாதவிடாய் தாமதமாக வருவதற்கு என்ன செய்வது?




★ ***வெந்தயம்:*** மாதாந்திர விலக்கு வர வாய்ப்புள்ள ஐந்து நாட்களுக்கு முன்னால் இருந்தே, சிறிது வெந்தயத்தை எடுத்து வாயில் இட்டு தண்ணீர் பருகி வர, விலக்கு தள்ளிப்போகும்.

★ ***வெள்ளரி:*** மாதாந்திர விலக்கு வர வாய்ப்புள்ள ஐந்து நாட்களுக்கு முன்னால் இருந்தே வெள்ளரிப் பிஞ்சுகளை உட்கொண்டு வரலாம், இதன் மூலம், உடல் சூடு குறைந்து, விலக்கு தள்ளிப் போகும்.

★ ***பொட்டுக்கடலை:*** பொட்டுக் கடலையை காலையில் எழுந்ததும், வெறும் வயிற்றில், நன்கு மென்று தின்று, தண்ணீர் பருகி வந்தால் மாதவிடாயை தள்ளிப்போடலாம்.

★ ***எலுமிச்சைச் சாறு:*** எலுமிச்சைச் சாறு அதிக அமிலத்தன்மை கொண்டது. இதனால் உங்களது மாதவிடாய் தள்ளிப்போக இது உதவக்கூடும்.

கோமா உருவாகும் காரணங்கள்



கோமாவானது பல்வேறுபட்ட நேரடியான மூளை பாதிப்புகளாலோ மறைமுகமான வேறு உடற் பிரச்சினைகளாலோ உருவாகலாம்.

காயங்கள் –

மண்டையோட்டினுள் / மூளையினுள் இரத்தக்கசிவு, மண்டையோட்டு எலும்பு முறிவுகள்.

நச்சுப்பொருட்கள் –

மிதமிஞ்சிய மது பாவனை, மயக்க மருந்துகள், போதை மருந்துகள், ஓபியொயிட்/ மனநோய் மருந்துகள், தூக்க மருந்துகள், காபனிரொட்சைட் மற்றும் ஏனைய நஞ்சூட்டல்கள்.

அனுசேபச் சிக்கல்கள் –

குருதி குளுக்கோஸ் மட்டம் மிக உயர்தல் / மிகத் தாழ்தல், குருதி சோடியம் அயனின் அளவு மிக உயர்தல் / மிகத் தாழ்தல், குருதிக் கல்சியத்தின் அளவு மிக உயர்தல், குருதி அமிலகார சமநிலை மாற்றம், குருதியில் ஒட்சிசன் அளவு மிகக் குறைதல்.

கபச் சுரப்பிக் குறைபாடுகள்

தைரொயிட் சுரப்பு மிகக் குறைதல்

தீவிர ஈரல் நோய்கள்

தீவிர சிறுநீரக நோய்கள்

நரம்பியல் – வலிப்பு நோய், நிறுத்த முடியாத தொடர்ச்சியான வலிப்பு, தலையோட்டினுள் அழுத்த உயர்வு.

மூளையினுள் குருதிக் குழாய்களிலிருந்து இரத்தக்கசிவு / குருதி உறைதல்.

கிருமித்தொற்று –

மூளை மென்சவ்வு அழற்சி, குருதியில் கிருமித்தொற்று, மூளையில் கிருமித்தொற்று, அழற்சி, மூளையில் தொற்றுக்கு உட்பட்ட சீழ்க்கட்டிகள், மூளை மலேரியா.

கட்டமைப்பு குறைபாடுகள் –

தலையோட்டினுள் இடத்தை ஆக்கிரமிக்கும் நோய்களும் அவற்றால் ஏற்படும் மண்டையோட்டினுள் அழுத்த உயர்வும்

இரத்தச்சோகைக்கான சில வீட்டு சிகிச்சைகள்!

பேரீச்சம்பழம்

பேரீச்சம்பழத்தை தேனில் ஊற வைத்து, தினமும் 2 பேரிச்சம்பழம் உட்கொண்டு வந்தால், உடலில் இரத்த சிவப்பணுக்களின் அளவை அதிகரித்து, இரத்தச் சோகையைப் போக்கலாம்.

வெள்ளரிக்காய்

உடலில் பொட்டாசியம் குறைவாக இருந்தாலும், இரத்தச்சோகை ஏற்படும். அன்றாட உணவில் வெள்ளரிக்காயை சேர்த்து வாருங்கள். வெள்ளரிக்காயில் நீர்ச்சத்து மட்டுமன்றி, பொட்டாசியம் ஏராளமாக நிறைந்துள்ளது.

ஜூஸ்

இரத்தச்சோகை பிரச்சினை இருப்பவர்கள், ஆப்பிள் ஜூஸ் மற்றும் பீட்ரூட், பசலைக்கீரை போன்றவற்றைக்கொண்டு ஜூஸ் செய்து தினமும் குடித்து வருவதன் மூலம் இரத்தச்சோகையைப் போக்கலாம்.

காய்கறிகள் மற்றும் பழங்கள்

பழங்களில் வாழைப்பழம், ஆப்பிள், மாதுளை, திராட்சை மற்றும் காய்கறிகளில் கேரட், நெல்லிக்காய், தக்காளி போன்றவற்றில் இரும்புச்சத்து உள்ளது. எனவே, இவை அனைத்தையும் கொண்டு சாலட் செய்து, அத்துடன் தேன் சேர்த்து உட்கொண்டு வர, இரத்தச்சோகையில் இருந்து விடுபடலாம்.

தேன்

தேனில் இரும்புச்சத்து ஏராளமாக நிறைந்துள்ளதால், இவற்றை சர்க்கரைக்குப் பதிலாக பயன்படுத்தி வர, உடலில் இரத்த சிவப்பணுக்களின் அளவை அதிகரிக்கலாம்.

மூச்சுப் பயிற்சி

தினமும் மூச்சுப்பயிற்சி மற்றும் இலேசான உடற்பயிற்சிகளான வோக்கிங் போன்றவற்றை மேற்கொண்டு வருவதன் மூலம், உடலில் இரத்தத்தின் அளவை அதிகரித்து நல்ல நிலையில் வைத்துக்கொள்ள முடியும்.

ஆரோக்கியமான முறையில் முதுமையடைவதற்கு

முதியவர்களை மூன்று பிரிவுகளாகப் பின்வருமாறு பிரிக்கலாம். செயல்படும் முதியவர்கள், பலவீனமான முதியவர்கள் மற்றும் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டவர்கள். ஒவ்வொரு பிரிவினருக்கும் குறிப்பிட்ட ஒரு சத்துணவு தேவை இருக்கின்றது. இவர்கள் உண்டு வாழும் உணவுப் பழக்கத்தைப் பல்வேறு காரணிகள் பாதிக்கின்றன. வயது, பாலினம், வாழும் நிலைமை, உளவியல் மற்றும் உடல் நலம், உட்கொள்ள வேண்டிய மருந்துகள் மற்றும் சமூகத்தாரின் ஆதரவு ஆகியவை.

பலவீனமான முதியோர்களின் சத்துணவுத் தேவைகள் மிகவும் மாறுபடலாம். சத்துணவுக் குறைபாட்டால் பாதிக்கப்படும் அபாயமும் இப்பிரிவினருக்கு அதிகளவில் உண்டு. பலவீனத்தின் சத்துணவுக் குறைபாட்டுக் காரணிகளாக பசியின்மை, குறைந்த அளவு உணவு உட்கொள்வது, தானாகவே எடை குறைவது மற்றும் சார்கோபேனியா (வயதாவதால் தசைகளின் எடை மற்றும் பலம் படிப்படியாகக் குறைதல்) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சில சத்துணவு வகைகளைத் தவிர, ஆரோக்கியமான இளைஞர்களின் தேவைகளுடன் ஒப்பிட்டால், செயல்படும் முதியவர்களின் சத்துணவுத் தேவையில் பெரும் மாற்றங்கள் ஏதும் ஏற்படாது. பரிந்துரைக்கப்படுவதை விட இவர்களிடத்தில் கல்சியம், போலேட் மற்றும் துத்தநாகம் ஆகியவை குறைவாகவே காணப்படுகின்றன. இதை பால் மற்றும் பாலின் உப பொருட்களிலிருந்து சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம். பச்சைக் காய்கறிகளிலும் பழங்களிலும் போலேட் அதிகளவில் காணப்படுகிறது. சிவப்பு இறைச்சி, மீன் மற்றும் முழுத்தானியங்களில் துத்தநாகம் காணப்படுகிறது.

இதய நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகிய நோய்களால் அவதிப்படும் நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டுள்ள முதியவர்களுக்கு அந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள சிறப்பான சத்துணவுத் தேவைகளுக்கான அவசியம் இருக்கிறது. நீண்ட கால இதய நோயால் அவதிப்படும் நோயாளிகளுக்கு அடர்த்தியான கொழுப்பை – சிவப்பு இறைச்சி, உணவுக்கொழுப்பு வகைகளான நெய், வெண்ணெய், க்ரீம், தேங்காயெண்ணெய் ஆகியவற்றைக் குறைக்கவும் நார்ச்சத்து வகைகளை முழுத்தானிய வகைகள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை அதிகரிக்கவும் ஆரோக்கியமான எடையைப் பராமரிக்கவும் தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.



ஒவ்வொரு உணவு வகையிலிருந்தும் சிறிதளவு பெறப்பட்ட சமநிலையான உணவுப் பழக்கமானது பல ஆக்கபூர்வமான விளைவுகளை உருவாக்குவதுடன், ஒருவரது உடல் மற்றும் மனநிலையையும் நல்ல விதத்தில் பாதிக்கக்கூடியதாகும். உடலியக்கத்துக்குத் தேவையான அனைத்துச் சத்துணவுகளையும் இது அளிப்பதுடன் நோய் உண்டாவதை முடிந்தவரை தாமதப்படுத்தி, தற்போது இருக்கும் நல்ல உடல்நிலையை அவ்வாறே பராமரிக்கவும் உதவுகிறது.

உணவுக் கட்டுப்பாட்டைச் சரிவர மேற்கொண்டால், புற்றுநோய் ஏற்படாமல் தடுக்க அது மிகவும் உதவும். பைடோ-கெமிகல் பொருட்கள் அடங்கிய பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகளவில் உட்கொண்டு, கொழுப்பை அதிகமாகச் சாப்பிடுவதைத் தவிர்த்தாலே புற்றுநோய் வராமல் தடுக்கப் பேருதவியாக இருக்கும்.



கர்ப்பக் காலத்தில் சர்க்கரை நோய் இருந்தால் குழந்தைக்கு ஏற்படும் ஆபத்துகள்

சர்க்கரை நோய் காரணமாக குழந்தை உருவாகும் போது கர்ப்பிணிக்கு தொப்புள்கொடியில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புண்டு. குழந்தை பிறக்கும்போது 4 கிலோவுக்கும் அதிகமான எடை கொண்டதாக இருக்கும். குழந்தை பிறக்கும்போது நுரையீரல் சரியாக வளர்ச்சியடையாமல் சுவாசக் கோளாறு ஏற்படக் கூடும். குழந்தை மஞ்சள் காமாலையுடன் பிறக்கலாம்.

கர்ப்பக் காலத்தில் இரத்தத்தில் அதிக சர்க்கரை இருந்தால் ஆபத்தான பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க சில பரிந்துரைகள்:

கர்ப்பம் அடைந்தவுடன் முதல் முறையாக பரிசோதனைக்கு வரும்போது இரண்டாம் வகை சர்க்கரை நோய் உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்துகொள்ளவும். சர்க்கரை நோய் இல்லையென்றாலும் கர்ப்பமடைந்து 24 வாரங்களில் மீண்டும் சர்க்கரை நோய் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

கர்ப்பக் காலத்தில் சர்க்கரை நோய் இருந்தால் பழங்கள், காய்கறிகள், முழுமையான தானியங்கள், பருப்புகளை மருத்துவர் கூறிய அளவில்தான் சாப்பிட வேண்டும். பொலீஷ் செய்யப்பட்ட தானியங்களைச் சாப்பிடக் கூடாது.

நேரடியாக சர்க்கரையோ அல்லது சர்க்கரை சிரப்போ சேர்க்கக்கூடாது. ஆரோக்கிய கொழுப்பான எண்ணெய், சனோலா எண்ணெய் பயன்படுத்தலாம். கறி அல்லது பதப்படுத்தப்பட்ட கறி பயன்படுத்தக்கூடாது.

சீராக உடற்பயிற்சி செய்யவேண்டும். நாளொன்றுக்கு 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்வது அவசியம். மருத்துவர் குறிப்பிடும் மருந்துகளை தவறாது சாப்பிட வேண்டும்.

கர்ப்பக் கால சர்க்கரை நோயைக் கண்டறிய, கடந்த 2 ஆண்டுகளாக அரச மருத்துவமனைகளில் குளுக்கோஸ் சேலஞ்ச் பரிசோதனை வசதி உள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

தமிழ் முரசு

தமிழ் முரசு

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 10 - 03.09.2023

பல்துறை எழுத்தாளர்
பன்னூலாசிரியர்
- அஷ்ரப் சிஹாப்தீன்

ரிஷிகேஷாவின்
பரதநாட்டிய
அரங்கேற்றம்

அபிநயா வின்
ஆடல்
அரங்கேற்றம்

தமிழ் முரசு
தமிழ் முரசு Thamil Murasu
நிதரஞ்சு ஒலாட்டு முரசே - இந்த நீஞிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

இலக்கிய விழாக்களை ஊக்குவிப்போம்

புரட்டாதி மாதம் என தமிழில் அழைக்கப்படும் செப்டெம்பர் மாதம் சிங்களத்தில் சாகித்ய மாதம் என்று அழைக்கப்படுகிறது. சாகித்ய என்பதற்கு இலக்கியம் என்பது அர்த்தம். இது இந்திய வடமொழிச் சொல்லாக இருத்தல் வேண்டும்.

சிங்கள மொழிச் சூழலில் சாகித்ய மாதத்துக்கு ஓர் உயர் மதிப்பு உண்டு. புத்தக வெளியீடுகள், புத்தகக் கண்காட்சிகள், சாகித்ய விழாக்கள் என பலதரப்பட்ட இலக்கிய ஏற்பாடுகளை இந்த மாதத்தில் காணலாம். கொழும்பு புத்தகக் கண்காட்சியும், தேசிய அரச இலக்கிய (சாகித்ய) விழாவும் கூட இந்த இலக்கிய மாதத்தில் இடம்பெறுபவைதான்.

சிங்கள மொழிச் சூழலோடு இணைந்து செல்லும் தருணங்களில் தமிழ் மொழிச் சூழலிலும் இந்த மாதம் இலக்கிய மாதமாக கொள்ளப்படும் ஓர் அவதானிப்பு உண்டு. ஆனாலும் அவை சிங்கள மொழிச் சூழலிலிருந்து பெரிதும் தள்ளியே நிற்கிறதெனலாம்.

பெருமெடுப்பில் கொண்டாடப்படும் ஜனரஞ்சக சினிமாவுக்கான வரவேற்புகளைப்போல் இலக்கிய நிகழ்வையோ அல்லது இலக்கியவாதிகளையோ கொண்டாடும் ஒரு காலத்தை இலங்கைத் தமிழ்ச் சூழலில் காணக்கிடைப்பதாக இல்லை.

கடந்த மூன்று மாத காலமாக இந்தியாவிலிருந்து மூன்று பாடகர்கள் தலைநகர் கொழும்பில் தொடர்ச்சியாக மூன்று மேடை நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வரப்பட்டனர். அந்த நிகழ்ச்சிகள் எதிலுமே கூட்டத்துக்குக் குறைவில்லை.

அதேநேரம் தலைநகர் கொழும்பில் ஒரு தமிழ் இலக்கிய விழாவென்றால் அங்கே வருகை தரும் பார்வையாளர்கள் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இத்தனைக்கும் ஆயிரக்கணக்கில் செலவிட்டு அனுமதி சீட்டுப் பெற்று உள்நுழையவேண்டிய தேவையும் இலக்கிய கூட்டங்களில் இல்லை. மாறாக, இலவசமாகவே ஒரு தேநீரும் சிற்றுண்டியும் கூட வழங்கப்படும் இலக்கிய உரையாடலைச் செய்யும் நிகழ்வாகவே அது அமைவதுண்டு.


இந்த இரண்டு நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமான அணுகுமுறையாக இருக்க முடியாது. ஆனாலும் இசை நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கையேனும் இலக்கியப் பக்கத்துக்கு ஏன் காட்ட மறுக்கிறோம் எனும் ஒரு கேள்வியை எழுப்புவதற்கான ஓர் உரையாடலுக்கான புள்ளியே இந்த ஒப்பீடு.

இசை நிகழ்ச்சிக்குரிய அத்தனை பிரம்மாண்டங்களைக் கொண்டமையாதுவிட்டாலும் ஆங்காங்கே இடம்பெறும் எளிமையான இலக்கிய நிகழ்ச்சிகளையும் கவனத்திற்கொள்வோம்.

மேலும் இலக்கிய மாதம் என்பதை சிறப்பு கவனத்திலெடுத்து செப்டெம்பர் மாதம் முழுவதும் இலக்கிய நிகழ்வுகள், நூல் வெளியீடுகளுக்கான பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்தால் அதனை ஒரு மரபாக மாற்றி இலக்கியத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்யும் ஒரு கலாசாரத்தைக் கட்டியெழுப்பலாம்.

இலக்கியத்தை ஒரு பக்கத்துக்குள் சுருக்கிவிட்ட இலங்கை வாரப்பத்திரிகைகளுக்கு மத்தியில் வாரத்துக்கு ஓர் இலக்கிய இணைப்பிதழைக் கொண்டுவரும் 'தமிழ் முரசு' இதழின் நோக்கம் கூட அந்த கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதுதான்.

அது ஒரு அழகிய நிலாக்காலம்..... வாசக அனுபவம்



தப்பிப் பிழைக்க விரும்பும் இனம் ஒன்று அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டியல் ரீதியில் அதன் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு அந்த இனம் தன் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டியல் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டும். அந்த வரலாற்றின் பின் உள்ள காரண காரியத் தொடர்புகளைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தத் தேவை கருதியே காலத்துக்குக் காலம் கல்வெட்டுகளாக - சாசனங்களாக - பட்டயங்களாக - சுவடிகளாக இன்னும் பல வடிவங்களில் பல இனங்கள் தங்கள் வரலாற்றைச் சுவடிப்படுத்தின. அந்த முயற்சிகளை இன்றும் பல இனங்கள் தொடர்கின்றன. அவற்றுள் தமிழ் இனமும் ஒன்றாகும். அந்த வகையில் வன்னி பிரதேசத்துக்கென்று ஒரு நீண்ட நெடிய வரலாறு இருக்கின்றது.

அந்த வரலாற்றைப் பலரும் சுவடிப்படுத்தியுள்ளார்கள். தமிழ் இனத்தின் வரலாற்றை சுவடிப்படுத்தும் முயற்சியின் நீட்சியாக இயங்கிக்கொண்டிருக்கும் இன்றைய முயற்சியாளர் களில் மகாலிங்கம் பத்மநாபனும் ஒருவர். மகாலிங்கம் பத்மநாபன் போன்றவர்கள் ஆவணப்படுத்த முயன்றதன் முக்கிய நோக்கம் எல்லாம் அடுத்த சந்ததிக்குத் தமிழ் இனம் பற்றிய வரலாற்றுத் தகவல்களைக் கடத்துவதாகும். அத்தோடு புலம்பெயர்ந்த - இடம்பெயர்ந்த இளைய சந்ததிகளுக்குத் தகவல்களைக் கடத்தி அவர்களை தமிழ் இன வரலாற்றை அறிந்துகொள்ளத் தூண்டுவதாகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் வன்னியின் வடகோடியில் கிளிநொச்சி மாவட்டத்தின் யாழ். எல்லையில் அமைந்துள்ள குஞ்சுப்பரந்தன், செருக்கன், பெரியபரந்தன் ஆகிய மூன்று கிராமங்களின் வரலாற்றை 'அது ஒரு அழகிய நிலாக் காலம்' என்ற கவித்துவத் தலைப்பில் கதை வடிவில் பதிவுசெய்துள்ளார் மகாலிங்கம் பத்மநாபன்.



கதைக்களத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, ஆசிரியராகி, அதிபராகி ஓய்வுபெற்ற மகாலிங்கம் பத்மநாபன் அந்த மூன்று கிராமங்களும் தோன்றிய விதத்தை - அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியலை - பண்பாட்டியலை - சமூகவியலை - பொருளியலை எல்லாம் அவர்களின் சமய நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள், கலைகள், உணவுப்பழக்கங்கள், ஆடையணிகள், வாழ்வியல் முறைகள் என்பவற்றை விளக்குவதன் ஊடாக வாசகர்களுக்கு எடுத்துக் கூறுகின்றார்.

முறைப்படுத்தப்பட்ட பல ஆய்வுகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்காத அந்தப் பிரதேச மக்களின் வாழ்வியல் உண்மைகள் பலவற்றை அவர் இந்த நூலினூடாக வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்வாறு அவர் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தமையானது முறைப்படுத்தப்பட்ட ஆய்வுகளுக்கப்பால் கிராமிய, பிரதேசிய, வட்டார மட்டத்தில் 'அது ஒரு அழகிய நிலாக் காலம்' போன்ற நூல்களின் வருகையைக் காலத்தின் கட்டாயமாக்குகின்றது.

காடழித்து ஒரு புதிய மக்கள் குடியேற்றத்தை உருவாக்குவதில் உள்ள புவியியல், சமூகவியல், பொருளியல், பண்பாட்டியல் சிரமங்களை எல்லாம் தம்பையா, ஆறுமுகத்தார் - விசாலாட்சி தம்பதி, கணபதி - மீனாட்சி தம்பதி, மகாலிங்கம் - பொன்னம்மா தம்பதி போன்ற பாத்திரங்கள் ஊடாக நகர்த்திச் செல்கின்றார். அந்தச் சிரமங்களை வெல்ல அந்த மக்கள் பயன்படுத்திய தந்திரோபாயங்களை அந்தத் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியதால் அவர்கள் எவ்வாறு தப்பிப் பிழைத்தார்கள் என்பதை எல்லாம் இந்தப் பாத்திரங்களின் ஊடாக நூலாசிரியர் விவரிக்கின்றார்.

கால ஓட்டத்தோடு தமிழ் மக்களின் மரபுரிமை, பண்பாடு என்பவை எவ்வாறு மாற்றத்துக்கு உள்ளாகின என்பதையும் அவற்றுக்கான காரண காரியத் தொடர்புகளையும் நூலாசிரியர் விவரமாகப் பதிவு செய்திருப்பது இந்தப் பிரதேசத்து மக்களின் வரலாற்றை ஒரு பாடமாகக் கற்க விரும்புபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

அந்த மக்களின் விவசாயப் பொருளாதாரம் பின்னர் எப்படி காலனித்துவ ஆட்சியாளர்களின் குறிப்பாக, ஆங்கிலேயர்களின் வருகையோடு வர்த்தகப் பொருளாதாரமாக மாறியது, காலனித்துவச் சிந்தனை அம்மக்களின் சிந்தனையில், எண்ணங்களில், வாழ்வியலில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதை எல்லாம் நூலாசிரியர் விவரித்திருப்பது மிகவும் சிறப்பு. இந்த மூன்று கிராமங்களின் கதையைச் சொல்ல வந்த நூலாசிரியர், அந்தக் கிராம எல்லைகளை மீறிச் சென்று கிளிநொச்சி பிரதேசத்தின் அரசியல், பொருளியல், சமூகவியல், பண்பாட்டியல் எல்லாம் எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகின என்பன தொடர்பான தகவல்களை எல்லாம் ஆதாரங்களோடு முன்வைத்திருக்கின்றார்.

வன்னியின் வாழ்வியலை, அதன் சமூகவியலை, பொருளியலை, பண்பாட்டியலை இன்னும் அறிந்துகொள்ளாதவர்கள் அல்லது அறிந்துகொள்ள விருப்பம் கொள்ளாதவர்கள் இந்த நூலை வாசிப்பதன்மூலம் ஓரளவுக்கேனும் அவற்றை அறிந்துகொள்ளலாம் என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக, அந்தப் பிரதேசத்து முன்னோர்களின் வாழ்வியலை அதன் விழுமியங்களைப் புரிந்துகொள்ள விரும்புகின்ற இன்றைய இளைய சமூகத்திற்கு இந்த நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

‘எண்ணங்களின் வண்ணங்கள்’ நூல் வெளியீட்டில்...







உளவா தமிழ் இலக்கியப் பேரவையின் ஐந்தாவது மலராக கலைச்சுடர், சமாதான நீதவான் காவத்தையூர் பழனியாண்டி கனகராஜாவின் ‘எண்ணங்களின் வண்ணங்கள்’ எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பசறை நூலக கேட்போர் கூடத்தில், கடந்த வாரம் ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் கலாபூஷணம் கலைச்சுடர் அருண் தியாகு தலைமையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அரவிந்தகுமார் கலந்துகொண்டு சிறப்பித்தார். நிகழ்வின் அதிதி களாக சிரேஷ்ட சட்டத்தரணியும் எழுத்தாள ருமான பதுளை சேனாதிராஜா, கொழும்பு ஹொரைம்ஸன் வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் பீ.ஆறுமுகம், பசறை கோணங்கலை தமிழ் மகா வித்தியாலய முதல்வர் எஸ்.ராஜேந்திரா ஆகியோர் பங்குபற்றியதோடு விசேட அதிதியாக கவிஞர் யோ.புரட்சியும் கலந்து சிறப்பித்ததோடு, பிரதம அதிதியின் உரையும் கௌரவ அதிதிகளின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத் தர்களான ஆர்.சுஜித்தா மற்றும் கிருஷ்ணபிரியா ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதோடு யோ.புரட்சியின் இலக்கியப் பொழிவுரையும் இடம்பெற்றது. மங்கள விளக்கேற்றலுடனும் இசைத்திலகர் பீ.லோகநாதனின் தேவார இசையும் ஆரம்ப நிகழ் வாக இடம்பெற்றது. ஊவாவில் மறைந்த மூத்த கலைஞர்களுக்கான மௌன அஞ்சலியும் பதுளை மகளிர் மகா வித்தியாலய மற்றும் சரஸ்வதி தேசியக் கல்லூரி மாணவ, மாணவிகள் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைத்தனர்.

வரவேற்பு நடனம் பசறை கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவிகளின் பங்குபற் றுதலுடனும் வீ.இன்பராஜா ஆசிரியரின் நெறி யாள்கையிலும் இடம்பெற்றது. மாணவிகளான நிரோலினா, தனுஷிகா, சத்தியஜோதி ஆகியோரின் தனிநடனங்கள் கண்களுக்கு விருந்து படைத்தன.

கே.விமலநாதனின் நாட்டார் பாடல் மற் றும் (நூலாசிரியர் தனது தாயாருக்காக எழுதிய) பீ.லோகநாதனின் பாடல் அனை வரின் மனதையும் வருடிச் சென்றன. சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.புஸ்பகாந் தனின் ஆய்வுரையும் ஆ.எட்வேர்ட் ஆசிரியரின் நூல் அறிமுகவுரைகளும்





இடம்பெற்றன.

அதிபர் எஸ்.ராஜேந்திரா, கவிஞர் கோணமூட் டாவையூர் இரா.ராஜகோபால் மற்றும் மடுல்சீமையூர் சதாசிவத்தின் வாழ்த்துப்பாக்களும் இடம்பெற்றன.

நூலாசிரியருக்கு மலைத்தேன் எனும் சிறப்பு விருது வழங்கி, பொன்னாடை, மாலை அணிவித்து ஊவா தமிழ் இலக்கியப் பேரவை கௌரவித்தது.

மேலும் இலக்கியப் பேரவையின் வளர்ச்சிக்கும் ஊவாவின் இலக்கியத்துக்கும் அளப்பரிய சேவை யாற்றிய கலாபூஷண கலைஞர்களான பேரவையின் தலைவர் அருண் தியாகு மற்றும் எஸ்.பாலச்சந்திரன், கி.குலசேகரம், க.தங்கவேல், சாமினி இராமநாதன் ஆகியோர் மாலை, பொன்னாடை அணிவித்து, மலையருவி எனும் கௌரவ விருது, சான்றிதழ் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டனர். மாண விகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இறுதியாக நூலாசிரியரின் கம் பீரமான ஏற்புரை மற்றும் ஊவா தமிழ் இலக்கியப் பேரவை செயலாளரின் நெஞ்சைவிட்டகலா நன்றியுரையுடனும் விழா சிறப்பாக இடம்பெற்ற தோடு பங்குபற்றுனருக் கான 33 நினைவுச்சின் னங்களும், 05 கலா பூஷணம் பெற்றவர்களுக் கான மலையருவி 05 விருதுகளும் நூலாசிரி யர் விருது 02, பேரவைக் கான விருது 01 உட் பட காவத்தையூர், மடுல் சீமையூர் மக்களால் கலை ஞருக்கு பல விருதுகள், கௌரவிப்பு வழங்கப்பட் டமை சிறப்பம்சமாக அமைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது மற்றுமொரு சிறப்பம்சமாகும். நவீன் ஆசி ரியர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

கலாபூஷணம்
அருண் தியாகு



‘நாயகி’ பரத நாட்டிய அரங்கேற்றம்

கருப்பொருளுடன் கூடிய புத்தாக்க நடன மார்க்கங்களை தொடர்ந்து வழங்கிவரும் அபிநயஷேத்ரா நடனப்பள்ளியின் புதிய படைப்பாக அரங்கேறுகிறது அபிநயஷேத்ரா நடனப்பள்ளி மாணவி ரிஷிகேஷா செம்பையாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்

‘நாயகி’

‘கலாசூரி’ திவ்யா சுஜேனின் உருவாக்கத்தில் நாயகியர் பலரை சித்திரிக்கும் விதமாக அமைந்துள்ள இம் மார்க்க உருப்படிகளுக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி இசையமைப்பு வழங்கியதோடு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகவும் வருகை தரவுள்ளார்.

அத்தோடு பெண்களின் கலை , கல்வி, வாழ்வாதாரத்துக்கு பெரும் துணை வழங்கிவரும் சமூக சேவையாளர், மனிதநேயம் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை நுண்கலைக் கல்லூரி அமைப்பாளர் திருமதி அபிராமி கைலாசபிள்ளையும் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

‘பொன்னியின் செல்வன்’ புகழ் திருமதி கீர்த்தனா வைத்தியநாதன், ஈஸ்வர் ராமகிருஷ்ணன், முனைவர் குரு பரத்வாஜ் ஆகியோரின் இசை பங்களிப்பில், கிருஷ்ணன் வெங்கடேஷின் ஒளி அமைப்பில் நாயகி தயாரிப்பு அரங்கேறவுள்ளது.



யாழில் சிறப்பாக இடம்பெற்ற 'அபிநயா'வின் ஆடல் அரங்கேற்றம்





ஏழிசை மிருதங்க நர்த்தனாலய நடன மாணவியும் யாழ்ப்பாண வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் மாணவியும் 10 ஆண்டுகள் நடனம் பயின்று நடனத்துறையில் தரம் நான்கு பிரிவை நிறைவுசெய்துள்ளவரும், ஆசிரியர் பாலினி கண்ணதாசனின் மாணவியுமான செல்வி றஜீபன் அபிநயாவின் பரத நடன ஆடல் அரங்கேற்றம் யாழ். கலாசார மண்டபத்தில் கடந்தவாரம் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் இணைத் தலைமையில் அரங்கு நிறை திரளான மக்களோடு வெகு விமரிசையாக நடைபெற்றது.





ஜனாதிபதி தேசிய செயலக மேலதிக செயலாளர் இ.இளங்கோ பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கி. விசாகரூபன், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டது மாத்திரமல்ல, உரையும் நிகழ்த்தினர்.





முன்னாள் யாழ். புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலய அதிபரும் மன்னார் சென். அன்ரனீஸ் பாடசாலையின் தற்போதைய அதிபருமான அருட்சகோதரி மேரி றொசாந்தி கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் - நுண்கலைமாணி பரத கலாவித்தகர் ஸ்ரீமதி பாலினி கண்ணதாஸ், பாட்டு - யாழ். பல்கலைக்கழக சேர் பொன். இராமநாதன் நுண்கலைப்பீட முதுகலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட், மிருதங்கம் - சட்டமாணி கண்ணதாசன் இசைநிலவன், வயலின் - கேதீஸ்வரன் வேலதீபன், புல்லாங்குழல் - கமலநாதன் தேசிகன் ஆகியோர் சிறப்புடன் இணைந்திருந்தனர்

இந்திய கலாசார மத்திய நிலையத்தின் திரளான கலைஞர்கள் சூழ சிறப்பாக அரங்கேற்ற நிகழ்வு இடம்பெற்றது.

















நடனத்துறை அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் ஜெகதீஸ்வரி பிரவீன்



நான் ஜெகதீஸ்வரி பிரவீன். சொந்த இடம் இரத்தினபுரி, இறக்வானை. நடனக்கலையைப் பொறுத்தவரையில் நான் தரம் 6இல் கற்க ஆரம்பித்துவிட்டேன். அந்த காலகட்டத்தில் பாடசாலையில் நடனம் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் இல்லாமையால் தனியார் வகுப்புக்குச் சென்றே கற்றேன். என்னுடைய குருவின் பெயர் பிரியா சிவக்குமார். தரம் 6இல் பயிலும்போது அந்த காலகட்டத்தில் இருந்த பொருளாதாரச் சிக்கல் காரணமாக அதனை தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. பின்னர் நான் நடனத்தை விட்டுவிட்டேன். பிறகு சாதாரணதரம், உயர்தரத்தின்போது நடனத்தைக் கற்றேன். சிலாபத்தில் மீண்டும் சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் தோற்றி சிறந்த சித்திகளைப் பெற்றேன். இதனைத்தொடர்ந்து தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இளநிலை கல்விப் பட்டத்தைப் பெற்று தற்போது அதே பல்கலைக்கழகத்தில் முதுநிலை கல்வியைப் பயின்று வருகின்றேன்.

2015.08.22ஆம் திகதி பரதநாட்டியாலயா எனும் நடன நிறுவனத்தை நிறுவி கிட்டத்தட்ட 10 வருடங்களாக 3 கிளைகளைக்கொண்டு அதிகபட்சமான மாணவர்களைக்கொண்டு நடத்திவருகிறேன். பரதநாட்டியாலயாவின் ஒரே நோக்கம் எல்லோருக்கும் ஆசை இருந்தும் பரதநாட்டியம் பயில முடியாத வசதிகள் கிடைக்காமல் இருக்கலாம். அவர்களுக்காக பரதநாட்டியாலயாவில் ஆரம்பம் முதல் இறுதிவரை படிப்படியாக அவர்களுக்கான கற்றல் செயற்பாடு வழங்கப்பட்டு வருகிறது.

பரதநாட்டியத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது பரதநாட்டியத்தின் இலட்சணங்கள் எனக் கூறப்படும் பாவம், ராகம், தாளம் ஆகும். இது மூன்றைப் போலவே பரதநாட்டியத்தில் இசை, யோகா, சித்திரம் என்பது மனதிற்கு இன்பத்தை கொடுக்கக்கூடிய ஒரு தொனியில் பாடப்படுவது.

ஒரு பரதநாட்டிய கலைஞன் இசையோடு கலந்து ஆடும்போது அது ஓர் அழகையும் பார்ப்பவர்களுக்கு கவர்ச்சியையும் ஏற்படுத்தும். அதேபோன்று மனித உள்ளத்தில் ஏற்படக்கூடிய உணர்ச்சிகளை சிலைகளாக சிற்பிகள் செதுக்கி நவரசங்களையும் ஒரு உருவத்தின்மூலம் காட்டுவதே சித்திரம். ஆதிகால ஆலயங்களில் சித்திரக்கலை மிகவும் நடனத்தை சார்ந்தே காணப்படுகின்றது. நடன மாதர்களின் உருவங்கள், மாதவி ஆடிய 11 வகையான கூத்துகள் அனைத்தும் சித்திரக்கலையோடு சேர்ந்து காணப்படுகின்றன.

தஞ்சையில் கூட சித்திரக் கலையில்தான் நாம் நடனத்தைக் காணக்கூடியதாக இருக்கும். நடனக் கலைக்கு முத்திரைகள் முக்கியம். ஒரு விடயத்தை நடனத்தில் மாத்திரமல்ல, கைகளின் அசைவுகள் மூலம் - முத்திரைகள் மூலம் வெளிப்படுத்துகின்றோம். முத்திரைகளின் நிலைதான் யோக நிலை. பரதம் கற்பவர்கள் யோகா செய்வது சிறந்தது. காரணம் கோபங்களை சமநிலையில் வைத்துக்கொள்ள - உடல் நிறையை சமநிலையில் வைத்துக்கொள்ள யோகா கட்டாயம் அவசியம். ஒரு பரதநாட்டிய கலைஞருக்கு கண், காது, வாய் எப்படி முக்கியமோ அதேபோன்று யோகா, இசை, சித்திரம் ஆகிய மூன்றும் முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், பரத நாட்டிய கலைஞர்களை மிகவும் பாதித்தன. அதிலும் 2019ஆம் ஆண்டு வந்த கொவிட்-19 காரணமாக நாடு மிகப்பெரிய பொருளாதார சிக்கலை சந்தித்தது. அந்த நேரத்தில் நமது வெளிநாட்டுக் கடன் கிட்டத்தட்ட 88 சதவீத்ததை எட்டியது. அந்த நேரத்தில் கலைஞர்களுக்கு மட்டுமன்றி அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். அந்த காலகட்டத்தில் நம் நாட்டுக் கலைஞர்கள் இங்கிருந்து வெளிநாடுகளை தஞ்சமடைந்தனர். ஏனென்றால், அவர்களுக்கு போதியளவு வசதிகள் இருக்கவில்லை. அதற்குரிய தொழில்வாய்ப்பு இல்லாமல் போனது. நாட்டில் தற்போது போதியளவு கலைஞர்கள் இல்லை. கலைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கிறேன். எமது கலைஞர்கள் மிகவும் திறமைசாலிகள். அவர்கள் தமது திறமையை மேலும் வளர்த்துக்கொள்வதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

2019ஆம் ஆண்டு கொரோனாவின் பின்னர் நாடு தற்போது படிப்படியாக சிக்கல் நிலையிலிருந்து மீண்டு வருகின்றது. ஆகவே, இனிவரும் காலங்களில் கலைஞர்களுக்குரிய சரியான ஓர் இடம் கிடைக்கும். பொருளாதாரா ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைக் கலைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

பரதநாட்டியம் எனும் கலை இந்தியாவுக்கு மாத்திரம் சொந்தமான கலை அல்ல. இலங்கைக்கும் சொந்தமான கலைதான். பரதத்தை நாம் ஆழமாக புரிந்து கற்கவேண்டும். அதுமட்டுமன்றி இந்திய பரத கலைஞர்களுக்கு வழங்கும் மதிப்பு மரியாதையை இலங்கையிலுள்ள எமது பரதநாட்டியக் கலைஞர்களுக்கும் வழங்கவேண்டும். அவர்களுக்கான ஒரு மேடை சரிவர அமைய வேண்டும். அவர்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிவர்த்தி செய்துகொள்ள சரியான தொழில்வாய்ப்பு வழங்கவேண்டும். இலங்கையிலுள்ள கலைஞர்கள் அங்கீகரிக்கப்படவேண்டும்.

சிறுவர்களுக்கு ஏன் கலை அவசியம்

தற்காலத்தில் நாட்டியத்தைப் பயில்வதில் ஆண், பெண் இருவரும் ஆர்வமாக உள்ளனர். குறிப்பாக, பரதநாட்டியத்தை கற்பதனூடாக எந்தவொரு மேல்நாட்டு நடனத்தையும் எளிதாக ஆடலாம் என்ற எண்ணம் பெரும்பாலோர் மனதில் தோன்றியுள்ள விடயமாக காணப்படுகின்றது. பரதத்தைக் கற்க ஆரம்பிப்பதற்கான வயதைப் பொறுத்தவரையில் இளமையில் கல் என்பதற்கிணங்க சிறிய வயதிலேயே கற்க ஆரம்பிப்பது சிறந்தது. சிறிய வயதிலேயே ஆரம்பிக்கும்போது விளங்கிக் கொள்ளக்கூடிய சக்தியும் ஆர்வமும் அதிகமாக இருக்கும். அத்துடன் உடல் வளைவு, முக பாவங்கள், கால்களின் செயற்பாடுகள் ஆகியவற்றை சரிவர புரிந்து கற்க சிறிய வயது சிறந்ததாக அமையும். நாட்டியம் பயில்பவர்களுக்கு வயது வரம்போ மொழி பேதமோ கிடையாது. சரிவர கற்றால் சிறந்தது.

பரதம் தற்போது பணம் சம்பாதிக்கக்கூடிய கலையாக மாறிவிட்டதா?

பரதம் தற்போது பணம் சம்பாதிக்கக்கூடிய கலையாக மாறிவிட்டதா எனக் கேட்டால் எனது கருத்து இல்லை என்பதுதான்.

மனித வாழ்விற்கு சிறப்பு சேர்க்கும் பல விடயங்கள் இந்த உலகத்தில் உள்ளன. அதில் மிகவும் போற்றப்படவேண்டிய ஒன்று பரதம். எந்த மொழியை பேசினாலும் மனிதனை ரசிக்க செய்வது பரதம் மட்டுமே. பரத நாட்டியம் தோன்றி மூவாயிரம் ஆண்டுகளாகிவிட்டன. 10ஆம் நூற்றாண்டில் 1000 வருடங்களுக்கு முன்பாகவே தமிழ்நாட்டில் பரதநாட்டியம் தோன்றிவிட்டது. வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியை வழங்குகின்றது.

தொகுப்பு - யதுஷா ரவி தியாகராஜா

பல்துறை எழுத்தாளர் பன்னூலாசிரியர் - அஷ்ரப் சிஹாப்தீன்



ஆளுமைகளின் அடையாளம்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஒட்டமாவடி அஷ்ரப் என்ற பெயரில் 1970களின் பிற்பகுதியில் தினபதி கவிதா மண்டலம் தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, மரபுக்கவிஞராக இலங்கை இலக்கியப் பரப்பில் அறிமுகம் பெற்றவர் அஷ்ரப் சிஹாப்தீன்.

ஐந்து தசாப்த கால எழுத்தனுபவத்தோடு பல்வேறு தளங்களினூடாகவும் இன்று முன்னிலைப் படைப்பாளராக அடையாளம் பெற்று மிளிரும் அவர், காத்திரமான கவிஞர், கதைஞர் என்பதோடு மட்டுமல்லாமல், வானொலி அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர், செய்தி வாசிப்பாளர், இலக்கிய சஞ்சிகை ஆசிரியர்,



தொலைக்காட்சி அறிவிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், பத்தி எழுத்தாளர், பயண இலக்கியகாரர், நாடகாசிரியர் என்று பல்துறையிலும் புகழ் பூத்திருப்பவர்.

இலக்கியப் பெறுமானம் மிக்க மனிதநேயப் படைப்பாளியாக இலக்கிய விமர்சகர்கள் அவரைக் குறிப்பிடுவர். அடக்குமுறை, இன ஒடுக்கு முறை என்பவற்றை எதிர்த்துக் குரலெழுப்புகின்ற பல படைப்புகளை அவர் தந்திருப்பதை அவரின் படைப்புகளை ஆய்வுசெய்பவர்கள் எடுத்துக் காட்டுவர்.

1985இல் நாடு பயங்கரவாதச் சூழலில் நெருங்குண்டிருந்தபோது மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், இனரீதியான கடத்தல்கள், வன்புணர்வு என்பவற்றைப் படம் பிடிப்பதாக அவர் எழுதியிருந்த ஸெய்த்தூன் என்ற கவிதை, அக்காலத்தில் பலராலும் பேசப்பட்டது.

கலவரங்களின்போது காணாமல் போன சகோதரிகள் நினைவாக எழுதப்பட்டிருந்த அக்கவிதை, கவிதை உலகில் வளம் மிக்க கவிஞராக அவரை இனம் காட்டியது.

துப்பாக்கிகள் உரத்துப் பேசிய
ஓர் அந்திக் கருக்கலில்
அவளை நாங்கள்
இழந்திருந்தோம்!

பதினாறு வயதான
எங்கள் ஸெய்த்தூன்!


நாட்படாத கோழிக் குஞ்சைப்
பருந்து தூக்கியது போல்
அவர்கள் தூக்கிச் சென்ற போது
யாருக்கும் தெரியாது.

ஊர் எல்லையை சற்றுத்
தாண்டும்வரை
சேலை இருந்தது
மேல் சட்டை இருந்தது
ஸெய்த்தூன் இருக்கவில்லை
இனிமேல் ஸெய்த்தூன் திரும்ப
வரமாட்டாள்

இளைஞர்கள் எனக்குச்
சொன்னார்கள்
துவக்கு வெடித்த இரவின் மீது
இரத்தம் உறைந்த பூமியின் மீது
சத்தியம் பண்ணியதாக
இனிமேல்
எந்த ஸெய்த்தூனையும்
இழப்பதில்லை யென்று..!

இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் - சஞ்சிகைகளில் பல முறை மீள்பிரசுரம் பெற்ற அக்கவிதையின் சில வரிகள் அவை.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க கவிஞர்களில் ஒருவராக மேலெழுந்த அஷ்ரப் சிஹாப்தீன், பல்துறை எழுத்தாளராகவும், பன்னூலாசிரியராகவும் புகழ்பெற்றார். கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம், பத்தி எழுத்து, பயண இலக்கியம் எனப் பல்துறைகளிலும் அவரின் நூல்கள் வெளிவந்துள்ளன.



கவிதை

01. காணாமல்போனவர்கள் - 1999

02. என்னைத் தீயில் எறிந்தவள் - 2008

(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

03. தேவதைகள் போகும் தெரு - 2018

சிறுகதை

04. விரல்களற்றவனின் பிரார்த்தனை - 2013

மொழிபெயர்ப்பு

05. உன்னை வாசிக்கும் எழுத்து (கவிதை) - 2007

06. ஒரு சுறங்கைப் பேரீச்சம் பழங்கள் - 2011

(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

07. பட்டாம்பூச்சிக் கனவுகள் (சிறுகதை) - 2015

(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

08. யாரும் மற்றொருவர் போல் இல்லை (கவிதை) - 2017

09. வெய்யில் மனிதர்கள் (நாவல்) - 2019

(அரச சாஹித்திய தேசிய விருது பெற்றது)

10. நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன் - 2021

(முஸ்லிம் பெண் ஆளுமைகளின் உரைகள்)

பத்தி எழுத்து

11. தீர்க்க வர்ணம் - 2009

(பல்சுவைப் பத்திகளின் தொகுப்பு)

12. எனக்குள் நகரும் நதி - 2019

(பத்திரிகைப் பத்திகளின் தொகுப்பு)

சிறுவர் இலக்கியம்

13. புள்ளி - 2007

14. கறுக்கு மொறுக்கு - முறுக்கு - 2009

15. புல்லுக்கு அலைந்த மில்லா - 2009

ஏனையவை

16. ஸ்ரீலங்காவிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம் வரை - 2009


(பயண அனுபவங்கள்)

17. ஒரு குடம் கண்ணீர் - 2010 -(உண்மைக் கதைகள்)

இலக்கிய உலகின் வரவேற்பைப் பெற்றிருந்த அவரின் நூல்கள் பல விருதுகளைப் பெற்றவை. இலங்கை அரச சாஹித்ய விருதை அவை பலமுறை வென்றிருக்கின்றன.

இலக்கியச் செயற்பாடுகள், தொகுப்பு நூல்கள், சஞ்சிகை வெளியீடு, வானொலி இலக்கிய நிகழ்ச்சிகள் என்பவற்றினூடாக அவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழங்கியுள்ள பங்களிப்பு சிலாகிக்கத்தக்கதாகும்.

நபிவழி நம்வழி, நற்றமிழ் எம்மொழி என்ற கோட்பாட்டோடு செயல்பட்ட இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின்



செயலாளராக இருந்து உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளை 2002இலும் 2016இலும் இலங்கையில் நடத்தியதோடு, இலங்கை- இந்திய இலக்கிய நட்புறவுப் பாலமாகவும் அமைந்து, இந்திய மாநாடுகளில் இலங்கை எழுத்தாளர்களின் பிரசன்னத்துக்கும் வழிவகுத்து ஒத்துழைப்பு நல்கியவர் அஷ்ரப் சிஹாப்தீன்.

அந்த மாநாடுகளில் வெளியிடப் பட்ட தொகுப்பு நூல்களின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் அவர் செயல்பட்டார்.

01 - மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் -

2002 இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு. (உள்நாட்டுப் போரில் பெரும்பான்மை சமூகங்களால் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிரான குரல்கள்)

02 - இலக்கிய மாநாடு 2002, 2016,



(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

ஊடகவியலாளர் பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில் பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வை உள்ளடக்கி பி.விக்னேஸ்வரன் இந்நூலை உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள், தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக



தந்துள்ளார்.

ரொரன்ரோ 'தாய்வீடு' மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமாக இப்படைப்பாக்கம் விளங்குகின்றது



பல்வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புகள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்நூலை பி.விக்னேஸ்வரன்

என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுக்கான தலைமையுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும், வரவேற்புரையை ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனும், நூலுக்கான வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், அறிமுகவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றதுடன், முதற்பிரதியை பி. விக்னேஸ்வரன் வழங்க ஐ.பி.சி. தமிழ் நிறுவன உரிமையாளர் க.பாஸ்கரன் பெற்றுக்கொண்டார். முதற்பிரதியைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கலும் நடைபெற்றது. சில பாடசாலைகளுக்கு நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நூலுக்கான ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், நயப்புரையை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாதனும் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் பி.விக்னேஸ்வரன் ஆற்றினார். நன்றியுரையை ஊடகக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஸ் கொடுதோர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

பு.கஜிந்தன்









பல்துறை எழுத்தாளர்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மலர்கள், ஆய்வரங்கக் கோவைகள் மற்றும் சர்வதேச எழுத்தாளர் மாநாடு - 2011 மலர்கள், கட்டுரைத் தொகுப்புகளின் தொகுப்பாளர்களில் ஒருவர் அவர்.

யாத்ரா என்ற கவிதைச் சஞ்சிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராக இருந்து 22 இதழ்களை வெளியிட்டவர் அவர். கவிதையோடு மட்டும் நின்றுவிடாமல், காலவோட்டத்தில் இலக்கியத்தின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஈழத்தின் சிறந்த இலக்கியச் சிற்றிதழாக அது மலர்ந்தது.

இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகக் கடமையாற்றிய அஷ்ரப் சிஹாப்தீன், அறிவுக் களஞ்சியம் என்ற கல்வி நிகழ்ச்சியை திறம்பட நடத்தி மாணவ சமூகத்தின் மதிப்பைப் பெற்றிருந்தார்.

இலக்கிய மஞ்சரி என்ற நிகழ்ச்சியை நடத்தி மூத்த, இளைய தலைமுறை எழுத்தாளர்களைக் கவர்ந்திருந்தவர் அவர். இப்போதும் முஸ்லிம் சேவையில் கவிதா நதி என்ற நிகழ்ச்சியை நடத்துவதன் மூலம் இலக்கியப் படைப்பாளர்களையும் நேயர்களையும் ஈர்த்து வருகின்றார்.

அஷ்ரப் சிஹாப்தீன், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் 10 வருடங்களுக்கும் மேலாக செய்தி அறிவிப்பாளராகப் பணி புரிந்தவர். உலகத் தமிழ்ச் சிற்றிதழ்ச்



சங்க இலங்கைக் கிளையின் உபதலைவராகப் பணியாற்றி வரும் அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உபதலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

அஷ்ரப் சிஹாப்தீன், அவரின் நூல்களுக்குக் கிடைத்த சாஹித்ய விருதுகளோடு இன்னும் பல முக்கிய விருதுகளையும், பரிசில்களையும் தனது இலக்கியப் பணிக்காகப் பெற்றிருப்பவர்.

01 - தமிழியல் விருது (என்னைத் தீயில் எறிந்தவள் நூலுக்காக)

02 - தமிழ் மாமணி விருது (2011இல் காயல்பட்டணத்தில் நடந்த இஸ்லாமிய இலக்கிய மாநாட்டில் வழங்கப்பட்டது)

03 - மகரந்தச் சிறகு விருது - (கம்பன் கழகம் 2020)

04 - கலாபூஷணம் விருது - என்பன அவற்றில் சில.

1960இல் மௌலவி சிஹாப்தீன் தம்பதியின் மகனாக மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடியில் பிறந்தவர் அஷ்ரப் சிஹாப்தீன்.

ஓட்டமாவடி மத்திய கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, ஜாமிஆ நளீமியா (3 வருடங்கள்) என்பவற்றில் கல்வி கற்றவர். பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியராகச் சேவை புரிந்தவர்.

குடிவரவு - குடியகல்வு அதிகாரி, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் என்ற பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

அஷ்ரப் சிஹாப்தீன் புதியவர் களையும் இனங்கண்டு உற்சாகம் வழங்கும் முன்னிலைப் படைப்பாளி. அவரின் இலக்கியப் பணி தொடர வேண்டும். அவர் இன்னும் பல நூல்களை இலக்கிய உலகுக்குத் தரவேண்டும். யாத்ரா என்ற சஞ்சிகையை மீளத் தந்து இளந் தலைமுறை படைப்பாளர்களுக்கு இன்னுமின்னும் ஊக்குவிப்பு நல்க வேண்டும் என்பதே தமிழ் இலக்கிய நெஞ்சங்களின் பெரு விருப்பாகவும், பிரார்த்தனையாகவும் இருக்கின்றது.

வி.என்.மதியழகன் வெளியிடவுள்ள பொற்காலப்பதிவு



தமிழ் ஒலிபரப்பில் பொற்காலத்தை எட்டியுள்ள மூத்த ஊடக ஆளுமை வி.என்.மதியழகன் எழுதிய சொற்கோ வி.என்.மதியழகன் எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 6ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் அனந்த பாலகிட்ணர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார்.

இலங்கைத் தொலைக்காட்சியின் முதலாவது தமிழ் செய்தி வாசிப்பாளர் என பெயர்பெற்ற வி.என்.மதியழகன் ஊடகத்துறையில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுக்கொண்ட தமிழ் ஒலி/ஒளிபரத்துறையில் பொற்காலத்தை எட்டியுள்ள ஓர் ஊடக ஆளுமை.



தனது குரல் வளத்தின் மூலம் ஆயிரக்கணக்கான நேயர்களைக் கவர்ந்த ஒளி/ஒலிபரப்பாளராவார். ஒலிபரப்புத்துறைக்கு வழங்கப்படும் அதியுயர் விருதான உண்டா விருதைப்பெற்ற இவர், கலாபூஷணம், சாஹித்ய விருது மற்றும் சமாதான விருதுகளைப் பெற்றுள்ளார்.

2000ஆம் ஆண்டளவில் புலம்பெயர்ந்துச் சென்ற இவர், தற்போது கனடாவில் வசித்து வருவதுடன் ஊடகத்துறையில் கனடாவிலும் தொடர்ச்சியாக பயணித்து வருகின்றார். ஊடகத்துறையில் பொன்விழாவை எட்டியுள்ள வி.என்.மதியழகன் எனும் ஆளுமை இதுவரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஊடகத்துறை பத்திரிகைத்துறையுடன் ஆரம்பித்து இவர் சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் இலத்திரனியல் ஊடகத்துடன் இணைந்துகொண்டார். பின்னர் சுமார் மூன்று தசாப்த காலத்தைக் கடந்தும் இலங்கையில் அன்னை வானொலியான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அத்துடன் ரூபாவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணிபுரிந்துள்ளார்.

தொகுப்பு- ஜீவா







அரச சாகித்திய பரிசு பெற்ற எழுத்தளர் உக்குவளை அக்ரம் எழுதிய "உக்குவளை ஒரு வரலாற்றுத் தடம்" நூல் வெளியீட்டு விழாவில் மாத்தளை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.எம்.இக்பால் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

உக்கவளை அஜ்மீர் மத்திய கல்லூரி மண்டபத்தில் மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பேரவையின் தலைவர் எம்.எம்.பீர்மொகமட் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் யுனிசெப் நிறுவனத்தின் முன்னாள் திட்டமிடல் அதிகாரி எஸ்.ஏ.வாகித் (தௌபீக்), மஹஜன கூட்டு நிறுவனப் பணிப்பாளர் திருமதி ரஸ்வி நஸார் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

(ஜே.எம்.ஹாபீஸ் மற்றும் இரா.அ.இராமன்)













தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற 13ஆவது புத்தக அரங்க விழாவின் முதல் நாள் நிகழ்வின் காட்சிகள்.

பாரம்பரியம் நிகழ்ச்சியில் முதுபெரும் கலைஞர் ஜவாஹர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் காலஞ்சென்ற சிரேஷ்ட கலைஞர் நடிகமணி கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹரின் நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன.



சிரேஷ்ட கலைஞர்களான கலாபூஷணம் ஞெய்ரஹீம் சஹீத், கலாபூஷணம் நூர்ஜஹான் மர்சூக், கனடாவிலிருந்து முஸ்லிம் சேவையின் முன்னாள் நாடகத் தயாரிப்பாளர் எம்.அஸ்ரப்கான், கவிஞர் வாழைத்தோட்டம் எம்.வஸீர் ஆகியோர் நிகழ்ச்சியில் அதிதிகளாக பங்கேற்று கலைஞர் கே.ஏ.ஜவாஹிரை நினைவுகூருவார்கள்.

முஸ்லிம் சேவையின் நாடக பாரம்பரியம் குறித்து பேசும்போதெல்லாம், கலைஞர்கள் வரிசையில் குறிப்பிட்டு பேசக்கூடிய ஒருவரே கலைஞர் கே.ஏ.ஜவாஹர்.

இவர், மேடை, சினிமா, சின்னத் திரையிலும் பெரும் பங்களிப்பு வழங்கியவர்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'அபூநாநா' நகைச்சுவை தொடர் நாடகத்தில் 'அபூநாநா' எனும் பாத்திரத்துக்கு தன் தனித்துவமான நகைச்சுவை நடிப்பாற்றலால், உயிர்கொடுத்தன் மூலம் மக்கள் மத்தியில் 'அபூநாநாவாக' இன்றும் உலாவருகிறார்.

இவரது நினைவுகளை சுமந்துவரும் 'பாரம்பரியம்' நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

கிக்

கிக்

வாசிக்க
வாசிக்க...


மலர் : 02, இதழ் : 40 - 03.09.2023

Venice
International Film
Festival 2023

கவர்ச்சி
அவமானமல்ல
– சல்மா ஹயெக்

பட வாய்ப்புக்காக
கவர்ச்சியா?
யாஷிகாவிடம்
ரசிகர்கள் கேள்வி

Venice International Film Festival 2023











இத்தாலியில் நடைபெற்று வரும் Venice International Film Festival 2023 சர்வதேச ரீதியில் புகழ்வாய்ந்தது. இதற்கு உலகளாவிய ரீதியில் பல்வேறு கலைஞர்கள் பங்கேற்பார்கள். ஓகஸ்ட் 30ஆம் திகதிமுதல் செப்டெம்பர் 09ஆம் திகதிவரை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.
இதன் ஆரம்பவிழாவில் கலந்துகொண்டோரில் சில நட்சத்திரங்களை இங்கு காணலாம்.





கிக் – 'வார இதழ்'
இல. 91, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442
g l hk mk
Kick - கிக்
g l hk m h l hk n l
h g l hk m
தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி

கவர்ச்சி அவமானமல்ல
– சல்மா ஹயெக்



ஹொலிவூட்டில் திரைப்படத் தயாரிப்பாளராகவும் நடிகையாகவும் விளங்கும் சல்மா ஹயெக், அண்மையில் நீச்சலுடையில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டு, எடையைக் குறைப்பதற்கு நீண்டநாள் உழைத்ததாக தெரிவித்துள்ளார். மேலும், கவர்ச்சியான புகைப்படங்களை வெளியிடுவதால் ஒருபோதும் அவமானப்படப் போவதில்லையெனவும் கூறியுள்ளார்.

நடிப்புத் துறையில் இவர் காட்டிவரும் திறமையால் நன்கு அறியப்பட்டதுடன், 56 வயதாகியதைக் கூட நம்பமுடியவில்லையெனக் கூறுகிறது அவரது ரசிகர் பட்டாளம்.

இவர் மெக்சிக்கோவில் தனது நடிப்பு வாழ்க்கையை தொடங்கினார். 1989ஆம் ஆண்டு ஒளிபரப்பான தெரேசா என்ற தொடரில் நடித்தமைக்காக ஏரியல் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டார்.

இவர் அதிக வேலைப்பளுவின் பின்னர் இலங்கையுடன் காலத்தைக் கழிப்பதை வழமையாகக் கொண்டிருக்கிறார். இந்நிலையிலேயே அவர் இன்ஸ்டகிராமில் பதிவிட்டுள்ள பிகினி புகைப்படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

அவர் அண்மைக்காலமாகவே பல்வேறு இடங்களுக்கும் சென்று நீச்சலுடையில் புகைப்படங்களை பதிவேற்றிவருகிறார். இவ்வாறு வெளியில் சென்று மனதை பக்குவப்படுத்திக்கொள்வது விடுதலைக்கு சமனானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இந்த உடையில் வருவதற்கு நான் உடற்பயிற்சிகளை செய்யவேண்டியிருந்தது. எடை குறைவடைந்துள்ளதால் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இவ்வாறான புகைப்படங்களை வெளியிடுவதால் அவமானமென ஒருபோதும் நினைத்ததில்லை” என சல்மா தனது நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

இரு வருடங்களின் பின்னர் மேடையேறும் ட்ரெவிஸ் ஸ்கொட்

அமெரிக்காவின் மிகப் பிரபலமான ரெப் பாடகரான ட்ரெவிஸ் ஸ்கொட் இரண்டு வருடங்களின் பின்னர் மீண்டும் மேடை நிகழ்ச்சி படைக்கத் தயாராகி வருகிறார். இவருக்கு அமெரிக்காவில் மட்டுமல்லாது, மேற்குலகில் தீவிர ரசிகர்கள் காணப்படுகின்றனர்.

2021ஆம் ஆண்டு ஹூஸ்டனில் நடந்த இசைநிகழ்ச்சியின்போது ஏற்பட்ட நில அதிர்வில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதனால் ஸ்கொட் மனஉளைச்சலுக்கு ஆளாகியிருந்தார்.

இவரை தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளை நடத்துமாறு அவரது ரசிகர்கள் தொடர்ந்தும் கோரிக்கைவிடுத்து வந்தனர். இந்நிலையில், ரசிகர்களின் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

வட அமெரிக்காவின் 28 நகரங்களில் இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு அவர் தீர்மானித்துள்ளார். அதன்பிரகாரம் எதிர்வரும் ஒக்டோபர் 11ஆம் திகதி வட கரோலினாவின் சார்லோட்டில் முதல் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளை அவர் நடத்தவுள்ளார்.

இறுதியாக அவர் எதிர்வரும் டிசம்பர் மாதம் கனடாவில் இசை நிகழ்ச்சியொன்றை நடத்தி நிறைவுசெய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



உக்ரைன் பாடகி மீது வழக்குப் பதிவு



உக்ரைன் நாட்டின் புகழ் பெற்ற இசைக்குழு, சாந்தி பீப்பிள் (Shanti People). சைவ உணவு பழக்கத்தைக் கொண்டுள்ள இந்த இசைக்குழுவினர் இந்து மத வேத மந்திரங்களுடன் மின்னணு இசையை கலந்து வழங்குபவர்கள். இவர்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இந்தக் குழுவின் முன்னணி பாடகி உமா சாந்தி. இந்தக் குழு இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இசை நிகழ்ச்சி நடத்தி வருகிறது. பெங்களூர் மற்றும் போபாலில் இசை நிகழ்ச்சி நடத்திய இவர்கள், சமீபத்தில் புனேவில் இசை நிகழ்ச்சி நடத்தினர். பாடகி உமா சாந்தி இரண்டு கைகளிலும் இந்திய தேசிய கொடியை பிடித்தபடி பாடிக்கொண்டிருந்தார். பின்னர் அந்தக் கொடிகளை பார்வையாளர்கள் மீது எறிந்தார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியது.

இதையடுத்து தேசிய கொடியை அவமதித்ததாக தானாஜி தேஷ்முக் என்பவர் நாக்பூர் மாவட்டத்தில் முந்த்வா பொலிஸில் புகார் அளித்தார். வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



விஜய் அரசியலுக்கு வந்தால் வாழ்த்துவேன் - விஷால் பேட்டி

நடிகர் விஷால் தனது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடினார்.

அவருக்கு திரை உலகைச் சேர்ந்த பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

பிறந்தநாளையொட்டி ஏழை, எளிய மக்கள் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். புரசைவாக்கம் திருவல்லிக்கேணி, கோடம்பாக்கம் தாய்-சேய் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்பட்டது.

முன்னதாக கீழ்ப்பாக் கத்திலுள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் அனைவருக்கும் உணவு வழங்கினார். அங்குள்ள குழந்தைகளுடன் கேக் வெட்டி கொண்டாடியதுடன் அவர்களுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது, நடிகர் விஜய் அரசியலுக்கு வந்தால் அவரை வாழ்த்துவேன். சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த சூப்பர் ஸ்டார் பட்டம் மூலம் ரஜினி மக்களை மகிழ்வித்து வருகிறார்.

சூப்பர் ஸ்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் இப்போதும் சாதனை படைத்து வருகிறார். நான்கு பேர் அமர்ந்துகொண்டு விருதாளர்களை தெரிவுசெய்வது என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. மக்களும் ரசிகர்களும் தரும் ஆதரவே மகத்தான விருது.

நடிகர் விஜய் அரசியலுக்கு வருவது பற்றி விஷாலிடம் வினவப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையில், விஜய் அரசியலுக்கு வந்தால் அவரை நான் வாழ்த்துவேன் என விஷால் பதிலளித்தார்.

நகைச்சுவை கதாபாத்திரங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன் - ஜான்வி

மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகளான ஜான்வி கபூர் 2018இல் 'தடக்' படத்தின் மூலம் பொலிவூட்டில் நடிகையாக அறிமுகமானார்.

தொடர்ந்து பொலிவுட்டில் பல படங்களில் நடித்துவரும் ஜான்வி கபூர் தற்போது தெலுங்கு சினிமாவிலும் கால்பதித்து கொரட்டலா சிவா இயக்கத்தில் உருவாகி வரும் படத்தில் ஜூனியர் என்.டி.ஆருக்கு ஜோடியாக நடித்து வருகிறார். இந்நிலையில், சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் சினிமா குறித்து சில விடயங்களைப் பேசியிருக்கிறார்.

"தடக் படத்துக்குப் பிறகு நான் வழக்கம்போல் கவர்ச்சியான வேடங்களில் நடிப்பேன் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், நான் அவ்வாறு செய்யவில்லை. தற்போது நடிப்பதற்குச் சவாலான கதாபாத்திரங்களை நான் தேடிக் கொண்டிருக்கிறேன். என்னால் இயன்றளவு நன்றாக நடித்து வருகிறேன். நகைச்சுவையான கதாபாத்திரங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

அதன்பிறகு தென்னிந்திய சினிமாவில் கால்பதித்தது குறித்து பேசிய அவர், என் அம்மாவுக்கு முதலில் தென்னிந்திய சினிமாவில்தான் வாய்ப்பு கிடைத்தது. அங்கு அவர் மிகுந்த அன்பைப் பெற்றார். அங்கு நடிப்பது எனக்குக் கிடைத்த சரியான வாய்ப்பு என்று நினைக்கிறேன்.

தென்னிந்திய சினிமாவும் இந்தித் திரை உலகமும் ஒரே பாதையில்தான் பயணம் செய்துகொண்டிருக்கின்றன. தென்னிந்திய சினிமாவிலிருந்து நாங்கள் நிறைய உத்வேகத்தைப் பெற்றுள்ளோம். மேலும் மொழியாலும் இனத்தாலும் சினிமாவை பிரிக்க முடியாது என்று பேசியிருக்கிறார்.



ஜெயிலருக்கு அதிர்ச்சி

ரஜினிகாந்த நடிப்பில் நெல்சன் இயக்கிய திரைப்படமான ஜெயிலர் விமர்சன ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் அமோக வரவேற்பைப் பெற்றது. இந்தப் படம் தியேட்டர்களில் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதால், ஜெயிலர் திரைப்படம் இதுவரை ஒ.டி.டி. தளத்தில் ரிலீஸ் ஆகவில்லை. ஜெயிலர் திரைப்படம் நெட்ஃப்ளிக்ஸ் மற்றும் சன் நெக்ஸ்ட் தளங்களில் பின்னர் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், ஜெயிலர் படத்தின் ஹெச்.டி. ப்ரின்ட் இணையத்தில் கசிந்துள்ளது. படம் ரிலீசான சிறிது நாட்களிலேயே ஹெச்.டி. வடிவில் இணையத்தில் லீக்காகி இருப்பது படக்குழு மற்றும் தயாரிப்பு நிறுவனத்துக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.



'பொன்னியின் செல்வன்' தந்த வாய்ப்பு - ஐஸ்வர்யா லட்சுமி மகிழ்ச்சி

தமிழில் 'ஆக்ஷன்', 'ஜகமே தந்திரம்', 'கார்கி', 'கட்டா குஸ்தி', 'பொன்னியின் செல்வன்' உட்பட பல படங்களில் நடித்திருப்பவர் ஐஸ்வர்யா லட்சுமி. மலையாளம், தெலுங்கிலும் நடித்துவரும் அவர், 'கிங் ஒவ் கொத்தா' படத்தில் துல்கர் சல்மான் ஜோடியாக நடித்துள்ளார்.

அவர் கூறியதாவது: 'பொன்னியின் செல்வன்' படத்தில் நான் நடித்த பூங்குழலி பாத்திரம் எனக்கு மிகுந்த வரவேற்பைக் கொடுத்துள்ளது. இது நான் எதிர்பாராதது.

இந்தப் படம் எனக்குப் பல கதவுகளைத் திறந்துள்ளது. வாய்ப்புகள் மட்டுமல்லாமல், மக்கள் மனதிலும் சிறந்த இடம் கிடைத்திருக் கிறது. இதனால் என் முந்தைய படங் களையும் பார்க்கிறார்கள். சவாலான, இதுவரை நான் நடித்திராத வித்தியாசமான வேடங்களில் நடிக்கவே நினைக்கிறேன்.

அதிக படங்களில் நடிக்க வேண்டும் என்பதில்லை. தரமான படங்களில் நடிக்க வேண்டும் என நினைக்கிறேன். நல்ல கேரக்டர் என்றால் சிறிய வேடத்திலும் நடிப்பேன். இவ்வாறு ஐஸ்வர்யா லட்சுமி தெரிவித் துள்ளார்.

ஆணவத்தால் நான் இதை சொல்லவில்லை!

நடிகர் ராகவா லோரன்ஸ் தன்னுடைய அறக்கட்டளை மூலம் பல குழந்தைகளுக்கும், மாணவர்களின் கல்விக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவி வருகிறார்.

இதற்காக பிரபல நட்சத்திரங்கள், தயாரிப்பாளர்கள், நெருங்கிய நண்பர்கள் எனப் பலரிடம் மனம் திறந்து உதவிகள் கேட்டு அதன் மூலம் பல்வேறு உதவிகள் செய்து வந்தார். பலரும் அவரது அறக்கட்டளைக்குத் தங்களால் முடிந்த உதவிகளைச் செய்து வந்தனர். சமீபத்தில் நடந்த சந்திரமுகி-2 இசை வெளியீட்டு விழாவில் தயாரிப்பாளர் சுபாஸ்கரன் லோரன்ஸ்



அறக்கட்டளைக்காக ஒரு கோடி ரூபா நன்கொடை கொடுத்தார்.

இந்நிலையில், சந்திரமுகி-2வில் படப்பிடிப்பு பாதியிலேயே, அதாவது கடந்த ஆண்டு இனி யாரும் தன் அறக்கட்டளைக்குப் பணம் அனுப்ப வேண்டாம் என்று கூறியிருந்தார்.

தற்போது இதற்கான காரணம் குறித்து வீடியோ ஒன்றைப் பதிவிட்டுள்ளார் நடிகர் ராகவா லோரன்ஸ். "கொஞ்ச நாளைக்கு முன்னாடி என் அறக்கட்டளைக்கு யாரும் பணம் அனுப்ப வேண்டாம் என்று ஒரு ட்வீட் பதிவிட்டிருந்தேன். அதற்குக் காரணம், நான் டான்ஸ் மாஸ்ட்ராக இருக்கும்போதே 60 குழந்தைகளை வளர்ப்பது, மாற்றுத்திறனாளிகளுக்கு டான்ஸ் சொல்லிக்கொடுப்பது, இதய அறுவை சிகிச்சை பண்ணுவது எனப் பல உதவிகள் செய்து வந்தேன். அப்போது அவ்வளவு உதவிகள் செய்வதற்கு என்னிடம் பணமில்லை. அதனால் என் அறக்கட்டளைக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன். பலரும் எனக்கு உதவினார்கள்.

இப்போது ஹீரோ ஆகிவிட்டேன். இரண்டு ஆண்டுக்கு ஒரு படம் பண்ணிய நான், இப்போது ஒரே ஆண்டில் மூன்று படங்கள் பண்ணுகிறேன். நல்ல பணம் வருகிறது. உனக்கு நல்லாதான பணம் வருது, ஏன் மத்தவங்ககிட்ட வாங்கி உதவி பண்ணனும். நீயே பண்ணலாமே என்று எனக்குள்ளேயே ஒரு கேள்வி எழுந்தது. அதனால், நானே அவர்களுக்கு உதவிகள் செய்யலாம் என்று முடிவு செய்துள்ளேன்.

ஆணவத்தால் நான் இதைச் சொல்லவில்லை. உங்களைச் சுற்றி நிறைய கஷ்டப்படுகிற அறக்கட்டளையும், மக்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். நான் எவ்வளவு சொன்னாலும் என்னுடன் சேர்ந்து உதவிகள் செய்ய வேண்டுமென்று பலர் ஆசைப்படுகிறீர்கள். கஷ்டப்படுபவர்கள் யார் என்று உங்களுக்கு நான் அடையாளம் காட்டுகிறேன். நீங்களே அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அதில் உங்களுக்கு மிகப்பெரிய சந்தோஷம் கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.



ஆட்ட நாயகியாக மாறிய கங்கனா

இயக்குநர் பி.வாசு இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகியுள்ள திரைப்படம் சந்திரமுகி-2. இப்படத்தில் ராகவா லோரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைக்கா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம்.கீரவாணி இசையமைத்துள்ளார்.

சந்திரமுகி-2 திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, சந்திரமுகி-2 திரைப்படத்தின் ஆட்டநாயகி பாடல் வெளியாகியுள்ளது. மதன் கார்க்கி வரிகளில் ஸ்ரீநிதி திருமலா பாடியுள்ள இந்தப் பாடல் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



'வார்த்தைகள் வரவில்லை'

தேசிய விருது குறித்து கீர்த்தி சனோன் நெகிழ்ச்சி

சிறந்த நடிகைக்கான விருது கிடைத்தது குறித்து நடிகை கீர்த்தி சனோன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

69ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டன. இதில், சிறந்த படத்துக்கான விருதை மாதவனின் 'ராக்கெட்ரி தி நம்பி எபெக்ட்' வென்றுள்ளது. சிறந்த தமிழ்ப் படத்துக்கான விருதை மணிகண்டனின் 'கடைசி விவசாயி' பெற்றுள்ளது.

சிறந்த நடிகைக்கான விருது 'மிமி' படத்துக்காக கீர்த்தி சனோனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதே படத்துக்காக பங்கஜ் திரிபாதிக்கு சிறந்த துணை நடிகருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

தனக்கு சிறந்த நடிகைக்கான விருது வழங்கப்பட்டது குறித்து நடிகை கீர்த்தி சனோன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். தனியார் ஊடகத்திடம் பேசிய அவர், தான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், இதனை தன்னால் நம்பமுடியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன். எனக்கும் என் குடும்பத்துக்கும் இது மிகப் பெரியதொரு தருணம். 'மிமி' மிகச் சிறப்பான ஒரு திரைப்படம். இந்த விருதுக்கு நான் தகுதியுடைவள் என்று என் நடிப்பின் மீது நம்பிக்கை வைத்த விருது குழுவுக்கு என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு வார்த்தைகள் வரவில்லை. என் மீதும், என் திறமை மீதும் எப்போதும் நம்பிக்கை வைத்து, என்னை முழுவதுமாக ஆதரித்து, 'மிமி' போன்ற ஒரு சிறப்பான படத்தை எனக்குக் கொடுத்த தினேஷ் விஜானுக்கு நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்"

என்று கூறியுள்ளார்.

பாக்தாத் பேரழகி - பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

1960ஆம் ஆண்டுகளில் தமிழ் திரையுலகில் இளம் நட்சத்திர நடிகர்களாகத் திகழ்ந்தவர்கள் ரவிச்சந்திரன், ஜெயலலிதா ஜோடி. இவர்கள் இணைந்து நடித்த குமரிப் பெண், நான், மூன்றெழுத்து, பணக்காரப்பிள்ளை ஆகிய படங்கள் நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்று இவர்களுக்கு ரசிகர் ஆதரவை அள்ளிக் கொடுத்தது. ஆனால், 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இந்த ஜோடிக்கான வரவேற்பு குறையத் தொடங்கியது. ஆனாலும் இவர்கள் இருவரும் இணைந்து நடித்த படம் ஒன்று 73ஆம் வருடம் திரைக்கு வந்தது. அந்தப் படம்தான் 'பாக்தாத் பேரழகி'!

வண்ணப்படமாக பிரம்மாண்டமான அரங்க அமைப்போடு உருவான 'பாக்தாத் பேரழகி' படத்தை டைரக்டர் டீ.ஆர்.ராமண்ணா தயாரித்து இயக்கினார். 50ஆம் ஆண்டுகளில் எம்.ஜி.ஆர்., ரீ.ஆர்.ராஜகுமாரி நடிப்பில் இவர் தயாரித்து, இயக்கிய 'குலேபகாவலி' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அதே கதையை சற்று மாற்றி பாக்தாத் பேரழகியாக்கினார் அவர்.

படத்தில் பாக்தாத் பேரழகி ஜெயலலிதாதான். வித விதமான ஆடை ஆபரணங்களோடு, ஆடல், பாடல், சண்டைக் காட்சி என்று ஒரு ஓல் ரவுண்டராக படத்தில் தோன்றினார் அவர். காதல், சோகம், விரசம் என்று எல்லாவித உணர்வுகளையும் தன் நடிப்பின் மூலம் வெளிப்படுத்தினார் ஜெயலலிதா. ரவிச்சந்திரன் டைரக்டர் சொன்ன எல்லா வேலைகளையும் செய்கிறார். ஆனால், பழைய இளமை மிஸ்ஸிங். சண்டைக் காட்சிகளில் அவரின் திறமை வெளிப்பட்டது.

படம் முழுவதும் நாகேஷ் வருகிறார். வரும்போதெல்லாம் சிரிக்க வைக்கிறார். அவரும் சச்சு, வி,கே.ராமசாமி, தேங்காய் சீனிவாசன் ஆகியோர் செய்யும் அட்டகாசம் ஜோர்.



திருநங்கையாக வரும் தேங்காய் சீனிவாசனின் நடிப்பு அருமை. என்னமாய் வழிந்து, வழிந்து பேசுகிறார். காட்டுவாசிகளிடம் பிடிபடும் நாகேஷ் அவர்களின் கடவுள் ஆவதும், கடவுளுக்கு உணவு படைத்தால் போதும் அதை அவர் உண்ணமாட்டார் என்று சொல்லி காட்டுவாசிகள் நாகேஷை பட்டினி போட்டு உணவை தாங்களே உண்பது நல்ல தமாஷ். காட்டுவாசிகளின் தலைவனாக வரும் ஓ.ஏ.கே.தேவர் மிரட்டுகிறார், சமயத்தில் சிரிக்கவும் வைக்கிறார்.

குவிஸ்தான் நாட்டுக்கு ஆட வரும் சுபைதா என்ற நடன அழகி மன்னரின் முன்னால் ஆடி மன்னர் மனதிலும் குடியேறி விடுகிறாள். பிறகென்ன நாட்டில் அவள் இட்டதே சட்டம், அவள் சகோதரன் முராஸ் செய்வதே ஆட்சி என்றாகி விடுகிறது. பட்டத்து ராணி சிறைப்படுகிறாள், இளவரசி காட்டுவாசிகளிடம் பிடிபடுகிறாள், இளவரசன் நாடற்றவன் ஆகிறான். பாக்தாத் பேரழகி நடத்தும் போட்டிகளில் பங்குபற்றி அவற்றில் வெற்றி பெறும் இளவரசன் அப்துல்லா, அவள் மனதையும் வெற்றிகொள்கிறான். அவளின் உதவியுடன் நயவஞ்சகர்களை ஒழித்து கட்டி இழந்த ஆட்சியையும் மீட்கிறான். இப்படி அமைந்த படத்தின் கதையை விறுவிறுப்பாக இயக்கினார் ராமண்ணா. அவருக்குத் துணையாக காட்சிகளை கலரில் அழகாக படமாக்கினார் எம்.ஏ.ரஹ்மான்.

புலமைப்பித்தன், எம்.எஸ்.விஸ்வநாதன் கூட்டணி இந்தப் படத்தில் எடுபடவில்லை. பாடல்கள் சுமார் ரகம். ஆனால், நடனங்கள் ரசிக்கும்படி இருந்தன. ஸ்டண்ட் மாஸ்டர் மாதவன் அமைத்த சண்டைக் காட்சிகள் நல்ல த்ரில்.

படத்தில் அசோகன், மனோகர், ஓ.ஏ.கே.தேவர், சண்முகசுந்தரம், குண்டுமணி, புத்தூர் நடராஜன், ஜஸ்டின் என்று பல வில்லன்கள். எல்லோருக்கும் வேலை இருக்கிறது, சண்டைகளும் இருக்கின்றன. மனோகர் முரட்டு வில்லன் என்றால் அசோகன் அமுக்கமான வில்லன். மதத் தலைவர் என்ற போர்வையில் அவர் தீட்டும் சதிகளும், அவர் வசனம் பேசும் ஸ்டைலும் பலே பலே.

சாவித்திரி, சுந்தரராஜன், சி.ஐ.டி. சகுந்தலா, ராஜவேலு, ஆலம், சுபா,



ஜெயசுதா, என்னத்தே கன்னையா டைப்பிஸ்ட் கோபு, கே.ஆர்.ராம்சிங் என்று பலரும் படத்தில் இருக்கிறார்கள்.

ஆயிரத்தொரு இரவு அரபுக் கதைகளில் ஒன்றை தமிழுக்கு ஏற்றாற்போல் எழுதியிருந்தார் ரவீந்தர். இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த இவரின் இயற்பெயர் காஜா முகைதீன். சொந்த ஊர் நாகூர். எம்.ஜி.ஆர். வைத்த பெயர் ரவீந்தர். எம்.ஜி.ஆர். நாடகமன்றத்தின் 'இடிந்த கோயில்' நாடகத்துக்கு (இந்த நாடகம்தான் பின்னர் 'இன்பக் கனவு' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது) வசனம் எழுதியவர். 'நாடோடி மன்னன்' படத்திலும் கவியரசு கண்ணதாசனுடன் சேர்ந்து வசனம் எழுதியுள்ளார். ரவீந்தரின் திறமையை எம்.ஜி.ஆர். பாராட்டியுள்ளார். சில படங்களுக்கும் வசனம் எழுதியுள்ளார். 'எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் ரவீந்தர்' என்று அறியப்பட்டவர். எம்.ஜி.ஆரிடம் நீண்ட காலம் பணியாற்றிய ரவீந்தர் இப்படத்துக்கு எழுதிய வசனங்கள் அற்புதமானவை. நல்ல வசனகர்த்தாவான அவரை திரையுலகம் ஏனோ கண்டுகொள்ளவில்லை.

வில்லிசை கலைஞர் சுப்பு ஆறுமுகம் நகைச்சுவை காட்சிகளுக்கு வசனங்களை எழுதினார். சிக்கலில்லாமல் படத்தை ராமண்ணா டைரக்ட் செய்திருந்தார்.

ஜெயலலிதாவின் திறமை, நட்சத்திர அந்தஸ்தை முன்னிலைப்படுத்தும் விதத்தில் வெளிவந்த பாக்தாத் பேரழகி பொழுதுபோக்கு பட ரசிகர்களுக்கு விருந்து!

rrtmsd cr nsl hnl



பட வாய்ப்புக்காக கவர்ச்சியா?

யாஷிகாவிடம் ரசிகர்கள் கேள்வி

10ஆம் ஆண்டு 'கவலை வேண்டாம்' திரைப்படத்தில் நீச்சல் பயிற்சியாளராக தமிழ் சினிமாவில் நடிகையாக என்ட்ரி கொடுத்தவர் நடிகை யாஷிகா. பின் அதே ஆண்டு இயக்குனர் கார்த்திக் நரேன் இயக்கிய 'துருவங்கள் பதினாறு' படத்தில் ஸ்ருதி என்ற கதாபாத்திரத்தில் நடித்தார்.

தமிழில் அடுத்தடுத்து பட வாய்ப்புகள் கிடைக்க தனது நடிப்பை நாளுக்குநாள் மெருகேற்றிக்கொண்டே வந்தார் யாஷிகா. தொடர்ந்து பல படங்களில் சிறு சிறு கதாபாத்திரங்களில் மட்டுமே நடிக்க வாய்ப்பு கிடைத்த யாஷிகாவுக்கு பெரிய பட்ஜெட் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது.

2018ஆம் ஆண்டு 'இருட்டு அறையில் முரட்டு குத்து' என்ற அடல்ட் படத்தில் நடித்து இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானார். இப்படம் இவருக்கு மிகப் பெரிய ரசிகர்கள் கூட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது. கவர்ச்சி ரூட்டுக்குள் நுழைந்த யாஷிகா, கடந்த 2018ஆம் ஆண்டு விஜய் ரிவியின் மிகவும் பிரபலமான பிக் பொஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துகொண்டார்.

பல போட்டியாளர்கள் கலந்துகொண்ட இந்த பிக் பொஸ் நிகழ்ச்சியில் தனக்கென ஒரு தனி ரசிகர்கள் கூட்டத்தை அமைத்துக்கொண்டார். பிக் பொஸ் நிகழ்ச்சியில் தனது கியூட்டான சேட்டையால் இளைஞர்களின் மனதைக் கவர்ந்த யாஷிகாவுக்கு ரசிகர்கள் ஆர்மியே உருவானது.

சோஷியல் மீடியாவிலும் ஆக்டிவாக வலம் வரும் இவர் தனது புகைப்படங்களை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இவர் அண்மைக் காலமாக வெளியிடும் கவர்ச்சிப் புகைப்படங்கள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. புதிய படவாய்ப்பு களுக்காக இவர் இவ்வாறான புகைப்படங்களை வெளியிடுகிறாரா என்ற கேள்வியும் ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.





உடலுறவின் நன்மைகள்!

நமது துணையுடன் உடலுறவு கொள்வது மன ஆரோக்கியத்தை அதிகப்படுத்துவதோடு ஆயுளையும் கூட்டுவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். பலதரப்பட்ட ஆய்வுகளின் கூற்றுப்படி, வழக்கமாக உடலுறவில் ஈடுபடுபவர்களின் ரிலேஷன்ஷிப் உறுதியானதாக இருப்பதோடு, அந்த இணையர்கள் மன அழுத்தம், பதற்றம் மற்றும் இதய கோளாறுகளில் இருந்தும் விடுபடுகிறார்கள் என்றும், நோயெதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோக, தொடர்ச்சியாக இல்லறத்தில் ஈடுபடுவோருக்கு பலவிதமான உடல் மற்றும் மன ரீதியான நலன்கள் உண்டாவதாகவும் கூறப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்புச் சக்தி

தொடர்ச்சியாக உடலுறவு கொள்வதன் மூலம் உடலை நல்ல ஆரோக்கியத்தோடு வைத்திருக்கச் செய்கிறது. மேலும் வெப்பநிலை மாறும் சமயத்தில் ஏற்படும் உடல் உபாதைகள், முறையாக தொடர்ந்து உடலுறவு கொள்வதன் மூலம் கிடைக்கும் நோயெதிர்ப்புச் சக்தியால் தவிர்க்கப்படுகிறது.

கலோரிகளை எதிர்க்க உதவும்

உடலுறவு கொள்வதே ஒரு வகையான உடற்பயிற்சியாகத்தான் கருதப்படுகிறது. இதனால் உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரித்து இதயத்துடிப்பை சீராக்குகிறது. இருப்பினும், அதிகளவிலான கலோரிகளை குறைக்காவிட்டாலும் உடலின் அமைப்பை சீராக வைத்திருக்க இது உதவும்.

இதயக் கோளாறுகளை குறைக்கும்

உங்கள் துணையுடன் நீடித்த நிலையான உடலுறவைக் கொள்பவராக இருந்தால் உங்களின் இதய நலனுக்கு எந்த தீங்கும் நேராது. நீண்ட ஆயுளை கொடுக்க உடலுறவும் உதவுகிறது.

தலைவலியை நீக்கும்

இல்லறத்தில் ஈடுபடும்போது ஆக்சிடொசின் என்ற ஹோர்மோன் வெளியிடப்படுவதால் உடலிலுள்ள வலிகளுக்குத் தீர்வு கிடைக்கிறது. குறிப்பாக, தீராத தலைவலி இருப்பவர்கள் உங்கள் இணையருடன் உறவு கொண்டால் அவை நீங்குவதை உணரலாம்.

இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது

ஆச்சிடொசின் ஹோர்மோன் வெளியேறும்போது நரம்புகளை அமைதிப்படுத்தி, மன அழுத்தத்தைத் தூண்டும் ஹோர்மோனான கார்டிசோலை எதிர்த்துப் போராடச் செய்கிறது. மன அழுத்தமில்லாத உடலுக்கு வழிவகுப்பதோடு இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. இதனால் நரம்புகளை அமைதிப்படுத்தி நன்றாக தூங்கச் செய்கிறது.

மன நிலையை சீராக்கும்

உடலுறவால் மனநிலையை உயர்த்தவும், ஒரு நபரை உளவியல் ரீதியாகவும் மன ரீதியாகவும் உறுதிப்படுத்த உதவுகிறது. ஆரோக்கியமான இல்லற வாழ்க்கை ஒரு உறவில் திடத்தன்மையைக் கொண்டுவருகிறது, இதனால் மன நிலை அமைதியாகிறது.

மார்பகப் புற்றுநோயைத் தடுக்கும்

உடலுறவில் ஈடுபடும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படும் அபாயம் குறைவாக இருக்கிறதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிறுநீரகப்பையைக் கட்டுப்படுத்தும்

தொடர்ச்சியான உடலுறுவால், சிறுநீர்ப்பை தசைகளை வலுப்படுத்த உதவுகிறது. அப்போது சிறுநீர்ப்பையைக் கட்டுப்படுத்தவும் முடியும் என கூறப்படுகிறது.

ஜிகினாவிடம் கேளுங்கள்!

சிறந்த கணவன் என்பதற்கான அறிகுறிகள் என்னென்ன?

ரேவதி - வட்டவளை

சிறந்த கணவர் என்பதற்கு நான் வைக்கும் கருத்தாக இதனை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. எனது மனதில் தோன்றும் சில விடயங்கள் இதுவே:

★ ஆணாதிக்கம் பேச்சில் இல்லாமை.

★ கனிந்த உள்ளத்தோடு பேசுவோர்.

★ எந்த நிலைமையிலும் மனைவியை விட்டுக்கொடுக்காமல் இருப்போர்.

★ வீட்டு வேலைகளை சரி சமமாக பங்கெடுத்து முடித்துக்காட்டுவது.

★ மாமியாரை தனது பெற்ற தாய்போல் கருதுவோர்.

★ வரதட்சணை வாங்க மாட்டேன் என்று உறுதியாக இருப்பவர்.

★ ஆடம்பரச் செலவு இல்லாமல் திருமணத்தை நடத்தும் பண்பு கொண்டவர்.

★ எந்த பிரச்சினை வந்தாலும் நியாயத்தின் பக்கம் நின்று அமைதியாக்குவது.

எனக்கு நல்ல அறிவுரை நான்கு சொல்ல முடியுமா?

சுரேஷ் - ஹொரணை

1. முடிந்தவரை வெளிப்படையாகப் பேசாதீர்கள் (வாக்குவாதமும் பகையும் உண்டாகும்).

2. முடிந்தவரை யாரிடமும் உதவி கேட்காதீர்கள். (பிரதிபலனாக உங்களால் செய்ய முடியாததை செய்யவேண்டி வரும்)

3. சிக்கனமாக இருங்கள் (நீங்கள் கடன் வாங்க வேண்டிய அவசியம் வராது).

4. வாரத்தில் ஒரு நாள் ஒரு நபருக்காவது (தகுதியுள்ள) தேடிப் போய் உணவு வாங்கிக் கொடுங்கள். எக்காரணம் கொண்டும் பணமாக கொடுக்கக்கூடாது. உங்கள் வீட்டுக் குழந்தைகளின் கையால் உணவை கொடுக்க செய்தால் சிறப்பு..

பெண்கள் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் எவை?

கீதா - செங்கலடி

உங்களுக்கு உண்மையாக இருக்க கற்றுக் கொள்ளுங்கள். சார்ந்து இருக்கும் சமூகத்திற்கும் கூட.

உங்களை தெளிவாக அறிமுகம் செய்துகொள்ள தெரிய வேண்டும். குறைந்தது 10 வரிகளில் உறவு/நட்பு வட்டங்களில்.

பேச்சு திறமை வேண்டும். வாயாடியாக இருக்கவேண்டியதில்லை. சரியான நேரத்தில் சரியாக பேச தெரிந்தால் போதும்.

வீட்டு பொருளாதார நிர்வாகம் கண்டிப்பாக தெரிய வேண்டும். வரவு எட்டு ரூபா. செலவு பத்து ரூபா என்று ஆகிவிடக் கூடாது.

எல்லா காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிட்டு பழகணும். எனக்கு இது பிடிக்காது/ஒதுக்காது என்றெல்லாம் சாக்குபோக்கு சொல்லக்கூடாது. பெண்ணின் பருவ மாற்றங்களுக்குத் தேவையான அனைத்து சத்துகளும் கிடைக்க வேண்டுமல்லவா.

அவசரநிலையை கையாள நிச்சயமாக தெரிந்திருக்க வேண்டும். திடீரென்ற உடல்நலக்குறைவுபோல் சில.

ஒரு பிரச்சினை என்று வந்து விட்டால், அச்சச்சோ... என்று பதறினாலும், சற்றுநேரத்தில் நிதானமாக இயல்பான நிலைக்கு திரும்ப பழக வேண்டும். எல்லோருக்கும் முன் மயங்கி விழக்கூடாது.

நேர நிர்வாகம் அவசியம். மகளோ மருமகளோ, அம்மாவோ, பாட்டியோ பல ரோல்களில் வாழவேண்டிய பிறவியில் நேர நிர்வாகம் சரியாக செய்ய தெரியணும்.

மாற்றத்தைப் பழக வேண்டும். பெண்ணாகப் பிறந்துவிட்டாலே உடலாலும் உள்ளத்தாலும் தொடர் மாற்றங்களை சந்திக்க நேரிடும். அதற்கு தயாராக இருக்க வேண்டும்.

புதிய நட்பு/உறவுகளை உருவாக்க, தொடர தெரிய வேண்டும். சும்மா பார்த்தவுடனே நட்பாகி, நாலே நாளில் முகத்தை திருப்பிக்கொள்ளக்கூடாது.

எல்லை தெரிய வேண்டும். உங்களுடையதும், பிறருடையதும். நகைச்சுவை உணர்வு. கொஞ்சமாவது இருந்தால் நல்லது.



உங்கள் கேள்விகளை **65 0 8 7** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

'ஜிகினாவிடம் கேளுங்கள்'

வட்ஸ்அப் : 076 139 3805



நடிகர்: காளி வெங்கட், ராம் அருண் காஸ்ட்ரோ
நடிகை: கயல் விஜயலட்சுமி
இயக்கம்: ராம் அருண் காஸ்ட்ரோ
இசை: ராம் சங்கர்
ஒளிப்பதிவு : பிலிப் சுந்தர், லோகேஷ்

விமர்சனம்

போடி அருகே உள்ள கீழ்மலை என்னும் மலை கிராமத்தில் அஞ்சல்காரராக பணியாற்றுகிறார் காளி. ஆனால், அங்கே பணியாற்ற அவருக்கு விருப்பம் இல்லை. எப்படியாவது பணிமாறுதல் வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளியேறிவிட திட்டமிடுகிறார். அச்சமயத்தில் அந்த ஊர்மக்கள் குலதெய்வமாக வழிபட்டு வரும் மாதேஸ்வரன் என்னும் பிரிட்டிஷ் கால தபால்காரரின் (ஹர்காரா) வாழ்க்கைக் கதை தெரியவருகிறது. அதன்பின் காளி தனது வேலையையும் அந்த ஊரையும் எப்படி எதிர்கொண்டார் என்பது கதை.

ஜீப்பையும் கோவேறு கழுதைகளையும் தவிர, வேறு போக்குவரத்து வசதி எதுவும் இல்லாத மலைக் கிராமத்திலுள்ள அஞ்சல் நிலையம், கைபேசி சிக்னல் கிடைக்கவில்லை, கிராம மக்களின் வெள்ளந்தியான தொந்தரவுகள் என்பனவற்றைத் தவிர, காளி அந்த ஊரை வெறுத்து வெளியேற நினைப்பதற்கான காரணம், தற்காலத்தில் வாழும் அஞ்சல்காரரின் அன்றாடப் பிரச்சினைகளுடன் 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாதேஸ்வரன் என்கிற அஞ்சல்காரரின் கதையை இணைக்கும் புள்ளி, ஊரைக் காக்க மாதேஸ்வரன் மறைத்து வைக்கும் ஆவணங்களின் ரகசியம் ஆகியவற்றை அழுத்தமாக அமைக் காதது திரைக் கதை சறுக்கல்.

இதைத் தவிர, திரைக்கதை ஆசிரியருக்கு கழுவேற்றம் என்கிற மரணதண்டனை குறித்து எந்த ஆய்வுத் தெளிவும் இல்லை. கழுவேற்றம் 6ஆம் நூற்றாண்டு பாண்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் பின்னர் பெருந்திரள் சமணர் கழுவேற்றத் தின்போதும் அது தமிழ்நாட்டின் வரலாற்றில் பெரும் இரத்தக் கறையாகப் படிந்திருக்கிறது. துப்பாக்கியையும் பீரங்கியையும் வைத்திருந்த ஆங்கிலேயர் அதைப் பயன்படுத்தினார்கள் என்பது அபத்தம்.

தபால்காரர் காளி, ரீ கடைக்காரர் கண்ணன், கங்காணி, பித்தன், மாரியம்மாள் ஆகிய துணைக் கதாபாத்திரங்களைச் சுவாரஸ்யமாக எழுதிய அளவுக்குக் கதையின் நாயகனான மாதேஸ்வரன் கதாபாத்திரத்தை உணர்வுபூர்வமாக எழுதத் தவறிவிட்டார்கள்.

திரைக்கதை வெறும் கூடாக இருந்தபோதும் தற்காலத்தின் அஞ்சல்காரராக வரும் காளி, தான் வரும் அனைத்துக் காட்சிகளிலும் சிரிக்கவும் பரிதாபப்படவும் வைக்கிறார். 'ஹர்காரா' மாதேஸ்வரனாக வரும் ராம் அருண் கேஸ்ட்ரோ சிலம்புச் சண்டையில் அப்படியே பழங்காலத்தைப் பிரதிபலிக்கிறார். துடிப்பும் துள்ளலும் மிக்க நடிப்பை அவர் தந்தாலும் உணர்ச்சிகரமான காட்சிகளில் ஈர்க்கத் தவறும் அவர், எல்லாவற்றையும் சேர்த்து வைத்து கிளைமாக்ஸில் மொத்தமாக ஸ்கோர் செய்துவிடுகிறார்.

சமகாலத்தில் நிகழும் கதைக்களத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பசுமையை மட்டும் காட்டாமல், ஒரு பெருமலையின் அனைத்து வண்ணங்களையும் காட்சிப்படுத்தியதோடு, ஒரு மலைக்கிராமத்தை கண்முன் கொண்டுவந்திருக்கிறது பிளிப்ஸ் ஆர்.சுந்தர் மற்றும் லோகேஷ் இளங்கோவனின் ஒளிப்பதிவு. அதேநேரம், பின்கதை காட்சிகளையும் தனித்துவமாக்க கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். பீரியட் செட்டப் என்பதால் வெறும் மணல் பரப்பில் மட்டும் காட்சிகளை எடுத்திருக்கிறார்கள். கிராபிக்ஸ் காட்சிகளும் சுமார் ரகம்தான்.

கதாநாயகியாக சில காட்சிகளில் வரும் கௌதமி சவுத்ரி உட்பட துணைக் கதாபாத்திரங்களில் வரும் அனைவரும் நேர்த்தியான பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள்.

ஒரே கதைக்களத்தில் தற்காலத்தையும் 150 ஆண்டுகளுக்கு முந்தைய பிரிட்டிஷ் காலத்தையும் ஒளிப்பதிவு, கலை இயக்கம் மூலம் நம்பகமாகக்கொண்டு வந்திருக்கும் இயக்குநர் ராம் அருண் கேஸ்ட்ரோவுக்குப் பாராட்டுகள்.

வரலாற்றின் நிழலுடன் கற்பனைக் கதைக் களத்தை உருவாக்கினாலும் பார்வையாளர்களை உற்சாகமூட்ட அழுத்தமான நிகழ்வுகள், சுவாரஸ்யமான காட்சிகள், பிழையற்ற மீள் உருவாக்கம் ஆகியன மிக முக்கியம். அதில் அதிகமாகவே சறுக்கி விழுந்திருக்கும் 'ஹர்காரா' பரிதாபத்துக்குரியவன்.





Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07